அனுலா விஜேரத்ன மெனிகேயின்

# வடவா முகாக்கினி

சரோஜினி தேவி அருணாசலம்



# வடவாமுகாக்கினி

தமிழாக்கம் : சரோஜினி தேவி அருணாசலம்

பரிசு பெற்ற சிங்கள நாவலின் தமிழாக்கம்

## அனுலா விஜேரத்ன மெனிகே எழுதிய நூல்கள்

* சுஜாத புத்ரயன்கே வஸ்துவ
  (1987 - ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான சாகித்திய பரிசுபெற்றது.)
* வெனசக் கலஹெகிய (கவிதை)
* சந்தமண்டல (இளைஞர்களுக்கான நாவல்)
* கவுத ஹொரா (சிறுவர்)
* ரன்கலயே நிதானய ஹா ஒறலோசு நகரயே சாதய
  (1991 - ஆம் ஆண்டில் தேசிய நூல் சபையின் ஆதரவில் நடந்த கையெழுத்துப் பிரதிகளுக்கான போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்.)
* பெம்ம (சிறுகதை) 1993 - ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதியென சாகித்திய மண்டலத்தினால் தெரிவு செய்யப்பட்டது.
* வடபாகின்ன
  (1991 - ஆம் வருடம் சிறந்த நாவல் என சாகித்திய மண்டலத்தினால் தெரிவு செய்யப்பட்டது.)
  1992 - ஆம் ஆண்டில் இலங்கை மக்கள் இலக்கிய விழாவில் சிறந்த நாவலுக்கான மக்சிம் கொர்க்கி பரிசு பெற்றது.
* தடகெலிய (நாவல்)
* அட்சுசி கோவா (வடபாகின்ன நாவலின் ஜப்பானிய மொழிபெயர்ப்பு 1995)
  மொழிபெயர்ப்பு : சுசீ விதானகே உடன் ரெகொ நகமுரா ஜப்பானில் டன் டன் சங்கத்தால் பிரசுரிக்கப்பட்டது.
* வடவாமுகாக்கினி (வடபாகின்ன நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு) மொழிபெயர்ப்பு : சரோஜினி தேவி அருணாசலம் (கொழும்பு பல்கலைக்கழகத்தின் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கான செயல்திட்டத்தின் வெளியீடு).
* த சப்மரீன் பயர் (வடபாகின்ன ஆங்கிலத்தில்)
  மொழிபெயர்ப்பு : திலக் பாலசூரிய (அச்சில்).
* த பொண்ட் (பம்ம ஆங்கிலத்தில்) மொழிபெயர்ப்பு : திலக் பாலசூரிய (அச்சில்)
* டியூட்டி பிஸ்ட் (Duty Fist) கவுத ஹொரா ஆங்கிலத்தில்

**இலக்கிய விமர்சனம்**

உயர்தரம் - சிங்கள இலக்கிய விமர்சனம்
உயர்தரம் - கம்பெரலிய பற்றிய விமர்சனம்
உயர்தரம் - ஜாதக கதைத் தொகுப்பு
உயர்தரம் - நவகவி சரணீய
உயர்தரம் - ஹங்ச சந்தேசய விமர்சனம்
உயர்தரம் - ஹுணுவடய கதாவ - விமர்சனம்
உயர்தரம் - கெடிகதா சங்கிரஹய

10/-

அனுலா விஜேரத்ன மெனிகேயின்

# வடவாமுகாக்கினி

தமிழாக்கம் : சரோஜினி தேவி அருணாசலம்

இலங்கையின் வெவ்வேறு இனப்பிரிவினரில் ஒற்றுமை வளர்ப்பை நோக்கமாகக் கொண்டு இந்நூல் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஆலோசனைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

This book is published Colombo University Students Advisory service is concerning the development of unity between communities.

வடவாமுகாக்கினி
தமிழாக்கம் : சரோஜினி தேவி அருணாசலம்
முதலாம் வெளியீடு 1996
சகல உரிமைகளும் நாவலாசிரியையைச் சேரும்
அட்டைப்படம் : சோமசிரி ஹேரத்

ISBN 955-584-259-0
" Wadavamukhakkini" A Novel by
Anula Wijayaratna Manike
Translated by Sarojini Devi Arunachalam

அச்சிட்டு வெளியிட்டவர்கள் - சார பிரசுரத்தார்
1/94, அதுறுகிரிய வீதி, கொட்டாவ, இலங்கை.

*1991 - ஆம் ஆண்டில் வெளியான இந்த நாவலை அவ்வாண்டின் சிறந்த இலக்கிய சிருஷ்டிகளில் ஒன்று என இலங்கை சாகித்திய மண்டலம் தெரிவு செய்திருந்தது. மக்கள் இலக்கிய விழாவின் போது அவ்வாண்டின் சிறந்த நாவலுக்கான "மக்சிம் கொர்க்கி" பரிசு இதற்குக் கிடைத்தது. ஜப்பானில் உள்ள டொயோட்டோ மன்றம் ஆசிய நாடுகளின் சிறந்த நாவல்களை ஜப்பானிய மொழிக்குப் பெயர்க்கும் செயல்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தச் செயல்திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இந்நாவல் ஜப்பானிய மொழிக்குப் பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளது. இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயல்திட்டம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. இந்நாவலைத் தமிழுக்கு மொழி பெயர்ப்பதற்காக "இத்திட்டம் இந்நாவலைத் தேர்ந்தெடுத்திருந்தது. இப்பொழுது இந்நூல் தமிழ் மொழியிலும் வெளி யாகியுள்ளது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு விரைவில் வெளியாக உள்ளது. இந்நூலின் ஆசிரியையான அனுலா விஜேரத்ன மெனிகே தனது முதலாவது நாவலான "சுஜாத புத்ரயன்கே வஸ்துவ" என்னும் நூலுக்கு 1987 - ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான அரச சகித்திய பரிசினைப் பெற்றிருந்தார்.*

# முகவுரை

தனது பரம்பரை பண்பாட்டைக் கைவிட்டு சிங்கள கலாச்சாரத்துடன் ஒன்றிவிட ரங்கசாமி மேற்கொண்ட முயற்சியை முற்றிலும் புறம்பானதொரு சமுதாயப் போக்கு மூலம் வெளிப்படுத்தும் பாணி தான் வடவாமுகாக்கினி என்னும் இந்த நாவலுக்கு நான் எடுத்துக் கொண்ட கருப்பொருள்.

யாராவது ஒருவர் தான் பிறந்து வளர்ந்த பண்பாட்டைத் துறந்து புதியதொரு கலாச்சாரத்துடன் ஒன்றிவிட விரும்புகிறார் என்றால் அவர் அந்த புதிய கலாச்சாரத்தை மனமார விரும்புபவராக இருக்க வேண்டும். குறைந்தது மூன்று தலை முறைகளாவது கழிந்த பின்னர் தான் இந்தப் புதிய கலாச்சாரப் பண்புகள் அவரை முழுதாக ஆட்கொள்ளும். அதுவரை அதற்குப் புறத்தே உள்ள ஓட்டில் ஒட்டி வாழ்ந்துகொண் டிருப்பார். அதாவது அவர் அந்தக் கலாச்சாரத்துக்கு இன்னுமே ஒரு அந்நியர்தான். அந்தப் புற ஓட்டைக் குத்திக் கிழிக்க முயலும் ரங்கசாமி போன்றவர்கள் செயற்கைத் தோற்றம் பூண்ட ஒரு சமுதாய அலையில் அகப்பட்டு அதனால் முற்றாக அந்நியராக்கப்படுவதை நான் இந்த நாவலில் சித்திரித்திருக்கிறேன்.

நம்பிக்கைக்குப் பாத்திரமான அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்க வேண்டிய சகோதரர் கூட்டம் துரோகிகளாக மாறிவிடும் சம்பவம் இருக்கிறதே அதற்குத் தான் நாம் வர்க்கப் போராட்டம் என்று நாமகரணம் சூட்டியிருக்கிறோமா? அது மரத்தை மட்டுமல்ல அதன் ஆணி வேரையே அறுத்து விடும்.

இந்த அனுபவத்தை நான் கதை சொல்லும் முறைகள் இரண்டினைக் கையாண்டு சித்திரித்திருக்கிறேன். ஒன்று தன்மைக் கண்ணோட்டத்திலும் மற்றது படர்க்கைக் கண்ணோட்டத்திலும் வைத்துச் சித்திரித்திருக்கிறேன். பிரதான கதாபாத்திரமான ரங்கசாமியை சித்திரிக்கும் பொருட்டு தன்மையிடம் சார்ந்த உரைநடை உத்தி பயன்படுத்தப் பட்டுள்ளதுடன் அந்தப் பாத்திரத்துக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான உறவினை எடுத்துரைப்பதற்கு படர்க்கையிடம் சார்ந்த உரைநடை உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இரு வேறு உத்திகளில் மாற்றி மாற்றிக் கதையை எழுதுவது வாசிப்பவர்களுக்கு சிரமமாகத் தோன்றலாம். நாவலில் அரைவாசிக்கு மேல் எழுதி முடிக்கும்வரை ஒரே நேரத்தில் இரண்டு நாவல்களை எழுதும் ஒருவருடைய மனோ நிலை எப்படியிருக்குமோ அதே போன்றதொரு மன நிலையில் தான் நான் இருந்தேன். இந்த இரண்டு முறைகள் மூலம் ரங்கசமாயின் பாத்திரத்தை முப்பரிமாணத்தில் சித்திரிக்கக் கூடியதாக இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் இந்த உத்தி இந்த நாவலைப் பொறுத்த வரையில் வெற்றி யளித்ததா இல்லையா என்பதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

**அனுலா விஜேரத்ன மெனிகே**

94 / 1 அதுருகிரிய வீதி
கொட்டாவ

# அணிந்துரை

ஓர் இலக்கிய சிருஷ்டி ஒரு மொழியிலிருந்து வேறொரு மொழிக்கு மாற்றப்படும் பொழுது இலக்கிய ரீதியாக மட்டுமல்ல மக்கள் சமூகத்துக்கே அதனால் பெரும் நன்மை விளைகிறது. இதனால் வாசகர்கள் குறிப்பிட்டதொரு மொழியில் வெளியாகிய உன்னத படைப்பைத் தாமும் வாசித்து அனுபவிப்பது மட்டுமன்றி அதில் பொதிந்துள்ள சமுதாயக் கலாச்சாரப் பண்புகளையும் அறிந்து கொள்ள இது வழிவகுக்கின்றது.

சிங்கள மொழியிலும் தமிழ் மொழியும் வெளியாயிருக்கும் நூல்களை பரஸ்பரம் மொழிபெயர்ப்பதென்பது இன்று சுலபமாகச் சாதிக்கக் கூடிய ஒன்றல்ல. நிலைமை அப்படியிருக்க சமீபகாலத்தில் வெளியாகிய சிறந்த நாவல்கள் இரண்டினைத் தேர்ந்தெடுத்து வாசகர்களுக்கு வழங்கும் இக்கைங்கரியம் இருக்கிறதே அதை இனங்களுக்கிடையில் ஒற்றுமை வளர்வதை அவாவி நிற்கும் எவருமே மனப்பூர்வமாக வரவேற்பார்கள். அனுலா விஜேரத்ன மனிகே எழுதிய "வடபாகின்ன" என்னும் சிங்கள நாவல் "வடவா முகாக்கினி" என்ற பெயரில் தமிழுக்கும் கே. அருள் சுப்ரமணியம் எழுதிய "அவர்களுக்கு வயது வந்து விட்டது" என்ற தமிழ் நாவல் "எயாலட வயச அவித்" என்ற பெயரில் சிங்களத்துக்கும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த மொழிபெயர்ப்புப் பணிகளுக்கான நிதி ஏற்பாடுகள் யாவும் கனடா அரசாங்கத்தினதும் சுவிற்சர்லாந்து அரசாங்கத் தினதும் ஆதரவில் 1992-ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் மாணவர் மதியுரைஞர்பிரிவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட "இனங்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கான

செயல் திட்டத்தின்" மூலம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த நிதி உதவியை வழங்கிய கனடா அரசாங்கத்துக்கும் இலங்கையில் தற்பொழுது சுவிற்சர்லாந்து தூதராக விளங்கும்.

திருமதி மாரியா லூயிசா கொரொனி அவர்களுக்கும் இப்பணிகளின் ஆரம்பகட்டத்தில் இலங்கையின் கனேடிய தூதராக இருந்த திரு அந்ரே வினேடி அவர்களுக்கும் முதற்கண் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்விரு நூல்களையும் மொழிபெயர்ப்பதற்கு அனுமதி வழங்கிய நூலாசிரியர்களுக்கும், மொழிபெயர்ப்பின் போது மூலத்தின் சுவை குன்றிவிடாமல் நயமாக அதனை நிறைவேற்றிய திருமதி சரோஜினிதேவி அருணாசலம் அவர்களுக்கும் எம். வை. சருல்லாகான் அவர்களுக்கும், இவ்விரு நூல்களையும் வாசித்து ஆலோசனை வழங்கிய திரு மடுலுகிரியே விஜேரத்ன அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

இம்மாபெரும் பணியை இலாபம் கருதாது நற்கருமமெனக் கொண்டு அச்சிட்டு வெளியிடுவதற்கு இணங்கிய சார பிரசுர கர்த்தா திரு. ரோலண்ட் அபேபால அவர்களுக்கும் அங்குள்ள பணியாளர் குழுவுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

முடிவாக இச்செயல் திட்டம் இனிதே நிறைவேற பலவகையிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றி உரியதாகட்டும்.

இனங்களிடையே ஒற்றுமையை
வளர்ப்பதற்கான செயல்திட்டம்
கொழும்பு பல்கலைக்கழகம்,
கொழும்பு - 3.

❝அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்த இடம்தான் இது என்று பார்த்த மாத்திரத்தில் எவருக்குமே தோன்றாது. கரியும் புகையும் படிந்த சிதைந்துபோன சுவர்களோடு அந்தக் குடிசை மட்டும் தான் இன்று மிஞ்சியிருந்தது. இந்த நிலைமை ஒரு ஆறுமாதம் தான் நீடித்தது. செல்லையா இறந்துவிட்டான். விஜித்தும் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுவிட்டான். இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்திராவிட்டால் அந்தக் குறுகிய காலத்தில் நகரத்தின் அழகை மாசுபடுத்தும் வாய்ப்பு அந்தக் குடிசைக்குக் கிட்டியிருக்காது.

ரங்கசாமியின் கையிலோ மிச்சம் சொச்சம் என்று சொல்லக்கூடியதாக எதுவுமே இல்லை.ஆகையினால் அவனாகவே விஜித்திடம் வந்து நிலத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு பணம் தரும்படி வற்புறுத்தினான். அகதி முகாமில் இருந்த ரங்கசாமி இந்த விஷயமாக எத்தனையோ தடவை விஜித்தைச் சந்திக்க வந்திருந்தான். இதனால் தானோ என்னவோ விஜித்தும் சற்றுமனம் இரங்கி இதற்கு சம்மதித்தான். காணிக்கு உறுதி எதுவும் இருக்கவில்லை. அத்துடன் நிலத்தின் பெறுமதியும் குறைந்திருந்தது. இந்தக் காரணங்களினால் காணியை வாங்குபவரே விலையை நிர்ணயிக்க வேண்டியதாயிற்று.

கொடுக்கல்,வாங்கல் எல்லாம் முடிந்த கையோடு விஜித் புல்டோசர் ஒன்று வாங்கியிருந்தான். இரண்டு தசாப்தங்களாக ரங்கசாமியின் சீவிய சரித்திரத்தை மௌனமாகக் தாங்கிக் கொண்டு அக்கினி மூட்டப்பட்டாலும் அதற்கு இரையாகாமல் நிமிர்ந்து நின்ற சுவர்களும் அத்திவாரமும் ஒரு நொடியில் தரை மட்டமாக்கப்பட்டன. அதன் பிறகு சுற்றிலும் தென்னோலையால் வேலி அடைந்தார்கள். அந்த தென்னோலை அடைப்புக்குள் வாயுவேக

மனோவேகத்தில் ஒரு அழகான கட்டிடம் தலையெடுத்துக் கொண்டிருந்து. வெகு சீக்கிரத்தில் "விஜித் பாதுகாப்பு சேவை" யின் சுற்று மதில் அதைச் சூழ எழுந்தது. அந்த வளவின் ஒரு மூலையில் ஒரு வளைவு. மின்னிமின்னி மறையும் பெயர்பலகை இந்த வளைவுக்கு ஒளியேற்றிக் கொண்டிருந்தது. இதை விட அளவில் சற்றுப் பெரிய பெயர்ப்பலகையொன்று சுவருக்கு மேலாக கம்பீரமான தோற்றத்தோடு நின்றது. விட்டுவிட்டு ஒளிவிடும் அந்தப் பெயர்ப்பலகையிலிருந்து ஒருவித ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அருகில் செல்பவர்களுக்கு அது ஜனக் கூட்டமொன்றின் இருதயத் துடிப்புப் போல கேட்கும். மதிற் சுவரை ஒட்டினாற்போல ஒரு சின்னஞ் சிறிய கடை. அதன் பக்கத்தில் ஒரு சிறிய கதவு அதை ஒட்டினாற்போல நீண்டு நெடுத்ததோர் வாயில். இந்த வாயிலின் சமீபமாக விஜித் பாதுகாப்பு சேவையின் காரியாலயம் இருந்தது. இதற்குள் நுழைபவர்கள் செல்லையாவின் பூதவுடல் தகனம் ஆகிய இடத்தை கடந்து தாம் செல்வதை அறிவார்களா?

# 1

நிலவு வெள்ளித் தாரையை அள்ளிக் கொட்டியிருந்ததால் வெளியே பார்த்து மணி எத்தனை என்று சொல்ல முடியவில்லை. பௌர்ணமி முடிந்து இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தது. ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டதால் நேரம் என்னவென்று சொல்ல முடியவில்லை. எங்கோ இருந்த ஒரு காகம் "காக்காக்" என்று குரல் கொடுத்தது. நிலா ஒளியைக் கண்டு ஏமாந்து போன ஒரு காகமாகத்தான் இருக்கவேண்டும். பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து பழக்கப்பட்ட ரங்கசாமி பொழுது விடிந்துவிட்டதென்றே எண்ணினான். சரியான நேரத்தை அறிந்து கொள்வதற்கு ஏதாவதொரு துப்பு கிடைக்கும் வரை கட்டிலிலேயே கிடப்பது என்று எண்ணிக்கொண்டான். பலகைக் கதவின் மறுபக்கத்தில் வெளித் திண்ணையில் படுத்திருந்த அவனுக்கு கதவுக்குச் சற்று தொலைவில் வைக்கப்பட்டிருந்த மங்கலான குப்பி விளக்கின் மெல்லிய ஒளிக்கீற்று, பலகை இடுக்கின் வழியாகத் தெரிந்தது. நேரம் பார்ப்பதற்கென்று சாவித்திரி வைத்திருந்த கடிகாரத்தின் டிக் டிக் ஓசை அமைதியைக் குலைத்தது. பழைய பண்டங்களுடன் உரிமையாளர்கள் அதைக் குறைந்தவிலைக்கு விற்றிருந்தார்கள். வாங்கியவர்கள் அதைத் திருத்திப் பாவித்தார்கள். அந்த கடிகாரம் இருக்கிறதே அது, தான் நினைத்த நாளைக்கு மட்டும் தான் சரியான நேரத்தைக் காட்டும். எங்கோ ஒரு சேவல் கூவியது. ரயில் நிலையம் இருந்த திக்கிலிருந்து தான் கேட்டது. அது முதிர்ச்சியடையாத நாம்பன் சேவல் என்பது அதனுடைய குரலிருந்து தெரிந்தது. அதைத் தொடர்ந்து சுற்றுப்புறத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல சேவல்கள் கூவத் தொடங்கிவிட்டன. கடைசியாக கீழே ஆஸ்பத்திரி பக்கத்திலிருந்து ஒரு சேவல் கூவியது.

யாரோ ஒருவர் தோளில் சுமந்த பெட்டியுடன் பஸ் தரிப்பிடத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் வெள்ளை அங்கவஸ்திரம் அணிந்த ஒருவர் சாரத்தை முழங்கால் வரை தூக்கியபடி ஒரு கையில் விரித்த கைக்குட்டையொன்றை ஆட்டியவாறு எட்டி அடிவைத்து நடந்து கொண்டிருந்தார். இன்னும் சில விநாடிகளில் நான்கு மணி பஸ் தெலபுவவை சேர்ந்துவிடும் என்று எண்ணியவாறே ரங்கசாமி எழுந்து சாக்குக் கட்டிலை மடித்து பலகை கதவோரமாக சாய்த்து வைத்தான். தான் இவ்வளவு நேரமும்

போர்த்திருந்த கட்டம் போட்ட சாயம் வெழுத்த கட்டில் விரிப்பை எடுத்து தோள்கள் மூடும்படியாக ஒரு பக்கமாக எடுத்து போர்த்திக் கொண்டான்.

ரங்கசாமி கடையின் முன்புறத்துப் பரணை ஒட்டினாற்போல் இருந்த மண் திண்ணையின் மேலிருந்த அடுப்பை மூட்டுவதற்கு எத்தனித்தான். அந்த அடுப்புக்குள் காய்ந்த மரத்தூள் தண்ணீருடன் கலந்து திணிக்கப்பட்டிருந்தது. ஈரமாக இருந்ததால் அடுப்பு எரியவில்லை. மூன்றாவது தீக் குச்சியைத் தட்டி கடதாசியில் பிடித்தான். அதுவும் அணைந்து விட்டது. தென்னோலைகளை வைத்து அடுப்பை மூட்ட எடுத்த முயற்சியும் தோற்றுவிட்டது. மண்ணெண்ணெயை அடுப்புக்குள் ஊற்றுவது வீண்விரயம். ரங்கசாமி கைதுடைக்கும் துணியை எடுத்தான். அதில் அடுப்புக் கரி ஊறியிருந்தது. அதில் சிறிதளவு கிழித்து தென்னம் ஈர்க்கொன்றில் சுற்றினான். பிறகு குப்பி விளக்கின் எண்ணெயில் தோய்த்து சுடரில் பிடித்ததும் ஹோஸ் என்ற சத்தத்துடன் பற்றிக் கொண்டது. மரத்தூள் அடுப்பு மெல்லமெல்ல எரிய ஆரம்பித்தது. என்ன இருந்தாலும் ஒரு சொட்டு மண்ணெண்ணையாவது சிந்தாமல் அடுப்பைப் பற்ற வைத்திருந்தால் தான் விசேஷம்.

ரங்கசாமி தண்ணீர் கொதிக்கும் வரை இழுத்து மூடிக் கொண்டு வாங்கில் உட்கார்ந்த படி கீழே உள்ள தெருவுக்கப்பால் தெரியும் நகரத்தை நோட்டம் விட்டான். தொழிலுக்காகத் தூர இடங்களுக்குப் போகிறவர்களைத் தவிர இந்த விடியும் ஜாமத்தில் ஒரு வியாபாரியோ கூடைக்காரியோ தான் பஸ்சுக்காக வருவார்கள். தங்களுடைய வியாபாரப் பொருள்கள் நிரம்பிய சாக்கை அல்லது கூடையை அருகில் வைத்துக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள். இருட்டை உற்று நோக்கும் ரங்கசாமிக்கோ இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது. நகரத்துக்கு இன்னும் மின்சாரம் வரவில்லை. இருளை ஊடுருவிப் பார்த்தால் மனித உருவங்கள் அங்குமிங்கும் அசைவது கண்களுக்குச் சற்றுப் புலப்படும்.

பஸ் புறப்பட்டுப் போனதும் அடுத்த அரை மணி நேரத்துக்கு அந்தச் சின்னஞ்சிறிய நகரம் மறுபடி தூக்கத்தில் ஆழ்ந்துவிடும். புகை வண்டி தெலபுவவை கடப்பதற்கு கால்மணி நேரம் இருக்கக்கூடியதாக நகரம் உண்மையிலேயே மீண்டும் விழித்துக் கொள்ளும். எத்தனையோ பாதைகள் வழியாகவும், குறுக்குப் பாதைகள் வழியாகவும் அயல் கிராமங்களிலிருந்து ஜனங்கள் தெலபுவ ரயில் நிலையத்துக்கு சாரிசாரியாக வருவார்கள். பத்து பதினைந்து மைல்களுக்குள்ள ஒரே ஒரு புகையிரத நிலையம் தெலபுவ நிலையம் தான். இது நகரத்துக்கு மேலே ஏறக்குறைய ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கிறது.

பானை நீர் மெல்ல மெல்ல சூடேறிக் கொதிக்கத் தொடங்கவும் வாடிக்கைக்காரர் வரவும் சரியாக இருந்தது. சைக்கிள் வண்டியில் வருபவர்கள்

தங்கள் வண்டிகளை ரங்கசாமியிடம் ஒப்படைத்துவிட்டு ரயில் நிலையத்துக்குப் போவார்கள். தண்ணீர் பானைக்குள் இருக்கும் ஒரு சத செப்பு நாணயம் மேலும் கீழுமாகத் துள்ளத் தொடங்கியதும் ரங்கசாமியும் இருந்த இடத்தை விட்டு எழுந்துவிடுவான். சாவித்திரி கண்ணாடி கிண்ணங்களை முதல்நாள் இரவு கழுவி அடுக்கி வைத்திருப்பாள். ரங்கசாமி கொதி நீரை ஒரு கோப்பையில் மொண்டு அந்தக் கண்ணாடிக் கிண்ணங்களில் சொட்டுச் சொட்டாக வார்ப்பான். தோல் சீவி தட்டி வைத்த பெரிய இஞ்சித் துண்டை தண்ணீர் பானைக்குள் போட்டு விடுவான்.

வீட்டில் தேநீர் குடித்து விட்டுப் புறப்படுபவர்களுக்குக் கூட ரங்கசாமியின் தேநீர் உபசாரத்தை பார்த்தால் இஞ்சி போட்ட ஒரு டம்பளர் சூடான தேநீர் அருந்த வேண்டும் போல் தோன்றும். ரயிலின் ஊதல் சத்தம் கேட்டதும் ரங்கசாமி ஆற அமர இருந்து சற்றுக் குறைவாகச் சர்க்கரை கலந்து மூன்று டம்ளர் தேநீர் தயாரித்தான்.

" பெத்தா பெத்தா "

வெளியே ஏற்பட்ட சந்தடியில் சாவித்திரி விழித்துக் கொண்டாள். இரவு குறைத்து வைத்திருந்த குப்பிவிளக்கின் சுடரை சற்று உயர்த்தி படிப்பில் மனதைச் செலுத்த முயற்சி செய்தாள். ஆனால் அவள் கைகளுக்கு அகப்படுவதெல்லாம் யாராவது ஒரு சினேகிதியிடமிருந்து இரவல் வாங்கி வந்த சித்திரக் கதை பத்திரிகையோ, மங்கையர் சஞ்சிகையோ தான்

" பெத்தா "

விழித்துக் தான் இருந்தாள். ஆனால் எதுவும் பேசவில்லை. தலையை மட்டும் நொடித்துக் கொண்டாள். ரங்கசாமியின் குரல் கேட்டு எழுந்த இலட்சுமி நூல் புடவையை எடுத்து போர்த்துக் கொண்டு பலகைக் கதவின் ஒரு பாதியைத் திறந்து இரண்டு தேநீர் கிண்ணங்களையும் உள்ளே எடுத்தாள். சர்க்கரை நிறையப் போட்டு தித்திப்பாக தானாகவே ஒரு தேநீர் தயாரித்துக் குடிப்பது தான் சாவித்திரிக்குப் பிடிக்கும். அப்பா தயாரிக்கும் தேநீரைக் குடிப்பதை விட சில சர்க்கரைத் துணுக்களை வாயில் இட்டுக்கொண்டு தேநீர் குடிப்பது எவ்வளவோ மேல் என்று சாவித்திரி சொல்வாள். இருந்தாலும் இந்த விடியக் காலை வேளையில் உள்ளங்கையை நக்கிக் கொண்டு தேநீர் குடிப்பது என்பது அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விஷயம்.

காலை ஐந்தே கால் மணிக்கு வரும் ரயிலும் ஏழரை மணி ரயிலும் மட்டும் தான் தெலபுவவில் நிற்கும். மாலையிலும் ஐந்தரை மணிக்கும், ஏழரை மணிக்கும் அதே போல இரண்டு ரயில்கள் தெலபுவவைக் கடந்து மேலே ஓடிக் கொண்டிருக்கும். காலை ஐந்தரை மணிக்கும் மாலை ஐந்தரை மணிக்கும் உள்ள

ரயில்களுடன் தான் ரங்கசாமிக்குப் பழக்கம் அதிகம். ஐந்தேகால் மணியாகும் பொழுது அந்த ஊரில் கடைகள் எதுவும் திறந்திருக்காது. நகரம் என்பதை விட தெலபுவவை ஒரு கடைப்பாக்கம் என்று சொல்வது தான் பொருத்தம். கம்பஹா ஹோட்டலையும், ஒரு சிறிய தேநீர்க் கடையையும், சில்லறைச் சாமான்கள் விற்கும் கடைகள் சிலவற்றையும் விட்டால் நிரந்தர வியாபாரம் நடத்தும் கடையென்று சொல்லக்கூடியதாக உள்ளது சிங்கள மருந்துக் கடையொன்றுதான். ஒன்றோடு ஒன்று தொடுத்துக் கொண்டிருந்த இந்தக் கடைத் தொடரிலிருந்து விடுபட்டு ஆஸ்பத்திரிக்கு அருகே ஒரு பாமசி சமீபத்தில் தான் தலையெடுத்திருந்தது. இந்த பாமசிக்கும் கடைத் தொடருக்கும் நடுவில் சிறிய மரக்கறிக் கடைகள் இரண்டு இருந்தன. மாலை சுமார் நான்கு மணிக்கு தெலபுவவுக்கு வந்து சேரும் சில மீன்காரரும், மரக்கறிக்காரிகளும் சிலரும் மூன்று "வாட்டுகளைக்" கொண்ட அந்த ஆஸ்பத்திரிக்கு எதிரில் பாதையில் தங்கள் வியாபாரப் பண்டங்களைப் பரப்பி வைப்பார்கள்.

காலை ரயிலுக்கு வரும் ஒருவருக்கு ஒரு கோப்பை தேநீர் குடிப்பதென்றால் வேறு இடமே கிடையாது. கம்பஹா ஹோட்டல் முதலாளி இரவு ஹோட்டலை மூடிக்கொண்டு வீட்டுக்குப் போய்விடுவார். இந்தத் தேவையைக் கண்டுகொண்டு ரங்கசாமி தேநீர் விற்பனை செய்யத் தொடங்கினாலும் நகரம் விழித்துக் கொண்டதும் கடைகள் திறந்துவிடும். அப்பொழுது அவன் தானாகவே இந்த வியாபாரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வான். அதற்குப் பிறகு அவனுடைய கடைக்கு முன்னால் உள்ள பரணில் பப்பாளிப்பழம், கொஞ்சம் மரக்கறி, வெற்றிலைக்கட்டு இப்படி ஏதாவது தான் இருக்கும். பரணுக்கு அடியில் ஒரு குலை செவ்விளநீர் இல்லாத நாளே கிடையாது. இரவு சாராய வெறியில் தூங்கிவிடும் சிலர் ரயிலைப் பிடிக்க வரும் அதிகாலை வேளையில் ஒரு செவ்விளநீர் வெட்டிக் குடிப்பது வழக்கம்.

தாமதித்து வருபவர்கள் சைக்கிளை ரங்சாமியிடம் நேரடியாக ஒப்படைக்கத் தவறிவிடுவார்கள். ரயில் பெருமூச்சு விட்டுக்கொண்டு வழியை நோக்கியபடி இருக்கும். ஒரு கையால் சோற்றுப் பொட்டலத்தைத் தூக்கிக் கொண்டு மறு கையால் சட்டைப் பையை இறுகப் பற்றியபடி " ரங்சாமி "சைக்கிளைக் கவனித்துக்கொள்" என்று திரும்பிப் பார்த்துக் கத்திக்கொண்டு ஒருவன் ஓடுவான். " சரி சரி ஓடுங்க ஐயா ரயிலைக் கோட்டை விட்டுடுவீங்க" ரங்கசாமி பதிலுக்குக் கத்துவான். ரயில் ஊதிக் கொண்டு கிளம்பினால் கூட பழக்கப்பட்டவர்களாயிருந்தால் ஓடிப்போய் ஏறிவிடுவார்கள். அதற்குச் சின்ன ரயில் என்று பெயர். இந்த ரயில் வண்டியைப் பற்றிய எல்லா விபரங்களும் ரங்கசாமி வசம் உண்டு.

"இன்னைக்கு ரயில் இல்லை ஐயா" இது அவன் சில சமயங்களில்

சொல்லும் செய்தி " மேலைத் தெருப் பக்கத்தில மரம் விழுந்து போச்சு "

"வேலை இல்லீங்க ரயில் போய் பத்து நிமிஷம் ஆயிடிச்சுங்க" இது தாமதித்து வரும்ஒரு பிரயாணிக்கு ரங்கசாமி தரும் விளக்கம்.

இப்படி இலவசமாக விநியோகிக்கப்படும் செய்திகளுக்கு ரயிலில் பிரயாணஞ் செய்யும் வாடிக்கைக் காரர்கள் நன்றாகப் பழக்கப்பட்டிருந்தார்கள். ஏதாவது காரணத்தால் தாமதமாக வந்து ரங்கசாமியின் கண்களில் படாமல் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடிப்போய் ஏமாந்து திரும்பி வரும் ஒருவர் ரங்கசாமி மேலே பழியைப் போட்டுவிடுவார் .

" என்ன அநியாயம் இவ்வளவு கஷ்டப்பட்டேனே ரயில் போயிடுச்சுன்னு ரங்கையா சொல்லவே இல்லையே"

அதற்கு ரங்கசாமியிடமிருந்து பதிலே வராது அவன் கடமை தவறிவிட்டான். பாதுகாத்து வைத்திருந்த சைக்கிள் வண்டியை ஐந்தரை மணி ரயிலில் வந்து மறுபடி எடுத்துக் கொண்டு போகும் பிரயாணி வீட்டுக்குள் கேட்கும் படியாக "சைக்கிளை எடுத்துக்கிட்டு போறேன்" என்று சத்தம் போட்டு சொல்வார்.

பகல் வேளையில் ரங்கசாமி தனது வியாபார விஷயமாகக் கிராமாந்தரங்களுக்குப் போய்வருவான். கட்டம் போட்ட சாரம் உடுத்து உள்பக்கமாக மடித்துப் பட்டியைக் கட்டி கொள்வான். இரண்டு சாக்குகளை எடுத்து மடித்து ஒரு கட்டாகக் கட்டி தலையில் வைத்துக் கொண்டு தராசைத் தொங்கவிடுவான்.

வீட்டுக்குத் தேவையான ஏதாவது காரியம் ஆகவேணும் என்றால் ரங்கசாமி பகலில் இப்படி திக்விஜயம் ஆரம்பிப்பதற்கு முன்னால் செய்வித்தால் தான் உண்டு.

"ஷடேஷன் மாஸ்டர் " தான் கேட்டதை அலட்சியப்படுத்தும் புருஷனைக் கோபத்துடன் பார்க்கும் லட்சுமி சாவித்திரியை நோக்கி

"ஸ்டேஷன் மாஸ்டருக்கு ரயிலைக் கவனிக்கணும். டிப்போவில இன்னிக்கு அரிசி தாராங்களாம். இன்னைக்கு மட்டுந்தான் நல்ல அரிசி இருக்கும். மத்த நாளைக்கு வரகரிசி தான் "

"அப்படின்னா அதுக்கு நான் தான் போகனும் இல்லையா? " சாவித்திரி

பொறுமையிழந்த குரலில் பேசினாள். நீங்க போய் அதை வாங்கி வந்தா என்ன குறைஞ்சா போயிடும். எல்லாத்தையும் செய்ய நான் வர்ரவரைக்கும் பார்த்துக்கிட்டு இருக்கீங்களே"

வேலையைச் செய்யத் தூண்டுவது போல லட்சுமி சாவித்திரியை ஒரு பார்வை பார்த்தாள். லட்சுமிக்கு பெரிய சுகவீனம் ஏதாவது வந்தால் மட்டும் மருந்து வாங்கப் போவாள். அதைத் தவிர வெளியே இறங்கி நடப்பதென்றால் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது.

" எனக்குப் போக மனசே இல்ல. வெக்கமா இருக்கு"

"சரியாப் போச்சு போ நான் தான் வெக்கப்படனும் உனக்கு என்ன வெக்கம்"

"உனக்கு டவுனிலே ஜோலி இருக்குமே"

லட்சுமி தோளுக்கு மேல் வளர்ந்து நிற்கும் மகளைத் தலைமுதல் கால் வரை நோட்டம் விட்டாள்.

" உன்னோட வயசில நான் இருந்தப்போ எங்கேயும் போகமாட்டேன்"

"ஸ்கூலுக்குக் கூடவா? " சாவித்திரி கேட்டாள்.

விற்பதற்கு கொண்டுவரும் பழைய தமிழ் செய்தித்தாள்களில் ஒன்று இரண்டை அம்மா தனியாக எடுத்து வைத்துக் கொள்வாள். ஓய்வாக இருக்கும் சமயம் சமையலறை வாசல்படியில் உட்கார்ந்து படிப்பாள். சில வேளைகளில் ஒரே செய்தித் தாளை பல தடவை வாசிப்பாள். சாவித்திரிக்கு ஓரளவு தமிழ் எழுத வாசிக்கத் தெரியும். அப்பாவுக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்ற விஷயமும் அவள் அறிந்ததே.

" அம்மா எப்ப பார்த்தாலும் பொய்தான் சொல்லுவீங்க. ஸ்கூலுக்கு போகாம எப்படி பேப்பர் எல்லாம் படிக்கிறீங்க?"

"எங்கப்பா எங்களுக்கு வீட்டில எழுதப்படிக்க சொல்லிக் கொடுத்தாங்க. பெரிய குடும்பத்தில பொறந்த பொண்ணுங்க தான் ஸ்கூலுக்குப் போனாங்க. எங்களோட அப்பா எங்கள எங்கேயும் போக விடல்லடி. அது தான் எனக்கு இம்பிட்டு கூச்சம் ".

"நீ என்ன சொன்னாலும் சரி நான் கடைக்கு மட்டும் போக மாட்டேன் " சாவித்திரி கோபமாகச் சொன்னாள்.

" அங்கே சரியான கியூ."

" போயிட்டு வாம்மா " லட்சுமி கெஞ்சிக் கேட்டாள். நல்ல பொண்ணு தானே போயிட்டுவா . "

"சரி சரி எங்கே சாக்கு போக்கு சொல்லாம சல்லிய எடுங்க" சாவித்திரியின் குரலில் கோபம் தொனித்தது.

" எனக்கு ஸ்கூல்லே ஒரு வேலை இருக்கு. அம்மாக்குத்தான் கூச்சம் வெக்கம் இத்யாதி இத்யாதி, பெரியம்மா இருக்காளே ஒண்டியா எங்கவேணாலும் போயிட்டு வர்ரா"

" அவங்க அப்பாவோட ஆளுங்க"
"அதுக்கென்ன ?".

"நாங்க யாழ்ப்பாணத்து ஆட்கள் இல்லியா?" அம்மா யாழ்ப்பாண வாழ்க்கையை எண்ணி ரொம்பவும் பெருமைப்படும் ஒரு பெண்.

"அப்பாக்கு வேண்டாம்ன்னு போயிடுச்சு அது தான் நாங்க வெலிமடைக்கு வந்தோம். எல்லாத்தையும் விட்டுவிட்டுத் தான் வந்தோம். மூணு வருஷங்கள்ள எல்லாத்தையும் இழந்துட்டோம். தம்பி செத்தான். வீடு எரிஞ்சு போச்சு. அப்பாவுக்கு எல்லாத்திலயும் பிடிப்பு விட்டிடுச்சு. வெறுப்பில தான் வெலிமடைக்கு வந்தோம். சாமி நெனைச்சமாதிரி நடக்க வேண்டியதெல்லாம் நடந்து முடிஞ்சு போச்சு. கடவுள் குடுத்த மாதிரித்தான் இது எடுத்தது" அவள் கைகளைக் கூப்பினாள்.

அவள் அதை விதி என்று நினைத்தாள். வெலிமடை வந்திராவிட்டால் ஒரு நாளும் ரங்கசாமியைச் சந்தித்திருக்க முடியாது. கழுத்தளவுக்கு ஏறிப்போன கடன் மட்டும் இல்லையென்றால் அப்பா ஒருநாளும் ரங்கசாமியை முடிக்க சம்மதித்திருக்க மாட்டார். அவர் இந்தியத் தமிழரை வெறுப்பவர். மனசைத் திடப்படுத்திக் கொண்டு ஒருவாறு இந்தக் கல்யாணத்தைப் பொறுத்துக் கொண்டார். வறுமையின் கோரப்பிடியில் சிக்கி அவரும் ஒரு நாள் இறந்து போனார். அவர் இறக்கும் வரை ரங்கசாமியை அவரால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. லட்சுமியோ ரங்கசாமியை அனுசரித்து நடக்கப் பழகிக் கொண்டாள். ஆனால் அவனுடைய உறவினர்களை மட்டும் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. ரங்கசாமியை புரிந்து கொண்டு அனுசரித்துப் போகவே தனக்கு எவ்வளவு காலம் எடுத்தது என்பதை நினைத்துப் பார்த்தாள்.

# 2

வழி நெடுக ஒரே மழை. அகால மழை நான் நன்றாக நனைந்து விட்டேன். காலைப் பொழுதாக இருந்ததால் மழை வருவதற்கான அறிகுறிகளை நேரத்தோடு கண்டு கொள்ள முடியவில்லை. திடீரென்று அகாலத்தில் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. இதனால் அதிகாலைக் குளிர் அதிகரித்தது. பெரிய பெரிய மழைத் துளிகள் பிய்த்துக் கொண்டு தலையில் விழத் தொடங்கிவிட்டன. மழை பலமாகப் பெய்யத் தொடங்கியதால் சைக்கிளை மிதிக்க முடியவில்லை. நான் அதிலிருந்து இறங்கி ஜனசஞ்சாரமற்ற குறுக்குப் பாதை வழியாக பலத்த குரலில் மழையைச் சபித்தபடி பைசிகளைத் தள்ளிக்கொண்டு நடந்தேன். பாதை ஓரமாக அக்கம் பக்கத்தில் ஒதுங்கிக் கொள்ள ஒரு இடம் கூட இல்லாமல் போனது என்னுடைய கோபத்துக்குத் தூபம் போட்டது. சட்டையின் கழுத்துக்கும் தலைக்கும் இடையில் வழிந்தோடிய மழைத்துளிகள் உருண்டு போய் உள் ஆடைகளில் ஊறிக்கொண்டன. குளிர் தாங்க முடியவில்லை. எனக்கு நடுக்கம் பிடித்துக் கொண்டது. சுனேத்திரா மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அவளால் தானே எனக்கு இவ்வளவு கஷ்டம்.

வீடு விட்டு ஊர்விட்டு இவ்வளவு தூரத்தில் இத்தனை துயரங்களையும் அனுபவித்துக் கொண்டு நகரத்துக்கு வெளியே இப்படிக் குடும்பம் நடத்துவதில் எந்த இலாபமும் இல்லை என்று நான் அவளுக்குப் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன். தன்னுடைய அப்பாவையும் தோட்டம் துரவுகளையும் விட்டுவிட்டு என்னுடன் வந்து நகரத்தில் வசிக்க அவளுக்கு விருப்பமில்லை. கிராமத்து வாழ்க்கையைப் பற்றிப் பிரசாரம் செய்வாள்.

சாப்பிட மேசைக்கு வந்தால் போதும் " நல்ல புத்தம் புதுக்கீரை. அடுப்பில் ஏற்றுவதற்குச் சற்று நேரத்துக்கு முன் தான் பறித்தது என்பாள். குளிக்கக் கிணற்றுக்குப் போனால் "அடடா என்ன தண்ணீர் குளித்தால் போதும் சாப்பாடே தேவையில்லை. அவ்வளவு சுகம் " என்பாள். அவள் சொல்வதென்னவோ உண்மை தான் . இருந்தாலும் அந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவும் அந்தத் தண்ணீரில் குளிக்கவும் நான் கொடுப்பது பெறுமதிக்கு மிஞ்சிய விலையாக எனக்குப்பட்டது. அவள் என்னோடு வாழ்க்கை நடத்த வரவில்லை. நான் தான்

அவளோடு குடும்பம் நடத்தப் போயிருக்கிறேன் என்று தான் சொல்ல வேணும்.

நான் காலையில் எழுந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கும் பொழுது அவள் தனது குழந்தையுடன் கட்டிலில் உட்கார்ந்து இருப்பாள். அவர்கள் வீட்டில் பரம்பரை பரம்பரையாகச் சேவகம் செய்யும் வேலையாள் ஒரு டம்ளர் தேநீர் தயாரித்துக் கொடுப்பான். அதிகாலையிலேயே வீட்டை விட்டு புறப்பட்டு விடுவதால் ஆபிஸ் கண்டீனில் மத்தியானம் சாப்பிடுவேன். இது நானாகவே செய்து கொண்ட ஏற்பாடு. இந்த மாதிரிக் கஷ்டப்பட்டு கண்டீனில் சாப்பிட்டு காலத்தை ஒட்டுவதென்றால் நான் ஏன் திருமணஞ் செய்து கொள்ள வேணும் என்று எனக்குள்ளேயே நினைத்துக் கொண்டேன். ஊருக்கு மாற்றம் கேட்டிருந்தால் இதைவிட வசதியாக வாழ்க்கை நடத்தியிருக்கலாம். நான் இப்படி அல்லாடி அலைவதைப் பற்றி சுனேத்ரா கவனிப்பதாகவே தெரியவில்லை.

தெலபுவ சந்திக்கு வந்து சேர்ந்த பொழுது அடை மழை தூறலாகியிருந்தது. என்னைப் பொறுத்தவரை மொத்தமாக நனைந்து விட்டேன். ஒரு அங்குலம் பாக்கியில்லை அப்படி நனைந்திருந்தேன். சந்தியை நெருங்க நெருங்க ஒதுங்கிக் கொள்வதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒதுக்கிடங்கள் எதிர்ப்படத் தொடங்கின. இனிமேல் ஒதுங்கித்தான் என்ன ஆகப்போகிறது. நனைவதற்கென்று பாக்கி ஏதாவது இருந்தால் தானே. அதனால் நான் இந்த ஒதுக்கிடங்களில் சரணடையாமல் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தேன்.

என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே ரங்கசாமி உரத்த குரலில் " சே! சே! காலங்காத்தால ஐயா நல்லா நனஞ்சுட்டீங்களே இது ரொம்ப அநியாயமுங்க ".

நான் வெளித் திண்ணையை நெருங்கியதுமே அவன் சைக்கிளை என்னிடமிருந்து பறித்துக் கொண்டான்.

"அப்பப்பா! என்ன குளிர் "ரங்கசாமி உடம்மைப் கணகணப்பாக வைத்திருக்கப் போர்வையால் போர்த்திருந்தான்.

பானைக்குள் ஒரு சத நாணயம் இசை எழுப்பிக் கொண்டிருந்தது. அந்த இசையுடன் தண்ணீர் கொதிக்கும் சத்தமும் சேர்ந்து கொண்டது. காற்று தூவானத்தை எங்கள் மேல் அள்ளி வீசியது.

"லட்சுமி ! பெத்தா ! ஐயாவுக்கு ஒரு துவாய் குடுங்க நல்ல துவாய். ஐயா சேர்ட்டை கழத்துங்க ஐயோ, பாவம் நல்லா நனெஞ்சுட்டீங்களே " ரங்கசாமி

கலவரத்துடன் அங்கும் இங்குமாகப் நடந்து கொண்டிருந்தான். என்னுடைய உதடுகள் குளிரினால் வெடவெட என்று அடித்துக் கொண்டன.

பலகைக் கதவிடுக்கு வழியாக வெளியே ஒரு துவாய் நீட்டப்பட்டது. அது ரங்கசாமி சொன்னது போல நல்ல துவாயாகத்தான் இருக்கவேணும். ரங்கசாமி பயணம் போகிற போது இந்தத் துவாயைத் தோளில் போட்டுக் கொள்வான்.

நான் சட்டையைக் கழற்றவும் ரங்கசாமி தலையைத் துவட்டிவிடத் தானே வந்துவிட்டான்.

"சேர்ட்டைக் கழத்திட்டு அடுப்பங்கரைப்பக்கம் வாங்கையா ".

ரங்கசாமிக்கும் என்னுடைய ரயில் பயணத்துக்கும் அதிக சம்பந்தம் இல்லை. இருந்தாலும் கூட ஓர் ஆப்த நண்பனுக்கு செய்யும் உபசாரங்களையெல்லாம் எனக்குச் செய்தான். கோபத்தின் உக்கிரம் ஒருபுறம் ரங்கசாமியின் இதனமான வரவேற்பு மறுபுறம் இரண்டும் சேர்ந்து கொண்டதால் நடுக்கம் சற்றுக் குறைந்தது.

"நல்ல காரசாரமாக காப்பி ஒண்ணு குடிச்சிட்டு சுருட்டைப் பத்தினீங்கன்னா எந்தக் குளிருமே பறந்து போயிடுமுங்க. நான் காப்பிபோட்டுத் தாரேங்க, ஐயா அடுப்புக்குப் பக்கத்தில வந்து சேர்ட்டைக் காயவிடுங்க. காயவெச்சுப் போட்டுக்கிட்டீங்கன்னா குளிர் இருக்காதுங்க.

ஒரு டம்பளர் காப்பி குடித்துவிட்டு அடுப்பருகில் உட்கார்ந்திருந்தேன். குளிர் சற்றுக் குறைந்தது. தூறிக்கொண்டிருந்த மழை காற்றோடு சேர்ந்து மறுபடியும் கொட்டத் தொடங்கியது.

"ஐயா இந்தாங்க ஒரு சுருட்டுப் பத்தவச்சுக்கோங்க இது நல்ல சுருட்டு நாத்தமடிக்காதுங்க ".

"நான் சுருட்டுப் பிடிப்பதில்லை. ரங்கசாமி எனக்கு ஒரு சிகரட் கொடு" உண்மையில் எனக்கு சிகரட் பிடிக்கும் பழக்கம் இல்லாவிட்டால் கூட ஒரு சிகரட் ஊத வேணும் போல இருந்தது.

"சிகரட் முடிஞ்சு போச்சுங்க ஐயா , இது ரொம்ப நல்ல வெனிலா சுருட்டு நாத்தமே இல்லீங்க."

அவன் சொன்னதுக்காக நான் ஒரு சுருட்டை எடுத்து பற்ற வைத்துக்

கொண்டேன். இருந்தும் எனக்கு இதெல்லாம் பழக்கமில்லை என்று சொல்லிவிடவும் முடியாது.

"ரயிலைப் பிடிக்க ஏனையா இவ்வளவு கஷ்டப் படணும்?"நான் சிறிது சிறிதாகப் பழைய நிலைமைக்கு வருவதைக் கண்ட ரங்சாமி பேச்சைத் தொடங்கினான்.

ரயில் பிரயாணிகளான நாங்கள் சைக்கிள்களில் தெலபுவவுக்கு வருவோம். சைக்கிள்களின் பாதுகாப்பை உத்தேசித்து அவற்றை ரங்கசாமியிடம் ஒப்படைப்போம். மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும் ரயில் பிரயாணச் சீட்டுகள் வழங்கப்படுவதால் இந்த ஒழுங்கு பஸ் கட்டணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ரொம்ப லாபகரமானது. எந்த இலாபமாய் இருந்தாலும் அதைப் பெறுவதென்றால் சற்றுச் சிரமப்படத்தான் வேண்டும். காரியாலத்துக்குப் போவதென்றால் ஐந்தரை மணி ரயிலைப் பிடித்தாக வேணும். அதற்கு அடுத்த ரயில் தெலபுவவைக் கடக்கும் பொழுது ஏழு மணி தாண்டி விடும்.

ரங்கசாமி கறுத்த சுருட்டொன்றை எடுத்து வாயில்வைத்துக் கடித்து அதன் "நூலை அறுத்து பற்றவைக்க முனைந்தபடி டவுனில ஒரு காணி வாங்குங்க ஐயா. ரயில்ல போக வர ரொம்ப லேசு " என்றான். ஈரச்சுருட்டு பற்றிக் கொள்ள மறுத்தது.

"கிராமத்தில இருக்கிற காணி பூமிகளை கைவிட்டு வர என்னோட பொண்டாட்டிக்கு விருப்பமில்லையே."

"அப்பா" அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"ஐயாவோட கஷ்டம் அம்மாவுக்கு எங்க புரியப் போவுது? காலையில எவ்வளவு தூரம் சைக்கிள் மிதிக்கணும். ரயில்ல ஏர்றபோ மேலெல்லாம் வேர்வையில் நனஞ்சிடும். மழையிலயும் நல்லா நனைய வேண்டியது தான். சாயந்தரம் வேலை முடிந்து மறுபடி சைக்கிள் மிதிக்கணுமே"

ரங்கசாமி தன்னிடம் சைக்கிள்களை வைத்துவிட்டுப் போகிறவர்களின் எல்லா விபரங்களையும் அறிந்து வைத்திருந்தான். குறைந்த பட்சம் அவர்கள் இருக்கும் இடம், வேலை செய்யும் ஸ்தானம், ஊர்தேசம், பிள்ளைகுட்டிகள் என்று அடிப்படை விபரங்களை மட்டுமாவது அறிந்து வைத்திருப்பான். மனைவிமார் பழக்கமில்லாவிட்டாலும் அவர்களைப் பற்றிய தவல்கள் எல்லாம் கூட ரங்சாமிக்குத் தெரிந்திருக்கும்.

திடீரென்று எனக்குள்ளே ஒரு முரட்டு எண்ணம் உதித்தது. அவள் விரும்புவாளோ இல்லையோ பட்டினப்பக்கத்தில் ஒரு காணித் துண்டு வாங்கத்தான் போகிறேன். அவளுடைய விருப்பு வெறுப்புகளைப் பார்க்க முடியாது. நான் வசதியாக வாழவேணும். விரும்பினால் அவளும் என்னுடன் வரலாம்.

"ரங்கசாமி நீங்க பட்டினத்து ஆள் தானே? விக்கிறதுக்குக் காணி எங்கேயாவது கிடைக்குமா?"

"ஸ்டேஷன் பாதை கோடியில ஒரு காணி விக்கிறதுக்கு இருக்குங்க ஐயா. வேணுமின்னு சொன்னா நான் கேக்கிறேனுங்க"

"அவ்வளவு பெரிய இடம் எனக்கு எதுக்கு ரங்கசாமி? ஒரு இருபது, முப்பது பர்ச் இருந்தா போதும். தெரியும் தானே நிலத்தை வாங்குவதோடு ஒரு வீடும் கட்ட வேணும் இல்லையா?"

நகரம் என்று இருந்தால் குறைந்த பட்சம் மின்சார வசதியாவது இருக்கவேணும். சின்னஞ்சிறு நகரமான இங்கே மின்சார வசதிகூடக் கிடையாது. சிறிய ஆஸ்பத்திரிக்கு மண்ணெண்ணெயில் வேலை செய்யும் மோட்டர் மூலமும் பெற்றோமக்ஸ் விளக்கு மூலமும் தான் வெளிச்சம் கிடைக்கிறது. நகர்ப்புறத்தில் ஒரு காணி வாங்குவதாயிருந்தால் குறைந்த பட்சம் மின்சார வசதியாவது இருக்கவேண்டும் .வசதிகளுடன் கூடிய நகரத்தில் காணி வாங்க என்னுடைய பொருளாதார நிலை இடம் கொடுக்காது. அப்படிப்பட்ட வசதிகள் உள்ள நகரத்தில் ஒரு பேர்ச் காணி வாங்கும் பணத்துக்கு இங்கேயென்றால் வீடுகட்டக்கூடியதாக ஒரு காணித் துண்டே வாங்கி விடலாம். என்னவாயிந்தாலும் நகரம் என்றால் நகரம் தான். இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்காவது குறைந்த பட்ச வசதிகள் கிடைக்காமலா போகப்போகிறது. தெலபுவ ஒரு நல்ல கேந்திர ஸ்தானம். அங்கேயிருந்து சுனேத்திராவின் ஊருக்கு ஆறு ஏழு மைல்களுக்கு மேல் இருக்காது. ரயில் நிலையத்துக்கு அருகில் நிலம் வாங்க முடியுமானால் ஊரோடு எப்பவும் தொடர்பு வைத்திருக்கலாம். சுனேத்ரா கூட இதற்கு உடன்படுவாள்.

காலையில்ஆரம்பித்தமழை நாள் முழுவதும் தூறிக்கொண்டேயிருந்தது. அந்த மழை ஓய ஒரு வாரம் ஆகியது. சூரிய வெளிச்சத்தை மருந்துக்குக் கூடக் காணமுடியவில்லை. அது தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக்காற்று வீசுகிற காலம். சலுகைத் தவணைச் சீட்டு இருந்தும் கூட இந்த ஒருவாரமும் மேலதிக பணம் கொடுத்து பஸ்சில் போக வேண்டியதாயிற்று . ஒரு வாரத்தின் பின் மழை சற்றுக் குறைந்த பின்பு தான் நான் ரயில் பிரயாணத்தைத் தொடங்கினேன். மழை

குறைந்திருந்த இரண்டாம் நாள் ரயிலுக்கு போன பொழுது வழியில் ஏற்பட்ட எதிர்பாராத ஒரு சம்பவத்தினால் சற்றுத் தாமதமாகியது உண்மைதான். ஆனால் எப்படியோ ரயில் ஏறிவிட்டேன். ரங்சாமியின் வீட்டுத் திண்ணையில் எவரும் இல்லை. நான் சைக்கிளை ரங்கசாமியின் வீட்டுத் திண்ணையில் தள்ளிவிட்டு வீட்டுக்குள் கேட்கும்படி சொல்லிக் கொண்டே ரயிலைப் பிடிக்க ஓடினேன்.

ரயில் பிரயாணிகள் ஐந்தரை மணி ரயிலில் வந்து இறங்கி நடை பாதை வியாபாரிகளிடம் மரக்கறி, மீன் முதலியவற்றை வாங்குவார்கள். இவர்களிடம் இந்தப் பொருள்கள் எல்லாம் சற்று மலிவாகக் கிடைக்கும். சாயந்தரம் ஐந்தரை மணி ரயில் தெலபுவவை நெருங்க நெருங்க பிரயாணிகள் கதவுகள் அருகே வந்து முண்டியடிக்கத் தொடங்கிவிடுவார்கள். தெலபுவவுக்கு ஒரு மைல் முன்னதாகவே ரயிலின் வேகம் குறைய ஆரம்பித்து விடும். சிலிப்பர் கட்டைகளுக்கு மேல் மெதுவாக நழுவிச் செல்லும் சக்கரங்களின் "கிரீச் கிரீச் என்ற சத்தமும், "கடகட" என்ற சத்தமுமே இப்பொழுது ரயிலிருந்து கிளம்பும். இறங்குவதற்கு நெருக்கிக் கொண்டு நிற்கும் பிரயாணிகளுடன் நானும் எழுந்து நின்றேன். ரயில் மெல்ல மெல்ல குறுக்குப் பாதையைத் தாண்டிச் சென்றது. வெளியே பிரயாணிகள் கூட்டம் அலை மோதியது. அந்தக் கூட்டத்தின் மத்தியில் ரங்கசாமியும் இருந்தான். அவன் ரயிலுக்குள் நோட்டம் விட்டபடி நின்றான். அவன் ரயிலில் வந்தவர்களில் யாரையோ சந்திக்க வந்திருக்க வேண்டும். கழுத்து முன்னால் நீள, வாய் சற்றுத் திறந்திருக்க, நெற்றி சுருங்க நுனிக்காலில் நின்று கொண்டு ரயிலுக்குள் எட்டிப் பார்த்தான்.

புதுமீன் வாங்கும் எண்ணத்தில் நான் சீக்கிரமாக இறங்கிப் போக எத்தனித்தேன். இடம் விட்டு இடம் செல்லும் வியாபாரியின் மீன் பெட்டி கண் இமைக்கும் நேரத்துக்குள் காலியாகி விடும். போனவாரம் முழுவதும் மீன் வாங்க முடியவில்லை. கூரையோ கடவையோ எதுவுமே இல்லாத ரயில் நிலையத்தில் இறங்கிய பிரயாணிகள் பாதையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து ஓடப்போன என்னுடைய முழங்கையை யாரோ கெட்டியாகப் பிடித்தார்கள். யார்? "ரங்கசாமி "நான் ஆச்சரியத்துடன் பின்னால் பார்த்து முணுமுணுத்தேன். அவன் சிரித்தபடி " ஐயாவைச் சந்திக்கத் தாங்க ஸ்டேசனுக்கு வந்தேங்க " என்றான்.

"ரங்கசாமி நிக்கிறத நான் கூட பாத்தேனே" நான் தயங்கிய மனத்தோடு சொன்னேன். " நீ யாரையோ சந்திக்க வந்திருக்கிறாயின்னு தான் நெனெச்சேன் அது நானாக இருக்குமுன்னு எதிர்பாக்கல "

" நான் கூட இப்ப தான் ஐயாவை கண்டேனுங்க. இன்னும் கொஞ்சம் பிந்தியிருந்தா உங்கள பிடிச்சிருக்க முடியாதுங்க. ஹ! ஹ! ஹ! ரங்கசாமி

ஒட்டைப் பற்கள் தெரிய இரண்டு கைகளையும் தேய்த்தபடி சிரித்தான். அவனுடைய முன்வாயில் எத்தனையோ பூச்சிப் பற்கள். எடுத்த கடனைத் திருப்பித் தராமல் தலைமறைவாகித் திரியும் ஒருவனைப் பிடித்துக் கொண்ட மகிழ்ச்சி அவனுடைய முகத்தில் தெரிந்தது. ரங்கசாமி கடன் கேட்க வந்திருப்பானோ. எனக்குள் ஒரு எண்ணம் ஓடியது. ஆனால் இத்தனை காலத்துக்கு அவன் என்னிடம் கடனுக்குப் பணம் கேட்டதேயில்லை. ஒரு பஸ்வண்டி ஹர்னை அடித்துக் கொண்டு வந்தது. தெருவில் பிரயாணிகள் கூட்டம் அலைமோதியது. நான் தெரு ஒரமாகப் போய் நின்று கொண்டு ரங்கசாமியை பார்த்தேன்.

"அப்புறம்" எவ்வளவு தான் மறைத்தாலும் ரங்கசாமியின் பதட்டம் நன்றாகத் தெரிந்தது.

"ஐயா காணி ஒண்ணு பாக்கச் சொன்னீங்க இல்லியா? நான் பாத்தேனுங்க. இப்ப நான் இங்க வந்தது ஐயாவ கூட்டிக்கிட்டு அதக் காட்டப் போகலான்னு தாங்க."

" இப்பவா?"

" ஏன் இப்ப முடியாதுங்களா?"

" மரக்கறி வாங்கிட்டு வர்ரதா வீட்டில சொல்லிட்டு வந்தேன். ராவாகி விடுமே ரங்கசாமி"

நான் மனக்கிலேசத்துடன் தலையை அசைத்தபடி சொன்னேன்.

"இப்படி சொல்லுவீங்கன்னு தெரிஞ்சு தான் நான் ஸ்டேசனுக்கு வந்தேனுங்க. திரும்பி வரமுடியாதுன்னு சொல்லிடுவீங்கன்னுதான் – ரொம்ப துாரம் இல்லீங்க ஐயா இதோ இங்கே கிட்டத்தில தாங்க " அவன் கையை நீட்டி ஸ்டேஷனுக்குக் கீழே நீண்டு கிடந்த பாதையைக் காட்டினான்.

கொட்டும் மழையில் நனைந்து வந்த போது கோபத்தில் காணி பார்க்கச் சொன்னது என்னவோ உண்மை தான். ஆனால் ரங்கசாமி இவ்வளவு சீக்கிரத்தில் இந்தக் காரியத்தைச் செய்வான் என்று நான் நினைக்கவில்லை. இதுக்கெல்லாம் யாரிடம் பணம் இருக்கிறது. இந்த விஷயத்தில் நான் சங்கடப்படுவதைக் கண்ட ரங்கசாமி மீண்டும் என்னை உற்சாகப்படுத்த முயன்றான். அவனுக்கு என்னுடைய எண்ணம் புரிந்து விட்டது.

" புறப்படுங்க ஐயா நாங்க என்ன வாங்கவா போறோம். பாக்கத் தானே போறோம். பாத்துட்டு வந்திடுவோமுங்க. நல்லதா மனசுக்கு புடிச்சிருந்தாத்தானே வாங்கிறது. ஐயா பின்னுக்கு இழுப்பீங்கன்னுதான் நான் இங்க வந்து நின்னேனுங்க ."

நிலத்தின் இறக்கம் ரயில் நிலையம் தாண்டியதும் நின்றுவிட்டது. அதை அடுத்து சற்றுக்குறுகலான வயல் வெளி எதிர்ப்பட்டது. அகலத்தில் ஒடுங்கியிருந்தாலும் அந்த வயலின் நீளம் அடிவானம் வரை நீண்டு கிடந்தது. வயல் வெளியைக் கடந்து செல்லும் மண்பாதை மீண்டும் ஏறத் தொடங்கியது. இது உடலைக் களைக்க வைக்கும் ஏற்றமல்ல. மனிதர்கள் வசிப்பதற்கு உகந்த சுற்றாடலாக இருந்துங் கூட இங்கே வீடுகளை அதிகம் காண முடியவில்லை. எப்பவாவது ஒரு வீடு தெரியும். அது கூட பட்டணத்து படாடோப வீடு அல்ல. அதைப் பார்த்தால் கிராமத்து வறுமையின் சாயல் தான் தெரிந்தது . இவை களிமண் வீடுகள். வெளிப்புறம் சுண்ணாம்புப் பூச்சினால் மூடப்பட்டிருந்தது. வயலின் சுற்றாடலில் குளிப்பதற்குப் பல கிணறுகள் இருந்தன. ஒவ்வொரு கிணற்றடியிலும் யாராவது குளித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களில் ஒருவர் குளிப்பதைச் சற்று நிறுத்தி விட்டு எங்களைப் பார்த்தார். மறுகணம் முழங்காலில் நின்று கொண்டு மூச்சைப் பிடித்தபடி தலைக்குத் தண்ணீர் மொண்டு ஊற்றத் தொடங்கினார்.

" சந்தியில இருக்கிறவங்க எல்லாரும் இங்கதான் குளிக்க வருவாங்க. நல்ல தண்ணி" ரங்கசாமி சொன்னான்.

மண்பாதையை ஒட்டினாற்போல காடு மண்டிக் கிடந்த காணிக்குள் ரங்கசாமி நுழைந்தான். பொடிசிஞ்ஞாமரப் புதர்களைக் கைகளால் இரு புறமும் ஒதுக்கிவிட்டு எனக்கு நடக்க வழி செய்து கொடுத்தான். அவன் இந்த இடத்துக்கப் பழக்கப்பட்டவன் போல் தெரிந்தது.

இதற்கு முன்னரும் இந்த இடத்துக்கு வேறு ஆட்களைக் கூட்டி வந்து காட்டியிருக்க வேண்டும். காட்டுப் புதர்ச் செடிகள் எங்களை மறைக்கும் அளவுக்கு உயர்ந்து வளர்ந்து நின்றன. வளர்ச்சி குன்றிய ஒரு ஈரப்பலா மரமும் காட்டுக்கு நடுவே தலையெடுத்திருந்தது.
"ஐயா இது நல்ல காணிங்க. ரயிலுக்கு கிட்ட டவுனில இருந்து ரொம்ப தூரமும் இல்லீங்க. வயலுக்குப் பக்கத்தில இருக்கிறதால நல்ல தண்ணியும் இருக்கு"

தெலபுவவில் தண்ணீருக்கப் பஞ்சம். நகரம் கொஞ்சம் மேட்டில் இருப்பதால் இங்கே உள்ள கிணறுகள் எல்லாம் ஆழமானவை. இரண்டு மூன்று

மாதங்கள் மழை பெய்யாவிட்டால் இந்தக் கிணறுகளும் வற்றிவிடும். ஆனால் வயலை ஒட்டிய இந்தக் காணிகளில் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும். காலையிலும் மாலையிலும் ரயில் நிலையத்துக்குக் கீழே இருக்கும் பாதையில் ஏராளமான ஜனங்கள் குளிக்கப் போவதைக் காணலாம்.

"ரெண்டு மொழம் வெட்டினாப் போதுங்க. நல்லாத் தண்ணி ஊறிவருங்க" ரங்கசாமி புதர்களினூடாக நுளைந்து நடந்தான்.மண் கும்பிகள் என் கால்களில் தட்டுப்பட்டன.

"ரங்கசாமி இது இடுகாடாக இருக்குமோ? மேடு மேடாக மண் குவிச்சு கிடக்கே "

"சே!சே !அந்தமாதிரி இடத்துக்கு ஐயாவ நாங் கூட்டிக்கிட்டு வருவனா? மரவள்ளிக்கிழங்கு நட்டிருக்காங்க. இடுகாட்டுக்கு அந்தப் பாதை வழியா போகனுமுங்க" மண்பாதையிலிருந்து பிரிந்து போகும் கிளைப் பாதையொன்றைக் காட்டியபடி சொன்னான்.

"ஐயா இந்த நிலத்தோட பெறுமதி ரொம்பங்க. இன்னைக்கு உள்ள வெல நாளைக்கு இருக்காதுங்க."

"கடசி வெல என்னன்று சொன்னாங்க"

நிலத்தைப் பார்த்த பிறகு ஒரு முடிவுக்கு வருவது சங்கடமாக இருந்தது. ரங்கசாமி நடு ஆளாக நின்று என்னிடமிருந்து தொகையாகப் பணம் பறிக்கப் பார்க்கிறானோ.

"கடசி வெல தாங்க முப்பது பர்ச்சையும் ஏழாயிரம் ரூபாய்க்கு கொடுக்காங்களாம். ஐயாக்கு விருப்பமா இருந்தா சொந்தக்காரங்கள போய் பாக்கலாமுங்க. இதே பாதையில இன்னுங் கொஞ்ச தூரம் போகனுமுங்க."

"இன்னைக்கு முடியாது ரங்கசாமி இன்னொரு நாள் பாக்கலாம். சொந்தக்காரனை சந்திக்கமுதல்ல நான் நிலத்தை வாங்கிறதா இல்லையான்னு தீர்மானிச்சுக்கனும் தானே."

"நல்ல நிலமுங்க " ரங்கசாமி சப்புக் கொட்டினான் . என்னவோ தானே நிலம் வாங்கப் போறவன் போல அவனுடைய கண்கள் பிரகாசித்தன.

நிலத்தைப் பற்றி ஆராய்ந்து பார்க்கும் வரை சுனேத்திராவுக்குச் சொல்லக்கூடாது. அவள் கேட்கப்போகும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாராக

வைத்திருக்க வேண்டும். நான் மறுநாளே என்னுடைய ரயில் சிநேகிதன் ஒருவனிடம் அந்த நிலத்தைப் பற்றி விசாரித்தேன். நிலத்தின் விலையைப் பற்றியும் அது ஒறுப்பா இல்லையா என்னும் விபரங்களையும் சந்தைப்பக்கத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காரியத்துக்காகப் பணம் முதலீடு செய்ய வேண்டுமே என்பதை நினைக்க என் மனம் சஞ்சலப்பட்டது. விலை அதிகம் என்று யாராவது சொல்லட்டும் அப்புறம் இந்த எண்ணத்தையே கைவிட்டுவிடுவேன்.

"சந்தர்ப்பம் வாய்க்கிற போது கைநழுவ விட்டுடாதே"என்னுடைய நண்பன் இப்படிச் சொல்வான் என்று எதிர்பார்க்கவேயில்லை. அவன் நகரமைப்புத் திணைக்களத்திலே வேலை பார்க்கிறான்.

"ஸ்டேஷனைக் கடந்து மேலே போற பாதை இருக்கே அங்கே சல்கம வீடமைப்புப் திட்டம், ஆரம்பமாவதற்கு மாமூலா கட்டிடப் பிளானை ஏத்துக்கிட்டாங்க. இது மட்டும் உறுதியாயிடுச்சுன்னு வெச்சுக்கோ தெலபுவவுக்கு தண்ணியும் மின்சாரமும் நிச்சயம் வந்திடும். அந்த நேரத்தில இந்த நிலத்த இப்ப விக்கிற விலையப் போல இரண்டு மடங்கு பணம் கொடுத்தாக் கூட வாங்க முடியாமப் போகும் ".

" உண்மையாவா? "

"எனக்கும் ஒரு காணி வாங்கித் தர முடியுமான்னு பாருங்க " அவன் சொன்னான்.

பெரிசா எதுவும் வேணாம். ஒரு இருபது பர்ச் இருந்தா போதும். சும்மா வாங்கிவிடவேண்டியது தான். சந்தர்ப்பம் வாய்க்கிறபோ ரெண்டு மடங்கு விலைக்கு வித்திடலாம்."

" இந்தக் காலத்தில் காணி வியாபாரம் போல எதுவுமே வராது" எங்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு நின்ற மற்றொரு நண்பர் கூறினார்" தொடர்வட்டிக்குப் பணம் கொடுத்த மாதிரித் தான் திருட்டு போகாது. தொலைந்து போகவும் வழியில்லை. அது சரி இந்த நிலம் எங்கே இருக்கிறதா சொன்னீங்க?

நிலத்தின் மீது இதற்கு முன் இல்லாத ஓர் ஆசை என்னுள்ளே வளரத் தொடங்கியது. அதை நான் வாங்குவதற்கு முன் வேறு யாராவது வாங்கிவிடுவார்களோ. அந்த நிலம் எங்கே இருக்கிறதென்ற விஷயத்தை சொல்ல எனக்கு மனம் வரவில்லை.

"நிலம் இருக்கிற இடம் எங்கேன்னு சொன்னீங்க?"

" இடுகாட்டுப் பக்கமாக."

"ஓகோ அந்தப் பக்கமாயிருந்தா கொழும்புப் பாதய தொடுக்கிற ஒரு ஒற்றையடிப்பாதை கூட இருக்கே. முந்தி நாங்க அந்த இடத்துக்கு வேட்டையாட போயிருக்கோம்."

" உண்மையாகவா?" நண்பன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

" அதைப் பத்தி எனக்கு சரியா சொல்ல முடியாது கேட்டுப்பாக்கணும்."

"அது வழியா பிரதான வீதிக்குப் போகலாமுங்க இதுல சந்தேகமேயில்ல." முதலாவது நண்பர் உறுதியாகச் சொன்னார்." " ஆனா பாதை என்னமோ ஒற்றையடிப்பாதை தான்."

" ஒற்றையடிப் பாதைன்னா என்ன? அதனால நிலத்திேனாட பெறுமதி அதிகமாயிடும். சந்தர்ப்பத்த நழுவ விட்டுடாதீங்க: இப்பவே அதை வாங்கிறது தான் புத்திசாலித்தனம்."

நான் நினைத்தது சரியாகிவிட்டது. இடம் வாங்கும் யோசனையை சுநேத்திரா ஏற்கவில்லை. " லைட் கூட இல்லாத சின்னச்சின்ன காணித்துண்டுகள் நமக்கு எதுக்குங்க. இருக்கிறதையே கவனிக்க முடியல்ல இந்த லட்சணத்தில்.... " அவள் சொன்னாள்.

" அதெல்லாம் என்னோடதில்லயே. " நான் சட்டென்று சொல்லி விட்டேன். " அது போகட்டும் தெருத்தெருவா இப்படிக் கஷ்டப்பட என்னால ஆகாதம்மா. இருட்டோட எந்திரிச்சு புறப்படணும். வீட்டுக்கு வர்ரதும் இருட்டில."

" இந்த மாதிரி இடங்களுக்குப் போய்த் தட்டந்தனியா எப்படிங்க வாழ்க்கை நடத்திறது. பிள்ளைங்களை எப்படிங்க வளக்கிறது?"

மௌனமாக பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த சுநேத்திராவின் அப்பா கண்ணாடியைக் கழற்றி கூட்டுக்குள் திணித்தார். அவர் எங்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

" குறைஞ்சது மின்சாரமாவது இருந்தால் பரவாயில்லை".

"மின்சாரம் என்றைக்காவது வராமலா போகும். இங்க மாதிரியா" அப்பாவின் பதில் என்னைத் திக்குமுக்காட வைத்தது. " இது தான் புத்திசாலித்

தனமான காரியம். இங்க இருந்து கொண்டு உங்க பிள்ளைங்கள நல்ல பள்ளிக் கூடங்கள்ள சேக்கவும் முடியாது. இந்த இடம் இருக்கே இது இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முந்தி இருந்த மாதிரியே தான் இப்பவும் இருக்கு. பட்டினமின்னு சொன்னா அப்படியா. பாத்துக் கிட்டிருக்கமாறிப் போகும். தெலபுவ நகரத்தை எடுத்துக்குங்க போன வருஷம் இருந்த தெலபுவவா நாம இந்த வருஷம் பாக்கிறோம் ? எங்கே போனாலும் இதெல்லாம் மாறவா போகுது."

இருபது பர்ச் மட்டுமல்ல முப்பது பர்ச் உள்ள முழுக் காணியையும் வாங்கிறதா இருந்தாக் கூடத் தான் உதவி செய்யத் தயாராயிருப்பதாக அவர் தெரிவித்தார். ஆனால் அவர் இதற்கு முன்னர் காணி வாங்கி வீடு கட்டச் சொன்னதே கிடையாது. இருந்தும் நான் இந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்ததும் சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்தவர் போல தானாகவே முன்வந்து உதவி செய்ய எண்ணுகிறாரே.

காணியை வாங்கிய அன்று என்னைவிட சந்தோஷப்பட்டவன் ரங்கசாமி தான். அவனுக்கு நான் நூறு ரூபாய் சன்மானம் கொடுத்தேன். காணியின் விலை ஏழாயிரத்து ஐநூறு. ஆனால் அதில் அவனுடைய தரகுக் கூலியும் அடங்கியிருக்கிறதென்பதை பின்னால் யாரிடமோ இருந்து அறிந்து கொண்டேன். அப்படியானால் அவனுடைய கூலி முன்னூறு ரூபாய். எனக்கு ரங்கசாமி அதை மறைத்து விட்டானே. இதையொட்டி அவன் பேரில் எனக்குச் சற்று வெறுப்புத்தான். இருந்தும் இதைப் பெறுவதற்கு அவன் லாயக்குள்ளவன் தான் என்று மனதைத் தேற்றிக் கொண்டேன்.

காட்டை வெட்டி வெளியாக்குவதற்கு ரங்கசாமி தான் எனக்கு ஒரு வேலையாளைப் பிடித்துக் கொடுத்தான். கூலி ஆள் வேலை செய்யும்பொழுது ரங்கசாமி ஊடே ஊடே வந்து பார்த்துச் செல்வான். காட்டில் வெட்டிப்போட்ட மரங்களில் விறகுக்காகப் பயன்படுத்தக்கூடியதாயிருந்த சுள்ளிகளைக் கூட ஒன்றுவிடாமல் சேகரித்தான். அந்த மரங்கள் காய்வதற்கு முன்னரே வெட்டிக்குவிப்பதில் முனைந்தான். ஏனென்றால் காயவிட்டால் வேறு யாராவது அவற்றை எடுத்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற பயம் தான். அந்தக் காணியில் மரம் வெட்டி முடியும் தறுவாயில் ரங்கசாமி ஒரு வண்டி கொள்ளக்கூடிய விறகு சேகரித்துவிட்டான். சுள்ளிகளை வேறாகச் சேர்ந்து வைத்திருந்தான்.

காட்டை அழித்துச் சுத்தப்படுத்திய பின்னர் அந்தக் காணியைப் பார்க்கப் பார்க்க எனக்குத் குதூகலமாக இருந்தது. முதல் நாள் அங்கேயிருந்து புகையிரத நிலையத்துக்கு ரொம்பத் தூரம் போலத் தெரிந்தது. ஆனால் அது அப்படியில்லை. இந்த நிலத்தில் வீடு கட்டிக் குடியேறிவிட வேண்டும் என்ற ஆர்வமும், ஊக்கமும் எனக்குண்டாகியதைப் பார்த்தால் எனக்கே வியப்பாக இருந்தது. ஒரு காணிக்குச் சொந்தக்காரனாவது ஒருவனுக்கு இவ்வளவு

மகிழ்ச்சி தரும் சம்பவமாக இருக்கும் என்று நான் நினைத்ததேயில்லை. எல்லாவற்றுக்கும் முதலில் கிணறு வெட்ட வேண்டும் என்று சுனேத்திராவின் அப்பா சொன்னார். நான் ரயிலில் இருந்து இறங்கும் நேரம் பார்த்து ரங்கசாமி ஒரு ஆளையும் கூட்டிக்கொண்டு ரயில் நிலையத்துக்கு வந்திருந்தான். அவனைக் கண்டதும் தான் கிணறு வெட்டும் விஷயத்தை நான் அவனுக்கு முன்னரே சொல்லியிருந்தேன் என்பது ஞாபகத்துக்கு வந்தது. அங்கேயிருந்து நேராகப் போய் கிணறு வெட்டுவதற்கு ஒரு இடம் குறித்துக் கொண்டேன். நான் வீட்டுக்குப் போய் இதை சுனேத்ராவிடம் சொன்னபோது அவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

" ஏன் அப்பாவுக்கு ஞாபகப்படுத்தல " அவள் ஏசுபவள் போலக் கேட்டாள்.

"எடுத்ததுக்கெல்லாம் அப்பாவுக்குத் தொல்லை கொடுக்கலாமா? "

"இது ஒரு தொல்லையா?" அவள் சட்டென்று சொன்னாள் " "இந்த மாதிரி விஷயங்கள் எல்லாந் தேடிப்பாக்க எங்களுக்கும் அப்பாவைவிட்டா இங்கே யார் இருக்கா – எங்களுக்குத் தான் யார் இருக்கா". மனைவியின் ஊரில் குடும்பம் நடத்த வந்திருப்பதால் என்னைக் குத்திக் காட்டுவது போல இருந்தது அவளுடைய கதை. அவளுடைய சம்பாஷணையில் இந்தமாதிரி வார்த்தை ஜாலம் நிறைய இருக்கும். நான்அவளைப் போக்கிரி தனமாகப் பார்த்தேன். அதற்குப் போட்டியாக அவள் மறுபடியும் பேசத் தொடங்கினாள். " காணிகளில் எங்கே தோண்டினா தண்ணீர் வரும் என்கிற விபரம் எல்லாம் யாரையும்விட எங்கப்பாவுக்கு நல்லாத் தெரியும். அதத் தான் நான் சொன்னேன். காலையில அப்பாவையும் கூட்டிக்கிட்டு போங்க எதுக்கும் நல்லது. "

சுனேத்திரா கிணறு வெட்டுவதைப் பார்க்க வர மாட்டாள் என்று எனக்குத் தோன்றியது. அவள் இரண்டே இரண்டு தடவை தான் காணிக்குப் போயிருக்கிறாள். காணியின் விஸ்தீரணம் பற்றி அவளுக்கு அதிகம் திருப்தியில்லை.

" இவ்வளவு நாளும் நிலம் வாங்க வேண்டாமெங்கிற பல்லவி " நான் அவளை ஏளனம் செய்தேன். " இப்ப என்னடான்னா நிலத்தோட அளவு போதலையாமே ".

" பொம்பளைங்க சமாச்சாரமே அப்படித்தாங்க " மண்வெட்டியை ஊன்றியபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஒரு கூலிக்காரன் சொன்னான். சுனேத்திரா அவனை முறைத்துப் பார்த்தாள். அதைக் கண்டு அவன் பயந்து விட்டான். கீழே பார்த்தபடி மீண்டும் நிலத்தைக் கொத்தத் தொடங்கினான்.

சுனேத்திராவின் அப்பாவும் நானும் சூரியோதயமாகும் போதே

காணிக்குப் புறப்பட்டு விட்டோம். கிணறு வெட்டுவதற்கென்று இடம் குறித்து ஒரு தடி நட்டுவைத்திருந்தோம். அந்த இடத்தைப் பார்த்ததுமே அது பொருத்தமில்லை என்று அப்பா சொல்லிவிட்டார்.

அவர் சுற்றமுற்றும் பார்த்தபடி " ஓரமா கிணறு வெட்டினா ரெண்டு மூணு மட்டத்திலே ஒன்னுக்கு மேலே ஊற்றுகள் அகப்படலாம் " என்றார். மரஞ்செடி நடனுமாயிருந்தா அது தான் நல்ல முறை ".

நிலத்தின் தன்மை எப்படியிருந்தாலும் அவர் காட்டிய இடம் என்னவோ எனக்குப் பொருத்தமாகப் பட்டது. முன்னர் குறித்த இடத்தில் கிணறு வெட்டினால் நான் வீடு கட்ட உத்தேசித்திருக்கும் இடத்துக்கு முன்பக்கமாக கிணறு அமைந்து விடும். " என்ன கிணறு வெட்ட ஆயத்தம் எல்லாஞ் செஞ்சாச்சா?" அப்பா கேட்டார். " இதையெல்லாம் நீங்க எங்கே எங்களுக்குச் சொல்லப் போறீங்க" என்று கேட்பது போல இருந்தது அவரதுகேள்வி. அவரது எண்ணம் எனக்குப் புரிந்து விட்டது. நான் மௌனமாக இருந்தேன்.

" கிணறு வெட்ட இப்ப ஆளுங்க வருவாங்க தானே "

" ஆமா ! காலையில ஒம்பது பதிமூணுக்குத் தான் நல்ல நேரம். அதுக்கு முன்னாடி வந்திடுவாங்க."

நேரம் பார்ப்பதற்குக் கூட நான் ரங்கசாமியைத் தான் சோதிடனிடம் அழைத்துப் போனேன். இதை நான் சுனேத்திராவுக்கோ, அப்பாவுக்கோ சொல்லவேயில்லை.

" கூலி எவ்வளவு ? " அவர் சாரத்தைப் பின்புறமாக முழங்கால்வரை உயர்த்தி கைகளுக்குள் பொதிந்த படி நடந்துகொண்டே கேட்டார்.

" இருபத்தைஞ்சு ரூபாய் தான் பேசியிருந்தோம்"

" இப்படி பணத்தை தண்ணியா எறச்சா வீடு கட்டி முடியிறப்போ தெருவில எறங்க வேண்டியது தான். அந்த மனிசங்க எங்கே உள்ளவங்க?"

" எனக்கும் சரியா தெரியாது. இங்க அக்கம் பக்கத்து ஆட்களாத் தான் இருக்கணும் "

" ஒடம்ப வளெச்சு வேல செய்யிறவங்க பட்டினத்தில ஏதப்பா? சும்மா இருந்து ஒடம்ப வளக்கிற திருட்டு பேர்வழிகள் தான் இங்க இருக்காங்க"

" நாள் கூலிக்கு வேல செய்யிறவங்க முடியுமான வரைக்கும் வேலய இழுத்துக்கிட்டே போகத்தான் பாப்பாங்க. ஏன் சுனேத்ராவுக்குத் தெரியாததா. நாலு அஞ்சு பையன்களை கூட்டிக்கிட்டு வந்திருந்தா பன்னிரெண்டு அடி

ஆழத்த வெட்ட பாதி நாள் போதுமே. சாப்பாடு தேத்தணி மட்டும் தான் கொடுக்கணும்".

ரங்கசாமி இரண்டு ஆட்களை அழைத்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தான். ஆனாலும் சுனேத்திராவின் அப்பாவைக் கண்டவுடனே அனுடைய உற்சாகமெல்லாம் சின்னாபின்னாகிவிட்டது. கிணறு வெட்டும் இடத்தை மாற்றியது பற்றி அவன் எதுவுமே பேசவில்லை. என் சார்பாக அங்கே வந்து பார்ப்பதற்கு ஆட்கள் இருப்பார்கள் என்று அவன் நினைத்திருக்கவே மாட்டான். அவன் மனசார விரும்பித் தான் எனக்கு வழிகாட்ட முன் வந்தான். தனது சிபார்சு எல்லாம் இப்படி தவிடு பொடியாகும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவனுடைய வருத்தம் தோய்ந்த முகமே அதைக் காட்டிக் கொடுத்தது. கூலிக்காரரை வேலைக்கமர்த்திய ரங்சாமி அதிகம் தாமதிக்காமல் அந்த இடத்தை விட்டு அகன்றான். மண்வெட்டியை தூக்கி ஒன்று இரண்டு தடவை வெட்டிவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டும். களைப்பாறிக் கொண்டும் வேலை செய்யும் கூலிக் காரரைப் பார்த்து அப்பா " இப்படி வேலை செஞ்சா சரிவராது " என்றார்.

"இந்த மாதிரி வேல செய்யிறதாயிருந்தா பன்னிரெண்டு அடி கிணறு வெட்ட அந்த ஆட்களுக்கு ஒரு வாரம் எடுக்கும். இன்னைக்கு இப்படியே போகட்டும். நாளைக்குச் பையன்கள கூட்டிக்கிட்டு வர்ரது தானே."

கிணறு வெட்டி முடிந்தது. ஆனால் ரங்கசாமி முன்னர் போல தானாகவே முன்வந்து குற்றங் குறைகளை எடுத்துச் செல்வதாகத் தெரியவில்லை. சுனேத்திராவின் அப்பா அப்பப்ப வந்து யோசனை சொல்வார். நிலம் அமைந்திருந்த இடம் அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது. கூலிக்காரைக் கொண்டு வேலை வாங்குவது அவ்வளவு இலகுவான காரியமாகத் தெரியவில்லை. மேற்பார்வை செய்ய ஆள் இல்லாவிட்டால் அவர்கள் தாங்கள் நினைத்தபடி செய்வார்கள். அப்பா வந்து கட்டளையிட வேண்டியது தான் திடீரென்று உற்சாகம் வந்தவர்கள் போல வேலை செய்வார்கள். அப்பா அடிக்கடி வருவதால் ரங்கசாமி தனது போக்குவரத்துக்களைக் குறைத்துக் கொண்டான். இருந்தும் நான் ஏதாவது உதவி கேட்டால் போதும் உடனே எப்பாடு பட்டாவது அதை நிறைவேற்றிவிடுவான்.

# 3

சல்கம வீடமைப்புத் திட்டம் அமுலாவது நிச்சயம். இந்தத் திட்டத்துக்காக நிலம் கூட ஒதுக்கிவிட்டார்கள். தெலபுவ ரயில் நிலையத்துக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள பிரமாண்டமான தென்னந்தோட்டம் ஒன்றில் தான் இந்த வீடமைப்புத் திட்டம் உருவாக இருந்தது. காணி உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அந்தக் காணியின் நிருவாகம் சிறந்த முறையில் நடைபெற்று வந்தது. " வீடமைப்புத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிலம் " என்னும் பெரிய அறிவித்தல் பலகையொன்று பூர்வாங்க ஏற்பாடாக அங்கே நடப்பட்டது. அடுத்ததாக இரண்டு பெரிய யந்திரங்கள் கொண்டு வரப்பட்டன. அங்கே சீக்கிரமாக வேலை தொடங்கிவிடுமென்பதை இவை பறைசாற்றின. யந்திரங்கள் மூலம் தென்னை மரங்கள் பெயர்க்கப்படுவதை பார்ப்பதற்கு சுற்று வட்டாரத்திலிருந்து கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்தார்கள். பார்ப்பதற்கு இது ரொம்ப விந்தையான காட்சியாக இருந்தது. அந்தக் காணியின் விஸ்தீரணம் சுமார் பத்து ஏக்கர் இருக்கலாம். ஆனால் அந்த யந்திரங்களுக்கு அதை சுத்தம் செய்ய அரை மணி நேரமே அதிகம் தான். அத்தனை வலிமை அவற்றிற்கு உண்டு. சாமான்களை இடத்துக்கிடம் கொண்டு சென்று விற்று வரும் வியாபாரிகள் இருக்கிறார்களே அவர்கள் அன்று வெறுங்கையோடு திரும்ப வேண்டியதாயிற்று.வாடிக்கைக் காரர்கள் எல்லோரும் தென்னந்தோட்டம் பக்கமாகக் கவரப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது தான் இதற்குக் காரணம்.வேரோடு பெயர்க்கப்பட்ட தென்னை மரங்களிலிருந்து குரும்பட்டிகள், குருத்துகள், குரும்பைகள், பூக்கள் எல்லாம் விழுந்து சிதறின. கொந்திராத்து எடுத்த முதலாளிகள் வேடிக்கை பார்க்க வந்திருந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடினார்கள். அந்த ஜனங்கள் விரும்பியபடி இளநீர் குடித்தார்கள். மரங்களின் நுனியை பிளந்து நடுவில் உள்ள மென்மையான பாகத்தை எடுத்துச் சாப்பிட்டார்கள்.

அடிக்கடி தெலபுவவை நோக்கிப் பார வண்டிகள் வரத் தொடங்கின. பாதைகள் சேதமடைந்தன. பொது மராமத்து இலாகா தார் ஊற்றி பாதைகளைச் செப்பனிட்டது. தொழிலாளர்கள் கொழுத்தும் வெய்யிலில் வியர்வை வழிய நின்று வேலை செய்தார்கள். தார் பீப்பாய் ஒன்று நெருப்பிலும் வெய்யிலிலும்

கொதித்து முறுகிக் கொண்டிருந்தது.

தார் ஊற்றி பாதை செப்பனிடும் வேலை பூர்த்தியாயிற்று. அதன் பின்னர் வெவ்வேறு இலாக்காக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தெலபுவவைத் தாண்டி சல்கம நோக்கி ஓடத் தொடங்கின. இலையும் கிளையும் பரப்பி விரிந்து வளர்ந்த பிரமாண்டமான புளியமரம் ஒன்று தெலபுவவில் இருந்தது. இந்தப் புளிய மரத்துக்கடியில் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவதொரு வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும். இந்த வாகனங்கள் தெலபுவ ஊடாக தலைநகருக்கும் சல்கமவுக்குமாகப் பறந்து கொண்டிருக்கும். பல வர்ண ட சேர்ட்டுகளும், கால்சட்டையும் அணிந்த தொழிலாளர்கள் அந்த வாகனங்களில் இருப்பார்கள். இவர்கள் அங்கும் இங்குமாகப் பயணஞ் செய்வதைப் பார்க்கும் போது நகரத்து இளைஞர்கள் மனதில் குரோதம் பொங்கி வழியும். வீடமைப்புக் காணியின் முன்புறமாக கடைவீதிக்கு நுளையும் பாதையின் இந்தக் கோடியில் ஒரு கடை உண்டு. ஆனால் அது வீடமைப்புத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகக் காணப்படவில்லை. வாகனங்கள் கிடைப்பதால் அவர்கள் சின்னஞ்சிறு தேவைக்குக் கூட தெலபுவவுக்குத் தான் வருவார்கள். வாகனங்களைப் புளிய மர நிழலில் நிறுத்திவிட்டு தொழிலாளர்கள் தேநீர்க் கடைகளையும், ஹோட்டல்களையும் தேடி நாலாபக்கமும் போவார்கள். நகரசிறி ஹோட்டலுக்கு புதிதாக ஒரு காஸ் அடுப்பு வந்திருக்கிறது. அது மூன்று தட்டுகளைக் கொண்ட அடுப்பு. இந்த மூன்று தட்டு அடுப்பை ஹோட்டலின் முன் பக்கத்தில் வைத்திருந்தார்கள்.

மாலை மூன்று மணியானால் போதும் ஓர் இளைஞன் இந்த அடுப்புக்களில் அப்பம் சுடத் தொடங்கி விடுவான். பெரிய பிளாஸ்டிக் வாளி யில் கரைத்த மா இருக்கும். ஆனால் அப்பத் தாச்சியிலிருந்து இறக்கும் அப்பங்கள் கண் இமைப்பதற்குள் மாயமாய் மறைந்துவிடும். வாகனங்களில் வந்து இறங்கும் தொழிலாளர்கள் ஒரு கையில் சூடான அப்பத்தைத் தூக்கிக் கொண்டு தொங்க விடப்பட்டிருக்கும் வாழைக் குலையைச் சுற்றி மொய்ப்பார்கள். முட்டை அப்பம் சுடுவதற்கு நேரம் சற்று அதிகம் எடுக்கலாம். அதனால் அதற்கென்று சற்றுத் தள்ளி தனியாக ஓர் அடுப்பு வைக்கப்பட்டிருக்கும். அங்கே இன்னுமொருவர் முட்டை அப்பம் தயார் பண்ணிக் கொண்டிருப்பார். முன்னால் நூறு இருநூறு என்று முட்டைகள் குவித்து வைக்கப்பட்டிருக்கும். அவர்கள் சாப்பிடுவதும் குடிப்பதும் நகரவாசிகளின் கண்களில் படாமல் இல்லை. அவர்கள் கண்களைச் சிமிட்டிவிட்டு முகத்தை திருப்பிக் கொள்வார்கள்.

"இவங்களுக்கு சம்பளத்துக்கு மேலே கிம்பளமும் கிடைக்கிறதோ என்னவோ இப்படி செலவு செய்யிறாங்களே" என்று தமக்குள் பேசி

ஆறுதலடைவார்கள். புளியமரத்தடிக்கு ஆவி பறக்கும் சுண்டல் தட்டுகள் இரண்டு வந்து சேர்ந்து விட்டன. அதற்குச் சற்று இந்தப் பக்கமாக தோல் நீக்கிய நிலக்கடலையை தாச்சியில் போட்டு உடனுக்குடன் வறுத்துச் சுடச்சுட ஒருவர் பரிமாறிக் கொண்டிருந்தார். புளியமரத்தடியில் மலைமலையாக செவ்விளநீரும், குரும்பையும் விற்பனையாகிக் கொண்டிருந்தது.

அது ஒரு பிரமாண்டமான வேலைத்தலம். அதனால் சுற்று வட்டாரத்தில் இருந்து தற்காலிக வேலைக்கு ஆட்களை எடுக்கத் தொடங்கினார்கள். தெலப்புவ சுற்றாடலில் வசித்த இளைஞர்கள் யாராவது ஒருவரின் சிபார்சோடு தற்காலிக கூலியாட்களாக வேலை தேடிக் கொண்டார்கள். நல்ல வேலை அனுபவமும் பயிற்சியும் உள்ள மேசன்மாரும், தச்சர்களும் இந்தக் கட்டிட வேலைத் தலத்தில் வேலை செய்தார்கள். இவர்கள் தெலபுவவுக்கு பஸ்சிலும் ரயிலிலும் வந்து சேர்வார்கள். பின்னர் அங்கிருந்து சல்கமவுக்குச் போவார்கள். "இராப்பகல் சேவை" என்று எழுதப்பட்ட பலகை ஒன்று நகரசிறி ஹோட்டலுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுதெல்லாம் விடியற்காலையில் ரயிலைப் பிடிக்கப் போகிறவர்கள் தேநீர் குடிக்க வேண்டுமென்றால் நகரசிறி ஹோட்டல் இருக்கவே இருக்கிறது.

நகரசிறி ஹோட்டல் அதிகாலையிலேயே திறந்துவிடும். ஆனால் ரங்கசாமியின் தேநீர்ப் பானையில் தேநீர் குடித்துப் பழகிய ஒரு சிலருக்கு அவனுடைய கடையை விட மனமில்லை. இஞ்சி தட்டிப்போட்ட தேநீர் அவர்களுக்கு வேறு எங்குதான் கிடைக்கும். ரங்கசாமி தண்ணீர்ப்பானையை அடுப்பில் ஏற்றிவிட்டு குறுமணல் பரப்பிய முற்றத்தை ஒரு தினிசாகப் பெருக்குவான். அங்கே விழுந்து சிதறிக் கிடக்கும் வெற்றிலைத் துப்பல்களை மெதுவாக அழித்துவிடுவான். தேநீர் குடிக்க அங்கே வருபவர்கள் ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பைகளை எடுத்துக் கொண்டு தெருவின் மறு பக்கத்தில் கடைக்கு நேர் எதிராகப் போடப்பட்டிருக்கும் மரக்குத்தியில் போய் உட்கார்ந்து கொள்வார்கள். முன்பின் பழக்கமில்லாதவர்கள் கூட இப்போ வரத்தொடங்கியிருந்தார்கள். அங்கே வரும் ஒவ்வொருவரினதும் விருத்தாந்தங்களை அறிந்து கொள்வதற்கு, முன்னர் போல இப்பொழுதெல்லாம் ரங்கசாமிக்கு சமய சந்தர்ப்பம் வாய்ப்பதேயில்லை. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? பழக்கமானவர்களை விட பழக்கமில்லாதவர்களின் கூட்டம் தான் அதிகமாக இருந்தது. வேலையாட்களில் யாராவது ஒரு இளைஞன் தற்செயலாக சாவித்திரியைப் பார்த்துவிடுவான். அதன் பிறகு அவளோடு கண்களால் பேசி சல்லாபிக்கவும் வந்து விடுவான்.

வாடிக்கைக்காரர்களின் எண்ணிக்கை கூடக்கூட அவர்களுக்கு காலை ஆகாரம் தயாரித்து பொதிகட்டுவதில் லட்சுமி ஈடுபடலானாள். இடியப்பம்,

கௌபீ, பயறு என்று ஏதாவது பண்ணி பார்சல்களில் பொதிந்து வைப்பாள். அக்கம் பக்கத்து முதலாளிமார் கோபித்துக் கொள்வார்களோ என்று ரங்கசாமிக்கு ஏகப்பட்ட பயம். இதனால் தானோ என்னவோ தனது சாமான்களுக்கு கிராக்கியும் வரவேற்பும் அமோகமாக இருந்தும் கூட அளவோடு தான் உணவுப் பதார்த்தங்களைத் தயாரிப்பான். ரங்கசாமி தயாரித்து விற்கும் சாப்பாட்டுப் பார்சல் இருக்கிறதே அது ஹோட்டல்காரன் போடும் ஒரு வேளை சாப்பாட்டை விட இலாபகரமானது. ரங்கசாமியின் சாப்பாட்டால் தாங்கள் வரவுக்குள் செலவு செய்யக் கூடியதாயிருக்கிறதென்பதை வாடிக்கைக் காரர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

ரங்கசாமியின் கடை உட்பட தெலபுவ நகரத்தில் இருக்கும் கடைகளில் அதிகப்படியானவை பெரியம்மா மஹாஹாமினேக்குச் சொந்தமானவை. கடை வாடகை சேகரிக்கும் பொறுப்பை அவள் தனது இளைய மகன் விஜித்திடம் ஒப்படைந்திருந்தாள். அவள் தனது மூத்த மகனுடன் நாவலவில் தங்கி இருந்தாள். அவளுடைய மூத்தமகன் பெரிய உத்தியோகத்தன். விஜித் ஆடம்பரப் பிரியன். அவன் தன்னுடைய கேளிக்கை விளையாட்டுக்களுக்குத் தேவையான பணத்தை கடை வாடகையில் இருந்து எடுத்துக் கொள்வான். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வந்து வாடகைப் பணத்தை சேகரித்துக் கொண்டு போவான். செலவுக்குக் கையைக் கடிக்கும் போதெல்லாம் அவனுக்கு தெலபுவ ஞாபகத்துக்கு வரும்.

இந்தத் தடவை குத்தகைப் பணம் சேகரிக்க வந்தவனுக்கு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. தெலபுவ நகரமே தலைகீழாக மாறியிருந்தது. அவனுக்கு ரங்கசாமியிடமிருந்து பெரிசாக வாடகை ஒன்றும் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு சிறுதொகை தான் கிடைக்கிறது. ஆனால் அவன் ரங்கசாமியிடம் பணம் அறவிடும் விஷயம் மஹாஹாமினேக்குத் தெரியாது. அவர்களுடைய தோட்டம் துரவுகளை ரங்கசாமி தான் கவனித்து வருகிறான். அதனால் வெகுகாலமாகவே அவனிடமிருந்து வாடகைப் பணம் அறவிடுவதில்லை.

" ஐயாவும் இனிமே கிராமத்துக்கு வரவேண்டியது தாங்க" வாடகை சேகரிக்க வந்தவனை இப்படிச் சொல்லி வரவேற்றான் ரங்கசாமி. "இப்ப இந்த வீடுகள மூடி வெச்சிருக்கிறது அநியாயமுங்க. டவுனுக்கு லைட் குடுக்கிறதுக்கு தூண் கூட கொண்டாந்திருக்காங்க."

" இதையெல்லாம் பாத்துட்டுப் போகலாமின்னுதான் வந்திருக்கேன் ரங்கசாமி. வீட்டைக் கொஞ்சம் திருத்தணும். சாமான்களை கொண்டாந்து போட்டா நீ பார்த்துக்கமாட்டியா என்ன?"

" நல்லாச் சொன்னீங்க ஐயா, நாங்க இல்லாட்டா யாரு இதெல்லாஞ் செய்வாங்க?"

விஜித் பையிலிருந்து ஒரு சிகரட்டை உருவி எடுத்து கைக்கடிகாரத்தின் முகப்பின் மேலே தட்டினான். அடுத்த கணம் ரங்கசாமி வீட்டுக்குள்ளே கேட்கும்படி " சாவித்திரி இளநீ ஒண்ணு வெட்டிக்கிட்டு வா" என்று குரல் கொடுத்தான்.

"இப்போ ரங்கசாமிக்கு ஓகோன்னு பிஸ்னஸ் நடக்குதாமே"

" எனக்கா ?" ரங்கசாமி கண்கள் வெளியே துருத்திக் கொள்ளும்படி விழித்தான். " விஜித் ஐயா கேலி பண்ணுறீங்க. எனக்கு எப்பவுமே போத்தல் பிஸ்னஸ் தாங்க"

விஜித்தின் முகம் கடூரமாக மாறியது. அவனுடைய கன்னத்தில் ஒரு பரு.

அதைச் சுற்றிக் தோல் சிவந்திருந்தது. அவன் கண்களைச் சுருக்கி ரங்கசாமியைப் பார்த்தான்.

" இதிலென்ன கேலி வேண்டியிருக்கு. நீ சாப்பாட்டுப் பார்சல்கள் விக்கிறியாமே நெசந்தானே"

இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். சாவித்திரி இளநீரைக் தந்தையாரிடம் கொடுக்கப் போனாள். அதைக் கண்டவிஜித் தனது இரண்டு கைகளையும் நீட்டினான். முன்னர் எல்லாம் அவன் இப்படி வரும் நேரங்களில் சாவித்திரி ரங்கசாமிக்குப் பின்னால் நின்று கொண்டு எட்டிப்பார்ப்பது வழக்கம். அன்று அவள் ஒடிந்து விழுவது போல அத்தனை ஒல்லியாக இருந்தாள். ஆனால் இன்றோ பார்ப்பவர் கண்களைக் கவரும் படி அழகுப் பாவையாக வளர்ந்து நின்றாள். மாநிறம் என்பதை விட கரிய நிறத்தவளாக, ஒரு வெகுளிச் சிறுமியாக சாவித்திரியைப் பார்த்த ஞாபகம் தான் அவனுக்கிருந்தது. ரங்கசாமியுடன் சற்றுக் கடுமையாகப் பேசவேண்டும்என்ற எண்ணத்தோடு வந்திருந்த விஜித்தின்மனம் படிப்படியாக இளக ஆரம்பித்தது. எஜமானனின் எண்ணத்தை அறியாத சாவித்திரி தனது மார்பின் மீது விழுந்து கிடந்த கூந்தல் நுனியை விரலினால் சுற்றியபடி தெருவையே வைத்து கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். விஜித் திகைத்துப் போய் நின்றான். அதைப் பார்த்த ரங்கசாமி சாவித்திரியை நோக்கி

" பெத்தா போய் வெத்தில கொண்டு வா" என்றான். வெறுப்போடு தந்தையைப் பார்த்த சாவித்திரி முகத்தை "உம்" என்று வைத்தபடி வீட்டுக்குள்

போனாள். இந்தமாதிரி நேரங்களில் தெருவைப் பார்த்துக் கொண்டு நிற்பதென்றால் அவளுக்குப் கொள்ளை ஆசை. தெருவில் நிறையப் பேர் சஞ்சரிக்கும் நேரம் இது. கடைப்பக்கத்தால் போகும் இளைஞர்களில் யாராவது ஒருவன் கடையைப் பார்த்தபடி கடந்து போவான்.

மீண்டும் திரும்பிப் பார்ப்பான். முரட்டு வேலையாள் விசில் அடித்தபடி போய்க் கொண்டிருப்பான். வேறொருவன் நாக்கைக் கடைவாய்வரை நீட்டிகண்களைச் சிமிட்டுவான். இவர்களுக்கு ஊக்கம் கொடுத்துத் தூண்டி விடும் எண்ணம் சாவித்திரிக்குக் கிடையாது. ஆனால் அவர்கள் குழம்புவதைக் காண்பதில் அவளுக்குத் தனிக் குஷி. ரயில் வருவதற்கு சற்று முன்னதாக முகம் கழுவி வாசனைத் தைலம் கொஞ்சம் தடவிக் கொள்வாள். இப்படி அவள் தயாராவதை கண்டு லட்சுமி அவளைத் திட்டுவதுண்டு.

" நீ என்ன அங்கே எட்டி எட்டி பாக்கிறாய்?" " சரி தான் நான் பாக்கக் கூடாதா? " சாவித்திரி கோபத்தோடு வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவாள் " அம்மா போல நானும் சமையல் கட்டில் முடங்கிக் கிடக்கணுமா."

"ஒன்னப் பாத்தா இந்து குடும்பத்து பொண்ணுன்னு யாருமே சொல்ல மாட்டாங்கடி என்னயப்பாரு நான் எம்பிட்டு அடக்கத்தோட வாழ்ந்துகிட்டு இருக்கேன் அதில கொஞ்சமாச்சும் ஒங்கிட்ட இருக்கா?"

" நான் பகல்ல ஸ்கூலுக்குப் போறேன். அங்கே நிறைய ஆம்பள பசங்களோட பழகிறேன். எங்க வகுப்பில ஆம்பிளப் பிள்ளைங்க தான் அதிகம்." இது சரியான தகவல், ஆனால் அவள் முதலில்சொன்னதென்னவோ பொய்தான். ஆண் பிள்ளைகள் என்ன பெண் பிள்ளைகளோடு கூட அவள் அதிகம் பழகுவதில்லை. அவளுக்கு இரண்டு சிநேகிதிகள் இருந்தார்கள். அவர்களுடன் பேசுவதில் கூட ஒரு வரம்பு வரையறை வைத்திருந்தாள். சாவித்திரிக்கு எதற்கெடுத்தாலும் கோபம் வந்துவிடும். வார்த்தைக்கு வார்த்தை பேசிவிடுவாள். இதனால் லட்சுமியின் கோபம் அதிகரிப்பதுதான் மிச்சம்.

" நீ முன்னால போகக் கூடாது தெரியுதா?"

சாவித்திரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவளுடைய பார்வை குரோட்டன் மரங்களைத் தாண்டி தெருவை நோக்கிச் சென்றது. வண்ண வண்ணச்சேலை கட்டி தெருவில் போகும் பெண்களைப் பார்த்துக் கொண்டிருப்பதென்றால் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். குதி உயர்ந்த செருப்பு மாட்டி தோளில் தங்காது நழுவி விழும் வண்ணச் சேலைத் தலைப்பை தோளில்

தள்ளிவிட்டுக் கொண்டு இடுப்பை வளைத்து ஒயிலாக நடந்து செல்வார்கள் அந்தப் பெண்கள். அவர்கள் மாட்டியிருப்பது போல குதிக்கால் செருப்புப் போடவேண்டும் என்று சாவித்திரிக்கும் ஆசை பிறந்தது. அந்தப் பெண்கள் தினமும் ஒரு சேலை உடுப்பவர்கள். அவர்களிடம் எத்தனை சேலைகள் உண்டு என்ற விபரம் எல்லாம் சாவித்திரிக்குத் தண்ணீர் பட்டபாடு. அவர்கள் போடும் வகைவகையான சிகை அலங்காரங்களையெல்லாம் சாவித்திரி தானும் போட்டுப் பார்த்துக் கொள்வாள்.

ஒரு நாள் பெரியம்மா மஹஹாமினே வந்திருந்தாள். ரங்கசாமி அவளைப் பார்க்கச் சென்றான். அவள் விஜித்தைப் போல அல்ல.

" ரங்கசாமி உன்னோட மகள் எங்கப்பா?" நான் அவளப் பாத்து ரொம்ப நாளாச்சு. அவளோட பேர் சாவித்திரி தானே!"

" அம்மணிக்கு நல்லா ஞாபகம் இருக்கே. தான் இப்ப வீட்ல இருந்து வரலேங்க பெத்தாவைக் கூட்டிக்கிட்டு வரச் சொல்லி நான் லட்சுமிகிட்ட சொல்றேங்க."

" சரியா சொன்னாய். அது என்ன அந்தப் பேர் பெத்தா. இதைத் தான் நான் இவ்வளவு நேரமும் நெனச்சுக்கிட்டிருந்தேன்.

"ரங்கசாமிக்குத் தேநீர் கொடுத்து உபசரித்தாள் மஹாஹாமினே. திரும்பிப் போக அவன் எழுந்த போது மகஹாமினே மீண்டும் அவனை அழைத்தாள்.

"ரங்கசாமி எங்களுக்கு காலையில கொஞ்சம் பலகாரம் செய்யணுமே. நம்ம சோமா இருக்காளே அவளுக்கு காலையில எந்திரிக்க கஷ்டமாம். உன்னோட பொண்டாட்டியை இங்கே வந்து எங்களுக்குக் கொஞ்சம் பலகாரம் பண்ணித்தரச் சொல்லேன். முடியுமாங்கிறத அவகிட்ட கேட்டு சொல்லு."

"அம்மணி! என்னோட பொண்டாட்டி காலையில இடியாப்பம், இட்லி, தோசை எல்லாம் செய்வா. இப்படி செய்யாம போனா எங்க பொளைப்பு நடக்காதுங்க. காலையில வர்ர ரயில் பிரயாணிங்களுக்கு கொடுக்கிறதுக்குத் தான் இதெல்லாம். அப்ப செய்யிற பலகாரத்தில் அம்மணிக்கும் கொண்டு வந்து தர்ரேங்க." ரங்கசாமி ரொம்பவும் அடக்க ஒடுக்கமான குரலில் சொன்னான்.

" சரி பரவால்ல அந்தமாதிரி செய்யச் சொல்லு. நேரம் கிடைக்கிறப்போ உன்னோட பொண்ண இங்கே அனுப்பு. அவளோட பேர் என்ன சொன்னே.... செப்பனா?" .

"இல்லீங்க ... பெத்தா." ரங்கசாமி மனசுக்குள்ளே சிரித்தான்.

இருந்திருந்து எஜமானியம்மாவ போய் பாத்துட்டு வாடி. அவங்களுக்குச் சொந்தமான இடத்தில எங்கள குடிவச்சிருக்காங்க இல்லையா? எடுத்ததுக்கெல்லாம் முடியாதுங்கிறது சரியில்ல. நீ கொஞ்சம் அங்கே போய் உதவி செய்து கொடுக்கணும்." ரங்கசாமி மகளுக்குச் சொன்னான்.

பெத்தா அப்பா காதில் விழாமல் ஏதோ முணுமுணுத்தாள்.

"எடுத்த எடுப்பில முடியாதுன்னு சொல்றது சரியில்லம்மா. எஜமானியம்மா கோவிச்சுக்குவாங்க. நீ அங்க போற நேரத்தில் ஸ்கூலுக்குப் போகனுமின்னு ஏதாச்சும் சாட்டு சொல்லிடு. சிங்கள ஜனங்க அப்படித் தான் எடுத்த எடுப்பில மறுத்திட்டா அவங்களுக்கு கோவம் வந்திடும்."

" நான் ஸ்கூலுக்குப் போகல்ல ." அப்ப சரிதானே சாவித்திரியின் குரலில் கோபம் தொனித்தது.

"சாயந்தரமானா அம்மாக்கு உதவனும் பாடம் படிக்கனும். பங்களாவுக்குப் போகனும் இவ்வளவும் செய்யிறதுன்னா என்னால ஆகாதப்பா. நான் ஸ்கூல்ல இருந்து விலகப் போறேன்".

" அப்படியே செஞ்சிடு. ஸ்கூலுக்கு போனது போதுமின்னு நான் தான் ஒனக்கு சொல்லியிருக்கேனே."

சாவித்திரி கோபத்தில் துடித்தாள். அப்பாவைப் பயமுறுத்தத் தான் அவள் அப்படிச் சொன்னாளே தவிர உண்மையாகப் பாடசாலையிலிருந்து விலகும் நோக்கம் அவளுக்கில்லை. சாவித்திரி கல்வி பொது தராதர பத்திர சாதாரண பரீட்சையில் சுமாராகத் தேறியிருந்தாள். உயர்தர வகுப்பில் சேர்வதற்கு அவளுக்கு எந்தத் தடையும் இருக்கவில்லை. சமீபத்தில் தான் அவள் அந்த வகுப்புக்குப் போயிருந்தாள். பாடங்கள் அவளுக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தன. அவள் படிப்புக்கு முழுக்குப் போட எண்ணியதற்குக் காரணம் இதுதான். சில பாடங்கள் அவளுக்கு வேம்பாகக் கசந்தது. இந்தப் பாடங்கள் நடைபெறும் வேளைகளில் அவள் தூங்கிவிடுவதும் உண்டு.

இத்தனைக்கும் அவளுக்கு வீட்டில் பொழுது போகவில்லை. தொடர்ந்து

அவள் பாடசாலைக்குப் போய் வந்ததற்குக் காரணமே இது தான். தோட்டக் காட்டில் இருந்த ரங்கசாமியின் உறவினர்கள் சாவித்திரியின் படிப்பை வெகுவாக மதித்துப் பாராட்டினார்கள். இரண்டு மூன்று வருடங்கள் தோட்டப் பாடசாலையில் படித்த பிள்ளைகள் தான் அங்கே இருந்தார்கள். சாவித்திரியைப் போலப் பரீட்சை எழுதி சித்தியடையக் கூடியவர்கள் அங்கே கிடையாது. சாவித்திரி இப்பொழுது எந்தப் பரீட்சை எழுதுவதற்குப் படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவர்களுக்குப் புரிய வைப்பதே வெகு சிரமம். சாவித்திரி அளவு படித்தவர்கள் தோட்டக் காட்டுப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மத்தியில் கூடக் கிடையாது. இது அவர்களுக்கே தெரிந்தது தான்.

ரங்கசாமிக்கோ சாவித்திரியைப்படிக்க வைப்பது தன் மீது பலாக்காரமாகச் சுமத்தப்பட்ட சுமைபோல இருந்தது. பஸ்பிரயாணச் சீட்டு வாங்குவதற்கோ, ஏதாவதொரு பள்ளிக்கூட காரியத்துக்கோ ஒரேயடியாகப் பணம் கொடுப்பதென்றால் ரங்கசாமிக்குக் குழப்பமாகப் போய்விடும். சாவித்திரி பணம் கேட்டு அடிக்கடி நச்சரிப்பாள். இவ்வளவு பணம் எதற்கு என்று ரங்கசாமி புரியாமல் கேட்பான். அவர்கள் லஞ்சம் வாங்குகிறார்களோ என்று கூட ரங்கசாமிக்கு சந்தேகம் உண்டாகிவிடும். இதனால் தன்னுடைய மகள் பாடசாலைக்குப் போவதை நிறுத்த மாட்டாளா என்று ஆசையோடு எதிர்பார்த்திருந்தான்.

பணம் என்பது ஒவ்வொரு சதமாகச் சேர்க்கப்படவேண்டிய ஒன்று. ஆனால் அது சமயம் பார்த்து வேறு பக்கம் திரும்பி விடும். இது ரங்கசாமிக்கு நன்றாகத் தெரியும். பணம் கையில் கிடைத்தால் போதும் உடனே செலவைக் கட்டுப்படுத்தத் தொடங்கிவிடுவான். வீட்டுச் சாப்பாட்டுச் செலவைக் கூட வெகு சிக்கனமாக நடத்திவிடுவான். கைக்கு வரும் ஒவ்வொரு சதத்தையும் வீட்டுக்கு நடுவில் புதைத்து வைத்திருக்கும் உண்டியலில் போட முடியவில்லையே என்று துக்கப்படுவான்.

நல்ல சாப்பாடு சாப்பிட்ட நேரத்தில் வயிற்றைத் தடவியபடி ஏப்பம் விடும் ரங்கசாமி " எதச் சாப்பிட்டாலும் வயறு என்னமோ நெறஞ்சுடுது" என்று சந்தோஷமாகச் சொல்லிக் கொள்வான்.

" நாம என்ன சாப்பிட்டோமின்னு யாராவது வயத்தப் பொளந்தா பாக்கப் போறாங்க"

வீட்டுக்கு என்ன பொருள் வாங்க வேண்டியிருந்தாலும் தானே போய் வாங்கி வந்து கொடுப்பான். லட்சுமி கடை கண்ணிக்குப் போவதில்லை. ஆனால் சாவித்திரி இடைக்கிடை சங்கக் கடைக்குப் போய் வருவாள். என்றைக்காவது சாவித்திரியின் கையில் பணம் கொடுத்தால் போதும் அவள் முழுவதையும் செலவு செய்து விடுவாள். பணத்தைக் கவனமாகச் செலவு செய்யத்

தெரியாதவள் என்று அப்பா சாவித்திரியைத் திட்டுவது வழக்கம்.

துண்டு மீன் இருநூற்றைம்பது கிராம் வாங்கி வந்துவிட்டால் போதும் ரங்கசாமிக்குக் கோபம் வந்துவிடும். ஒரேயடியாகக் கத்தித் தொலைத்துவிடுவான். " இப்படி சாப்பிட்டா பிச்சை தான் எடுக்கணும்."

பொருள் வாங்கி மிஞ்சும் பணத்தை சாவித்திரியிடம் இருந்து பறித்துக் கொள்வான் ரங்கசாமி. அந்த நேரம் அவன் குண்டு துளைத்த பன்றி போலத் துடிப்பான்.

"அடேங்கப்பா நாம இப்படி மீன் திங்க முடியுமா? இது என்ன கந்தோருக்குப்போய் சம்மாதிச்சிக்கிட்டு வர்ற பணமெங்கிறநெனப்பா?"

வாங்கி வந்த மீன் துண்டை எறிந்து விடலாம் போல சாவித்திரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரும். மாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று தடவை அப்பா திரளி அல்லது பியாமஸ்ஸா மீனில் அரை றாத்தல் வாங்கிவருவார். இது தான் சந்தையில் மலிவாகக் கிடைக்கும். தினமும் ஒரு வேளை தான் சோறு. என்றாவது ஒரு நாள்தான் இந்த ஒற்றை வேளைச் சோற்றுக்கு தொட்டுக் கொள்ள இரண்டு மரக்கறி இருக்கும். பருப்பு அல்லது கருவாடு. இரண்டாவது கறி அடுப்பில் வேகுவதேயில்லை. துண்டு மீன்களில் சுறா மீன் தான் ரொம்பவும் மலிவாகக் கிடைக்கும். அதைத் தான் ஒரு நாள் சாவித்திரி வாங்கி வந்திருந்தாள்.

"மீன் எல்லாம் ஒண்ணுதான் சின்ன மீனும் மீன் தான் பெரிய மீனும் மீன் தான்."

"எதுக்கு இப்ப சத்தம் போடுறீங்க " – ரங்கசாமியின் பிரலாபத்தை சகிக்க முடியாமல் லட்சுமி பேசினாள்." பெத்தாவுக்கு துண்டு மீன் சாப்பிடனுமின்னு ஆசைபோல இருக்கு. அவ வேற எங்க போய்ச் சாப்பிடுவா?"

இதையெல்லாம் ரங்கசாமி கவனித்தாகத் தெரியவில்லை. பணம் செலவு செய்வதைப் பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். " சத்தம் போட வேணாம்" லட்சுமி கோபத்தோடு சொன்னாள். அவளுக்கு வெக்கம் தான் இவ்வளவு சத்தம் போட்டது போதாதா?"

அம்மா அப்பாவுக்குக் கோபமாக ஏதாவது சொன்னால் போதும் அப்பா பெட்டிப் பாம்பாகிவிடுவார். இது சாவித்ரிக்கு நன்றாகவே தெரியும். அப்பா அம்மாவுக்கு மரியாதை காட்டுவார். இருந்தும் அம்மா தன்னால் பொறுக்க முடியாமல் போனால் மட்டும் தான் இப்படி அப்பாவை ஏசுவாள்.

கொஞ்சம் எண்ணெய் ஊற்றி அவித்து நிறையப் புளிசேர்த்து லட்சுமி பக்குவமாகச் சமைக்கும் மீன் கறியின் மணம் மூக்கைத் துளைத்துக் கொண்டு சென்றது. காலையில் தயாரிக்கும் பலகாரம் சில நாட்களில் மிஞ்சி விடும் அந்த நாட்களில் பகல் சாப்பாடு சமைக்கா விட்டால் பகலுக்கு அவர்கள் எதுவுமே சாப்பிட மாட்டார்கள். இரவுக்கு நேரகாலத்தோடு சோறு பொங்கி விடுவார்கள். இருட்டும் வேளையாகி விளக்கேற்றுவதோடு இரவுச்சாப்பாடும் ஆகிவிடும். திரளி மீனில் கறி வைத்தால் இவ்வளவு மணம் கிளம்பாது. இது ரங்கசாமிக்கு நன்றாகவே தெரியும்.

லட்சுமி ராக்கையிலிருந்து மூன்று பீங்கான்களை எடுத்து கழுவி வட்டிலில் வைத்தாள். சோற்றுப் பானைக்கு வணங்கிவிட்டு பெரிய அகப்பை முட்டச் சோற்றை அள்ளி நான்கு தடவை ரங்கசாமியின் தட்டில் வைத்தாள். பின்னர் அகப்பையின் பின்பக்கத்தால் சோற்றை அழுத்திப் பரப்பினாள். நீட்டு மில்சாட் அரிசிச் சோற்றின் மேலே ஊற்றப்பட்ட மீன் கறியைப் பார்க்கப் பார்க்க பசி வேகமாகக் கிளம்பியது. சோற்றுத் தட்டை கையில் எடுத்த ரங்கசாமி தான் பெத்தாவை ஏசியதை எண்ணி வெட்கப்பட்டான். " பெத்தா இங்கே வா " – சோற்றுத் தட்டை எடுத்துக் கொண்டு வீட்டின் நடுத் துண்டில் குப்பிவிளக்குக்கு அருகில் போய் அழைத்தான். பெத்தா அம்மாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். இரண்டு கைகளிலும் நாடியைத் தாங்கியபடி இருந்த அவள் " ச்சூ " என்று தலையை உதறினாள்.

" வா பெத்தா லட்சுமி பெத்தாவுக்கு சோறு போட்டுக் கொடுடி " "இதோ போட்டுத் தானே வெச்சிருக்கு." லட்சுமி தன்னுடைய தட்டைக் கையில் எடுத்தபடி சொன்னாள்.

" சாவித்திரி சாப்பிடும்மா ".

மறுபடியும் " ச்சூ" என்று சூள் கொட்டினாள் சாவித்திரி. பின்னர் சோற்றுத் தட்டைக் கையில் எடுத்து " இதைவிட சோத்துக்கு ஜலம் விட்டு சாப்பிடலாம் " என்றாள்.

" சந்தையில றால் இருந்திச்சு, வேற வெல கூடின மீனெல்லாம் வெச்சிருந்தாங்கள். அதெல்லாம் கொண்டு வந்திருந்தா அப்பா வீட்டையே புரட்டியிருப்பார். நான் வாங்கியாந்தது மூணு ரூபா மீனு " – அவள் தன்னுடைய தட்டில் இருந்த மீன் துண்டுகள் இரண்டையும் அரை மனத்தோடு எடுத்து மீண்டும் சட்டியில் போட்டாள்.

" இது என்ன " – லட்சுமி தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்தாள். பெத்தா சட்டியில் போட்ட இரண்டு துண்டுகளுடன் இன்னும் ஒரு துண்டையும் சேர்த்து அவளுக்கே பரிமாறினாள்.

" எங்களுக்கு அப்பா தானே திங்கக் கொடுக்கணும் அவரை விட்டா யாரு நமக்குக் கொடுப்பா? இனோரு துண்டு மீன் வெச்சிருக்கேன். பெத்தா காலையில இஸ்கூலுக்கு போக மொதல்ல சாப்பிடு".

லட்சுமிக்குத் தன்னுடைய இளம் வயது மகளை நினைக்க நினைக்க துக்கமாக இருந்தது. சாப்பாட்டுக்கு அதிகம் செலவு செய்வது என்னவோ தவறுதான். இருந்தும் இப்பொழுது ரங்கசாமி சாப்பாட்டுக்குச் செலவு செய்கிறானே அதைவிடக் கொஞ்சம் அதிகமாகச் செலவு செய்ய அவனுக்கு ஒன்றும் முடியாமல் இல்லை. ரங்கசாமியின் வருமானத்தைப் பற்றி லட்சுமிக்கு எதுவுமே தெரியாது. ஜுவானிஸ் இருக்கிறானே அவனுக்குப் பிள்ளை குட்டிகள் ஏராளம் இருந்தும் அவர்கள் வீட்டில் இரண்டு வேளையும் சோறு பொங்குகிறார்கள்.

" பசிய போக்கிடத் தான் சாப்பிடனும். சாப்பிட்டத யாராவது வயத்த தொறந்து பாப்பாங்களா? என்ன " இது ரங்கசாமி தினமும் பாடும் பல்லவி.

லட்சுமிக்குத் தன்னுடைய இளமைக் காலம் ஞாபகம் வந்தது. லட்சுமியின் குடும்பம் ஏழ்மையில் உழன்றாலும் கூடசாப்பாட்டுக்குப் பஞ்சமே இருந்ததில்லை. சுற்றுப்புறத்தில் சாப்பாட்டிற்கு காய்கறியாவது கிடைத்தது. லட்சுமி சாவித்திரியின் தலையை அன்போடு தடவிக் கொடுத்தாள்.

" பெத்தா மறுபடி கடைக்குப் போனா றால் வாங்கிக்கிட்டு வாம்மா. அப்பா எசினா பரவால்ல. நமக்கு வேற யாரு சாப்பாடு போடுவாங்க."

சின்ன வயதில் சாவித்திரிக்குச் சாப்பாட்டில் நாட்டம் இருந்ததேயில்லை. ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. தனக்கு ரொம்பப் பசி எடுப்பதாக அடிக்கடி முறையிடுவாள். அவளுக்கு இப்படி பசியெடுப்பதால் தான் உயரத்திலும், பருமனிலும் தங்கள் இருவரையும் மிஞ்சி வளர்கிறாள் என்று லட்சுமி நினைத்தாள். சிறுவயதில் சாவித்திரி கிளியைப்போல மனதை அள்ளும் அழகுடன் இருந்தாள். அதனால் தான் அவளைப் பெத்தா என்று ஆசையோடு அழைத்தார்கள். இன்று அவள் வயது வந்த பெண். கிளியைப் போலக் கொஞ்சி விளையாடிய செல்லப் பெண் இன்று முரட்டுப் பிடிவாதம் கொண்டு நிற்கிறாள். " பெத்தாவுக்கு என்னல்லாம் சாப்பிடத் தோணுதோ அதெல்லாம் வாங்கிவாடா" லட்சுமி பெருமூச்சோடு மீண்டும் சொன்னாள்.

சாவித்திரி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். எதிர்புறத்துச் சுவரில் அவளுடைய நிழல் அவளைவிட இரண்டு மடங்கு பெரிதாக விழுந்திருந்தது. முன் புறத்து தாள்வாரம் நீங்கலாக மூன்றுபகுதிகளைக் கொண்டிருந்தது அந்த வீடு. அதன் நடு அறை தாயினதும் மகளினதும் அந்தப்புரம். அதற்கு அப்பால் ஒரு சின்னஞ் சிறு குசினி. இங்கே லட்சுமி சமைப்பதற்குப் பயன்படுத்தும் இடம்போக மிகுதி இடம் ரங்கசாமியின் வியாபாரம் பண்டங்களால் நிரம்பியிருக்கும். கொஞ்சம் பெறுமதி உள்ளதென்று சொல்லக் கூடியதாயுள்ள முறுக்கப்பட்ட செப்புப் பித்தளைத் தகடுகளும் அலுமினியத் துண்டுகளும் தாயும், மகளும் தூங்கும் படுக்கை அறையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்த அறையில் ஒரே ஒரு மேசை இருக்கிறது. அந்த மேசையில் சுவர் ஓரமாக சாவித்திரியின் பள்ளிக்கூடப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும். சாப்பாடு பரிமாறிய கோப்பைகள் அல்லது மிஞ்சிய சாப்பாடுகள் ஏதாவது இருந்தால் அவையெல்லாம் மேசையின் இந்தப் பக்க ஓரமாக வைக்கப்பட்டிருக்கும். இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று தாய்க்கும் மகளுக்கும் ஆசைதான். ஆனால் ரங்கசாமியின் அலங்கோலமான அருவருப்பூட்டும் வியாபாரப் பொருள்கள் அந்த ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். அறைக்குக் குறுக்காக துணி போடுவதற்கு இரண்டு கொடிகள் கட்டப்பட்டிருக்கும். ஒன்றில் லட்சுமியும் ரங்கசாமியும் துணிபோடுவார்கள். மற்றக்கொடி பெத்தாவுடையது. வியாபாரப் பொருள்களுக்குச் சற்று தள்ளி பின்னல் விட்டுப்போன ஒரு கதிரை. அதன் மேல் ஒரு டிரங்குப் பெட்டி. இந்தக் குடும்பத்தின் பெறுமதி வாய்ந்த பொருள்கள் இந்தப் பெட்டிக்குள் தான் பாதுகாக்கப்படுகின்றன. அந்தப் பெட்டியின் அடியில் ரங்கசாமியின் வேஷ்டியும், லட்சுமியின் இரண்டு சேலைகளும் இருக்கின்றன. இந்தச் சேலைகளில் ஒன்று தங்க நூல் இழைக்கப்பட்டது. கழுவி இஸ்திரிகை போட்ட தனது இரண்டு வெள்ளைச் சட்டைகளைச் சாவித்திரி அந்தப் பெட்டியில் தான் வைத்திருந்தாள். தட்டுமுட்டுச் சாமான்களில் படிந்திருக்கும் தூசியினால் இவை அழுக்கடைந்து விடும் என்பதால் தான் சாவித்திரி அவற்றைக் கொடியில் போடுவதில்லை.

அறைக் கோடியில் ஒரு கட்டில். அதற்குப் பின்னால் ஒரு ராக்கை. அந்த ராக்கைக்கு மேலே கூரையிலிருந்து சிலந்தி வலை திரள் திரளாகத் தொங்கியது. அந்த வீடு பழைய ஒல்லாந்தக் கட்டிடக் கலைப் பாணியில் கட்டப்பட்டிருந்தது. அதன் கூரை சிங்கள ஓடுகளினால் வேயப்பட்டிருந்தது. இந்தப் பழைய கூரையை கைக்கெட்டாத தூரத்திலிருந்த சிலந்திகள் பயன்படுத்திக் கொண்டன. வாரம் ஒரு தடவை லட்சுமி அல்லது பெத்தா கூட்டு மாற்றின் பிடியினால் சிலந்தி வலையை அகற்றப் பார்ப்பார்கள். அந்தக் கூட்டு மாறுப்பிடியின் தாக்குதலுக்குச் சற்றுப் பின்னடைந்தாலும் மீண்டும் சந்தர்ப்பம் வாய்த்ததும் இந்தச் சிலந்திகள் தங்கள் பின்னல் வேலையை ஆரம்பித்துவிடும்.

# 4

ரயிலிருந்து இறங்கியதும் காணியைப் பார்த்துவிட்டுப் போவது எனக்குப் பழக்கமாகிவிட்டது. ரயில் மாகல மலை ஏற்றத்தில் மிகவும் சிரமத்தோடு ஏறும். பிறகு இறங்கத் தொடங்கிவிடும். அடுத்துக் களைப்போடு மூச்சிறைக்கத் தெலபுவவை நோக்கி ஊர்ந்து செல்லும். நான் ரயில் நிலையம் இருக்கிற பக்கத்தால் இறங்குவதில்லை. அதற்கு எதிர்பக்கத்தால் தான் இறங்குவேன்.

எங்கள் காணியை ஒட்டினாற் போல இன்னுமொரு காணி இருந்தது. அதன் சொந்தக்காரன் எங்கோ தூர இடத்தில் இருக்கிறான். காணியைப் பார்த்துக் கொள்வதற்கு ஒருவனை அமர்த்தியிருந்தான். சொந்தக்காரன் அவனுக்கு அங்கே களிமண் தட்டி கட்டிய ஒரு ஓலைக் குடிசை போட்டுக் கொடுத்திருந்தான். அந்தக் காவல்காரனுக்கு அக்கம் பக்கத்திலுள்ள கிராமத்தவர்களுடன் அதிக சகவாசம் கிடையாது. பெமியானு அதுதான் அவனுடைய பெயர். ஐம்பது வயதைத் தாண்டியவன். நான் அங்கு வருவதை ஆவலுடன் பார்த்திருப்பான். எங்களுடைய வீடு கட்டுவதற்கு நாங்கள் பயன்படுத்தும் கருவிகளையெல்லாம் அவனுடைய பாதுகாப்பில்தான் வைத்திருந்தோம். தேநீர் தயாரிப்பதற்கு சீனி, தேயிலை வகையறாக்களையும், சம்பல் செய்து கொள்வதற்கு கொஞ்சம் மிளகாய் சரக்குச் சாமான்களையும் சுனேத்திரா கொண்டு வந்து வைத்திருந்தாள்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் உடைகளை மாற்றிக் கொண்டு வியர்வை ஆறும்வரை அத்திவாரத்துக்கு மேல் ஏறி நின்று சுற்றாடலைக் கவனமாக நோட்டம் விடுவேன். எங்கள் காணியில் முதன்முதலாக நட்ட வாழைக் கன்றுகள் இப்போ செழித்து வளர்ந்து நின்றன. அவற்றின் தண்டுகள் நன்கு உருண்டு திரண்டிருந்தன. காட்டை அழித்து செப்பனிட்ட கையோடு மரவள்ளிக் கட்டைகளை நட்டிருந்தோம். இப்பொழுது அவற்றில் கிழங்கு இறங்கியிருந்தது. சுனேத்திரா காணிக்கு வரும் நாட்களில் குளிகள் பறித்து காய்ந்த இலைச்சருகுகளையும் புல்லையும் போட்டு எரித்து நாற்று மேடைகள் செய்வாள். அதில் உயர்ந்த ரக பப்பாசி விதைகளையும் அகத்தி விதைகளையும் தூவியிருந்தாள். மழைக்காலமாகப் பார்த்து நட்டதால் இப்பொழுது அவை

என்னுடைய தோள் உயரத்துக்கு வளர்ந்து நின்றன. அவற்றின் பளபளக்கும் கரும் பச்சை நிற இலைகள் அவை செழிப்பாக வளர்ந்திருக்கின்றன என்பதை பறை சாற்றின. அத்திவாரத்தின் மேலே பொன்னாங்காணிக்கீரையும், சாரணையும் அடர்ந்து வளர்ந்திருந்தன. தோட்டத்தைத் துப்புரவு செய்த நாட்களில் பொன்னாங்காணித் தண்டுகளை இளகிய மண்ணில் புதைத்திருந்தேன். இப்பொழுது அவை கத்தியினால் அரிந்து எடுக்கக் கூடிய அளவு வளர்ந்திருந்தன. அதற்குப் பிறகு பொன்னாங்காணி நட்டதில்லை. ஆனால் முன்னர் நட்ட கீரையின் விதைகள் அங்கங்கே சிதறியிருந்ததால் இப்போ தோட்டத்தில் எங்கே பார்த்தாலும் பொன்னாங்காணி மயமாகக் காட்சியளித்தது.

நான் மரவள்ளி மரம் ஒன்றைக் கிண்டி எடுத்து பெமியானிடம் கொடுப்பேன். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு கீரை ஆய்ந்து எடுத்துக் கொள்வேன். பிறகு சுமார் அரைமணி நேரம் இளம் மரவள்ளிக் கன்றுகளைச் சுற்றி மண்ணைக் கிளறி விடுவேன். இந்த வேலையெல்லாம் முடிந்த கையோடு கிணற்றுக்குப்போய்க் குளிப்பேன். பெமியானு மரவள்ளிக்கிழங்கு அவித்து வைத்திருப்பான். தேநீர் தயாரிப்பதற்கு பானையில் நீர் ஊற்றி அடுப்பில் ஏற்றிவிடுவான். தேங்காய்ச் சொட்டும் கீறிப்பிளிந்த காரமிளகாயும் சேர்த்து உறைக்க உறைக்க மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்டு தேநீர் குடிப்போம்.

வயிறு நிரம்பிவிடும். இப்படி நினைத்த மாதிரி குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்து, வயிறு நிறையச் சாப்பிட்டு தேநீரும் குடித்துவிட்டால் இன்னும் பத்து மைல் என்ன எத்தனை மைல் வேண்டுமானாலும் சைக்கிள் சவாரி செய்யலாமே. சில சமயங்களில் இருள் நன்றாகக் கவியத் தொடங்கிய பிறகு தான் நான் ரங்கசாமியிடம் சைக்கிளை வாங்கிக் கொண்டு புறப்படுவேன். அந்த நேரம் ஆஸ்பத்திரியில் மின்சார யந்திரம் "கடகட" என்னும் சத்தத்தோடு இயங்க ஆரம்பித்துவிடும். காலையில் நேரத்தோடு வந்துவிட்டால் சைக்கிளில் நேரே தோட்டத்துகே போய்விடுவேன். பிறகு அங்கிருந்து ரயில் நிலையத்துக்கு நடந்து வருவேன். சில நாட்களில் பின்னேரம் நான் ரயிலில் வரும்வரை ரங்கசாமி புகையிரத நிலையத்தில் வந்து காத்திருப்பான். நான் அவனையும் கூட்டிக் கொண்டு தோட்டத்துக்குப் போவேன். அங்கே அவன் என்னுடைய அனுமதியுடன் ஒன்றிரண்டு மரவள்ளிக் செடிகளைப் பெயர்த்துக் கொள்வான். கீரை வகைகளில் எவை சாப்பிட உகந்தவை என்பது பற்றிய எல்லா விபரமும் ரங்கசாமிக்குத் தெரியும். ஒரு சமயம் ரங்கசாமி ஏதோவொரு கீரையை ஆய்ந்து கொண்டு வந்தான். அதற்கு " பணிதோர " என்று பெயராம். இதை நான் சாப்பிட்டதேயில்லை " ரங்கசாமி " நாங்க சின்ன பிள்ளைங்களா இருந்த காலத்தில இந்தக் கீரையோட விதையை பருப்புன்னு சொல்லி

வெளையாடுவோம் "நான் சிரித்தபடி சொன்னேன். "வாயில வெச்சிடாதேங்கடா மயக்கம் வந்திடுமின்னு " அம்மா சொல்லுவாங்க "

" ஐயையோ அது தவறுங்க "

கொடிபெனேல கீரை காடு முழுவதும் மண்டிக் கிடந்தது. அதில் ஒரு கொடியைப் பறித்து அதை உயரதூக்கிப்பிடித்து " இது ஒடம்புக்கு ரொம்ப நல்லதுங்க " என்றான்.

"ஐயா இத நல்லா கழுவி கொதிக்கிற தண்ணிப் பானையில போட்டிடுங்க. தேத்தண்ணிய விட நல்லதுங்க " கஞ்சி, வறுவல் , வதக்கல்என்று கொடிபெனல கீரையில் செய்த பாகமுறைகளை சாப்பிட்டுப் பழகிய எனக்கு ரங்கசாமி சொன்ன புதிய முறை வியப்பூட்டியது. ரங்கசாமி சொன்னது போல நாங்களும் செய்து பார்த்தோம். கொடி பெனெல அவித்த தண்ணீர் கடும் மஞ்சள் நிறத்தில் பியர் போல இருந்தது.

" நா சொன்னது பொய்யா பாருங்க " ரங்கசாமி சிரித்தான். புல்லுப்போல இருக்கிற ஒரு கீரையை சுண்டல் பண்ணுவதற்கென்று ஒரு நாள் பறித்துக் கொண்டு போனான்.

" என்ன ரங்கசாமி இதை யாராவது சாப்பிடுவாங்களா?" இது ஒரு ஜாதி புல் இல்லையா?"

." புல்லு இல்லீங்க இத சாப்பிட்டா ரொம்ப நல்லதுங்க " அவன் அந்தக் கீரைப் பிடியை என் எதிரிலே தூக்கிக் காட்டியபடி சொன்னான்.

" இந்த கீரையில செஞ்ச சுண்டல நாங் கூட சாப்பிடிருக்கேங்க" பெமியான் சொன்னான்.

" ஆனா தனியா இந்தக் கீரையில மட்டும் செஞ்சதில்லீங்க வேற கீரைகளும் கலந்து சுண்டினதுங்க"

நான் மற்றக் கீரைகளோடு இதிலும்ஒரு பிடியைச் சேர்த்து வீட்டுக்குக் கொண்டு போனபோது சுனேத்திரா ரொம்ப ஆச்சரியப்பட்டாள். இந்தக் கீரையை மற்றக் கீரைகளுடன் சேர்த்துச் சாப்பிட்டு அதன் சுவையை அறிந்து கொண்டோம். மனதிலிருந்த சந்தேகமும் நீங்கிவிட்டது. பிறகு இதைத் தனியாக சுண்டுவது எங்களுக்கு பழக்கமாகிவிட்டது.

சுனேத்திரா சிரித்தபடி " பாருங்களேன் இந்தத் தமிழனுக்குத் தெரியாத விஷயமே இல்ல" என்றாள். அவள் அவனை 'ரங்கசாமி " என்று பெயர் சொல்லி அழைத்ததேயில்லை தமிழன், பறத்தமிழன், சக்கிலியன் " இதெல்லாம் அவளுடைய அகராதிப்படி ரங்கசாமியை விளிக்கும் பதங்கள். சந்தர்ப்பத்துக்கேற்றபடி இதில் ஒன்றைப் பிரயோகிப்பாள்.

இடைக்கிடை ரங்கசாமி எனக்கு பழம் அல்லது வேறு ஏதாவது கொண்டுவந்து கொடுப்பான். அதை எடுத்துக் கொள்வதற்கு சுநேத்திரா பின் நிற்பாள். ஒரு சமயம் கோயில் பூஜையில் கிடைத்த பிரசாதம் என்று சொல்லிக் கொண்டு ரங்கசாமி மிகுந்த பயபக்தியுடன் எனக்குச் சாப்பிடக் கொடுத்ததை சுனேத்திரா மறுத்து விட்டாள்.

" என்ன பூஜையோ யாருக்குத் தெரியும் "

காலையில் வீட்டில் சாப்பிடாமல் போகிற நாட்களில் லட்சுமியிடம் ஒரு சாப்பாட்டுப் பார்சல் வாங்கிக் கொண்டு போவேன். இதைப் பற்றியோ ரங்கசாமி தயாரித்துக் கொடுக்கும் ருசியான இஞ்சித் தேநீர் பற்றியோ சுனேத்திராவுக்கு நான் சொன்னது கிடையாது.

வேலைக்குக் கூலியாட்களைத் தேடிக் கொடுப்பது போன்ற விடயங்களில் ரங்கசாமி எனக்கு மிகவும் உதவியாக இருந்தான். ஆனால் இதற்காக அவன் என்னிடம் பிரதி உபகாரம் எதையும் எதிர்பார்க்கவில்லை. எங்களுடைய தோட்டத்தில் பப்பாளி மரங்கள் பெருவாரியாகக் காய்க்கத் தொடங்கின. அதைச் சாப்பிட ஆட்கள் தான் இல்லை. எல்லாம் அழுகி வீணாகிக் கொண்டிருந்தன. ரங்கசாமி அந்தப் பழங்களை எடுத்துப்போய் தன்னுடைய கடையில் வைத்து விற்பதற்கு இணங்கினான். புதுமரக்கறி பழங்கள் என்றால் அங்கே ஏக கிராக்கி. ரயிலில் வந்து இறங்கும் துரைசானிமார் புதுமரக்கறி பழங்களைத் தேடி பைத்தியமாக அலைவார்கள். அகத்தி மரங்களில் பூத்திருக்கும் பூக்கள் இலைகள் எல்லாம் கட்டுக் கட்டாக விற்பனையாகும். சிறிது காலம் கைவிடப்பட்டுமீண்டும் பயிரிடப்பட்டிருக்கும் நிலத்திலிருந்து தினசரி ஏதாவது கிடைத்த வண்ணமே இருக்கும். குறைந்த விலை கொடுத்து வாங்கும் பொருட்கள் ஒரு புறமிருக்க இலவசமாகக் கிடைக்கும் சாமான்களையும் ரங்கசாமி கடை அட்டாளையில் வைப்பான். இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை வந்து தோட்டத்தில் வளர்ந்திருக்கும் தோர, பெனேல இலைகளை ஆய்ந்து பிடிகளாகக் கட்டிக் கொண்டு போவான்.

எப்பொழுதும் நிலத்தையே பார்த்தபடி நடக்கும் பழக்கம் ரங்கசாமிக்கு உண்டு . ஆணி, துருப்பிடித்த திருகாணி, அல்லது பெறுமதிவாய்ந்த ஏதாவது

ஒரு பொருளைக் கண்டுவிட்டால் போதும் இடுப்புப்பட்டிக்கு மேலே துருத்திக் கொண்டிருக்கும் சாரத்தின் மடிப்புக்குள் போட்டுக் கொள்வான். கூர் மழுங்கிய மண்வெட்டி நெளிந்த அலுமினியம் பாத்திரங்கள் என்பவற்றுக்கு ஒரு விலை பேசி வாங்கிவிடுவான். அப்படி இல்லையென்றால் இதைப் போன்ற சாமான்களோ போத்தல்களோ கவனிப்பாரற்று வீட்டு முற்றங்களில் கிடந்தால். யாரையும் ` கேட்காமல் அவற்றைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு போய்விடுவான்.

சுனேத்திரா வருகிறாள் என்று தெரிந்தால் ரங்கசாமி எப்படியோ அவள் முகத்தில் படாமல் தவிர்த்துக் கொள்வான். எனக்கு இது நன்றாகப் புரிந்துவிட்டது. இருந்தாலும் ரங்கசாமிக்கும் எங்கள் காணிக்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி கிழட்டு பெமியானுடன் பேச்சுக் கொடுத்து சா்டைமாடையாக அறிந்து கொண்டாள். ஒரு நாள் சுனேத்திராவுக்குக் கோபம் வந்துவிட்டது. " இப்போ பாக்கப் போனா இந்த தோட்டத்தில இருந்து அந்தத் தமிழன் தான் பெரிய நன்மை பெறுறான். அந்த அளவு கூட எங்களுக்கு பிரயோஜனம் கெடையாது " என்றாள்.

புதிதாக நட்ட மரவள்ளிக் கன்றுகளுக்கு மண் போட்டுக் கொண்டிருந்த நான் தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தேன்.

" என்ன சொல்றே?"

"என்ன சொல்றேனா? இதோ இங்கேருந்த சாரணை. பொன்னங்காணி கீரை எல்லாம் போன சனிக்கிழக்கிழமை தானே பறிச்சோம். இந்த ரெண்டு மூணு நாள்ள திரும்ப தளிர்த்திருக்குமின்னு தான் நான் இங்க வந்தேங்க. ரங்கா ஆஞ்சுகிட்டு போயிட்டான்னு சொல்றாங்களே" அவள் கோபத்தோடு வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

"ஆமா தானா வளந்த கீரைதானே " நான் அப்படிச் சொன்னாலும் அவனுடைய செய்கையை நான் கூட விரும்பவில்லை.

" .நல்லாயிருக்கே. தானா வளர்ந்ததின்னா நாங்க பறிக்கக்கூடாதோ?" சுனேத்திரா என்னை முறைத்துப் பார்த்தபடி சொன்னாள்.

" நான் என்ன சொல்ல வந்தேன்னா அதனால தான் ரங்கசாமி அத பறிச்சிக்கிட்டு போயிருக்கான். யாராச்சும் வளத்த மரஞ்செடின்னா ரங்கசாமி கைவைக்கவே மாட்டான். நாங்க ஒன்னும் சொல்ல மாட்டோமின்னு

நெனச்சானோ என்னமோ?"

" நாங்க நெனக்கிறதை தெரிஞ்சுகிறதுக்கு அவனுக்கு என்ன ஞானக் கண்ணா இருக்கு? மத்தது அவன் நாங்க இல்லாத நேரம் இங்க எதுக்கு வர்றான். உங்க வெளையாட்டுகள் இப்போ எல்லை மீறிடிச்சு. அதனால தான் இதெல்லாம்" நான் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு அவளிடம் வந்தேன்.

" சுனேத்திரா!" சத்தம் போடாதே. நாங்க தூரத்தில இருக்கிறதால மனுஷன் பறிச்சுகிட்டு போறான் போல இருக்கு. சும்மா விட்டாலும் முத்திப் போகாதா என்ன?

நான் இப்படிச் சொன்னாலும் என் மனம் என்னவோ அமைதியின்றித் தத்தளித்தது. முதல் நாள் பிடிகளாகக் கட்டப்பட்டு அவனுடைய கடை அட்டாளையில் வைக்கப்பட்டிருந்து. இந்தக் கீரையாகத் தான் இருக்கவேண்டும். போய்ப் பார்த்ததும் என் மனம் துணுக்குற்றது.

" இப்படி ஏன் செய்தான்னு நான் கேக்கிறேன்"

" நீங்க கேக்க வேணாங்க. இப்போ போறவழியில நானே கேக்கிறேன். " இதப்பத்தியெல்லாம் பேச வேணாம். இந்தமாதிரி நடந்து கொண்டாலும் ரங்கசாமியால எங்களுக்கு எவ்வளவு உதவிங்கிறது உனக்குத் தெரியாது சுனேத்ரா."

"நாங்கள் வீட்டுக்குப் போனதும் சுனேத்திரா இந்த விபரமெல்லாவற்றையும் தகப்பனாரிடம் சொல்லியிருக்க வேண்டும். முகம் கழுவிக் கொண்டு நான் வீட்டுக்குள் நுளையும் போது அவள் பேசியதில் பாதிதான் எனக்குக் கேட்டது.

" பாக்க வைக்க ஆள் இல்லாதபோது எல்லாம் இப்படித்தான் நடக்கும். தன்னால வளர்ர பயிராயிருந்தாலும் வீணா விரயமா போயிடுதே. அத்திவாரமும் போட்டாச்சு. இனி சீக்கிரமா சுவர்களை எழுப்பவேண்டியது தான். பலகை எல்லாங் கூட தயாரா இருக்கு.

சுனேந்திராவின் வீட்டில் வெட்டி அரிந்த மரப்பலகைகள் குவிந்து கிடந்தன. அதில் கொஞ்சம் கேட்டு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு இதுவரை தோன்றவேயில்லை. கிராமத்து வீட்டிலிருந்து மரப்பலகைகளை எடுப்பது எப்படி என்று வழி தேடிக் கொண்டிருந்த எனக்கு அவர் சொன்னதை நம்பமுடியவில்லை. அவர் எனக்கு மரமா தரப்போகிறார்.

" இப்பவே வீட்டைக் கட்டிடனும் அப்படியில்லேன்னா அந்தத் தமிழன் இருக்கிற மண்ணையும் தின்னு தீத்துடுவான். அவன் புல்லை மட்டும் தான் தின்னாம விட்டு வைப்பான். எங்கள விட அவனுக்கு கீரை வகைகளைப் பத்தி நெறைய ஞானமிருக்கு."

"அவன் தமிழனென்கிறது என்னமோ உண்மைதான். ஆனா அவனுக்கு இப்போ தமிழ் பாஷையே ஞாபகமில்லை" அப்பா சொன்னார். "அவன் தெலபுவவுக்கு வந்து இருபத்தஞ்சு வருஷத்துக்கு மேல இருக்குமின்னு நெனைக்கிறேன். அதுக்குக் கொறைச்சலா இருக்க வழியில்ல."

"அவ்வளவு காலம் அவன் இங்கே இருந்தது எனக்குத் தெரியாது" தவழ்ந்து வந்த குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக் கொஞ்சியபடி நான் சொன்னேன். அவனுக்கு இப்போ மழலை கொஞ்சும் பருவம். கழுத்தைக் கட்டிக்கொண்டு முகம் முழுவதும் எச்சிலால் அபிஷகம் செய்தான்.

"எனக்கு சரியா நெனவில்லை" அப்பா சொன்னார். கிராமசபை ஆரம்பிச்ச காலத்தில இங்கே இருந்த தமிழ் சுகாதார உத்தியோகத்தர் ஒருத்தர் தெருக்கூட்ட இவன இங்கே கொண்ணாந்து விட்டார். அந்தக் காலத்தில அவன " ரங்கா" ன்னு தான் கூப்பிடுவோம். அதுமட்டும் ஞாபகமிருக்கு"

" அந்த நாள்ளயிருந்தே அவன் இதே இடத்தில தான் இருக்கானா?" அது எனக்கு சரியா நெனவில்ல. அஞ்சாறு வருஷம் அவன் இந்தப் பக்கமே தலைகாட்டல்ல. அதுக்கப்புறம் ஒரு பொண்ணையுங் கூட்டிக்கிட்டு இந்த வயசில ஒரு குழந்தையோட வந்தான். இந்த ஆஸ்பத்திரி இருக்கே அதுக்கு எதிரில மெழுகுச் சீலையால கூடாரம் அடிச்சு அதில தான் இருந்தான்" அப்பா குழந்தையைச் சுட்டிக் காட்டியபடி சொன்னார். " அம்பத்தியொன்பதாம் ஆண்டு கலவரம் நடந்திச்சே அப்பகூட அவன் இங்கே இருந்தான்னுதான் நெனைக்கிறேன். இப்போ அவன் இருக்கிற இடத்துக்கு வந்து சுமார் பதினைஞ்சு வருஷம் இருக்கும்.

"எனக்குத் தெரிஞ்ச வரையில சாப்பாட்டுச் சமாச்சாரம் எல்லாம் எங்கள மாதிரித்தான் "

"அந்த மனுஷன் தமிழ் பேசவே மாட்டானா?" சுனேத்திரா நான் இருந்த பக்கம் திரும்பிக் கேட்டாள்.

"என்னோடயா?"

"உங்களுக்கு தமிழ் பேச வருமா என்ன?"

" அப்படின்னா தமிழ்ல பேசுவானான்னு எங்ககிட்ட ஏன் கேட்டே? ஒரு பாஷை தெரியாதுன்னா எப்படி அந்த பாஷையில பேசறது?"

"அப்பப்பா உங்களுக்கு இப்படி கோவம் வருதே" கதிரைக்குக் கீழே நுளைய முயற்சி பண்ணிக் கொண்டிருந்த குழந்தையை தடுத்தபடி அவள் சொன்னாள். " நான் கேட்டது அப்படி என்ன உங்களுக்குத் தப்பாப் போச்சா?"

"அந்தப் பறத் தமிழனப் பத்தி எதுக்கு கௌறிகௌறி ஆராஞ்சு கிட்டிருக்கே"

"நானா இப்ப அப்பாகிட்ட அவனோட வம்சாவளி குலம் கோத்திரம் எல்லாம் கேட்டேன்?"

அப்பாவிடம் இந்தமாதிரி விஷயங்களைத் தெரிந்து கொண்டபடியால் தான் சுனேத்திரா ரங்கசாமியை ரொம்ப இளக்காரமா நினைத்தாளோ ! சுனேத்திராவின் அப்பாவை ரங்கசாமிக்கும் நினைவிருக்கலாம். அவரைக் கண்டால் ரங்கசாமி எலியைப் போல ஓடி பதுங்கிவிடுவான்.

அத்திவாரம் போட்டு முடிந்ததும் கடனுக்காக விண்ணப்பித்திருந்த பணம் கிடைக்கும் வரை கொஞ்சம் மரம் தேடிக் கொள்ளலாம் என்றிருந்தேன். அப்பா தானாகவே முன்வந்து மரம் தருவதற்கு இணங்கியதால் வீட்டுச் சுவர்களை எழுப்புவதென்று நானும் சுனேத்திராவும் முடிவு செய்தோம். சுவர் எழுப்பும் வேலை பார்த்துக் கொண்டிருக்க கடகடவென்று முன்னேறியது. யார் யாரிடமாவது கைமாற்றாகப் பணம் வாங்கி எங்களுடைய சேமிப்பு முழுவதையும் போட்டு கூரையை எட்டும் வரை சுவரை எழுப்பி விடுவதென்று நாங்கள் தீர்மானித்தோம். அதற்குள் கடன் தொகை கிடைத்துவிடும். அதைக் கொண்டு கூரை வேலையோடு மற்ற வேலைகளையும் முடித்து விடலாம். அப்பா சுறுசுறுப்பானவர். ஆனால் அதை அவர் வெளியே காட்டிக் கொள்வதில்லை. சுவர் எழுப்பத் தொடங்கியது தான் தாமதம் ஓடியாடி வேலைகளை மும்மரமாகக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். வெட்டி அரிந்து வைத்திருந்த பலகைகளில் கதவு நிலைகள், கதவுகள், ஜன்னல்கள் எல்லாம் செய்வித்ததோடு வேலையாட்களின் கூலியையும் அவரே கொடுத்துவிட்டார். அப்பாவின் உதவி கிடைத்ததால் கடன் தொகை கைக்கு வந்ததும் கூரை வேயும் வேலைக்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. மரப்பலகைகளைக் கூரைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளும் வேலையும் சீக்கிரமாகவே முடிந்துவிட்டது. எங்களுடைய புதுவீட்டுக் கூரைக்கு ஓடு வேயும் பொழுது ரங்கசாமியும் வந்து பார்த்துக்கொண்டு நின்றான். கூரைவேயும் வேலை முடியும் வரை மழை

ஓயவில்லை. அது அகாலத்தில் பெய்த மழை. கூரையில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் நன்றாக நனைந்து விட்டார்கள். அவர்களுக்கு ஓடுகளை எடுத்துக் கொடுக்கவும், மரப்படலையிலிருந்து ஓடுகளை எடுத்து வரவும் ஆட்கள் போதவில்லை. வேய்வதற்கு இன்னும் மிஞ்சியிருந்தது ஒரு சிறு பகுதிதான். ஆகையினால் மேலே இருந்தவர்கள் விரைவாக வேலை செய்யலானார்கள். சுனேத்திரா தேநீர் தயாரித்தாள்.

" எங்கே ரங்கசாமி?" மாயமா மறஞ்சுட்டானே" அவள் சிரித்தாள். "எங்களுக்கு உதவி செய்யனுமோன்னு மனுஷன் பயந்துட்டான் போல இருக்கு"

"அம்மா ரங்சாமிகிட்டயிருந்து இப்படி ஒரு ஒதவி கெடைக்குமின்னு நீங்க எதிர்பாத்திருந்தா அது தவறுங்க" ஒரு கூலியாள் சொன்னான் அவனுக்கு தரகு வேல மட்டுந்தான் முடியும் ஒடம்ப வளைக்க மாட்டானுங்க கள்ளப் பய மவன்"

ஒட்டுக் கூரையிலிருந்து வீட்டுக்குள்ளே இறங்கி கடைசி ஒட்டைப் பொருத்தி முடித்த பாஸ் " மொதலாளிமாரு ஒடம்பவருத்தி என்னைக்குங்க வேல செஞ்சாங்க " என்றான். வேலையை முடித்து ஒரு கூலியாள் கூரையிலிருந்து ஓடிவரும் மழைத்தண்ணீரில் தலையைப் பிடித்தான். மற்றவர்கள் தேநீர் குடித்தார்கள்.

"சரியாப்போய்ச்சு ! ரங்கனுக்கு மொதலாளிங்கிற அந்தஸ்து எங்கேருந்து வந்தது?" கூரையிலிருந்து விழும் தண்ணீரை கையில் ஏந்தி முகம் கழுவிக் கொண்டிருந்த வயதான ஒரு பாஸ் கேட்டார். " முதலாளின்னு யாராச்சும் தன்னைய சொன்னா அவனுக்கு ரொம்பப் பிடிக்கும் எங்களுக்குத் தெரியாதா அவனோட மொதலாளித் தனம் ? ஏன் ஒங்களுக்கெல்லாந் தெரியாதா என்ன?"

" இல்லீங்க நான் கேள்விப்பட்டதே இல்லீங்க " கையாள் சொன்னான். குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த வயசான கூலிக்காரன் சுனேத்திரா நீட்டிய சூடான தேநீர் கிளாசை இரண்டு கைகளாலும் வாங்கியபடி " மொதலாளின்னு சொன்னா ரங்கசாமிக்கு ரொம்பப் பிடிக்கும்." என்றான்.

"நாங்க மொதலாளின்னு சொன்னா ஒரு போத்தலுக்கு அஞ்சு சதம் அதிகமா கெடைக்கும்".

"சரிதான் அப்ப நீ அவன மொதலாளின்னு தான் கூப்பிடுவியோ?"

"வெயாபாரம் செய்றவங்கள மொதலாளின்று சொன்னா என்ன? அப்படி தானே எல்லாரும் சொல்றாங்க."

"அது என்னவோ அதிகவெல கெடைக்கனுமின்னு தான் நீ அவன அப்படி சொல்றே போல இருக்கு" இது ஒரு இளம் வேலையாளின் குரல்.

" ரொம்ப சரி நான் அப்படி சொல்றதால எனக்கு என்ன நட்டமா வந்திடுச்சு. பெருமையா நடந்துகிட்டு பதினைந்து இருவது சதம் நட்டப்பட எனக்கொன்னும் வருத்தமில்ல "

"உங்கள மாதிரி மனுஷங்க இருக்கிறப்போ ரங்கன் மாதிரி ஆளுங்க எப்படி ஐயா மொதலாளி ஆகாம இருக்கலாம் ? " சுனேத்திரா கடைக் கண்ணால் என்னைப் பார்த்தாள். அவளுடைய இதழ்க் கோடியில் புன்னகை மலர்ந்தது.

" தெரியுது தானே இவங்க தொடக்கத்தில தெருக் கூட்டவும் கக்கூசு கழுவவுமின்னுதான் வருவாங்க ஆனா கடசிலே மொதலாளி ஆயிடுவாங்க."

"அதில என்ன பிழை? " உடைந்து போன ஒட்டுத் துண்டுகளை அப்புறப்படுத்திப் பெருக்கிக் கொண்டிருந்த நான் சொன்னேன்.

"அந்த மனுஷன் தெருக்கூட்டுற வேல செஞ்சிருந்தா ரொம்ப கஷ்டப் பட்டுத்தான் பணஞ் சம்பாதிச்சிருப்பான். இலங்கை மாதிரி வறிய நாட்டில ஏழைன்னு சொல்ல வெக்கப்பட வேணுமா என்ன? இப்ப கூட அவங்கிட்ட அப்படி பெரிசாபணம் இருக்குமின்னு சொல்ல முடியாது."

"ஐபாவுக்கு தெரிஞ்சது அவ்வளவு தாங்க". ரங்கசாமியை முதலாளி என்று சொன்ன வேலையாள் தனது பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தான்.

"மனுஷன்கிட்டே நெறையப் பணம் இருக்கு. வரவு மட்டும் தான் செலவு கெடையாது. அவன் என்ன யாருக்காவது சம்பளம் குடுக்கிறானா? சைக்கிள்களைப் பாத்துக் கொள்றதே அவனுக்கு லாபந்தான்."

" ஒரு சைக்கிளுக்கு மாசத்துக்கு அஞ்சு ரூபாய் கூலி. இத வெச்சுத்தான் அவன் கோட்டை கட்டுறானாக்கும்" என்று சொல்லிவிட்டு நான் சிரித்தேன். ஒரு சைக்கிளைப் பார்த்துக் கொள்ள மாசத்துக்குக் கூலி ஐந்து ரூபாய்.

"ஐயாவுக்கு தெரிஞ்ச சங்கதியெல்லாம் இவ்வளவு தான்னு நான் சொன்னதே அதனால தான். சைக்கிள்கள வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கிறது பத்தி ஐயாவுக்கு தெரியாதுங்களா?.

"நெஜமாவா?".

"நெஜமில்லாம பொய்யா சொல்லுவாங்க?"

"ஐயாவுக்கு நம்பிக்கையில்ல" சுனேத்திரா சிரிக்கத் தொடங்கிவிட்டாள்." மனுஷங்க பொல்லாத்தனம் செய்வாங்க எங்கிறத ஐயா ஒத்துக்க மாட்டார். "

"ஆனா எல்லாருக்கும் ரங்கசாமி சைக்கிள் குடுக்க மாட்டான்" ரங்கசாமிக்கு எதிராகப் பேசிய இளைஞன் சொன்னான். மழை மெல்ல மெல்ல அதிகரித்தது. கதவுகளும் ஜன்னல்களும் பொருத்தப்படாததால் வீட்டுக்குள் தூவானம் அடித்தது.

"ஓடு வேஞ்சிருக்கிறது சரியா தப்பாங்கிறத பாத்திடறதுக்கு நல்ல மழை" ஓடு வேய்ந்த பாஸ் கூரையைப் பார்த்தபடி சொன்னான். " நல்ல நேரம் நம்ம வேல முடிஞ்சு போச்சு." புதிதாக வெட்டிய மண்ணைக் கழுவிக்கொண்டு சேற்றையும் சகதியையும் புரட்டிக் கொண்டு தண்ணீர் பாய்ந்தது. காற்று " இஸ் " என்ற இசைச்சலுடன் வீட்டுக்குள் ஓங்கி வீசியது.

" அஞ்சு ரூபா கையில வெச்சாத்தான் ரங்கசாமிகிட்ட இருந்து ஒரு சைக்கிள அஞ்சு மணித்தியாலத்துக்கு வாடகைக்கு எடுக்கலாமுங்க" தோள்களை இரண்டு கைகளாலும் அணைத்துக் கொண்டு ஒரு வாலிபக் கூலியாள் பாசுக்குச் சொன்னான்.

" அப்படின்னா ஒரு வண்டிக்கு ஒரு மணிநேரத்துக்கு ஒரு ரூபாய் எங்கிற கணக்கு " வெட்கத்தை மறந்து நான் சிரிக்க எத்தனித்தேன்.

வயசான ஒரு கூலியாள் காரணத்தை விளக்க முயன்றனான்.

" தவறு ரங்கசாமியோடதில்ல, கூலிக்கு வண்டிய எடுக்கிறவங்க மேல தான் பிழை. அந்த ஜனங்க அவுங்கவுங்க தேவைக்கு காலபிடிச்சு கையப்பிடிச்சு வண்டிய எடுத்துக்கிட்டுப்போயிடாறாங்க. பின்னாடி வந்து என்ன சொல்றாங்க தெரியுமா? ரங்கசாமி சைக்கிள் கூலிக்கு விடறான்னு ஏசறாங்க. அந்த

மனுஷன் ஒரு ரூபா எடுத்தா என்ன தப்பா? வண்டிக்கு ஏதாவது ஆகிப் போச்சின்னா அவன் தானே அதுக்கு ஜவாப்தாரி."

" அது சரி சைக்கிள வெச்சிட்டுப் போற ஐயாமாருங்களுக்கு இது தெரியாதா? " சுனேத்திரா கண்களை உயர்த்திக் கேட்டாள்.

" ஐயையோ கந்தோருக்குப் போற ஐயாமாருக்கு இதயெல்லாம் யாரு சொல்லுவா? இந்த ஐயாமாரு கிட்ட யாராவது இதப்பத்தி சொல்லனும்" ரங்கசாமியை எதிர்த்த இளைஞனின் குரல் தான் இது. " எனக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் கெடைச்சுதுன்னா அதயே தான் நானும் செய்வேன் நாம போய் இந்த ஐயாமாரு கிட்ட ஏதாவது காரியம் பண்ணலாமா? அதுதான் கெடையாது. பின்னால போய் கையில துட்ட வெச்சாத் தான் காரியம் நடக்குமுங்க".

நானும் கந்தோரில் வேலை செய்யும் ஓர் உத்தியோகத்தர் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். ஒரு நாள் ரங்கசாமி என்னுடைய சைக்கிளை நன்றாகத் துடைத்து வைத்திருந்தான். அதை அவன் அன்று வாடகைக்கு விட்டிருக்க வேண்டும் வாடகைக்கு போய்வந்த வண்டியைத்தான் துடைத்துத் துப்பரவு பண்ணியிருக்கிறான் போல இருக்கிறது.

" நான் கூட என்னோட சைக்கிள்கள அவங்கிட்டத்தான் வெச்சிட்டுப் போவேன். " நான் சுனேத்திராவைப் பார்த்து சிரித்தபடி சொன்னேன். " அப்படின்னா அதையும் வாடகைக்கு விடுறானோ என்னமோ?".

அதற்கு வயதான கூலியாள் " சே " சே ரங்கசாமி பழக்கமானவங்களுக்கெல்லாம் அப்படி செய்யிற ஆள் இல்லீங்க. ஐயாவப் பத்தி நல்லது தான் சொல்லுவான். என்னய இங்க அனுப்பி வெச்சது கூட ரங்கசாமி தாங்க. ஐயாவோட வண்டிய வாடகைக்கு விட்டிருந்தா எனக்குத் தெரிஞ்சிருக்குமுங்க. ரங்கசாமி எச்சிக்கையால காக்கா வெரட்ட மாட்டானுங்க. ஆனா பழக்கமானவங்களுக்கு இப்படியெல்லாம் செய்யிறவனில்லீங்க ".

பெமியான் உரத்த குரலில் சிரித்தான். அவன் எதையோ சொல்ல நினைக்கிறான் என்பதை அவனுடைய முகத்தைப் பார்த்துத் தெரிந்த கொண்டேன். மழை ஓய்ந்தது எல்லோரும் தங்கள் இருப்பிடங்களுக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது பெமியானு என்னருகில் வந்து " மனுஷனுக்கு ரங்கசாமியோட கொடுக்கல் வாங்கல் எல்லாம் உண்டுங்க" அவன் சொன்ன விபரங்களைப் பார்த்தால் ரங்கசாமி வட்டிக்குப் பணம் கொடுக்கிறான் போலத் தெரிந்தது. ரொம்பவும் ஏழை ஜனங்களுக்குத் தான் அவன் பணம் கொடுப்பது

வழக்கம். ரங்கசாமி இருநூறு ரூபாய்க்கு மேலே கடனாகக் கொடுத்ததில்லை அவன் அந்தக் கிராமத்து ஆள் மூலமாகத்தான் கடன் கொடுப்பது வழக்கம்.

" ரங்கசாமி போகாத இடங்களுக்கு மனுஷன் போய் போத்தல் பத்திரிகை எல்லாம் சேகரிச்சுக் கொண்ணாந்து கொடுப்பான். அவனுக்குக் கமிஷன்கூட உண்டு" பெமியான் பேச்சைத் தொடர்ந்தான். " ரங்கசாமி கிட்ட பணம் இருக்கிறதென்னவோ உண்மை தாங்க. ரங்கசாமி சாப்பாட்டுக்கும், உடுபுடவைக்கும் அதிகம் செலவு பண்ணிறதில்ல. அவனப்போல நாமளும் செலவு செய்தோமின்னா நம்ம கையிலேயும் பணம் தங்கும். பொதுவா தமிழ் ஜனங்க சாப்பாட்டுக்குச் செலவு பண்ணிறதவிட ரங்கசாமி எவ்வளவோ கொறச்சலாத்தாங்க செலவு செய்றான். இப்படி செலவு செஞ்சா பணம் மிஞ்சிறதில என்னங்க ஆச்சரியம்."

"ரங்கசாமிகிட்ட பணம் இருக்குமின்னு நான் நெனைக்கவேயில்ல."

" ஆளப்பாத்து ஒருத்தன அளந்திட முடியாதுங்க. ஒவ்வொருத்தன் தான் பணக்காரன் இல்லேங்கிறத வெளியே காட்டிக் கொள்ள ஏழை போல வேஷம் போடுவான். ஆனாலும் ரங்கசாமி கிட்ட பணம் உண்டுங்கிற விஷயம் ஜனங்களுக்கு தெரியுமுங்க. யார் யார் கிட்ட எல்லாம் பணம் உண்டுங்கிற விவரத்த யெல்லாம் ஜனங்க மோப்பம் பிடிச்சிடுவாங்க" பெமியானு சிரித்துக் கொண்டு சொன்னான்.

# 5

சல்கம வீடமைப்புத் திட்டத்தின் அத்திவாரக் கல் நாட்டும் வைபவம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஓரிரு வாரங்களுக்கு முன்னரே வர்ண வர்ணப் போஸ்டர்கள் தெலபுவவையும் அதன் சுற்றுப்புறங்களையும் அலங்கரித்தன. உற்சவத்துக்கு அரசாங்க அதிபர் ராஜபவனியில் வரப்போகிறார். தெலபுவ நகரமே கலைக்கப்பட்ட எறும்புப் புற்றுப்போல ஆரவாரித்தது. வியாபாரிகள் தாமாகவே நகரத்தை அலங்கரிக்க முன்வந்தனர். நகர அலங்காரங்களைச் ளசெய்வதற்கு சிலர் கொந்திராத்து எடுத்திருந்தார்கள். அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. புளிய மரத்தடியில் பிரமாண்டமான மேடையொன்று போடப்பட்டது.

நகரத்து வியாபாரிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு மனு தயாரித்து சமர்ப்பிக்கப் போகிறார்கள். விஜித் என்பவர் தான் இதை அரசாங்க அதிபரிடம் கையளிக்கப் போகும் அதிஷ்டசாலி. அவசியம் ஏற்படும் பட்சத்தில் அரசாங்க அதிபரோடு ஆங்கிலத்தில் பேசக்கூடிய திறமைகூட இவருக்குண்டு. ஆஜானுபாகுவான உடற்கட்டு உடையவர். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. மனுவை இவர் கையளிக்கப்போவதை ஆளும் கட்சியைச் சேர்ந்த வியாபாரிகள் இருவர் விரும்பவில்லை. ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்கள் வேறு எவரும் இல்லாததால் அவர்களிருவரின் விருப்பு வெறுப்புக்கு அங்கே இடமே இல்லாமல் போயிற்று.

நகர் எங்கும் மஞ்சள் நிறக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. பாடசாலை மாணவ மாணவிகள் கையில் கொடிகளுடன் தெருவின் இரு புறத்திலும் குழுமியிருந்தனர். ஐஸ்கிரீம் விற்பவர்கள் வண்டியைத் தள்ளித் கொண்டு பிள்ளைகளைப் பார்த்துப் பார்த்து மணியை அடித்தார்கள்.

நாட்டியக் கலைஞர்களும், வெவ்வேறு சங்கங்களின் அங்கத்தவர்களும் உச்சி வெய்யிலின் உஷ்ணம் தாங்காமல் களைத்துப் போய் அரசாங்க அதிபர் இதோ வந்துவிடுவார். இப்போ வந்துவிடுவார் என்று கழுத்தை உயர்த்தி ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றனர். சங்கீத வாத்தியக் காரர்கள் தாம் ஏந்திய சங்கீதக் கருவிகளை கீழே இறக்கி வைத்துவிட்டு சற்று

இளைப்பாறினார்கள். ஒலிபெருக்கிகள் மட்டும் காத்துக் கிடப்பதில் களைப்படையாமல் முன்னையதை விட மகிழ்ச்சியோடு பாடின: சந்தோஷமாக வாத்தியக் கச்சேரி நடத்தின.

அரசாங்க அதிபர் வந்தபொழுது மத்தியானத்துக்கு மேல் ஆகிவிட்டது. சுபநேரமும் நெருங்கிக் கொண்டிருந்து. சுபநேரம் தவறிவிடுமோ என்ற சந்தேகத்தில் தெலபுவவில் அவர் அதிகம் தாமதிக்கவில்லை. விஜித்துக்கு ஆங்கிலத்தில பேசுவதற்கு வாய்ப்பும் கிடைக்கவில்லை. அதிகம் எதற்கு மனுவை அரசாங்க அதிபரிடம் கொடுப்பதற்குக்கூட அவரை நெருங்க முடியவில்லை. யாரோ ஒரு உத்தியோகத்தர் தான் மனுவைப் பெற்றுக் கொண்டார். தெலபுவ நகரத்தில் அரசாங்க அதிபர் ஐந்தே ஐந்து நிமிடங்கள் தான் தாங்கினார். வாயுவேகத்தில் ஓடிமறைந்த அந்த ஐந்து நிமிடங்களிலும் அவர் பேசியதெல்லாம் தெலவுவ நகரத்தின் முன்னேற்றம் பற்றித்தான்.

சல்கம வீடமைப்புத் திட்டத்துக்கு பயன்படும் வகையில் தெலபுவவிலிருந்து சல்கமவுக்குச் செல்லும் பாதை விஸ்தரிக்கப்படும். அதன் பிறகு நீர் விநியோகமும் மின்சாரமும் கிடைத்து விடும். முதலில் எல்லோருக்கும் மின்சாரம் கிடைக்கும். தெலபுவவிலிருந்து தலைநகருக்கு நேரடி பஸ்சேவை ஆரம்பிக்கப்படும். அதோடு ஒரு பஸ்தரிப்பிடமும் நிறுவப்படும். ஆஸ்பத்திரியில் மேலும் ஒரு வார்ட்டை சேர்த்துவிடுவார்கள். நகரில் ஒரு சுப்பர் மார்க்கட்டும் உருவாகி விடும். சுருக்கமாகச் சொல்வதானால் சல்கம வீடமைப்புத் திட்டம் பூர்த்தியாகியதும் அதன் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு நகரமாக தெலபுவ முன்னேறிவிடும். ஜனங்கள் சந்தோஷத்தில் தட்டாமாலை சுற்றினார்கள். அவர்கள் நடனமாடாதது ஒன்றுதான் குறை.

அத்திவாரக்கல் நாட்டும் வைபவம் முடிந்த கையோடு நகரத்தில் காணிவிலை நினைத்துப் பார்க்க முடியாத அளவு அதிகரித்தது. இதுவரை அரை ஏக்கர், கால் ஏக்கர் என்று தான் நிலம் விற்பனையாகியது. இப்பொழுது அந்த நிலத்தையெல்லாம் பர்ச் கணக்கில் அளக்கத் தொடங்கிவிட்டார்கள். நிலத்தை வாங்க வருபவர்கள் ஒரு பர்ச்சின் விலையைக் கேட்டதும் ஆச்சரியத்தில் திறந்த வாய் மூடாமல் நிற்பார்கள். நிலத்தை விற்பவர்களிடமிருந்து வரும் பதிலைக் கேட்டபிறகு தான் அவர்கள் சுயநினைவடைவார்கள். நிலங்கள் விற்பனையாகிக் கொண்டிருந்த அதே வேளையில் நடுவர் சங்கங்கள் பல காரியத்தில் இறங்கிவிட்டன. சுப்பர் மார்க்கட்டும், பஸ்தரிப்பு நிலையமும் நீர் மின்சார வசதிகளும் கொண்ட ஒரு நகரத்தில் ஒரு பேர்ச் நிலம் இந்த விலைக்குப் போவது ஒன்றும் புதுமையில்லை.நீர் வழங்கலும் மின்சார விநியோகமும் எல்லாம் பேச்சுவார்த்தைகளோடுசரி. இன்னும் செயல்ப்படத் தொடங்கவில்லை.

இதெல்லாம் நிஜமாகும் காலத்தில் நிலத்தின் விலை இன்னும் அதிகரிக்கலாம்.

தெருக்களை விஸ்தரிப்பதற்காக தனியார் காணிகள் பல சுவீகரிக்கப்பட்டன. இந்தக் காணிகளுக்கெல்லாம் நஷ்டஈடு கொடுக்கமாட்டார்கள் என்ற வதந்தி உலாவியது. சுற்றுப்புறத்திலிருக்கும் நகரங்களில் இதுபோல பாதைகள் விஸ்தரிக்கப்பட்ட பொழுது நட்ட ஈடு எதுவும் கொடுக்கப்படவில்லை. நிலத்தின் விலையைக் குறைவாக மதிப்பிட்டுத் தான் நட்ட ஈடு கொடுப்பார்கள். சல்கம வீடமைப்புத் திட்ட நிலம் ஒரு பணக்காரனுக்குச் சொந்தமானது. அவன் ஒரு அரசாங்க விரோதி. இந்த நிலத்தை குறைந்த தொகை நட்ட ஈடு கொடுத்து தான் அரசாங்கம் சுவீகரித்தது. இது மட்டுமா மின்சாரக் கம்பங்கள் நடுவதற்காக தெருவின் இரண்டு பக்கங்களிலும் இருந்த மரங்கள் எல்லாம் வெட்டி விழுத்தப்பட்டன.

அரசாங்க அதிபரின் வாக்குறுதிகளைக் கேட்டு கைதட்டி ஆரவாரித்த பாவனையார்களும் வியாபாரிகளும் சுப்பர் மார்க்கட் நிறுவுவதைப் பற்றிய யோசனையை முன் வைத்ததும் ஈடாடிப்போனார்கள். சுப்பர் மார்க்கெட்டுகளில் சாமான்கள் எல்லாம் யானை விலை குதிரை விலை. பொருள்களின் விலை அதிகரிக்க அதிகரிக்க வாழ்க்கைச் செலவும் ஏறிக் கொண்டே போகும். சுப்பர் மார்க்கெட்டுகளில், இடம் எடுப்பதற்கு நிறைய வாடகை கொடுக்கவேண்டும். பெரிய பணக்காரர்களுக்குத் தான் இது கட்டுப்படியாகும். இதனால் வெளி வியாபாரிகள் தெலபுவவுக்கு வரத் தொடங்கினார்கள். சுப்பர் மார்க்கெட்டைச் சுற்றியிருந்த கடைகளையெல்லாம் தகர்த்துவிடுவார்கள். அப்படி தகர்க்கப்படாத கடை ஏதாவது எஞ்சியிருந்தால் கூட நகரத்தின் படாடோபத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் வியாபாரம் நொடித்து தானாகவே இருந்த இடம் தெரியாமல் மறைந்திடும்.

சுப்பர் மார்க்கட் கட்டப்பட்டதும், தான் குத்தகைக்கு விட்டிருந்த கடை அறைகளின் வாடகை கூடுமா? குறையுமா? என்று விஜித்துக்கு ஒரே யோசனையாக இருந்தது. அவனுக்கு இதைப்பற்றி நிச்சயமாக எதுவுமே சொல்ல முடியவில்லை. தெலபுவ நகரத்தின் வாழ்க்கைப் போக்குகள் எதிர்காலத்திட்டங்களுக்கு மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்தன. ஏதாவது மாற்றம் நிகழும் வரை கடையில் வாடகையை அதிகரிப்பதென விஜித் நினைத்தான். ஒன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் உயர்த்தினால் பழைய வாடகையை அப்படியே அம்மாவிடம் கொடுத்து விடலாம். பழைய வாடகையில், தான் வெட்டிக் கொண்ட வீதத்தை இப்பொழுது குறைக்காமல் அப்படியே அம்மாவிடம் கொடுத்தால் ஏதோ கொஞ்சம் அதிகரிப்பு உண்டு என்று அம்மாவும் நம்பி விடுவாள். இதில் மேலதிகமாகக் கிடைக்கும் தொகை தன்னுடைய புத்தி

சாதுரியத்தால் தான் ஈட்டிக்கொண்ட இலாபம் என்பது அவன் நினைப்பு. ரங்கசாமி செலுத்தி வந்த வாடகைத் தொகை ரொம்பவும் அல்பம். அதையும் கூட்டி விட வேண்டியது தான். ஐந்தாறு வருடங்களாக எழுபத்தைந்து ரூபாய் வாடகை செலுத்தி வந்த ரங்கசாமி இந்தச் செய்தியைக் கேட்டு அலமந்து போனான்.

" சின்னையா !" ரங்கசாமி கெஞ்சினான்.

" என்னோட பொழைப்பு எப்படிங்க நடக்குது. சின்னையாவோட அப்பா பெரியய்யாவோட புண்ணியத்தில நா இப்படி இருக்கேங்க. எழுபத்தஞ்சு ரூவாயே குடுக்க முடியாதவன் எப்படிங்க எறனூறு ரூபா குடுக்கிறது?"

" இதோ பார் ரங்கசாமி நீ எத்தனையோ வருஷங்களா ஒரு தம்படி கூட குடுக்காம இருந்திருக்கே ." விஜித் பல்லை நெருடியபடி சொன்னான். " அது எங்கப்பா காலத்து சமாச்சாரம் . அவரு பாவ புண்ணியம் பாத்து தானம் தர்மம் செஞ்சுகிட்டிருந்தார். அது அந்தக் காலமையா, நீர் எழுபத்தஞ்சு ரூவா வாடகைப் பணம் தர்ற சமயம் மத்தவங்க நானூறு ஐநூறுன்னு தந்தாங்க ஒய். உமக்கு இப்போ எறநூறு ரூபா கட்டமுடியலேங்கிறீர் ".

விஜித் கடைக்குப் பக்கத்தில் தெரு ஓரமாக நின்று பேசிக் கொண்டிருந்தான். செவ்விளநீர் நிறத்தில் டீ சேர்ட்டும் அதை உள்ளே விட்டு கட்டைக் காற்சட்டையும் அணிந்திருந்தான். அதோடு கட்டுமஸ்தான தேகமும் இருந்ததால் விளையாட்டு வீரனைப்போலத் தோற்றமளித்தான். தொடைகளின் தசைகள் இறுக இரண்டு கால்களையும் பக்கவாட்டாக அகட்டி நேராகப் பார்த்தபடி பேசினான்.

"இந்த மாதிரி கொறஞ்ச வாடகை கொடுக்கிறவங்க யாருமே இல்ல".

"பெரியய்யா எனக்கு இருக்க எடம் கொடுத்தாரு. ஆனா அஞ்சு சதம் கூட எடுக்கல்ல அவர் தெய்வம் சாமி" நீரு என்ன செஞ்சீர்? இருக்கிறது பத்தாதுன்னு பிஸ்னஸ் வேற செய்யிறீர். ஆனா கூலி தர மட்டும் முடியல்ல. முன்னாடி அப்பா அவங்க இருந்த காலம் போலயா இப்போ நாடு இருக்கு. இப்ப மட்டும் அப்பா இருந்தாருன்னா நிச்சயமா கூலி வாங்கியிருப்பார். ரங்கசாமி நீர் நெறைய சம்பாதிக்கிறீர் வட்டிக்குப் பணம் கூட குடுக்கிறீராமே?".

"யாரோ சின்னையாக்கு பொய் சொல்லியிருக்காங்க". ஆச்சரியமும் பயமும் கலந்த பார்வையோடு ரங்கசாமி சொன்னான்.

" வட்டிக்கு விட ஏங்கிட்ட எது பணம்? பொண்டாட்டிக்கும், புள்ளைக்கும் சாப்பாடு போடவே கஷ்டமாயிருக்கு. இந்த லட்சணத்தில பணம் எங்கேயிருந்து வரும். இப்போ போத்தல் பிஸ்னசும் நட்டமாயிடுச்சுங்க. எங்க பாத்தாலும் பிளாஸ்டிக் போத்தல் தான் பாவிக்கிறாங்க. பேப்பர் வெயாபாரமும் நட்டத்தில் தான் போகுதுங்க. சிலிசிலி பைகள் வந்தாலும் வந்திச்சு பேப்பர் பிஸ்னஸ் அதோகதி ஆயிடுச்சாங்க".

"பொய் சொல்லி என்னய வெருட்டலாமின்னு பாக்காதே ரங்கசாமி. உமக்கு இங்கே இருக்க வேணுமின்னா இருநூறு ரூவா தாரும். இல்லாட்டிப் போனா கடய ஒழிச்சுத் தாரும். மூணு மாச அவகாசம் தர்றேன். சரியா சொல்றதாயிருந்தா நீர் மத்தவங்கள காட்டிலும் அதிக வாடக கொடுக்கணும் ஓய். இங்கே நீர் பிஸ்னஸ் மாத்திரமா செய்யிறீர்? முழு குடும்பமே இங்க தானே தங்கியிருக்கு."

ரங்கசாமியிடமிருந்து பதில் கிடைக்கும் வரை விஜித் அங்கே நிற்கவில்லை. நேரே பார்த்தபடி புறப்பட்டுப் போய்விட்டான். ஒவ்வொரு நாளும் கதிர் முற்றாதே அது முற்றியதும் அறுத்துவிட வேண்டியதுதான்.

விஜித்தின் நண்பன் ஒருவன் குதிரைப் பந்தய நிலையம் நடத்தி வந்தான். விஜித் மாலை நேரங்களை அங்கே தான் கழித்தான். அந்த நிலையம் விஜித்துக்குச் சொந்தமானது என்றும் அந்த நண்பன் விஜித்தின் சார்பில் அங்கே காரியங்களை நடத்திக் கொண்டு இருந்தான் என்றும் ஜனங்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். அங்கே சுவர்களில் பத்திரிகைகள் தொங்க விடப்பட்டிருக்கும் நடுவில் இரண்டு மேசை போட்டிருப்பார்கள். அங்கே வருபவர் நேராகப் போய் ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு மேசை அண்டை போய் உட்காருவார். முழங்கையை மேசையில் ஊன்றிக் கொண்டு மேல் நோக்கியிருக்கும் உள்ளங் கையிலோ. ஒரு பேப்பர் துண்டிலோ எதையோ குறித்துக் கொள்வார். அங்கே வந்ததும் துண்டை நீட்டி கொடுக்கல் வாங்கல்களை முடித்துக் கொண்டு வெளியேறுபவர் யாராவது இருப்பார்களானால் அது வயதுபோன ஒரு தொழிலாளியாகத் தான் இருக்கும். விஜித் அங்கே வரும் நேரத்தைக் கவனித்து வைத்து பெரியம்மாவைப் போய்ச் சந்திக்கும்படி ஜுவானிஸ் ரங்கசாமிக்கு யோசனை சொன்னான்.

ஜுவானிஸ் தன்னுடைய வெற்றிலைக் கடகத்தையும் மிஞ்சிய வியாபாரப் பொருள்கள் உட்பட சப்புச்சவரு எல்லாவற்றையும் வழக்கம் போலப் பாதுகாப்புக்காக ரங்கசாமியின் கடை அட்டாளையின் கீழே தள்ளியபடி " நீர் போம் போய் பெரியம்மாவுக்குச் சொல்லும்".

" பெரியம்மாவுக்கு ஒன்னும் தெரியாது. இதெல்லாம் விஜித் ஜயாவோட வெளையாட்டுகள். ஒரு கை வெற்றிலையும் எடுத்துக் கிட்டு போய் கூலி ரொம்ப குடுக்க வழியில்லேன்னு கும்பிட்டுச் சொல்லும் ஓய்."

" சே ! சே ! அது சரியில்ல, சரியேயில்ல" ரங்கசாமி தலையை இரண்டு பக்கமும் அசைத்தான். பெரியம்மா தாய். விஜித் ஐயா அவரோட மகன் இவங்களுக்கு நான் என்ன சொல்றது. அது சரியில்ல.

" அப்படீன்னா எதுக்கு மூக்கால அழுகிறீர் ஓய். அவங்க கேக்கிற பணத்த குடுத்துப்புட்டு சும்மா இருக்க வேண்டியது தானே. "

ஜுவானிசுக்கும் ரொம்ப சீக்கிரத்தில் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அவன் வியாபார சாமான்களை கடைத் திண்ணையில் தான் வைத்திருக்கிறான். தெருவை விஸ்தரித்தால் இந்தத் திண்ணையையும் இடித்து விடுவார்கள். இப்படி நடக்காவிட்டாலும் கூட விஜித் இந்தத் திண்ணைக்கும் கணக்குப் போட்டு வாடகை வசூல் பண்ணுவதென்று யோசித்துக் கொண்டிருந்தான். இருந்தாலும் புதிய நிலவரங்களைப் பற்றி பெரியம்மாவுக்குத் தெரியவரச் சந்தர்ப்பமில்லை. அவர்களோடு நல்ல பழக்கமிருந்தால் அழுது மன்றாடி நீதி நியாயத்தைக் கேட்கலாம். அப்படிக் கேட்கப் போனால் விஜித்தின் வண்டவாளம் எல்லாம் அம்பலமாகிவிடும். பிறகு என்ன விஜித் பாம்புபோல் சீறிப்பாய்ந்து பழிக்குப் பழி வாங்கிவிடுவான். இந்தப் பிரச்சினை எல்லோருக்கும் பொதுவான ஒன்று. இதற்குப் போய் தான் ஏன் பலியாக வேணும். ரங்கசாமியைப் பொறுத்த வரை இது தனிப்பட்ட விஷயம். அவன் இருக்கும் இடம் மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு சிறிய கடை. இதற்கு அவன் கொடுக்கும் வாடகையோ மிகவும் குறைவு:

பெரியம்மாவைச் சந்திக்கமுன் மீண்டும் ஒரு தடவை விஜித்திடம் மன்றாடிப் பார்ப்பதென்று ரங்கசாமி தீர்மானித்தான். அன்று அஷ்டமி தினம் ரங்கசாமி வெற்றிலை புகையிலை சகிதம் பங்களாவுக்குப் போனான். அன்று பெரியம்மா விரதம் அனுஷ்டிக்கும் நாள். மறுநாள் காலை வரை அவள் வரமாட்டாள். இந்த மாதிரி நாட்களில் விஜித் தன்னுடைய சகாக்களோடு கேளிக்கையில் பொழுதைப் போக்குவான். நகரவாசிகள் பலருக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியும். இந்த நாட்களில் அவர்கள் அருந்தும் மதுவுக்கும் அதற்குப் பக்க வாத்தியமாக உள்ள உணவுப் பதார்த்தங்களுக்கும் அவர்களின் சந்திப்புக்கும் எல்லாமாக சேர்த்து "போய ஸ்பெஷல்" என்று நாமகரணம் சூட்டியிருந்தார்கள். விஜித் மத்தியானச் சாப்பாட்டுக்குப் முன் சற்று ஒய்வெடுப்பான். இந்த நேரத்தைப் பயன்படுத்தி விஜித்தை சந்திப்பதற்கு ரங்கசாமி எண்ணினான்.

ரங்கசாமி விஜித்தை சந்திக்கப் போனபொழுது அவன் சாய்வு நாற்காலியில் நீட்டிப்படுத்திருந்தான். ரங்கசாமி வீட்டுக்குள் நுளைவதைக் கண்டான். ரங்கசாமி தான் கொண்டுவந்த வெற்றிலையை அவனுக்குக் கொடுக்க நீட்டினான். " அதை அங்கே வைத்துவிட்டு உட்காரு " என்று முக்காலி இருந்த திசையைக் கண்களால் சமிக்ஞை செய்தான். வெற்றிலையை விஜித்திடம் கொடுத்து விட்டு கால்களைப் பிடித்து வணக்க வேண்டும் என்று எண்ணியிருந்த ரங்கசாமியின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தவிடுபொடியாயிற்று. இருந்தும் அவன் வெற்றிலையை முக்காலிக்கு மேல் வைக்கவில்லை. சந்தர்ப்பம் வாய்த்தால் கொடுக்கலாம் என்று எண்ணி வெற்றிலையை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

" நீ விரும்பினா காணிய விலைக்கு வாங்கிக்கலாம். என்ன சொல்றே?" விஜித் திடீரென்னு இப்படிக் கேட்டு விட்டான். திடீர் கேள்வியாக இருந்தாலும் விஜித் ரொம்ப நாளாகவே கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த கேள்விதான். தன் பெரிய தமையனாரின் செல்வாக்கைப் பயன்படுத்தி நகரமைப்பு அலுவலகத்துக்குப் போய் திட்ட வரைபடத்தை எடுத்து துருவித் துருவி ஆராய்ந்தான். அது தெலபுவ நகரத்தின் திட்ட வரைபடம் மட்டுமல்ல தீவிலுள்ள நகரங்கள் அனைத்தினதும் நகர நிர்மாணத் திட்ட வரைபடமாகும். " நகரம் புனர்நிர்மாணம் செய்யப்படுறபோது தெருக்கள விஸ்தரிக்கிறது அவசியந்தானா? " என்று ஒரு உத்தியோகத்தர் சிரித்தபடி கேட்டார். நஷ்ட ஈடு கொடுப்பது கொடுக்காதது பற்றி சட்ட ரீதியான நியதிகள் எல்லாம் உண்டு. அதற்கு மேலாக உத்தியோகத்தர்களைக் கேட்டால் அவர்களுக்கு என்ன தெரியப் போகிறது.

"சின்னையா எங்கிட்ட பணம் இருக்கான்னு பாக்கிறார் போல இருக்கு?" ரங்கசாமிக்கு சந்தேகமாக இருந்தது. அவன் மௌனமானான். ரங்கசாமியிடமிருந்து பதில் கிடைக்கிற வரை கண்களை மூடியபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த விஜித் கண்களைத் திறந்தான். ரங்கசாமியின் வாய் உதடுகள் எல்லாம் வரண்டு விட்டன. முகத்தை நிமிர்த்தி கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

" இத காசுக்கு எடுத்துக்கன்னுதானே ஒனக்கு நான் சொன்னேன் " விஜித் தலையைத் திருப்பாமலே பேசினான்.

" சின்னையா வேடிக்கைக்குச் சொல்றீங்களா? " – ரங்கசாமிக்கு வார்த்தை தடுமாறியது. " காணி வாங்க எனக்கு ஏதுங்க பணம் ? சாப்பாட்டுக்கே ததிகிணதோம் போடறேன்."

"அதப்பத்தி எனக்கா சொல்றே ரங்கசாமி" கையை அசைத்து ரங்கசாமியை மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்தான்

"உம்மகிட்ட பணம் இல்லாட்டா பாத்துக்கிட்டு இரும். நான் வேற யாருக்காச்சும் வித்துப்புடுவேன்."

"அநியாயம் சின்னையா விக்க வேணாமுங்க பாதைபோட ஒடச்சாங்கன்னா ஐயாக்கு நஷ்டஈடு கொடுப்பாங்க" விஜித்துடைய மனதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத ரங்கசாமி இப்படிச் சொன்னான். விஜித்தின் இதழோரத்தில் புன்சிரிப்பு மலர்ந்தது. அவன் ரங்கசாமி இருந்த பக்கமாகத் திரும்பினான்.

"காணி பாதைக்குப் போயிடுமான்னு உமக்குத் தெரியனும் அப்படித் தானே. நீர் அதப்பத்தி விசாரிச்சும் இருக்கிறீர் இல்லையா? ரங்கசாமி நெலம் வேற யாருக்காச்சும் சொந்தமாயிருந்தா பாதைக்கு எடுத்தாலும் நஷ்ட ஈடு கொடுப்பாங்க. நெலம் என்னோடதாயிருந்தா நஷ்ட ஈடு கொடுப்பாங்க என்கிறது நிச்சயமில்ல. பாதைக்கு எடுத்தாலும் எடுக்காட்டாலும் நா அத நெஜமா விக்கத்தான் போறேன். நான் என்ன கேக்கிறேன்னா நீர் அத வாங்குவீரான்னு தான்."

அந்த நிலத்தை யாராவது வாங்குகிறார்கள் என்றால் அவர் நிச்சயமாகப் பெரிய சூதாட்டப் பிரியராகத் தான் இருக்க வேண்டும். அவரும் கொள்ளை மலிவுக்குத் தான் கேட்பார்.

"எனக்கு எங்கே ஐயா பணம்?"

"திரும்பத் திரும்ப ஒரே பல்லவியத் தான் பாடுறீர். அப்படின்னா நீர் வேற இடம் பாரும் ஓய் அவ்வளவு தான் நான் சொல்லலாம்."

பணம் சம்பாதிப்பது என்பது முன்னர் போல கஷ்டமான காரியமல்ல என்பதை ரங்கசாமி நன்றாக அறிந்து வைத்திருந்தான். முன்னர் சதக்கணக்கில் சம்பாதிப்பதே சங்கடமாக இருந்தது. அந்தக் காலத்தில் பாவித்து விட்டுக் கழித்துப் போட்ட சாமான்கள் ஏராளமாக இருந்தன. ஆனால் அவற்றை விற்றுக் காசாக்குவதென்பது குதிரைக் கொம்பாக இருந்தது. இன்று நிலைமை அப்படி இல்லை. தூரப்போடும் எந்த ஒரு பொருளுக்கும் விலை உண்டு. சிரட்டை, தேங்காய்ப்பூ, பழைய உடைகள், வெட்டிய துணிகள், பாவித்த கடதாசி எல்லாவற்றையும் விற்றுக் காசாக்கி விடலாம்.

எது எப்படி இருந்தாலும் வாழ்க்கையை ஓட்டுவது அப்படி ஒன்றும் இலகுவான விஷயமல்ல. அன்று ஒரு வேளை சாப்பாட்டுக்கு யாரிடமும் கையேந்தி நிற்கும் அவசியமே இருக்கவில்லை. மரத்தடியில் விழுந்து கிடக்கும் பலாக் கொட்டைகளை பொறுக்கி கொண்டாலே போதும். இதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. அந்தக் காலம் மலையேறிவிட்டது. இன்று எந்தப் பொருளாயிருந்தாலும் பணம் கொடுத்தால் தான் கிடைக்கும். இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக எதுவுமே இருக்கவில்லை.

எல்லாப் பொருளுக்கும் விலை குறிக்கக் கூடியதாக இருந்ததென்னவோ உண்மை தான். ஆனால் முன்னர்போல கையில் பணம் தங்குவதில்லையே என்று ரங்கசாமி மிகவும் துக்கப்பட்டான். இரண்டு தினங்களில் நூறு ரூபாய் சம்பாதிப்பது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. ஆனால் ஒவ்வொரு மாசமும் நூறு ரூபாய் சேமிப்பதென்பது பகீரதப் பிரயத்னம் தான்.

இந்தக் காலத்தில் மனிதர்கள் பணம் சேர்ப்பதற்குக் கஷ்டப்பட்டு உழைப்பதில்லை. அவர்கள் பணத்தை செலவு செய்யத் தான் பாடாய்ப் படுகிறார்கள் என்று ரங்கசாமி எண்ணினான். அவர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் அவனுக்கு இப்படித் தான் எண்ணத் தோன்றியது. ரயிலிருந்து இறங்கும் ஐயாமார் முன்னால் இருக்கும் மரக்கறிக் கடையிலிருந்து இரண்டு ஷொப்பிங் பைகள் நிறையச் சாமான்கள் வாங்கிச் செல்வார்கள். ரங்கசாமிக்கு இதைப் பார்க்க ரொம்ப வியப்பாக இருக்கும். தினசரி இப்படி வாங்கிச் செல்லும் மரக்கறி. மீன், இறைச்சி எல்லாவற்றையும் தின்று தீர்ப்பதற்கு அவர்களுக்கு நேரம்காலம் எப்படி வாய்க்கிறதோ என்று அவன் சிந்திப்பான்.

தான் மிகவும் சிக்கனமாக நடந்து கொள்வதால் தான் தன்னிடம் ஐந்தோ பத்தோ மிஞ்சுகிறது என்று நினைக்கும் போது ரங்கசாமியின் மனதில் துக்கமும் அதே நேரம் ஆறுதலும் ஏற்படும். பெருமூச்சு விட்டுக் கொள்வான். தான் சேமித்து வைத்திருக்கும் பணத்தை நினைத்தால் அவனுக்கு ஆறுதலாக இருக்கும். அந்தப் பணத்தை சேமிப்பதற்கு தான் அனுபவித்த கஷ்டங்களையும் கபடத் தனமான செய்கைகளையும் ஞாபகப்படுத்திக் கொண்டால் அவனுக்குத் துக்கம் பொத்துக் கொண்டு வரும். நகரத்தின் மத்தியில் வசித்தாலும் விறகுக்கு என்று அவன் ஒரு தம்படி கூடச் செலவு செய்தது கிடையாது. குடித்துக் காலியான இளநீர்க் கோம்பைகளை எடுத்து சிறு சிறு துண்டுகளாகக் கீறிக்காயப்போடுவான். நகரம் அசுத்தமாவதைத் தடுப்பதற்கு கிராம சபையினர் நடவடிக்கை எடுத்திருந்தார்கள். இதனால் ஜுலானிஸ் தினமும் வெட்டிப் போடும் இளநீர்க் கோம்பைகள் எல்லாம் அவனுடைய தள்ளு வண்டியின் கீழ்த் தட்டில் ஏற்றப்பட்டு ரங்கசாமியிடம் வந்துவிடும். ரங்கசாமி காயவைத்த இந்த

இளநீர்க் கோம்பைகளை விறகாக உபயோகிப்பான். அது மட்டுமல்ல நகரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஒரு மர ஆலை இருந்தது. அங்கே அரிந்து போடும் மரத்தூள்களையும் கேட்டு வாங்கி வருவான். இதை அவன் தானாகவே தலையில் வைத்து சுமந்து வருவது வழக்கம் அதுவும் அவனுடைய விறகுத் தேவையைப் பூர்த்தி செய்துவிடும். ரங்கசாமிக்கு விறகுச் செலவு இல்லாமல் போனதற்கு இது தான் காரணம்.

ஷொப்பிங் பைகளும், ப்ளாஸ்டிக் போத்தல்களும் புழக்கத்துக்கு வரத்தொடங்கின. இதனால் தன்னுடைய பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்று ரங்கசாமி பயந்தான். வெற்றுச் சீமந்துப் பைகளை காசுக்கு வாங்கி கவர்கள் செய்து மொத்தமாக விற்பதில் அவனுக்கு நல்ல இலாபம் கிடைத்தது. பகல் பொழுதில் வீட்டில் இருந்த லட்சுமியும் இதற்கு உதவி செய்ததால் இந்தத் தொழில் வெற்றிகரமாக நடந்தது. ரங்கசாமி சிரட்டைக் கரி தயாரிப்பதையும் பெரிய அளவில் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தான். ப்ளாஸ்டிக் போத்தல்களும், ஷொப்பிங் பைகளும் வந்ததால் ஏற்பட்ட நஷ்டத்தைசிரட்டைக் கரி வியாபாரம் ஈடு செய்தது என்று தான் சொல்ல வேண்டும். சிரட்டைக்கரி நல்ல விலை போனது. அத்துடன் இது நல்ல இலாபம் கொடுக்கும் தொழிலாகவும் இருந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால் கிராமத்தில் சுற்றித் திரியும் பொழுது அங்கங்கே வீசிக்கிடக்கும் சிரட்டைகளைப் பொறுக்கிச் சேர்த்தாலே ஒரு சாக்குத் தேறும். சில சமயங்களில் யாராவது ஒரு கிராமத்துப் பெண் அவனுக்கு அரைச்சாக்குச் சிரட்டை சேகரித்துக் கொடுப்பாள். ரங்கசாமிக்குத் தெரிந்த ஐயாமார் சிலர் நகரத்தில் இருந்தார்கள். அவர்களின் வீடுகளிலிருந்தும் விஜித்தின் வீட்டிலிருந்தும் ரங்கசாமிக்கு சிரட்டை கிடைக்கும். இதையெல்லாம் எரித்தால் வாரத்துக்கு அரைச் சாக்குச் சிரட்டைக் கரி தேறும். இப்படியே இரண்டு மூன்று மாதங்கள் எரித்து சேர்த்த சிரட்டைக் கரியை ரங்கசாமி மொத்தமாக விலை பேசி விற்றுவிடுவான். இதிலிருந்து கிடைக்கும் வருமானம் இருக்கிறதே அது போத்தல் பேப்பர் விற்றால் கூட வராது.

சாப்பாட்டு விஷயத்தில் எவ்வளவு சிக்கனமாக செலவழித்தானோ அதே அளவு சிக்கனத்தை உடுபுடவை விஷயத்திலும் ரங்கசாமி கடைப்பிடித்தான். ஆனால் சாவித்திரியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கொஞ்சம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டி இருந்தது. லட்சுமி வீட்டை விட்டு வெளியே போவது துர்லபம். வருஷத்துக்கு ஒரு " வாயில்' சேலை " இரண்டு சோளி இவ்வளவு தான் ரங்கசாமியிடமிருந்து அவளுக்கும் கிடைக்கும் உடுபுடவைகள். இதற்கு மேலே அவளுக்கு எதாவது வாங்க வேண்டியிருந்தால் காலைப் பலகாரம் விற்ற காசில் சமாளித்துக் கொள்வாள். தனது பழைய துணி உடுக்க முடியாதபடி கந்தலாகிப் போனால் மட்டும் ரங்கசாமி அதற்குப் பதிலாகப் புதுத் துணி

வாங்குவான். இப்படியாக வாங்கும் துணிக்கும் சாப்பாட்டுக்கும் போக ரங்கசாமிக்கென்று வேறு செலவு ஏதாவது உண்டு என்றால் அது சுருட்டு வாங்கச் செலவழிக்கும் பணம் மட்டும் தான். கடந்த பதினெட்டு வருஷங்களாக ஐந்து சதம் என்றாலும் வீண் செலவு செய்யாமல் கிட்டத் தட்ட இருபதாயிரம் ரூபாய் சேமித்து வைத்திருந்தான். இதை நினைக்கும் பொழுது அவனுக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும். கூடவே கர்வமும் தலைகாட்டும்.

" ஒன்று சொல்றேன் ரங்கசாமி நீர் இத வாங்கினாலும், விட்டாலும் எனக்கு பரவாயில்ல. ஆனா உம்மட முடிவ சீக்கிரமா சொல்லும்" விஜித் ரங்கசாமியின் சிந்தனையைக் கலைத்தான். " நீர் இங்கே இவ்வளவு காலமும் இருந்ததால தான் இத நான் உமக்கு சொன்னேன். அது என் கடம இல்லையா? இல்லாட்டா நான் சொல்லாமலே வித்திருக்கலாம்."

ரயிலில் வரும் சில பெண்மணிகள் வாடகைக்கு வீடு தேடி அலைவது ரங்கசாமிக்கு ஞாபகம் வந்தது. ரொம்பவும் கஷ்டப்பட்டு தேடிக் கொள்ளும் வீட்டுக்குக் கூட வாடகை அதிகம் என்று குறைப்பட்டுக் கொள்வார்கள்.

ரங்கசாமியின் கடை உள்ள நிரையில் மிகப் பெரிய கடை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. நகர அமைப்புத் திணைக்களத்தின் திட்ட வரைப் படத்தைப் பற்றி எதுவுமே தெரியாத நகரவாசிகள் தெரு விஸ்தரிப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டாலும் அந்தக் கடைக்கு ஏதும் சேதம் வராது என்று உறுதியாகப் பேசிக் கொண்டார்கள். அந்தக் கடை உடைக்கப்படாவிட்டால் மற்றக் கடைகளும் உடைபட வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நிலத்தை வாங்கினால் பெரிய மோசடியில் மாட்டிக் கொள்ள நேரிடலாம் என்று ரங்கசாமி நினைத்தான். ரங்கசாமியின் மனதை அறிந்தவன் போல விஜித் பேசினான்.

" இது சூதாட்டம் போல ஒரு விஷயம்." அங்கே நிலவிய மயான அமைதியை விஜித் குலைத்தான்.

" தெருவுக்கு நெலத்த எடுத்தாலும் எனக்கு நஷ்டம். எடுக்காம போனாலும் நஷ்டந்தான். ஆனா உம்ம பொறுத்த வரைக்கும் தெருவுக்கு எடுத்தாலும், எடுக்காம போனாலும் லாபம் லாபந்தான். காணிய வாங்காம விட்டீரோ உமக்கு நஷ்டமே தான். என்ன சொல்றீர் பந்தயம் வெச்சுப் பாக்கலாமா? விஜித் கைதேர்ந்த சூதாட்டக்காரனைப்போல துப்பாக்கியை நீட்டும் பாணியில் ஆள்க் காட்டி விரலைக் காட்டினான்.

ரங்கசாமிக்கு பத்துப் பதினைந்துவருஷம் தான் வாழ்ந்த நிலத்தையொட்டி திடீரென்று ஒரு பேராசை பிடித்துக் கொண்டது. அதை அவன் யாருக்குமே விட்டுக் கொடுக்கமாட்டான். அது அவனால் முடியாத காரியம். அந்த நிலம்அவனுடைய உடலின் ஒரு பாகம் போல. அதை கைவிட்டு வேறிடம்போவதைப் பற்றி அவன் இதுவரை சிந்தித்துப் பார்த்ததில்லை. அவன் வீட்டை மட்டுமா விட்டுவிட்டுப் போகப் போகிறான்? அது தான் இல்லை. அவனுடைய வியாபார ஸ்தலத்தையும் அல்லவா விடப் போகிறான். காணி வாங்கும் எண்ணத்தை அவன் மனதில் விதைத்தவர் பிரபலமான நிலச் சொந்தக்காரராச்சே.

விஜித் விற்கப் போவது அந்த நிலத்தை மட்டுமல்ல. பலருடைய கவனத்தைக் கவர்ந்த வேறுசில காணித் துண்டுகளையும் விற்பதற்குத் திட்டம் போட்டிருந்தான். இவற்றை விற்று வரும் பணத்தை வைத்து வீடமைப்புத் திட்டத்தில் விற்பனைக்கு வரும் கடைகளில் இரண்டு மூன்றை வாங்கிவிடலாம் என்றும் எண்ணியிருந்தான்.

" நீர் அதை வாங்குவதாயிருந்தால் ஒரு நிபந்தனை உண்டு" அச்சத்தோடு நின்ற ரங்கசாமிக்கு முன்னால் பிஸ்டல் போல ஆள்காட்டி விரலை மீண்டும் ஆட்டினான். விஜித் நிபந்தனையைச் சொல்வதற்கு முன்னால் வீட்டுக்குள் போய் " போய ஸ்பெஷல் " போத்தல் ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். விளிம்பு வரை நிரம்பிய கிளாசை கையிலெடுத்து ஒரே மூச்சில் காலி செய்தான் ரங்கசாமி. பின்னர் உதடுகளையும் வாயையும் துடைத்துக் கொண்டான். அதோடு கொடுக்கல் வாங்கல் எல்லாம் முடிந்துவிட்டதென்பது அவன் எண்ணம்.

" ரங்கசாமிக்குப் புரியுதா? ஒரு கண்டிஷன் இருக்கு. " போத்தலின் மூடியை இறுக்கமாக மூடி நாற்காலிக்கடியில் வைத்துவிட்டு விஜித் நாற்காலியில் உட்கார்ந்தான்.

" நிலத்த நீ வாங்கின செய்தி யாருக்கும் தெரியக்கூடாது. புரியுதா? கண்டிஷனை மீறினா என்ன நடக்கும் தெரியுமா?" இதை விட பாரதூரமான நிபந்தனை போட்டு விடுவார் என்றுரங்கசாமி எதிர்பார்த்திருந்தான். தானாகவே கேட்டுவிட வேண்டும் என்று இருந்த விஷயம் விஜித் ஐயாவிடமிருந்து கிடைத்ததும் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பகைவர்களை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது தான். ஆனாலும் இதைப்போன்ற சந்தோஷமான செய்தியை கிணற்றில் போட்ட கல்லைப்போல மறைத்து வைப்பதும் கஷ்டம்.

" புரியுதா யாருக்கும் இதப்பத்தி சொல்லாதே ".

" பெண்டாட்டிக்குமா?".

" ஆமா கொஞ்சநாள் போற வரைக்கும் பொண்டாட்டிகிட்டயும் மறைக்கிறதுதான் நல்லது."

இதனால் தனக்கு எந்தத் தீங்கும் வராது. வரவும் வழியில்லை என்று நினைத்த ரங்கசாமி இந்த நிபந்தனைக்கு இணங்கினான்.

வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் வாயுவேகத்தில் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த வீடுகளின் கட்டுமானம் விசித்திரமானது செங்கல்லுக்கு மேல் செங்கல் வைத்துக் கட்டும் முறை இங்கே கிடையாது. பகுதி பகுதியாகச்செய்து கொண்டு வந்து பொருத்தினார்கள்.

வெவ்வேறு விலைகளில் வெவ்வேறு பாணியில் அமைந்த வீடுகள் பற்றிய விபரங்களுடன் கூடிய வர்ணப் படங்கள் பத்திரிகை விளம்பரங்களில் தினம் தோறும் பிரசுரிக்கப்பட்ட வண்ணமாக இருந்தன.

அத்திவாரக் கல் நடும் வைபவத்துக்கென செப்பனிடப்பட்டிருந்த பாதைகள் தகர்ந்து போயிருந்தன. இரும்பு ரோலர்கள் தெலபுவவைத் தாண்டி போய்க் கொண்டும் வந்துகொண்டுமிருந்தன. மேலும் கீழுமாக போய்க் கொண்டிருந்தன. முன்புறத்தில் தீயணைக்கும் வண்டிகளில் உள்ளது போன்ற சிவப்பு விளக்குகள் சுழன்று எரிய ரயில் வண்டியை போல நீளமான வாகனங்கள் சல்கமவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. தெருவின் இரண்டு பக்கமும் தூசிப்படலத்தில் மூழ்கியிருந்தது. சல்கம வீடமைப்புத் திட்டத்துக்கு அத்திவாரக் கல் நட்டு இரண்டு மூன்று மாதங்கள் கழிந்ததும் தெலபுவ நகரத்துக்கு மின்சாரம் விநியோகமும் வந்துவிட்டது. தெலபுவ நகரத்தில் ஆஸ்பத்திரிக்குத்தான் முதன் முதலாக மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. பெரிய தெருவுக்கு அந்தப் புறமாக இருக்கும் ஆஸ்பத்திரியின் சுற்றாடல் மாலை வேளையில் இந்திர லோகம் போல ஜகஜ்ஜோதியாய் பிரகாசிக்கத் தொடங்கியது. முன்னரெல்லாம் சாயந்தரமாகிவிட்டால் போதும் ஜெனரேட்டர் ' கடகட ' என்று சத்தம் போட ஆரம்பித்து விடும். இப்பொழுது ஜெனரேட்டரை நிறுத்தி விட்டார்கள். அதனால் சுற்றுப்புறத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. ஆஸ்பத்திரிக்குத் திரும்பும் பாதையில் ஒரு கருங்காலி மரம் நின்றது. இப்பொழுது அந்த மரத்துக்கருகில் பிரகாசமான விளக்குத் தாங்கிய மின்சாரக் கம்பம் ஒன்று காணப்பட்டது. இந்த விளக்கினால் பாதையின் இந்தப்புறத்து நிலப்பரப்பு ஒளிமயமாகக்

காட்சியளித்தது. மின்சார விநியோக வேலைகளுக்குத் தடையாக இருந்த அந்தப் பிரமாண்டமான புளியமரத்தை தறித்து விட்டார்கள். இந்த மரத்தை வெட்டும் வேலையைப் பாரமெடுத்த கொந்திராத்துக்காரர்கள் மரம் இருந்த சுவடே தெரியாமல் போகிற மாதிரி அதை வேரோடு பெயர்த்து அகற்றிவிட்டார்கள். இந்த மரத்தைச் சாய்ப்பதற்கு சல்கமவிலிருந்து ஒரு இரும்பு யந்திரம் கொண்டு வரப்பட்டது. இரும்பு யந்திரம் மரத்தைப் புரட்டும் அதிசயத்தைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டமாகக் கூடினார்கள். வெட்டப்பட்ட புளியமரக் குத்திகளை அப்புறப்படுத்துவதற்கு ஒரு வாரமாயிற்று. புளியமரம் இருந்த இடத்தில் இப்பொழுது வேலைக்கு லாயக்கற்றுப்போன ஒரு பழைய புல்டோசர் இயந்திரம் கைவிடப்பட்ட நிலையில் கிடந்தது.

பகல்வேளையில் சூடேறியிருக்கும் தார் ரோட்டு இரவில் சற்றுக் கணகணப்பை உண்டாக்கும். எங்கெல்லாமோ இருந்து இளைஞர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். இப்பொழுதெல்லாம் சல்கம தொழிலாளர்களுக்கு மூச்சுவிட நேரமில்லை. அவ்வளவு வேலை. அதனால் முன்னர் போல தெலபுவ பக்கம் அடிக்கடி வருவதில்லை, அங்கே வரும் இளைஞர் கூட்டம் தார் ரோட்டின் ஓரமாக உட்கார்ந்திருக்கும். சிலர் யந்திரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள். இப்பொழுது சம்பாஷணைக்கு பல விஷயங்கள் இருந்தன. தினம் தினம் ஏதாவது ஒரு புது நிகழ்ச்சி நடந்து கொண்டே இருந்தது. நகரம் முன்னேறிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களுக்கு பரம திருப்தி. இப்பொழுது அவர்களின் பழக்க வழக்கங்களில் கூட மாற்றங்களைக் காணக் கூடியதாயிருந்தது. பலர் பெண்பிள்ளைகளைப் போல தலைமயிரை நீளமாக வளர்த்திருந்தார்கள். அவர்களுடைய கழுத்தையும், கைகளையும் , விரல்களையும், விதவிதமான மாலைகளும், காப்புகளும், மோதிரங்களும் அலங்கரித்தன. சில இளைஞர்கள் இரண்டு கைகளிலும் நகம் வளர்த்திருந்தார்கள்.

அவர்களில் அநேகமானோர் பகல் பொழுதில் வீடமைப்புத் திட்டத்தில் வேலை செய்பவர்கள். அவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடத்தைத் 'திட்டம்' என்று அழைப்பது வழக்கம் " திட்டத்து ஐயாமார்" திட்டத்து வீடுகள்" " திட்டத்துக்கு வந்தேன்" இவை அவர்கள் பேச்சில் அடிபடும் வார்த்தைகள். புதுப் புதுச் சொற்கள் கூட அவர்கள் வாயிலிருந்து வரத் தொடங்கின. "திட்டத்தில் வேலை பார்ப்பது ஒரே குஷி " ஐஸ் அடிச்ச யாரோ பிடிபட்டுட்டாங்க " " வேலை அரோஹராவாச்சு". இப்படியெல்லாம் வார்த்தைகளை கலந்து பேசினார்கள்.

# 6

புகையிரதம் 'ஹோஸ்' என்று மூச்சு விட்டபடி மாகல மலையிலிருந்து இறங்கஆரம்பித்தது. நானும் எழுந்து இறங்க ஆயத்தமானேன். நாங்கள் புது வீட்டுக்குக் குடிவந்து விட்டோம். இப்பொழுதெல்லாம் நான் ஸ்டேஷன் இருக்கிற பக்கமாக இறங்குவதில்லை. மறுபக்கம் வழியாக இறங்குவது தான் எனக்கு வசதி. சிலர் தான் அந்த வழியை பயன்படுத்துவார்கள். சுநேத்திராவுக்கு இடமாற்றமும் கிடைத்துவிட்டது. இப்பொழுது அவள் தெலபுலவிலுள்ள கிராம சபை காரியாலயத்தில் வேலை செய்கிறாள். மாலையில் வேலை முடிந்து வரும் வழியில் மீன்,மரக்கறி எல்லாம் வாங்கி வருவாள். இதனால் வாரக்கடைசியில் தான் நான் பட்டினப் பக்கம் போக வேண்டிய அவசியம் ஏற்படும்.

ரங்கசாமி குறுக்குப் பாதையருகே நின்றுகொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் சிரித்தான். என்னை எதிர்பார்த்துத் தான் அங்கே நிற்கிறான் போலிருக்கிறது. இப்பொழுதெல்லாம் ரங்கசாமியை சந்திப்பது ரொம்பவும் அபூர்வம். ஓய்வு நேரம் நிறைய இருந்ததால் ஏதாவது பரீட்சைக்குத் தயார் பண்ணும்படி என்னுடைய மனைவி என்னை வற்புறுத்தினாள். நானும் அதற்கு இணங்கினேன். படிக்கவும் தொடங்கி விட்டேன்.

"பேசிக் கொண்டே போகலாம் வா." அவனுடைய பார்வையின் அர்த்தத்தையும் புரிந்து கொண்டு நான் சொன்னேன்.

"ஐயா கொஞ்சம் ஸ்டேஷனுக்கு வர்றீங்களா?" ரங்கசாமியின் குரலில் இரக்கம் தொனித்தது. ஏதோ ரகசியம் பேசப் போகிறான் போலிருக்கிறது. முன்னர் போல நாங்கள் இப்போ சந்திப்பதில்லை. ஆனால் பிரச்சினை ஏதாவது இருந்தால் உடனே அவனுக்கு என்னுடைய ஞாபகம் வந்துவிடும்.

மின்சார விளக்குகளால் புகையிரத நிலையம் ஒளிமயமாகக் காட்சியளித்தது. புகையிரத மேடைகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. அங்கே இரண்டு வாங்குகள் அவை நிலத்தோடு பொருத்தப்பட்டிருந்தன. ஒரு வாங்கின் கீழ் ஒரு நாய் படுத்திருந்தது. எங்களைக் கண்டதும் அது வேண்டா வெறுப்போடு எழுந்து சென்றது. ஓரத்திலிருந்த வாங்குக்குச் சற்றுத் தள்ளிப்

படுத்திருந்த நாயைத் துரத்திவிட்டு செய்தித் தாளை வாங்கின் மீது விரித்து உட்கார்ந்தேன்.

"ரங்கசாமி நீயும் உட்கார்"

"இல்லீங்க அது மரியாத இல்லீங்க".

"நீ சரியான ஆளையா. இது பொது இடந்தானே. ரங்கசாமிய நிக்க வெச்சு நான் மட்டும் உக்காந்திருக்கிறது சரியில்ல. எனக்கு ரொம்ப களைப்பா இருக்கு ரங்கசாமி நிக்க முடியல்ல."

"பரவாயில்ல நீங்க உக்காருங்க ஐயா."

"சொன்னா கேளு ரங்கசாமி உட்காரு". நான் சற்றுக் கோபமாக பேசினேன். ரயில் பாதையைத் தாண்டி டௌனுக்குப் போய்க் கொண்டிருந்த ஒருவர் திரும்பி எங்களைப் பார்த்தார்.

ரங்கசாமி கையிலிருந்த துவாயை, நிலத்தில் விரித்து புகையிரத மேடைக்குக் கீழே கால்கள் தொங்கும் படியாக உட்கார்ந்தான். அக்கம் பக்கம் யாரும் இல்லை. ரயில் நிலையத்தை தங்குமிடமாக்கிக் கொண்ட பிச்சைக் காரன் இரவு வெகுநேரமாகி பின்னர் தான் வருவான். இரவு ரயில் அங்கே தங்கிச் செல்வதில்லை.

எத்தனையோ ஆலாபனைகளுக்கு பின்னர் தான் விஜித் நிலத்தை விற்கப் போகும் கதையை ரங்கசாமி வெளியிட்டான். தன்னுடைய வாழ்கையின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றிச் சோடனைகள் சகிதம் விஸ்தரிக்கத் தொடங்கினான். அவன் அந்த நிலம் வாங்குவதை நான் எதிர்ப்பேன் என்று எண்ணியிருக்கலாம். நான் சந்தேகத்துடன் பார்த்திருந்தேன்.

" பணம் கொஞ்சம் சேர்ந்த பிற்பாடு சொந்தக்காரங்களோட போய் தங்கப் போறதா ரங்கசாமி ஒரு நாள் சொன்னியே ஞாபகமிருக்கா?"

" சொன்னேனா?" அவன் திரும்பக் கேட்டான். " சொல்லியிருப்பேனுங்க ஐயா, ".

" இப்ப என்ன ஆச்சு? எண்ணத்த மாத்திகிட்டியா?"

சாவித்திரியோட மச்சினன் புள்ளைங்க அங்கே வரச் சொல்லி தெனமும்

கடதாசி போடுறாங்க ஐயா. சாவித்திரிக்கு அங்க போக புடிக்காதுங்க. நம்ம வீட்டுக்காரிக்கும் அவங்கள கண்ணில காட்டக் கூடாதுங்க. எனக்கும் அப்படித் தாங்க போக மனசில்ல."

" ஏன்? ".

" எனக்கு ஏன்னு தெரியல்ல எனக்கு புடிக்கல்ல.

அவ்வளவு தான் " ரங்கசாமியின் சொந்தக்காரர்கள் எங்கேயோ ஒரு தோட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதாவது உறவினர்களைப் பார்க்க வருவார்கள். ஒரு தடவை தன்னுடைய சொந்தக்காரர்கள் கொண்டு வந்ததாகச் சொல்லி ரங்கசாமி உயர்ந்த ரக தேயிலையில் ஒரு பக்கெட் எங்களுக்கும் கொடுத்திருந்தான். சுனேத்திரா அதுக்கு உடனே பணம் கொடுத்துவிட்டாள்.

"ஏன் லயத்தில் இருக்கிறதாலயா?"

"லயமா? ஐயா அதெல்லாம் பாத்ததில்லீங்க நம்ம வீடுகளக் காட்டியும் அதுக ஒசத்திங்க. லைட் இருக்கு. அறைகள் ரெண்டு. வீட்டுக்கு முன்னாலேயும், பின்னாலேயும் மரக்கறி வளக்க, ஏதாச்சும் பிராணிங்க வெச்சுக்க இடமிருக்குங்க. முந்தி மாதிரி இல்லீங்க. சௌம்ய மூர்த்தி ஐயா எல்லாம் கொடுத்திருக்காங்க."

" அப்படின்னா?"

எனக்கு இந்த எடத்த விட்டுட்டு போக முடியாதுங்க. எங்கட பேச்சு வித்தியாசமுங்க. சமயம் வித்தியாசம். பிள்ளைகள வளத்த விதம் வேற, நம்ப ஆளுங்க என்னய " சிங்களவன் " என்றாங்க ஐயா". கடைசி வாக்கியத்தை சொல்லும் பொழுது ரங்கசாமி மனம் தளர்ந்து போய் என்னைப் பார்த்தான்.

" நம்ம சாவித்திரி இருக்காளே பெத்தா அவளுக்கு தோட்ட ஸ்கூல்ல ஒரு வேல தேடிக்கலாமுன்னு சொல்றாங்க. பெத்தாவுக்கு போகப் பிடிக்கல. அவளுக்கு நாங்க பேசற அளவு கூட தமிழ் வராதுங்க."

எனக்கு அப்பொழுதுதான் முதல் முதலாக சாவித்திரி மற்றத் தமிழ் யுவதிகளைவிட வித்தியாசமானவள் என்பது நினைவுக்கு வந்தது. அவள் நெற்றியில் பொட்டு வைத்து நான் பார்த்ததேயில்லை. அது மட்டுமா அவள்

நீளப்பாவாடை உடுப்பது கிடையாது. அவள் வாயில் தமிழ் வருவதும் துர்லபம்.

ரங்கசாமியோ சாவித்திரியோ வீட்டில் இல்லாத பொழுது லட்சுமி கதவிடுக்கு வழியாக எட்டிப் பார்ப்பாள். அவளை எனக்கு நல்ல பழக்கம். அவள் எப்பொழுதும் நெற்றியில் பொட்டும் உச்சி வகிட்டில் செந்தூரமும் இட்டுக் கொண்டிருப்பாள். அவளுடைய உயர்ந்த நீண்ட நாசியும், சற்றே விரிந்திருக்கும் வாயும் அவள் உயர் குலப் பெண் என்பதைப் பறை சாற்றின. வெளியே வெய்யில் படாமல் வீட்டுக்குள்ளேயே இருப்பதால் அவள் மேனி நிறம் குன்றாமல் இருந்தது. லட்சுமியின் நிறமும் ரங்கசாமியின் நிறமும் மூன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் கலந்து ஒரு நிறம் தான் சாவித்திரிக்கு வாய்ந்திருந்தது. என் கண்களில் தெரிந்த கேள்விக் குறியைக் கண்டதும் ரங்கசாமி மௌனமானான்.

" என்னை என் சொந்தக்காரங்க வளக்கலீங்க" அவன் முணுமுணுத்தான். நான் சிங்களவங்களோட தான் இருந்தேனுங்க. அவங்க எனக்கு சாப்பாடு போட்டாங்க. தெருவில நின்ன எனக்கு பொண்ணக் கட்டிவச்சு குடித்தனம் பண்ணவும் எல்லாஞ் செஞ்சாங்க. நானும் அவங்க கூட தான் இருந்தேங்க".

" ரங்கசாமியப் பத்தி சொந்தக்காரங்க கவனிக்கலையா?"

" கிராம சபையில அஞ்சு வருஷம் இருந்தேங்க. சனடரிபோர்ட் தொற சொன்ன தெல்லாத்தையும் சின்ன வயசில பொறுத்துக்கிட்டேங்க. ஆனா பெரியவனானதும் தொறயோட பேச்சையெல்லாம் யாருங்க பொறுப்பாங்க. கொச்சி மொளகா மாதிரி ரொம்ப காரமுங்க. நான் கடி நாய் மாதிரி நீயும் ஆச்சு ஒன்னோட வேலயுமாச்சுன்னு தூக்கிப்போட்டுட்டு வந்திட்டேங்க.

"சரி அப்போ ரங்கசாமியோட பொண்டாட்டி?"
அவள் இந்தியப் பெண்ணா என்று எனக்கு நீண்டநாட்களாகவே ஒரு சந்தேகம் அதைப் போக்கிக் கொள்ள எண்ணினேன்.

"அவ யாழ்ப்பாணப் பொண்ணுங்க. எங்களக் காட்டிலும் ரொம்ப நல்லவங்க. அவ ஏழைக் குடும்பத்தில பொறந்துட்டா. இல்லாட்டி எனக்குக் கெடைக்கிற பொண்ணா அவ?".

" யாழ்ப்பாண ஆளுங்க இந்தியாக்காரங்கள கலியாணம் பண்ணிக்கிற வழக்கம் இல்லியே. அவங்க ஒருத்தரோட ஒருத்தர் கோவமாச்சே." நான் ஆச்சரியத்தோடு கேட்டேன்.

" ஆமாங்க ஐயா ரொம்பவும் பிச்சக்காரங்களாப் போனா ஜாதி பாக்கிறது யாருங்க. பிச்சைக்காரராயிட்டா ஒண்ணுமே பாக்க மாட்டாங்க. அடுத்த வேள சோறு தான் அவங்களுக்கு முக்கியம். பொண்ணோட தோப்பனாருக்கு வேறகதி கெடைக்கல. எனக்கு பொண்ணு கெடச்சிச்சு. நல்ல மனுஷங்களுக்கு கொடுக்க சீதனம் எங்கே இருக்கு.

" யாழ்ப்பாண மனுஷங்க சீதனம்கேப்பாங்க."

"அது சரி நெலத்தப் பத்தி ஒன்னோட பொண்டாட்டி என்ன சொல்றா ரங்கசாமி?"

"பொண்டாட்டிக்கு இந்த விஷயம் தெரிய வேணாமின்னு விஜித் சொன்னாருங்க. நான் இத இரகசியமாத் தான் ஒங்களுக்கு சொல்ல வந்தேங்க."

நிலம் வாங்கப் போகும் எண்ணமும் அதனால் உண்டாகிய மகிழ்ச்சியும் சேர்ந்து அவனைத் திக்கு முக்காட வைத்தது. இதைத் தான் ஒருவனாக அனுபவிக்க முடியாமல் போகவே என்னைத் தேடி வந்திருக்கிறான் போலிருக்கிறது.

" நெலத்த வாங்கலாமுங்களா? ஐயாகிட்ட கேக்கத் தான் வந்தேனுங்க. பாதய சரிக்கட்டப் போறாங்களாம். அதுக்காக கடைகள ஒடைக்கப் போறதா ஒரு கத அடிபடுதுங்க. சம்சன் ஐயாவோட கடை இருக்கிறதால ஒடைக்கமாட்டாங்கன்னும் சொல்லிக்கிறாங்க. விஜித் ஐயா என்னய வாங்கச் சொல்றாரு. பாதைக்காக ஒடைச்சாங்கன்னா நஷ்ட ஈடு கொடுப்பாங்கன்னு விஜித் ஐயா சொல்றாரு. சரி நஷ்டஈடு கொடுக்கிறாங்கன்னா அவரு எதுக்கு விக்கிறாரு. அவரே நஷ்ட ஈட்டை வாங்கிக்கிட்டு கடைய பாதைக்கு விட்டுக்கிடலாமே?"

" நான் எங்க போறது ? வாங்கலேன்னா எனக்கு இருக்க எடமில்ல. பாதைக்கு எடுத்தாங்கன்னா எனக்கு நஷ்ட ஈடு உண்டாம். ஆனா விஜித் ஐயாவுக்கு அரசாங்கத்தில நஷ்ட ஈடு தரமாட்டாங்களாமே. அவரு எதிர்க்கட்சிக்காரரு. அவருக்கு கொஞ்சம் தான் கெடைக்கும். பாதைக்காக கடைய ஒடச்சாங்கன்னா நான் சல்லிய வாங்கிட்டு எங்கேயாச்சும் போயிடுவேங்க. இல்லாட்டி அங்கேயே இருந்துடுவேன்".

" எனக்குன்னா ஒன்னுமே சொல்ல முடியல்ல. ரங்கசாமி இதில ஏதோ சூது இருக்கும் போல தெரியுது."

ரங்கசாமி தலையை ஆட்டி ஆட்டிச் சிரித்தான். உள்ளங்கையோடு உள்ளங்கையை அழுத்தித் தேய்த்தான்.

"விஜித் ஐயா கூட அப்படித்தான் சொன்னாரு எல்லாம் காலமும் நேரமும் தாங்க. பந்தயம் புடின்னு ஏன் மனம் சொல்லுதுங்க. நெலத்த வாங்காம போனா எனக்கு விமோசனமே இல்லீங்க. நஷ்ட ஈடு தருவாங்களா மாட்டாங்களா? கடைய ஒடைப்பாங்களா இல்லியா ஒன்னுமே தெரியுதில்லீங்க."

" கொஞ்சம் பொறுத்துப் பாத்தா நல்லதில்லையா? " பிரச்சினைக்குள் தலையைப் போட்ட நான் கேட்டேன்.

"நான் வாங்கல்லேன்னு தெரிஞ்சா விஜித் ஐயா வேறுயாருக்காச்சும் வித்திடுவாரு. கொன்ராக்டர் மாருக்குக் கொடுத்திடுவாரு. அரசாங்கத்துக்கிட்டே கொழுத்த தொகை வாங்கிடுவாரு" ரங்கசாமி வழுக்கை விழுந்த தலையைக் தடவியபடி சிந்தனையில் ஆழ்ந்தான். "எல்லாமே சம்பாதிச்ச பணம் தாங்க. காலம் காலமாக சம்பாதிச்ச சல்லி எல்லாத்தையும் போட்டுத்தான் நெலம் வாங்கனும் ."

"எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு ரங்கசாமி. எனக்கு ஒன்னுமே சொல்லத் தோணுதில்ல. என்ன நடக்கப்போகுதுங்கிறது யாருக்குமே தெரியாது?"

"எனக்கு என்னமோ வாங்கிடலாம் போல இருக்கு. பாதை போட ஒடைக்கிறாங்கன்னா விஜித் ஐயா எனக்கு இருக்க எடம் தராமலா போயிடுவாரு."

" ரங்கசாமிக்கு எது விருப்பமோ அத செய்ய வேண்டியது தான். எனக்கு ஒண்ணுமே சொல்லத் தெரியல்ல" நான் இருக்கையை விட்டு எழுந்தேன். விஜித்தை நம்ப வேண்டாம் என்று நான் எப்படி சொல்வது. பட்டினத்தில் அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள். நாங்கள் வெளியூர்க்காரர்கள். ஆக மொத்தத்தில் பார்த்தால் ரங்கசாமியின் குடும்பம் வசிப்பதற்கு இடம் கொடுத்தவர்கள் அவர்களல்லவா? அந்தமாதிரி ஆட்களைப் பற்றித் தீர்ப்புச் சொல்வதற்கு நான் யார்?

"ரங்கசாமி செய்யிறத நன்னா யோசிச்சு தீர்க்க தரிசனத்தோட செய்யறது தான் நல்லது."

சுற்றிலும் இருள் கவியத் தொடங்கியது. புகையிரத நிலையத்தைச் சுற்றி மட்டும் வெளிச்சம் இருந்தது. மின்சார வெளிச்சம் நகரத்துக்கு அலங்காரம் கொடுத்தது என்னவோ உண்மைதான். ஆனால் சிலருக்கு மட்டும் தான்

மின்சாரம் கிடைத்திருக்கிறது. எனக்கு பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன் அங்கே ராஜு நின்றான். ராஜு எனக்கு ரங்கசாமி மூலம் கிடைத்த ஆள். அவன் என் கையிலிருந்த பையைப் பறித்து எடுத்தான். ராஜு கடைப்பக்கம் வந்திருக்கவேண்டும். வேலை எதுவும் இல்லை என்று கண்டால் மட்டுமே சுனேத்திரா அவனை வெளியே அனுப்புவாள். வீட்டை விட்டு வெளியேறியது தான் தாமதம் அவன் சுதந்திரப் பறவையாகிவிடுவான்.

"ஐயா அஞ்சரை மணி வண்டியில வந்தீங்களான்னு பாக்க அம்மா என்னை அனுப்பினாங்க. ஐயா ரங்கசாமிகூட பேசிக்கிட்டிருந்தீங்க. அதனால நான் கடைக்கு பக்கத்தில சதுரங்கம் ஆடறாங்க. அத நான் வேடிக்கை பாத்துக்கிட்டு நின்னேங்க."

"அட ராமா! நீ ஏன் திரும்பிப் போகல்ல?"

ஒரு நாள் சாயந்தரம் ரங்கசாமி என்னை ரயில் நிலையத்தில் சந்தித்தான். கடையை வாங்குவதற்குத் தான் நிச்சயமாக முடிவெடுத்து விட்டதாக அப்பொழுது எனக்குத் தெரிவித்தான். இப்படி பிரச்சினைக்குட்பட்ட ஒரு நிலத்துக்காக பணம் செலவு செய்ய நேர்ந்தாலும் கூட அவனுடைய மனம் என்னவோ மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்தது. குரலில் பெருமை தொனித்தது.

"எங்கட ஆளுங்க யாருகிட்டயும் சொந்தமா வீடு கெடையாதுங்க. அவன் பெருமையாகச் சொன்னான்.

"இது என்னோட நல்ல காலம் போல இருக்கு. எழும்பினா எழும்பிடுவேங்க. விழுந்தா ஒரேயடியா மண்கவ்வ வேண்டியது தாங்க. அதான் இந்த நெலத்த வாங்கத் தோணிச்சுங்க. விஜித் ஐயாவுக்கும் அத விக்கத் தோணிச்சு."

பாதை போடக் கடைகளை தகர்த்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை பொதுவாக எல்லோர் மனதிலும் இருந்தது. அதனால் அவர்கள் தங்கள் கடைகளை அப்படியே வைத்திருந்தார்கள். ரங்கசாமி மட்டும் தன்னுடைய கடைக்கு சுண்ணாம்பு அடித்தான். அவனுக்குத் தனது மகிழ்ச்சியை ஏதோ ஒரு வழியில் வெளியே காட்டிக் கொள்ளவேண்டும் போல் இருந்தது. அதற்கு வேறு மார்க்கம் கிடைக்காததால் இப்படி ஒரு நடவடிக்கை எடுத்தான். இதைச் செய்வதற்கு விஜித்திடம் அனுமதியும் கேட்டிருந்தான்.

"அழுக்கா இருந்ததுங்க. அதனால சுண்ணாம்பு கொஞ்சம் அடிக்கச் சொல்லி விஜித் ஐயா தான் சொன்னாரு" கேட்கிறவர்களுக்கு ரங்கசாமி கொடுத்த பதில் இதுதான். இதைக் கேட்டுவிட்டு சிலர் சிரித்தார்கள். அதிக நஷ்ட ஈடு பெறுவதற்கு விஜித் இப்படி ஒரு உபாயத்தைக் கையாண்டிருக்கிறான் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் சிரித்ததற்கு இதுதான் காரணம்.

நகரத்துக்கு முதலில் மின்சாரம் வந்தது. அடுத்தபடியாக ஒரு தபால் கந்தோர் வந்தது. இதற்கு முன்னர் இங்கே சிறிய ஏஜன்சி தபால் கந்தோர் ஒன்று இருந்தது. ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படலாம். வீடமைப்புத் திட்ட வேலைகள் பூர்த்தியாகிவிட்டதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அலங்காரங்கள் ஒப்பனைகள் செய்வது தான் பாக்கி. தலைநகருக்கு நீர் வழங்கும் குழாயிலிருந்து சல்கமவரை கிளைக்குழாய்கள் பொருத்தினார்கள். தெலபுவவுக்கும் நீர் விநியோகம் வந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்த நகரவாசிகள் எண்ணத்தில் மண் விழுந்தது.

அலுவலக வேலை சம்பந்தமாக நகரமைப்புத் திணைக்களத்துக்குப் போக வேண்டிய தேவை ஒன்று வந்தது.

அங்கே என்னுடைய வேலை முடிய சிறிது நேரம் எடுக்கலாம். அதுவரை காலத்தை எப்படி ஓட்டுவது என்று சிந்தித்தேன். உடனே அருமையான யோசனை ஒன்று உதித்தது. அந்தத் திணைக்களத்தில் யாராவது தெரிந்த ஒருவரைச் சந்தித்து தெலபுவவைப் பற்றி மேலும் விபரங்களை அறிய வேண்டும் என்று எண்ணினேன்.

" சல்கம வீடுகள் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அல்ல என்று நண்பர் சொன்னார். " விண்ணப்பதாரிங்க நிறைய இருப்பாங்கன்னு எதிர்பார்த்தோம். பத்திரிகை விளம்பரங்களுக்கும் ஏராளமாக செலவு செய்தோம். இருந்தாலும் நாங்க எதிர்பாத்த அளவு விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை".

"ஏன்?"

" காரணம் என்னவாயிருக்குமின்னு ஆராஞ்சுபாத்ததில வாகனங்கள் வெச்சிருக்கும் பெரிய சம்பளக்காரங்க தெலபுவவைத் தாண்டி சல்கமவுக்கு போறதுன்னா தூரம் அதிகம் என்கிறாங்க. "

" மாகல ஊடாக பாதை போடறதாத் தான் தொடக்கத்தில ஒத்துக்கிட்டாங்க. அத செஞ்சாத் தான் விண்ணப்பகாரங்க வீடு வாங்க சம்மதிப்பாங்க."

"அந்த எண்ணத்த ஏன் மாத்தினாங்க?"

"ஏன்னு எங்கிட்டயா கேக்கிறீங்க. நீங்க தானே தெலபுவ ஊடா சல்கமவுக்கு பாதை போட்டுத் தரச் சொன்னீங்க. " அவர் சிரித்தார். இப்போ தெலபுவவா? மாகலவா, ன்னு நாங்க தீர்மானிக்கனும்". அவர் முகத்தை

ரொம்பவும் கடுமையாக வைத்துக்கொண்டு பேசினார். இப்போ நாங்க மாகல ஊடாக பாதை போடிறதாத்தான் எண்ணியிருக்கோம்."

" அப்போ தெலபுவ பாதய செய்யிறதா உத்தேசம் இல்ல அப்படித்தானே?" நான் ஆச்சரியத்தோடு கேட்டேன்.

" பணம் இல்ல ஓய்" அவர் உதட்டைப் பிதுக்கினார். இரண்டு பாதையா ஒண்ணு போடவே பணம் இல்ல. ஒதுக்கீட்டுப் பணம் எல்லாம் இப்பவே தீர்ந்து போச்சு."

" அது சரியான கதையா இருக்கே. எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. " தெலபுவ நகரத்தை நவீனமயமாக்கப் போறதா பெரிய பிரசாரம் எல்லாம் செய்தீங்களே காணிகளுக்கு ஏக கிராக்கி உண்டாயிடுச்சு. "

" நாங்க – அதாவது நகரமைப்பு ஆணைக்குழு அப்படி எதுவும் சொன்னதில்லையே." கைகளை விரித்து தான் சொல்வது உண்மை என்பதை அவர் நிச்சயப்படுத்தினார்.

"சமய சந்தர்ப்பத்த பாத்தா மாகல பாதையை வெட்டிறது லாபமின்னுதான் சொல்லனும். ஏன்னா பாதை ரெண்டு பக்கமும் வெற்று நிலம் இருப்பதால நஷ்டமில்ல. நஷ்டஈடு கொடுக்கனுமிங்கிற சிக்கலும் இல்ல. தெலபுவவில் சுப்பர் மாக்கட் கட்டுவது அர்த்தமில்லாத காரியம். என்ன நான் சொல்வது? தெலபுவவை விட தலைநகரத்துக்கு இன்னும் சமீபமாக உள்ள பட்டினங்களுக்கே இந்த வசதிகள் கிடையாது. அதுமட்டுமா தெலபுவவுக்கு இந்த சலுகைகள் கொடுக்கிறதாயிருந்தா சல்கமவை கவனிக்கனும். ஆனா தெலபுவவோட சம்பந்தம் வச்சுக்க அவங்களுக்கு பிடிக்காட்டா வீடு கேட்டு விண்ணப்பிச்சிருக்கிறவங்க எல்லாரும் தலை நகரத்து மனுஷங்க. அவங்களால தெலபுவ போஷிக்கப்படுமின்னு யோசிச்சு திட்டம் போட்டோமானா அது நஷ்டமாயிடாதா?"

"நீங்க சொல்றத பாத்தா பாதைகள விஸ்தரிக்கமாட்டாங்க போல இருக்கே" கேள்விப்பட்ட செய்திகளால் நான் வியப்படைந்து போனேன்.

" உடனடியா இல்ல – இல்லேங்கிறத விட இப்ப முடியாது ஓய் " அவர் உதட்டைப் பிதுக்கி தலையை ஆட்டினார்.

" ஆனா நகரமைப்புத் திட்டத்தை பாத்தவங்க அப்படி நெனச்சுக்கிட்டு இருக்காங்க"

"இதோ பாரும் திட்டங்களுக்குப் பஞ்சமில்ல. தேவையான அளவு திட்டங்கள் இருக்கு" அவர் ஒரு கட்டு திட்டவரை படங்களைச் சுட்டிக்

காட்டினார்.

" நாங்க எதுக்கு இருக்கோம். திட்டங்களை வகுப்பது தான் நம்ம வேலை. ஆனா அவசியத்த அறிஞ்சு தான் அதயெல்லாம் வகுக்கனும். பாருங்களேன் இந்த சல்கம கூட நாங்க உருவாக்கினது தானே. அதுக்கு முன்னுரிமை கொடுக்கனுமா இல்லையா?

" பாதை விஸ்தரிக்கப் போறாங்கன்னு நாங்க ரொம்ப எதிர்பார்த்தோமுங்க. ஏன் மரங்களக் கூட வெட்டினாங்களே"

" இருக்கலாம்" அவர் பைல்களையெல்லாம் மூடி வைத்தார். பாரவண்டிகள் போகனும் என்கிறதால ஒரு வேளை வெட்டியிருக்கலாம். மின்சாரமும் கொடுத்திருக்காங்க. என்னவாயிருந்தாலும் நகரமைப்பு ஆணைக்குழு பாதைகளை எப்படியும் திருத்தியே ஆகனும்"

நான் சற்றுத் தடுமாறிப் போனதென்னவோ உண்மை தான். ஆனால் அதே நேரம் கொஞ்சம் சந்தோஷமும் இருக்கத்தான் செய்தது. ஏனென்றால் நாங்கள் எதையும் தேவைக்கதிகமாகச் சேர்த்து வைக்கவில்லையே. இரண்டு மூன்று துண்டு நிலம் வாங்கி விடலாமா? என்று சுனேத்திரா வற்புறுத்தினாள். ஆனால் அப்படி ஒரு காரியத்தில் முதலீடு செய்வதற்கு எங்களிடம் பணம் ஏது. வீடுகட்டியதால் ஏழெட்டு வருஷங்களுக்கு எங்களால் தலையெடுக்கவே முடியாது.

எனக்கு ரங்கசாமியின் ஞாபகம் வந்தது. அவன் சொன்னது போல அது அவனுடைய நல்ல காலமா?

நான் அறையை விட்டு வெளியேறிய பொழுது நண்பர் சொன்னார் " நகரமைப்பு ஆணைக்குழு எவருக்கும் வாக்குறுதி கொடுப்பதில்லை. அரசியலில் உள்ளவங்க ஏதாவது செய்ய நெனச்சாத்தான் வாக்குக் கொடுப்பாங்க" அவர் தோள்களை ஒடுக்கித் தான் சொல்வதை உறுதிப்படுத்தினார். நெஜமா அவங்க கிட்ட பணம் இருந்தா கொடுத்த வாக்கை நெறவேத்திடுவாங்க. ஆனா நாம முக்கியமானது எது எங்கிறத தெரிஞ்சு வைச்சுக்கணும்"

# 7

காரின் மேல் வைத்துக் கட்டிய ஒலிபெருக்கி சல்கம வீடு குடிபுகும் வைபவம் பற்றி பறை சாற்றிக் கொண்டு திரிந்தது. தெலபுவவுக்கும் சல்கமவுக்குமாக போய் வந்து கொண்டிருந்த இரும்பு பாரவண்டிகளால் பாதைகள் எல்லாம் சீர் குலைந்திருந்தன. சல்கம தெலபுவ பாதையின் திருத்த வேலைகள் சில நாட்களுக்கு முன் தான் ஆரம்பமாகியது. நேரம் போதாமல் இருந்ததால் வேலையாட்கள் இரவிலும் வேலை செய்தார்கள். தெலபுவ அப்படி முன்னேறப் போகிறது இப்படி வளரப் போகிறது என்று எப்படியெல்லாம் ஆரவாரம் செய்தார்கள். இதனால் தெலபுவவுக்கு மிஞ்சியதெல்லாம் புளியமரம் நின்ற இடத்தில் கைவிடப்பட்டிருந்த ஒரு புல்டோசர் யந்திரமும், மின்சார விநியோகமும் , ஒரு தபால் கந்தோரும் மட்டும் தான். இரும்பு யந்திரத்தின் மீது பல வர்ணங்களில் அச்சடிக்கப்பட்ட அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தன. சல்கம வீடமைப்புத் திட்ட அங்குரார்ப்பண விழாவுக்கு மாகலவிலிருந்து புதிய பாதை வழியாகத்தான் அரச ஊர்வலம் வரப்போகிறது. அரை மைல் தூரத்திற்கு பாத யாத்திரையில் ஜனங்கள் வருகிறார்கள். என்று ஒலிபெருக்கிகள் அறிவித்தன.

அந்த வீடமைப்புத் திட்டம் பார்ப்பதற்கு ரொம்பவும் அழகானது. ஒவ்வொரு வருமானத் தராதரங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்றாற் போல வெவ்வேறு பிரமாணங்களில் இந்த வீடுகளைக் கட்டியிருந்தார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி. அரசாங்க அதிபர் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வைபவரீதியாக வீட்டுத் திறப்புக்களைக் கையளித்தார். விஜிதும் மேடையில் ஏறி மூன்று கடைகளுக்குரிய சாவிகளை அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்டான்.

மாலையில் இன்னிசை விருந்து நடைபெறப்போவதாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தார்கள். இன்னிசைக் கச்சேரி கேட்பதற்கு ஜனங்கள் திரள் திராளக் கூடினார்கள். இன்னிசைக் கச்சேரிக்குத் தான் கூட்டம் அதிகமாக இருந்தது. வீடமைப்புத் திட்டத்துக்கு எதிர்ப்புறத்தில் தெருவின் மறுபக்கத்தில் கடை ஓரமாக ஒரு மண் பாதை தொடங்குகிறது. இது பல கிராமங்களைத்

தாண்டி வெகு தூரம் செல்லும் ஒரு பாதை. ஒரு கடையையும் கடைக்கு அந்தப் பக்கமாக உள்ள ஒரு பௌத்த விகாரையையும் மையமாகக் கொண்டு தான் இந்தப் பாதை ஆரம்பமாகிறது. விழா ஏற்பாட்டுக் காரியங்களில் பௌத்த விகாரை பங்கு கொள்வதில் நகரமைப்பு ஆணைக்குழுவுக்கு ரொம்பவும் மகிழ்சி. " செத்பிரித் " ஓதி விழாவை ஆரம்பித்து போதி பூஜையுடன் முடிக்கும்படி விகாரை பிக்கு கேட்டிருந்தார். பழைய கிராமத்துக்கும், புதிய கிராமத்துக்கும் ( கிராமம் என்று அழைப்பது தான் அவர்களுக்குப் பிடிக்கும் அதனால் தான் சல்கம என்று பெயர் வைத்தார்களோ ) விகாரை ஒரு பாலமாக அமைந்திருக்கிறதென்று நகரமைப்பு ஆணைக்குழு எண்ணியிருந்தது. விழா நடத்துவதற்கான அங்கீகாரம் கிடைத்த நாளிலிருந்து விகாரையின் பிரதம பிக்கு காரியங்களை மும்மரமாகக் கவனிக்கலானார். பன்சலையின் தர்மகர்த்தாக்களின் வீடுகளுக்கு நேரடியாகப் போய் நடைபெறவிருக்கும் வைபவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியெல்லாம் உரையாடினார்.

இந்த சம்பாஷணையில் கலந்து கொண்ட ஒரு இளம் ஆசிரியர் " புதிய கிராமமின்னு சொல்றத காட்டிலும் சிறிய நகரம் என்றால் இன்னும் விசேஷமாக இருக்கும் குருக்களையா" என்றார்.

" அது அவ்வளவு லேசா நடக்கிற காரியமில்ல "

" ஏன் அப்படி சொல்றீங்க"

"ஒரு கிராமத்தில வசிக்கிறவங்க ஏதோ ஒரு வகையில ஒருத்தரோட ஒருத்தர் தொடர்பு வைச்சிருப்பாங்க. ஆனா நகரத்தில அப்படியில்ல. இந்த மாதிரி தொடர்பு எதுவும் இல்லாத ஜனக் கும்பல் தான் நகரங்களில் வசிக்கும். சிங்களவங்க, தமிழங்க, பறங்கிங்க, ஜாவாக்காரங்க இப்படி எத்தனையோ. அவங்கட வழிபாட்டு முறைகளைப் பாத்தாலும் வித்தியாசம் தான். வீடமைப்புத் திட்டமென்றாலே நகரத்துக்கு சமமான இடந்தான்"

"குறைந்த பட்சம் இதில இருப்பவங்க மனுசங்க எங்கிற எண்ணமாச்சும் இல்லாம போயிடுமா ஐயா" பிரதம குரு சற்றுக் கோபத்தோடு கேட்டார். " அவங்களும் ஒரு கூட்டம் ஜனங்க தானே. அந்தக் கூட்டத்த எங்கட அயலவங்கன்னு சொல்லிக்கிறது பிழையா?

" ஐயோ நான் அப்பிடி செல்லல்லே" ஆசிரியர் உடனே அதற்கு இணங்கி விட்டார். மனுசங்கள தெரிஞ்சு கொள்றது எவ்வளவு நல்ல காரியம். அந்த விழா ஒரு முழு நாள் கொண்டாட்டம். வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்தவங்களுக்கு

இந்தக் கொண்டாட்டங்களில் கலந்து மகிழ நேரமில்லை. திட்டத்துக்கு வெளியே இருந்தவர்கள்தான் விழாவில் பங்கெடுத்து ஆனந்தமடைந்தார்கள். வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெற்றவர்கள் தங்கள் புதுவீடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். நகரங்களில் வீடு கிடைப்பது கஷ்டம். ஆகவே தான் இந்த ஜனங்கள் சல்கம திட்டத்தில் வீடுகளைப் பெற்றுக் கொண்டார்கள். தாங்கள் இங்கே குடிவந்ததற்காக இன்னிசை விருந்துகளும் போதி பூஜையும் நடத்தவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. வீடமைப்புத் திட்டத்திலுள்ளவர்களை விழாவுக்கு அழைத்து வரவேற்புபசாரங்களை நடத்தும் பொறுப்பைக் கிராமத்து இளைஞர்களின் கையில் விட்டிருந்தார்கள். வீடமைப்புத் திட்டவாசிகளுக்கு இவர்களைப் பார்த்தால் படுமுரட்டுப் பேர்வழிகளாகத் தெரிந்தனர். போதி பூஜையைப் பற்றி அந்நிய மதத்தினர் சந்தேகப்பட்டார்கள்.

மெல்லிய வர்ணம் பூசப்பட்ட வீடுகளின் சுவர்கள் தங்கு தடையின்றிப் பாய்ந்த சூரியனின் கதிரொளியில் பிரகாசித்தன. வீடுகளின் முன் புறத்தில் சின்னஞ்சிறிய பூந்தோட்டங்கள், அவற்றில் குட்டையான பூஞ்செடிகள் இடைக்கிடை ஒரு செவ்விளநீர் மரம், அகத்திமரம்,செரிமரம் இவற்றை விட உயரமானதென்று சொல்லக்கூடிய மரங்கள் எதுவும் அங்கே இல்லை. கொழுத்தும் வெய்யிலில் கண்களை இடுக்கியவாறு விஜித் வீடுகளை நோட்டம் விட்டான். வீடுகள் இருந்த திசைக்கு எதிர்ப்புறமாக கடைகள் நிரை நிரையாக இருந்தன. விஜித்தைப் பொறுத்த வரை இந்த வீடமைப்புத் திட்டம் பகல் பொழுதில் நன்றாகத் தூங்கி இரவில் விழித்துக் கொள்ளும் ஒரு இராட்சனைப் போல இருந்தது. அவை பார்த்த பார்வைக்கு பொம்மை வீடுகள் போல காணப்பட்டன. பகலில் பூட்டுப்போட்டு மூடி வைத்திருப்பார்கள். வேலைக்காரர்களை வைப்பதற்கு அந்த வீடுகளில் இடம் இல்லை. அவை சிறிய வீடுகள். குழந்தைகள் இருக்கும் வீடுகளில் தான் வேலைக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள்கூட பகல் வேளையில் வெளியே வருவதில்லை. எல்லா வீடுகளுக்கும் கேட் உண்டு. அந்த கேட்டில் ஒரு தபால் பெட்டி பொருத்தப்பட்டிருக்கும். கொஞ்சம் பெரியதாக உள்ள வீடுகளில் கேட்டுக்குப் பக்கத்தில் சிறிய நுளைவாயில் ஒன்று வைத்திருப்பார்கள். கடைகளின் நிரைக்கும் வீட்டு நிரைக்கும் மத்தியில் கல்பதித்துத் தார் போட்ட கரடுமுரடான பாதை. விஜித் மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினான். வழியில் மரஞ்செடிகள் எதுவும் கிடையாது. இதனால் சூரியன் தன் கைவரிசையை பூரணமாகக் காட்டினான். விஜித் கண்களைச் சுருக்கிப் பார்த்தான். இதைவிட பல கஷ்டங்களை அடுக்கடுக்காக அனுபவித்துக் கொண்டிருக்கும் தனக்கு வெய்யிலின் கொடுமை ஒரு பொருட்டா என்று சிந்தித்தான்.

விதி மீண்டும் ஒரு தடவை விஜித்தை ஏமாற்றிவிட்டது. தெலபுவவில் நிலம் விற்க விஜித் தூண்டப்பட்டபோது விதி அவன் வாழ்க்கையில் முதல் தடவையாக விளையாடியது. இந்தத் தடவை சல்கமவில் கடைபோடத் தூண்டிவிட்டு விதி சிரித்தது. ராக்கைகளில் பொருள்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இருந்தும் என்ன பயன். வாங்குபவர்கள் இல்லாததால் அவற்றின் நிறம்கூட மாறிப் போயிருந்தது. அவசரத்துக்கு ஒரு ரேசர், சவர்க்காரம் அல்லது தீப்பெட்டி, பால்மா இப்படி ஏதாவது வாங்குவார்களே தவிர திட்டத்து வீடுகளில் வசிப்பவர்கள் வழக்கமாக அங்கே சாமான் வாங்குவது கிடையாது. தன்னுடைய சாமான்கள் கெட்டுப் போகாமல் இருப்பது ஒன்று தான் விஜித்துக்கு இருக்கும் ஒரே ஆறுதல்.

மரக்கறி பழங்கள் விற்பவர்களில் நிலை அதோ கதி தான். போக்குவரத்து செலவினால் தங்கள் பொருட்களைக் கூடிய விலைக்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது. இடத்துக்கிடம் பொருட்களைக் கொண்டு போய் விற்ற வியாபாரிகள் தங்கள் உடைமைகளையெல்லாம் முதலீடு செய்து கடை அறைகளை வாங்கியிருந்தார்கள். சிலர் வங்கியில் கடன் எடுத்து வியாபாரம் ஆரம்பித்திருந்தார்கள். கடைகள் வாங்க செலவு செய்த பணத்தை இவர்கள் எப்படியாவது சம்பாதித்தாக வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவர்களின் நிலைமையும் பயங்கரமாகிவிடும். வீடமைப்புத் திட்டத்தில் வசிப்பவர்கள் இந்தக் கடைகளில் சாமான்களின் விலை அதிகம் என்று பேசிக் கொண்டார்கள். நாள் செல்லச் செல்ல பழங்களும் மரக்கறிகளும் கெட்டுப்போகத் தொடங்கிவிடும். கெட்டுப்போகிற பாகங்களை வெட்டி விசிவிட்டு தண்ணீர் தெளித்து மீண்டும் விற்பனைக்கு வைக்கிறார்கள். திட்டத்தில் வீடு எடுத்தவர்களுக்கு இந்தக் கடைகளைப் பார்த்தால் அவை தம்மைச் சிக்கவைப்பதற்கு வைத்த பொறிகளாகத் தெரிந்தன. இவர்களில் பலர் வாகனச் சொந்தக்காரர்கள். இவர்கள் தலைநகரில் வேலைபார்ப்பவர்கள். வேலைக்குப் போய் வரும் பொழுது புத்தம் புது மரக்கறி பழங்கள் எல்லாம் கொண்டு வருவார்கள். இவர்களுக்குப் பழக்கமான கடைகளில் ஒன்றில் முன்னால் வண்டியை நிறுத்துவார்கள். இதைக் கண்டதும் வேலையாள் ஓடிவருவான். அவனிடம் சமான்களின் பட்டியலை நீட்ட வேண்டியதுதான் பாக்கி. அவன் எல்லாவற்றையும் நிறுத்து காரின் டிக்கியில் போட்டு விடுவான். ஆசிரியர்மார், கிளாக்மார் போன்ற மத்தியதர வகுப்பினர் தான் சுற்றுப் புறத்தில் வேலை பார்ப்பார்கள். இவர்கள் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் மார்க்கம் தேடி வாரச் சந்தைகளுக்கு நடையாய் நடப்பார்கள். இந்தச் சந்தைகளை விட்டால் அவர்களுக்கு வேறு தஞ்சம் கிடையாது. புது மரக்கறிகளுக்கும் பழங்களுக்கும் ஏக கிராக்கியிருந்தது. இதைப் புரிந்து கொண்ட ஒருவர் கிராமத்துக் கடைத் தெருப் பக்கமாகப் போய் பப்பாசிப்பழம் வாழைப்பழம்,

கிழங்கு, கீரை, முட்டை முதலிய பதார்த்தங்களை தேடி வாங்கி வந்து விற்கத் தொடங்கினார். பேராசை பிடித்த சில கிராமத்து ஜனங்கள் அதிக இலாபம் பெறும் எண்ணத்தோடு முட்டை மரக்கறி பழங்களை தாமே கொண்டு வர ஆரம்பித்தனர். இவர்களுக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கும் இடையில் அதிக வித்தியாசம் இருப்பதாக திட்டத்தில் வசிப்பவர்களுக்குத் தெரியவில்லை. இந்த வியாபாரிகளை யாருமே வீட்டுப் பக்கமாக அழைப்பதில்லை. வீட்டிலிருப்பவர்களில் யாராவது சிறிய நுளைவாயில் வழியாக அல்லது கேட்வழியாக வெளியே வந்து பாதையில் வைத்தே சாமான்களை வாங்கிக் கொள்வார்கள். தெருவில் தங்கள் சாமான்களை விற்பனைக்காகக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இந்த வியாபாரிகளுக்கு ஏற்பட்டு விடும். இதனால் வெட்கமடைந்த கிராமவாசிகள் இலாபம் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்று தங்கள் பொருட்களை விற்பதற்கு நடுஆள் ஒருவரை தேர்ந்தெடுக்கச் சம்மதித்தனர். இகழ்ச்சியாலும் புகழ்ச்சியாலும் மனம் குழம்பிப் போகாத திடசித்தம் கொண்ட அதே நேரத்தில் கபடத் தனத்தில் கைதேர்ந்த ஒரு கிராமவாசி பொருட்களைத் தானாகவே கொண்டு வந்து விற்கலானான்.

கடைகளை விலைக்கு வாங்கியவர்கள் சம்பாதிப்பதற்கு புதிய வழிகளைத் தேடி திட்டம் வகுக்கலானார்கள். இந்தக் கடைச் சொந்தக்காரர்கள் எல்லோரையும்விட தான் பெரிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டதாக விஜித் எண்ணினான். கடைகளுக்குப் பதிலாக தெலபுவவில் விற்ற நிலங்களை வாங்கியிருந்தால் இதைவிட அதிகவருமானம் ஈட்டக் கூடியதாயிருந்திருக்கும். அந்த நிலங்கள் பெறுமதி வாய்ந்தவை. இதனால் நல்ல விலைக்கு விற்பனையாகின. சட்ட விரோதமான பந்தயங்களுக்குத்தான் பலத்த அடி விழுந்தது. இந்த சூதாட்ட வியாபாரம் இருக்கிறதே அதனால் வரும் வருமானம் ஆற்றொழுக்குப் போல தங்கு தடையின்றிப் பெருகிவருவது. சரியாக சொல்வதனால் இது ஒரு நீரோட்டம் போலத்தான். இந்த வியாபாரத்தால் வெளியே பணம் போகாது என்று செல்வதற்கில்லை. ஆனால் உள்ளே வரும் வருமானத்தைப் பார்க்கும்பொழுது வெளியே போகும் தொகை ஒன்றும் பெரிதாக இல்லை. இதற்கு ஈடாக சொல்லக்கூடிய வேறு ஆட்டங்கள் இல்லாததால் ஐந்து சதத்திலிருந்து ரூபாய்க் கணக்கு வரை இங்கே பந்தயம் வைத்து ஆடினார்கள். சல்கமவில் கடைகள் வாங்கியதால் சூதாட்ட வியாபாரத்தில் விஜித்துக்கு இருந்த நாட்டம் குறையத் தொடங்கியது. நண்பன் வெளிநாடு சென்றதே இதற்கு முக்கிய காரணம். வருமானம் குறைய ஆரம்பித்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புதிய பந்தய நிலையம் ஒன்று நகரத்தின் கோடியில் தலைகாட்டத் தொடங்கியது. இதனால் விஜித்தின் பந்தய வியாபாரம் படுத்துவிட்டது. வருமானம் வரும் பாதைகள் அடைத்துக் கொண்டாலும் செலவுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. தோட்டத்தைக் குத்தகைக்குக்

கொடுத்துவிட்டு கஞ்சிக்குப் பல்லிளிக்கும் நிலைமையாகிவிட்டது. இதை நினைத்தால் விஜித்துக்கு தன்னில் கோபமாக இருந்தது. அதே நேரம் தன் கையாலாகாத் தனம் பற்றி நினைத்துத் துக்கப்பட்டான்.

பணம்? எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும். சல்கமவில் தான் இப்பொழுது வாழ்ந்த கொண்டிருக்கும் வாழ்க்கை என்றுமே ஒரு மனிதனுக்கு வாய்க்கக்கூடாது. இதுவும் ஒருவாழ்க்கையா. தனக்கும் நடைபாதையில் பொருள்களை வைத்துவிற்கும் வியாபாரிக்கும் வித்தியாசம் ஏதும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. பணம் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அதனால் எங்காவது ஒருவனுக்கு மகிழ்ச்சி தான் ஏற்படுமா?

பணம் தேடும் மார்க்கங்கள் பற்றி நண்பர்கள் மத்தியில் கருத்துப் பரிமாறல்கள் சம்பாஷனைகள் எல்லாம் நிகழ்ந்தன. இருந்தும் விஜித் அவற்றுக்குச் சம்மதிக்கவில்லை. சிறிய தொகையைப் போட்டு பெரிய இலாபத்தை எப்படிப் பெறலாம் என்று வானத்துக்கும் பூமிக்கும் முடிச்சுப் போட்டபடி சிந்தித்தான். சிறிய தொகையுடன் வியாபாரம் தொடங்க வேண்டுமானால் பலமும். பிரசித்தியும் தந்திரமும் அவசியம். கொஞ்சப் பணத்தோடு இந்தக் குணாதியங்களை ஏராளமாகக் கலந்து ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும். மனதில் கருக்கூட்டி உற்பத்தியாகிய வியாபார கோட்பாடு விதையாகி முளைகட்டி தளிர்விட்டு வளர்வதை விஜித் பார்த்திருந்தான்.

# 8

முற்றத்திலே கொட்டான் மரம் குடை விரித்து நின்றது. நான் அதனடியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு சுனேரத்திரா அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தாள். குழந்தைகளுக்கு கழுவிய புதிய உடைகள் அணிவித்திருந்தாள். பௌடரும் பூசியிருந்தாள். இரண்டு குழந்தைகளில் இளையவளை என் கையில் கொடுத்துவிட்டு ஆண் குழந்தையை நாற்காலி அருகில்விட்டாள். மகளை நான் உச்சி மோந்து கட்டியணைத்தேன். மகளை உயரத்தூக்கி ஆட்டினேன். கால் கைகளை நாலாபக்கமும் வீசி பால் பற்கள் தெரியச் சிரித்தாள் என் மகள். இவளைக் கண்ட அண்ணன்காரன் நானும் நானும் என்று கத்தினான். சுனேத்திரா குழந்தைகளை ஓடிகொலோனில் நீராட்டியிருக்க வேண்டும். மகளுடைய தொப்புளில் வாய் வைத்து புர் என்று ஊதியதும் அவள் என் தலை மயிரை பிடித்துக் கொண்டு பலத்த குரலில் சிரித்தாள். நான் பிள்ளைகளோடு சிறிது நேரம் விளையாடினேன். பின்னர் மகளை தோளில் போட்டுக் கொண்டு பத்திரிகையின் தலைப்புக்களை மட்டுமாவது படிக்கலாம் என்று முயற்சி செய்தேன். சுனேத்திரா ஒரு தடவை வந்து எட்டிப் பார்த்தாள். என் நான்கு வயது மகன் மனம்போல மண்ணைவாரி உடம்பெல்லாம் போட்டுக் கொண்டான். சுனேத்ரா இந்தத் தடவை கத்திக் கொண்டே அவ்விடத்துக்கு வந்தாள். அவள் ஓடிவந்து பிள்ளையைத் தூக்கினாள். என்னைக் கோபத்தோடு முறைத்துப் பார்த்தாள்.

"பத்து நிமிஷமாவது உங்களால இந்த பிள்ளைகளை பாத்துக்க முடியல்ல" – அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "கையுதவிக்கு ஆள் இல்லாம என்னால இந்தவேல செய்ய முடியாதுங்க" பிள்ளையின் தொடையில் ஒரு அடிபோட்டு உடுப்புக்களைக் கழற்றினாள். பகல் பொழுதில் என் மகளைக் கவனிக்க ஒரு பெண் வருவாள். சுனேத்ரா வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் அவள் போய் விடுவாள். அந்த ஷணத்திலிருந்து ராஜுவைத் துணைக்கு வைத்துக் கொண்டு பிள்ளைகளையும் கவனித்து சமையல் சாப்பாட்டுக் காரியங்களையும் பார்ப்பாள். அம்மா கையால் அடி வாங்கிய குழந்தை அலறி அழுதது. ராஜு ஓடோடி வந்து குழந்தையை தூக்கிக்

கொண்டான்.

" பியவதி இருக்காளே நான் எப்ப வேல முடிஞ்சு வீட்டுக்கு வருவேன்னு பாத்துக்கிட்டு இருப்பா. வீட்டுக்கு ஓடிப்போக. வந்த நேரத்தில இருந்து எனக்கு குளிக்க நேரமில்ல. அது எதுக்கு கக்கூசுக்குப் போகக்கூட அவகாசம் கெடையாது".

இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினால் என்ன நடக்கும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் நான் மௌனமாக இருந்தேன். ஒரு வேலைக்காரியைத் தேடுவதற்கு நான் எவ்வளவு முயற்சி எடுத்திருப்பேன். ஆனால் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

"இங்கே குடிவந்ததோட அருமை இப்பதான் தெரியுது" அவள் வார்த்தைகளால் என்னைச் சாடினாள்."

"நம்ம வீட்டில இருந்திருந்தா பிள்ளைகளைப் பாத்துக்கிறது ஒரு வேலையே இல்ல. யாராவது ஒருத்தர் எப்பவும் வீட்டில இருப்பாங்க இல்லையா"

அவள் என்னைக் குத்திக் காட்ட வேண்டும் என்று இந்த வார்த்தைகளைச் சொல்லாவிட்டாலும் கூட அந்த வார்த்தைகளில் தொனித்த பாவம் என் மேல் பழிசுமத்துவதற்காகவே சொல்லப்பட்டது போல இருந்தது.

"ஒரு வேலையாளைப் பிடிக்க நான் படும்பாடு உனக்கு நல்லாவே தெரியும்." நான் மெதுவாகச் சொன்னேன்.

"எங்க வீட்டுப் பக்கம் நிறையப் பெண்கள் இருக்காங்க. ஆனா ஊரைவிட்டு வெளியே போக அவங்களுக்கு பிடிக்காது" என்னுடைய தயார் இங்கே வந்து எங்களுடன் தங்கியிருந்தால் அவளுக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருக்கும். இது எனக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். ஆனால் அவளை இங்கே அழைத்து வருவதற்கு எனக்குத் தான் மனம் இல்லை. அம்மா தன் அந்திம காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு வயசாகிவிட்டது. இந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிற அளவுக்கு அவளுக்கு தென்பு உண்டா. என்னுடைய மகன் இருக்கிறானே அவன் ஒரு இடத்தில் இருக்கமாட்டான். காலில் சக்கரம் கட்டிக் கொண்டவன் மாதிரி. தாயார் எங்களை வளப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள். இப்பொழுது எங்களுடைய குழந்தைகளையும் அவர்களையே வளர்க்கும்படி கேட்பது எனக்கு நியாயமாகப் படவில்லை.

"எங்களுக்கு வேண்டியவங்க யாராச்சும் இருந்தாத்தான் நல்லதுங்க. அப்படி இல்லாது போனா செய்யக்கூடிய அருமையான காரியம் என்ன தெரியுமா? ரங்கசாமிகிட்ட சொல்லி வேலைக்கு ஒரு பொம்பளையப் பாருங்க."

"நான் கேட்டுப் பாக்கிறேன்."

நான் இந்த விஷயத்தைப் பற்றி ரங்கசாமியிடம் சொன்ன பொழுது " நான் பெத்தாகிட்ட சொல்லி கடதாசி எழுதிப்போட்டு பாக்கிறேங்க" என்று வாக்குக் கொடுத்தான். " ரொம்ப நாள் எடுக்குமா? வீட்டுக்கு ஆள் இல்லாம ஒரு வேலையும் செய்ய முடியல்ல."

"நீங்க சங்கடப்படாதீங்க ஐயா நா இன்னைக்கே பெத்தா கிட்ட சொல்லி கடிதத்த தபால்ல சேத்திடுறேனுங்க."

நாட்கள் உருண்டன. ஒரு நாள் ரங்கசாமி தந்தியும் கையுமாக என்னைத் தேடிய வந்தான். ஒரு வேலைக்காரியை கூட்டி வருவதற்கு வெலிமடை போகவேண்டும். அதற்கு அவனுக்கு பஸ் கட்டணம் தேவைப்பட்டது.

நானும் அவனோடு போனால் என்ன என்று எனக்கு திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. நானும் போனால் யாராவது ஒரு ஆளைக் கையோடு கூட்டிவந்துவிடலாம் அல்லவா? நான் கூடப்போவதால் இது சாத்தியமாகலாம்.

நாங்கள் வெலிமடவில் இறங்கினோம். ரங்கசாமியின் உறவுக்காரர் ஒருவர் சந்தியில் எங்களுக்காகக் காத்திருந்தார். ரங்கசாமியைக் கண்டதும் அவர் முகம் மலர்ந்து சிரித்தார். அடுத்த கணம் அவர் பார்வை என் பக்கம் விழுந்தது. அவர் முகத்தில் அச்சத்தின் ரேகைகள் படர்ந்தன.

" தமிழில் ஏதேதோ பேசிவிட்டு " இந்த ஐயாக்கு தான் வேலக்காரி வேணும்" என்று ரங்கசாமி சொன்னான். பிறகு என்பக்கம் திரும்பி" இவரு என்னோட மச்சான்". என்றான்.

" இந்த ஐயாவால எனக்கு நெறைய உதவி. இவரு புண்ணியத்தில தான் நான் இப்படி இருக்கேன்." ரங்கசாமி இந்த மாதிரி சொல்லுவான் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

வெலிமட நகரத்துக்கு இந்தப்பக்கமாக " சில்வர் லைன் " தோட்டம் இருந்தது. நாங்கள் இந்தத் தோட்டத்தினூடாக ஏறக்குறைய ஒரு மைல்

நடக்கவேண்டியதாயிற்று. மாரிமுத்து கொச்சையாகத்தான் சிங்களம் பேசுவான்.

நாங்கள் இரவு வண்டியில் புறப்பட்டபடியால் இப்பொழுது சூரியன் உதயமாகி இருள் கலைந்திருந்தது. சலசல என்று நீரோடைச் சத்தம் கேட்டது. ஆனால் அது எங்கிருந்த பாய்ந்து வருகிறதென்பதைக் கண்டு கொள்ளக் கூடிய அளவுக்கு பொழுது புலரவில்லை. அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்த நாங்கள் ஒரு கிளைப் பாதைக்கு வந்து சேர்ந்தோம்.

" விடியக் காலையிலேயே எப்படி மாரிமுத்துவால் அட்டம்பிட்டியவுக்கு போக முடிஞ்சிச்சு ? " குளிர் ஒருபக்கம் நீண்ட பிரயாணம் மறுபக்கம் எல்லாமாக சேர்ந்து என்னை இப்படிக்கேட்கத் தூண்டியது.

" எனக்கு ராத்திரி வேலை. அஞ்சுமணிக்கு டியூட்டி முடிஞ்சு அங்கேருந்து அடம்பிடியவுக்கு போனேனுங்க.

பாதையில் திருப்பம் ஒன்று எதிர்ப்பட்டது. அதற்குப் பக்கத்தில் ஒரு காடு. இந்த இடத்துக்கு வந்ததும் எங்கள் பயணம் நின்றது. இந்த வளைவில் இருந்து மேல் நோக்கி ஒரு பாதை சென்றது காட்டுக்குள் பிரவேசிக்க வேண்டுமானால் இந்த பாதை வழியாகத் தான் போக வேண்டும்.

எங்களுக்கு எதிரில் நீண்டு கிடந்த பாதையை நான் ஏக்கத்தோடு பார்த்தேன். இதைக் கவனித்த மாரிமுத்து.

" இது ஊருக்குள்ள போற பாதைங்க " என்றான்.

" அதோ தெரியுது பாருங்க அது தாங்க எங்க லயன். மலை ஓரமாக நின்றுகொண்டு கீழே கையைக் காட்டினான் மாரிமுத்து. நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்துக்குக் கீழ்ப்புறத்திலிருந்து சூரியன் உதித்து வருவது போல ஒரு தோற்றம். உதய சூரியனின் முதல் கதிர்களை இந்த வளைவு தான் முதன் முதலில் காண்கிறதோ. வளைவுக்குள் அமிழ்ந்து மலைகளைப் பிளந்து கொண்டு இளஞ்சிவப்பு முகில்கள் சூழ உதித்துவரும் ஞாயிற்றின் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் கைக்கெட்டிய தூரத்தில் இருப்பது போல தெரிந்தாலும் குறைந்தது இன்னும் ஒரு மைல் தூரமாவது போக வேண்டியிருக்கும். வழியில் இருந்த ஒரு மதகில் சாய்ந்து கீழே குனிந்த

மாரிமுத்து உரத்த குரலில் கீழே யாரையோ அழைத்தான் " அடே கங்கா"

மலை அடிவாரத்தில் நிரையாக வீடுகள் இருந்தன. கோடி வீட்டில் இருந்து ஒரு சிறுமி பதில் குரல் கொடுத்தபடி முற்றத்துக்கு ஓடிவந்தாள்.

" நாங்க வந்தாச்சு. ஒரு தொர இங்க வந்திருக்காங்க".

இன்னும் அரைமணி நேரமாச்சும் போகுங்க" அவர்கள் என்ன பேசி க்கொண்டார்கள் என்பதை எனக்கு புரிய வைப்பவன் போல ரங்கசாமி என்பக்கம் திரும்பினான். " இந்தப் பக்கத்தில இப்படித்தாங்க அந்த மலையில் இருந்து இந்த மலைக்கு பேசிக்குவாங்க."

" அப்ப ஐயா மெதுவா வாங்க" வெற்றிலைச் சாயமும், சுருட்டுக் கறையும் படிந்திருந்த பல்வரிசையைக் காட்டினான் மாரிமுத்து, அவன் இப்படி பல்லைக் காட்டினால் அவன் சிரிக்கிறான் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். இதை இப்போ நான் தெரிந்து கொண்டேன்.

நவீன பாணியில் கட்டப்பட்ட வீடுகளின்நிரை ஒன்று வலது பக்கமாகக் கீழே தெரியத் தொடங்கியது. மலையிலிருந்து இறங்க இறங்க வீடுகளை நெருங்கிக் கொண்டிருந்தோம். இப்பொழுது வீடுகளை நன்றாகக் காணக்கூடியதாக இருந்தது.

" ஜனங்க ஒருத்தரையும் காணோமே" நான் ஆவலோடு கேட்டேன்.

" இன்னைக்கு ஞாயித்துக் கிழமையோ இல்லையோ பொம்பளைங்க ஆம்பளைங்க எல்லாரும் நேத்து ராவு நல்லா குடிச்சிட்டு வெறி ஏறி தூங்கிடுவாங்க. அடுத்த நாள் ரொம்ப நேரமாகி தான் எந்திரிப்பாங்க."

மலை ஒடுங்கிப் போன ஒரு இடத்தில் நிலச் சுரங்க மொன்றிலிருந்து முட்டி மோதிக் கொண்டு வந்தது ஒரு நீரோடை. அலுமினியக் குடத்தை சாம்பல் போட்டு வெள்ளிக்குடம் போல மெருகேற்றிக் கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. அவள் தலையை உயர்த்தி எங்களைப் பார்த்தாள்.

" மத்த நாளாயிருந்தா பொழுது விடியறதுக்கு முந்தியே பொம்பளைங்க இந்த இடத்தில நெறைஞ்சிடுவாங்க. இன்னைக்கு லீவு தானே அதனால கொஞ்சம் தாமதம்."

கண்ணுக்குத் தட்டுப்படுகிற ஒவ்வொன்றையும் பற்றி விபரித்துக் கொண்டு நடத்தான் ரங்கசாமி. இந்தப் புதிய சூழ்நிலையை எனக்கு விளக்குவதில் அவனுக்கு பரமசந்தோஷம். மலையிலிருந்து இறங்கிய மாரிமுத்துவை கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எங்குமே காணவில்லை. பார்க்கும் இடமெல்லாம் காலைக் கதிரவனின் ஒளி சிந்த அதனால் எண்ணெய் வர்ணம் பெற்று மின்னும் பனித்துளிகளை தாங்கி முகில்கூட்டங்களினுள் மறைந்த தேயிலைச் செடிகளின் நுனிகள் மட்டும்தான் தெரிந்தன. மலையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த எனக்கு முழங்கால்கள் இரண்டும் ஒன்றோடொன்று பின்னி நடுங்கின. குளிர், ஊசிபோல ஊடுருவி கன்னங்கள் சூடேறின. எனக்குக் களைப்பாக இருந்தது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

நாங்கள் வீடுகளைச் சமீபித்து விட்டோம். இப்பொழுது எல்லோரும் தூக்கம் கலைந்து எழுந்துவிட்டார்கள். எங்களை எட்டி எட்டிப் பார்க்கலானார்கள். அந்த வீடுகளிலிருந்து இரண்டு மூன்று முழம் தள்ளித்தான் நாங்கள் நின்றோம் அப்படியிருந்தும் முடை நாற்றம் மூக்கைத் துளைத்துக் கொண்டு சென்றது. எந்த மிருகத்தினுடைய நாற்றம் அது என்று கண்டுகொள்ள முடியாதபடி சேர்க்கையாக இருந்தது. இந்த மணம் என் குடலைப் புரட்டியது. நான் ரொம்பக் கஷ்டத்தோடு இதைச் சகித்துக்கொண்டேன். ரங்கசாமி மூக்கை மூடிக்கொண்டான். அவன் முகம் சுருங்கியது.

வீடுகளின் முன்புறத்தில் பத்து பன்னிரெண்டு அடி அகலமான பொது முற்றம் இருந்தது. ஒவ்வொரு வீட்டின் எதிரிலும் ஒரு ஆடு, ஒரு மாடு, ஒரு பன்றி அல்லது வகைக்கு ஒன்று இரண்டு என்று சேர்ந்து நின்றன. வெவ்வேறு நிறங்களில் கோழிகளையும் அங்கே காணக்கூடியதாக இருந்தது. இவை மனிதருடைய கால்களுக்கிடையே நுளைந்து ஓடித்திரிந்தன. முன்னால் போய்க் கொண்டிருந்த ரங்கசாமியின் கால்களுக்குள் அகப்பட்டு இடறிய ஒரு கோழி மரண ஓலம் எழுப்பியது. சிறகுகளை அடித்துக் கொண்டு உயரப்பறந்தது. கொக்கரக்கோ சத்தத்துடன் அது மீண்டும் பூமிக்கு இறங்கி எங்கே ஓடி மறைந்தது. இந்தக் கோழியின் அலறலினால் ரங்கசாமி அலமந்து போய் ஒரு பக்கமாக துள்ளிக் குதித்தான். அப்பொழுது கோழியின் எச்சம் அவன் கால்களுக்குள் மிதிபட்டது. அருவருப்பினால் அவன் வாய் கோணிக் கொண்டது. ரங்கசாமி வலது கையினால் சாரத்தின் ஒரு நுனியைத் தூக்கிப் பிடித்தபடி காலை நிலத்தில் தேய்த்தான். முன்தினம் இரவு பிராணிகளுக்குப் போட்ட புல்லும் மரக்கிளைகளின் எச்ச சொச்சங்களும் பிராணிகளின் எச்சமும் அங்கங்கே சிதறிக் கிடந்தன. இரவு பிராணிகள் கழித்த எச்சம் மழையில் ஊறி குளம்பாகிக் கிடந்தது. அந்த நிலத்தில் சாப்பாத்து போட்டு நடந்தால் போதும்

" சர் " என்ற சத்தத்தோடு கால்கள் அதில் புதைந்துவிடும்.

அந்த நிரையில் கடைசி வீடு மாரிமுத்துவுடையது. அன்று ஏதோ அதிசயமாக வீட்டு முற்றம் கூட்டிப்பெருக்கி சுத்தமாக இருந்தது. ஒரு ஆடும் பசுவும் முற்றத்தில் தூணோடு கட்டப்பட்டிருந்தன. அந்த வீடுகளில் உள்ள ஆண்குழந்தைகளின் உடலில் மேற்பாகம் மட்டுமே மூடப்பட்டிருந்தன. அந்த அரைநிர்வாணக் குழந்தைகளுக்கு மத்தியில் மாரிமுத்துவின் பிள்ளைகள் மட்டும் உடம்பு முற்றாக மறைய உடை அணிந்திருந்ததால் அவர்களை வேறாகத் தெரிந்தது. பார்த்த பார்வைக்கு அவர்களுடைய கால் சட்டைகள் பிரயாணத்துக்கு அணியக் கூடியவை போல இருந்தன. எனக்கோ குளிர் தாங்கமுடியவில்லை. இந்தப் பிள்ளைகள் எப்படித் தான் அரை உடுப்போடு இருக்கிறார்களோ தெரியவில்லை.

மாரிமுத்துவைக் காணவில்லை. ஆகவே வீட்டுக் கூடத்துக்கு வரும்படி ரங்கசாமி என்னை அழைத்தான். கூடம் என்று சொல்லப்படுகிற அந்தப் பகுதி நாலடி நீளமும் ஒன்பது அடி அகலமும் கொண்ட சிறிய நிலப்பரப்பு. வீட்டு மூலையில் ஒண்டிக் கொண்டிருந்த கோழியை ஒரு கிழவி வந்து துரத்த முயன்றாள். அவளுடைய நிறமோ அமாவாசை இருட்டுத்தான். அப்படி ஒரு கருமை. அந்தக்கோழியோ விருந்தினர்களுக்காக தன்னுடைய இடத்தை விட்டுக் கொடுப்பதாக இல்லை. அது தன்னுடைய மறுப்பை கொக்கரித்துக் காட்டிக் கொண்டு இருந்தது. கிழவி கோழியைத் துரத்தும் முயற்சிகைக் கைவிடவேண்டியதாயிற்று. முழங்கால் வரை துண்டு கட்டிய ஒரு சிறுமி பக்கத்து வீட்டிலிருந்து ஒரு நாற்காலியை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு நேர் எதிரே சுவரில் இந்து தெய்வங்களின் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதற்கு சற்று கீழே தென்னிந்திய திரைப்பட நடிகர் ராமச்சந்திரன் சிரித்துக் கொண்டிருந்தார். வீட்டில் உள்ளவர்கள் அவருடைய படத்துக்கு பூமாலை சாற்றியிருந்தார்கள். அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால் தான் அவர் சிரிக்கிறாரோ. முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு ஓரக் கண்ணால் பார்த்தபடி இருக்கிறாரே ஒருவர். அவர் தான் சௌம்யமூர்த்தி ஐயா. அவருடைய படத்துக்கும் ஒரு மாலை போட்டிருந்தார்கள். ஆனால் இது முன்னையதை விட அளவில் சற்றுச் சிறியது. இந்தியாக்காரர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்துவிட்டது போன்ற ஒரு பிரமை எனக்கு ஏற்பட்டது.

நான் இந்தப் படங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட ரங்கசாமி.

" இவர் ஒரு தெய்வம் " என்றான். சுற்றுமுற்றும்பார்த்து ஆச்சரியமடைந்து விட்டேன்.

" நான் இப்படி ஒரு லயத்தைப் பாத்ததேயில்லை ரங்கசாமி" என்றேன். இதை ரங்கசாமி பலத்த சத்தம் போட்டு சிரித்துக் கொண்டு தமிழில் மற்றவர்களுக்குச் சொன்னான். வீட்டுக்குள் இருந்து "கசமுச" என்று தொடர்ச்சியாக ஒரு பெண்ணின் குரல் கேட்டது. இது ரங்கசாமி சொன்னதற்குப் பதிலாக இருக்குமோ.

அடுத்த வீட்டுக் குறுஞ்சுவர் வழியாக நடுத்தர வயதுக்காரர் ஒருவர் எட்டிப் பார்த்தார். எங்களை ஆவலோடு நோக்கி " சௌம்ய மூர்த்தி ஐயாவுக்கு புண்ணியம் கெடைக்கணுங்க" என்று படத்தைச் சுட்டிக்காட்டியபடி சொன்னார். " எங்களுக்கு லைட் உண்டு. கால்நடை ஏதாச்சும் வெச்சுக்கலாம் மரக்கறி வளக்கலாம்."

"இப்ப ரொம்ப முன்னேற்றமுங்க" ரங்கசாமி சொன்னான்.

" ஆம்புள புள்ளைங்களுக்கு பதினைஞ்சு வயசாயிட்டா வேல கொடுக்கிறாங்க. சின்னஞ் சிறுசுகளுக்கு ஒரு வயசாகிற வரைக்கும் லக்ஸ்பிரே கொடுக்காங்க. தோட்டத்தில ஸ்கூல் இருக்குங்க. சின்னப் பிள்ளைங்களப் பாத்துக்க இடம் இருக்கு."

மாரிமுத்து வேலைக்கார பெண்ணை கூட்டிக் கொண்டு வரும் வரை நாங்கள் இப்படியே பொழுதைப் போக்கினோம். வீட்டுக்குள்ளே "கசமுச" என்று பேசிக் கொண்டிருந்த இளம் பெண் ஒரு சிசுவை மார்பில் அணைத்தபடி வந்து எட்டிப் பார்த்தாள். சிசுவோ அவளுடைய ஒற்றை மார்பை கைகளால் பற்றிக் கொண்டிருந்தது.

" அந்த பொம்பள வந்து பத்து ரூபா வாங்கிக்கிட்டு போயிருக்கா. அவள் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரங்கசாமி விபரித்தான்.

"நாங்க மலையில இருந்து சத்தம் போட்டமோ இல்லையோ அப்பவே சின்னா அந்த பொம்பளயப் பாக்கப் போயிட்டான்". தூரத்தில நின்ற ஒரு வாலிபனைக் காட்டிச் சொன்னான் ரங்கசாமி. " அந்தப் பொண்ணு வீட்டபூட்டிக்கிட்டு எங்கேயோ போயிட்டா. இப்ப மாரிமுத்து அவள கூட்டிக்கிட்டு வரத்தான் போயிருக்கான்".

" ஏன் அந்தப் பொண்ணுக்கு வர விருப்பமில்லையா?".

"அவளுக்கு விருப்பமான படியாத்தானே தந்தி அடிச்சிருக்காங்க" ரங்கசாமி உள்ளே இருப்பவர்களோடு தமிழில் பேசிவிட்டு பதிலைச் சொன்னான். மாரிமுத்துவின் மனைவிக்கு சிங்களம் ஒரு வார்த்தை கூடப் புரியாது. அந்தக் கறுத்தக் கிழவி கைகளைக் கோத்தபடி முகத்தை முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

நிறத்திலும் தோற்றத்திலும் அவள் மாரி முத்துவின் தாயாகத்தான் இருக்கவேண்டும். அதே சமயம் ரங்கசாமியின் உறவுக்காரியும் கூடத்தான். அவளுக்கும் சிங்களம் புரியாத மாதிரி தான்.

"இந்த ஜனங்களுக்கு சிங்களம் தெரியாதா? சிங்களவங்களும் தோட்டத்தில வேலை செய்யிறதா ரங்கசாமி சொன்னியே?" நான் ரகசியக் குரலில் கேட்டேன்.

"தோட்டத்தில வேல செய்யிற ஜனங்க தமிழ் தான் பேசுவாங்க" சாரத்தை எடுத்து முழங்கால்களுக்கிடையே செருகியபடி சொத்தைப் பற்கள் தெரியச் சிரித்தான் ரங்கசாமி. " தேசக்கு ஒத்த மாதிரி தான் பாசையும் இருக்குமுங்க" – வழுக்கை விழுந்த தலையை கையால் தடவியபடி சொன்னான். இப்படியொரு பழமொழி ரங்கசாமியின் வாயிலிருந்து வருவதென்றால் அதை அவன் ரொம்பப் பெருமையோடு தான் சொல்வான்.

சுவரில் ஒரு கலண்டர் தொங்கியது. இரண்டு பக்கமும் பூச்சூடி கூந்தலை மார்பில் புரளவிட்ட தென்னிந்திய திரைப்பட நடிகையொருத்தி அதில் சிரித்த முகத்துடன் காட்சியளித்தாள். அவள் காதுகளில் தோடு அணிந்திருந்தாள். யாரோ அவளுடைய கண்களுக்கு கண்ணாடி மாட்டியிருந்தார்கள். அதைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு சிரிப்பாக வந்தது. சின்னா என்னைக் கள்ளத் தனமாகப் பார்த்தான். இது அவனுடைய வேலையாகத் தான் இருக்கவேண்டும்.

வேலைக்கு ஒரு தமிழ் பெண்ணைத்தேடித் தருவதாக ரங்கசாமி சொன்னபோது நான் அதைப் பற்றி அதிகம் சிந்தித்துப் பார்க்கவில்லை. எனக்குத் தெரிந்த தமிழ் ஜனங்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நன்றாகச் சிங்களம் பேசுவார்கள். சிங்களமே தெரியாத ஒரு பெண்ணிடம் அறியாக் குழந்தைகள் இரண்டை ஒப்படைக்கலாமா? நன்றாக ஆராய்ந்து பார்க்காமல் விஷயத்தில் இறங்கியதைப் பற்றி நானே என்னை வைது கொண்டேன். ஆனால் இப்போது ஒன்றுமே செய்ய முடியாது. தந்தியிலிருந்த ஆங்கில வாசகத்தில் " பெண் இருக்கிறாள்" என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டிருந்தது.

பனியிலிருந்து தப்புவதற்காக தலையில் கட்டியிருந்த துவாயை மாரிமுத்து கையில் எடுத்தபடி கால்களை வீட்டுப்படியில் தட்டிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். வீட்டிற்குள்ளே இருப்பவர்களுக்குக் கேட்க உரத்த குரலில் ஏதோ சொல்லிக் கொண்டு போனான். ரங்கசாமியின் முகம் மாறியது.

" உங்களுக்கு கடதாசி அனுப்ப காலம் இருந்திச்சுத்தானே" மாரிமுத்துவின் பேச்சைக் கேட்டுவிட்டு அவன் மேல் எகிறி விழுந்தான் ரங்கசாமி.

" அந்த பொம்பள வர்றதுன்னுதான் சொன்னா ". பயந்து பின்னால் பாய்ந்த மாரிமுத்து சொன்னான். அவன் விழிகள் பிதுங்கின.

" அந்த பொம்பள பொய்தான் சொல்லியிருக்கா – இது கையில் குழந்தையுடம் நின்ற மாரிமுத்துவின் மனைவியின் குரல் .

" வெக்கமில்லாத வேசப் பொம்பள " அந்தக் கறுத்தக் கிழவி இப்படிச் சொன்னாள்.

"வர முடியாட்டா ஏன் சொல்லனும் அநியாயம் ஐயாக்குத் தான் அலைச்சல். சே! பாவம் ".

ரங்கசாமி உள்ளங்கையால் நெற்றியில் அடித்தபடி என்னைப் பார்த்துச் சொன்னான்.

"ஐயா வாராருன்னு எங்களுக்குத் தெரியாது. மாரிமுத்து பயத்தால் நடுங்கிப் போனான். " அந்த பொம்பள தான் தந்தி அடிக்க சொன்னா. நேத்து சாயந்தரம் வந்து பத்து ரூபா வாங்கிக்கிட்டு போனா. இப்ப பாத்தா வீட்டையெல்லாம் பூட்டிட்டு அந்தப் பொண்ணு ஒஞ்சிட்டா."

"அநியாய செலவுங்க". ரங்கசாமி துக்கப்பட்டான். " சே" ரெண்டு பேர் ரயிலில வந்திருக்கோம்."

"அந்தப் பொண்ணுக்கு எதிர்பராம ஏதாச்சும் கஷ்டம் வந்து வரமுடியாம போயிடிச்சோ என்னமோ." அவர்களுடைய கதைக்கு மத்தியில் நானும் ஏதோ சொன்னேன்.

"அதுதாங்க" – ரங்கசாமி என்னைப் பார்த்துச் சொன்னான்.

"அவளுக்கு அவசரமா எங்காச்சும் போக இருந்திச்சோ தெரியாது. இப்ப என்னங்க செய்யிறது. சே!"

"நாங்க போவோம். வேற என்ன செய்யலாம். அவ வந்தா அங்கே கூட்டியாரச் சொல்லி மாரிமுத்துவுக்கு சொல்லிவிடுவோம். வந்தப்புறம் பஸ் காசு பயணச் செலவு எல்லாம் கொடுத்திடலாம்."

"சே அநியாயக் காசு, பணம் செலவாயிடுச்சு" வழியெல்லாம் ரங்கசாமி இதை நினைத்து துக்கப்பட்டான்.

நான் ஒன்றும் பெரிய பணக்காரன் இல்லை. ஆனாலும் பயனொன்றுமில்லாமல் வீணாகிப்போன காலத்தைப் பற்றி சிந்தித்தேன். சுனேத்ராவின் சொல்லம்புகளும் என் நினைவில் ஊசலாடின.

"பரவாயில்லை ரங்கசாமி இனி என்னதான் செய்யலாம். ஊர் தேசமாவது பாக்கக் கெடச்சுதே அதுபோதாதா. அந்த திருப்தியில் மனசைத் தேற்றிக்கலாம். " ரங்கசாமியின் கிலேசத்தைப் போக்குவதற்காக நான் ரொம்பப் பிரயத்தனம் எடுத்தேன்.
" அம்மா எனக்கு ஏசப் போறாங்க."

அந்தப் பொண்ணு கெடைக்காம போனதும் ஒருவகையில நல்லது தான்" நான் சொன்னேன். " சின்னப் பிள்ளைங்களப் பாத்துக்கிறதுக்கு சிங்களம் ஒரு வார்த்தைகூட தெரியாதவள கொண்ணாந்து என்ன செய்யறது."

" பொண்ணு இருக்கா உடனே வான்னு தந்தி வந்ததால தானே நாங்க போனோம். சே நா மட்டும் வந்திருக்கலாம்."

" சரி சரி வந்தது தான் வந்தோம் கொஞ்சம் காய்கறி பழமாவது எடுத்துக்கிட்டு போவோம் வேற என்ன செய்றது" நான் வலிந்து சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சொன்னேன். . அந்த தோட்டத்துக்கே உள்ளது ஒரே ஒரு கோயில் தான் அதை நோக்கி ஜனங்கள் கூட்டம் கூட்டமாக போய்க் கொண்டிருந்தார்கள். இடைவிடாமல் பாறைக் கல்லில் அறைந்தால் எப்படி சத்தம் எழுமோ அப்படி ஓயாத பேச்சொலி கேட்டுக்கொண்டிருந்தது.
" என்ன தமிழோ ஒன்றுமே புரியறதில்ல" எதிர்பார்ப்புகள் தகர்ந்த நிலையில் பொறுமை இழந்திருந்த நான் என்னை அறியாமலே இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டேன்.

இவ்வளவு நேரமும் மன உளைச்சலினால் முகத்தை " உம் " மென்று வைத்துக்கொண்டு வந்த ரங்கசாமி வழியில் நின்று சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

" என்ன ரங்கசாமி"?

" ஐயாக்கு ஞாபகமிருக்கா காலையிலே ஓடைக்கரை ஓரமாக பொண்ணுங்க சந்திச்சு சிரிச்சுகிட்டு போனாங்க."

" ஆமா அதுக்கென்ன இப்போ "

" அந்த பொண்ணுங்க எங்கள பாத்து சிரிச்சாங்க இவங்க என்ன சிங்களம் பேசிக்கிறாங்களோன்னு."

இதைக் கேட்டதும் எனக்கே சிரிப்பு வந்துவிட்டது. அதுக என்னை சிங்களவன் என்னுதான் ஏசுதுக. எங்களுடைய ஆபிசில் ஒரு கிளார்க் இருக்கிறார். அவர் ரொம்பவும் குண்டா இருப்பார். நிறமும் கறுப்பு. யாரோ அவருக்கு "தமிழன் " என்று பட்டம் வைத்துவிட்டார்கள்.

ஆனால் யாருமே இந்தப் பெயரை அவர் கேட்கும்படி சொல்வதில்லை. ஒரு சமயம் ஒரு கிளார்க் கோபத்தில் அவரை " தமிழன்" என்று ஏசிவிட்டார். அவ்வளவு தான் கள்ளு தவறணையே போர்க்களமாயிற்று. தன்னை சிங்களவன் என்று யாராவது அழைத்தால் அதை சந்தோஷத்தோடு சகித்துக் கொள்வான் ரங்கசாமி.

" எனக்கு எங்க ஆட்களை பிடிக்கவே பிடிக்காதுங்க " ரங்கசாமி முணுமுணுத்தான்.

" மனுசங்களும், நாயும், பிள்ளைங்களும் எல்லாம் ஒரே கும்பல்ல . பெத்தா சும்மா கூட வரமாட்டா சாப்பாடும் சரியில்ல. எனக்கு என்னமோ எங்க சாப்பாட்டவிட சிங்கள சாப்பாடுன்னா ரொம்பப் பிடிக்கும். அதான்சோறு கறிய சொல்றேனுங்க."

" எனக்கு தமிழ்சாப்பாடுன்னா கொள்ள ஆசை." நான் சிரித்துக்கொண்டே சொன்னேன். " இப்பெல்லாம் எங்க வீடுகளிலேயும் தோச, சப்பாத்தி எல்லாம் பண்ணுவாங்க. சில தமிழ் கடைகளில கொடுப்பாங்களே மரக்கறி சோறு, அடடா எவ்வளவு ருசியாயிருக்கும் தெரியுமா? "

" எனக்கு என்னமோ காலையிலயும் சோறு தான் சாப்பிடனும் போல இருக்கும். சோறு மாதிரி மத்த எதுவுமே இல்லீங்க."

" எந்த சாப்பாடா இருந்தாலும் அதுக்கு சேக்க வேண்டிய உப்புபுளி சப்பு சவரு எல்லாத்தையும் சேத்தாத்தான் ருசி வரும். சம்பல் பண்ணிறதாயிருந்தாலும் அப்படிதான். சிங்கள சாப்போடோ தமிழ் சாப்பாடோ எல்லாத்துக்கும் இப்படித்தான். பெரிய பெரிய ஹோட்டல்களில எல்லாம்

அதுக்குரிய சாமான்கள சேர்ப்பாங்க. அதனால தான் சாப்பாடு ருசியா இருக்கு". நான் இதைப் புரியவைத்தேன்.

" சாதாரண ஜனங்களும் சாதாரண ஹோட்டல் காரங்களும் இதயெல்லாம் சாப்பாட்டில சேக்கிறதில்ல. இதுதான் அவங்க சாப்பாட்டில இருக்கிற வித்தியாசம். உழுத்தம் மாவோட மத்த பதார்த்தங்களும் சேந்துதுன்னா தோசயோட ருசியே வேறதான். ஆனா உண்மையில என்ன போடறாங்க அமெரிக்கன் மாவும் வெறும் தண்ணியும் மட்டுந்தான். " களைப்பு ஒரு புறம், எதிர்பார்ப்புகள் தவிடு பொடியாகிவிட்ட ஏமாற்றம் மறுபுறம் மனம் உடைந்த நிலையில் நான் மௌனமாக சிந்தனையில் ஆழ்ந்தேன். என்னுடைய சிந்தனையெல்லாம் ஒரு வேலைக்காரியை எப்படிப் பிடிப்பது என்பதை தான் சுற்றி வந்துகொண்டிருந்தது. மாரிமுத்து அந்தப் பெண்ணைக் அழைத்துவராவிட்டால் நல்லதென்று இப்பொழுது எனக்குப்பட்டது. தோட்டக்காட்டுப் பெண் இந்தக் காரியத்துக்குக் கொஞ்சம் கூட சரிப்பட்டு வரமாட்டாள் என்பது இந்தப் பயணத்துக்குப் பிறகு தான் எனக்கு நன்றாகப் புரிந்தது. தமிழ்ப் பெண் என்று ரங்கசாமி எனக்குச் சொன்னபோது, ரங்கசாமியின் குடும்பம் போல பழக்கவழக்க உள்ள பெண்ணாக இருப்பாள் என்று தான் நான் நினைத்தேன்.

ரங்கசாமிக்கும் அவனுடைய உறவினர்களுக்கும் இடையில் ஏணி வைத்தாலும் எட்டாத தூரம். இவர்கள் இலங்கையில் வசித்தாலும் பேச்சு வார்தையில் நடையுடைய பாவனைகளில் முழு அந்நியர்கள் என்று தான் சொல்ல வேண்டும். இந்தத் தோட்டப் பிரதேசங்கள் இருக்கே அவை முற்றுமுழுதாக சிங்களக் கிராமங்களிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன. அந்தச் சிங்கள கிராமங்களில் வசிப்பவர்களும் தோட்டக் காட்டு ஜனங்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. இருந்தும் கிராமப்புறங்களிலிருந்து வரும்ரொம்ப வறுமைப்பட்ட குடும்பங்கள் எதிர்பாராத விதமாக தோட்டத்து ஜனங்களின் வீட்டில் வந்து தங்குவது உண்டு. ஆனால் இந்த ஜனங்களினால் தோட்டவாசிகளின் வாழ்க்கை முறையில் எந்தச் செல்வாக்கையும் உண்டு பண்ண முடியவில்லை. இதற்குப் பதிலாக கிராமத்து சகபாடிகளை விட்டு வந்த இந்த குடும்பங்கள் இந்திய வாழ்க்கை முறைகளை அனுசரிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் போக்கை ஒட்டி வாழ்க்கை நடத்தியதுண்டு.

ரங்கசாமி இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மனிதனாக எனக்குத் தெரிந்தான். இளம் வயதிலேயே ரங்கசாமி உறவினர்களையும், தோட்டத் காட்டையும் விட்டுவிட்டு இங்கே ஓடிவந்துவிட்டான். அவன் தோட்டத்து உறவினர்களைப் பார்க்கப்போவதும் கிடையாது. எங்களுடன் தான் அவன் நெருக்கமாகப் பழகுவான். மொத்தத்தில் ரங்கசாமி தன் சொந்தக்காரர்களை உதறிவிட்டு வந்த ஒரு பேர்வழி.

# 9

"இதோ இதயும் ஆக்கு" – சமையல்கட்டை ஒட்டியிருந்த அறையில் குளிர்சாதனப் பெட்டி இருந்தது. சோமா அதைத் திறந்து ஒரு பார்சலை எடுத்த சாவித்திரியிடம் கொடுத்தாள்.

சாவித்திரி மெல்லிய உருளைக்கிழங்கு சீவல்களை காஸ் அடுப்பில் இருந்த எண்ணெய்த் தாச்சியில் போட்டாள். அதிலிருந்து மங்கலான நீல நிறப் புகை கிளம்பியது. துருப்பிடிக்காத வார்ப்பு இரும்பினால் செய்யப்பட்ட காஸ் அடுப்பு ஜன்னல் ஓரமாக இருந்த மேசையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த அடுப்பில் சமைப்பதென்றால் சாவித்திரிக்கு கொள்கை ஆசை. கைகளில் கரியே படாது. இருண்ட வீட்டு மூலையில் விறகு அடுப்புக்கு அருகில் குந்தி இருந்து கொண்டு அடுப்பூதும் தன்னுடைய உருவத்தைத் தானே கற்பனை பண்ணிப் பார்த்தாள் சாவித்திரி. பச்சை றப்பர் விறகைபற்றிப் பிடிக்க நெருப்பு என்னபாடுபடுகிறது. இதனால் கண்களில் மண் விழுந்ததுபோல ஒரே எரிச்சல். சமையலில் சாவித்திரிக்கு இருக்கும் விருப்பத்தைக் கண்ட சோமா அந்த வேலையை அவள் பேரில் சுமத்திவிட்டு தான் தப்பிக் கொள்ள நினைத்தாள். ஆரம்பத்திலிருந்தே சாவித்திரி முழுமனதோடு சோமாவுக்கு கையுதவி செய்யமுன்வந்தாள். அவளிடமிருந்து விதவிதமான சமையல்பாக முறைகளை அறிந்து கொள்ளவேண்டும்என்ற ஆவல் தான் இதற்குக் காரணம்.

" இன்னிக்கு மத்த நாள விட ஜோரா இருக்கும்போல தெரியுதே". பார்சலை கையிலெடுத்த சாவித்திரி சொன்னாள். விதம் விதமா நெறைய இருக்கு இதயெல்லாம் எப்படி சமையல் பண்ணிறதுங்கிறத சொல்லுங்க சோமாக்கா."

"இத ஏற்கனவே ஆக்கித் தான் பாக்கெட்டில் போட்டிருக்காங்க. லிங்குஸ் " ன்னு சொல்லுவாங்க. மொதல்ல சூடாக்கணும் அவ்வளவுதான். அப்புறம் துண்டு துண்டா வெட்டி " சோஸ் " கொஞ்சம் விட்டு எடுத்தா சரி. அதோ சோஸ் போத்தல் அங்கே இருக்கு."

"பெரியம்மா பன்சலைக்கு போனதும் சோமக்கா செய்ற புண்ணிய காரியத்த பாருங்களேன்" சாவித்திரி சிரித்தான்.

"பெரியம்மா இருக்கிறப்போ அவ சொல்றமாதிரி செய்யனும். சின்னையா இருந்தா அவரோட விருப்பம் போல பண்ணனும். இல்லாட்டி முடியாது."

"மனுசங்க குடிக்கிறாங்களே. அது சோமக்காக்கு புடிக்குமா? " இரும்புச் சட்டியில் சிறிதளவு எண்ணெயில் வதங்கிக் கொண்டிருந்த " சொசேஜசை" அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் புரட்டியபடி சாவித்திரி கேட்டாள். பழக்கமில்லாத இந்தச் சாப்பாட்டை தயாரிப்பது சாவித்திரிக்கு ரொம்பவும் ஆசையாக இருந்தது.

"குடிச்சிட்டு தூஷணம் பேசிக்கிட்டு சத்தம் போடற மனுசங்கள எனக்கு கண்ணுல காட்டக்கூடாது." எண்ணெய் வடிக்கும் சுரண்டியால் பொரிந்த கட்லட்டுக்களை எடுத்தபடி சோமா சொன்னாள். அவளுடைய சின்ன மகள் கட்டியிருக்கும் புருஷன் தனபால அப்படிப்பட்டவன் தான்.

" விஜித் ஐயா இருக்காரே கொஞ்சம் குடிப்பார். ஆடிப்பாடி சந்தோஷமாக இருப்பார். இதனால இந்தப் பெரிய வீட்டில் தனிமயாவது இல்லாம போகுது."

"பெரியம்மா முன்னால சோமக்கா இப்படி சொல்லமாட்டீங்க."

"சிரிசேன இருக்கிறப்போ கொஞ்சம் குடிச்சாரு. குடிச்சிட்டு வந்த நாளைக்கு பூனைபோல ஒதுங்கிடுவார். மத்த நாட்கள்ல இருக்கிற கலகலப்புக்கூட இல்ல. அதுக்கு எங்கட தனபால, குடிச்சிட்டு வந்தாபோதும். அந்த பொண்ண கொன்னுடுவான்."

சாவித்திரி கேட்ட கேள்வியை வேறுபக்கம் திருப்பும் எண்ணத்தோடு தான் சோமா இப்படி சொன்னாள்.

சாவித்திரிக்கு சிரிசேனவை நினைவிருந்தது. பெரியம்மாவின் தென்னந்தோட்டத்தில் சிரிசேன காவல்காரனாக வேலை செய்தான். அந்த நாட்களில் விடியக் காலை வேளையில் இஞ்சித் தேநீர் குடிக்க அங்கே வருவான். அவன் இறந்த பிறகு மகள் மட்டும் இருந்தாள். அவளையும் மணமுடித்துக் கொடுத்துவிட்டு சோமா பங்களாவோடு வந்துவிட்டாள். இப்பொழுது அவளுக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது.

" மனுசங்க குடிக்காம இருந்தாத்தான் எனக்கு புடிக்கும். சேதன் பகல் முழுக்க சாகிற மாதிரி பாடுபட்டு உழைப்பான். பின்னேரமானா எல்லாத்தையும் குடிச்சு நாசம் பண்ணிடுவான். எங்கப்பா இருக்காரே வாயிலேயே வெக்கமாட்டார்."

" ரங்கசாமி குடிக்காம இருக்கிறது கஞ்சத்தனத்தால " சோமா சிரிக்கத் தொடங்கிவிட்டாள். " யாராச்சும் வாங்கி கொடுத்தா ரங்கசாமி தெனமுங்க குடிச்சுக்கிட்டே இருப்பான்."

" இல்ல இல்ல அப்பா குடிக்கமாட்டாரு .""

" ஆமா ஆமா வாயில வெக்கமாட்டாரு மூக்குக்கு கீழே வெப்பாரு சோமா சொன்னதைக் கேட்டு சாவித்திரி ஆச்சரியப்பட்டுப்போனாள். " இங்கே வந்தாருன்னா விஜித் ஐயா கிட்ட குடிச்சிட்டுத்தான் போவாரு."

" பொய் ? " சாவித்திரி கண்களை அகலத் திறந்து வியப்போடு கேட்டாள். " அப்படின்னா சேதன் கூப்பிட்டா அப்பா ஒரு நாளும் போறதில்லயே அது ஏன்?."

" ரங்கசாமி குடிப்பான்னு தெரிஞ்சு தான் சேதன் கூப்பிடுவான். ஆனா ரங்கசாமி பணம் செலவாயிடுமேன்னு தெரிஞ்சு போகமாட்டான். விஜித் ஐயா மாதிரி யாராவது குடுத்தா குடிப்பான்.

" அப்பா குடிக்கிறத பத்தி எனக்கு தெரியவே தெரியாது. " சாவித்திரி வெட்கத்தோடு சொன்னாள்.

" எனக்குத் தெரியும் " சோமா சிரித்துக்கொண்டு சொன்னாள். விஜித் ஐயா குடிக்கிற நேரமா வந்தா " இந்தா ரங்கசாமி" ன்னு கிளாசை நிரப்பிக் கொடுப்பார். ரங்கசாமியும் அதோ அங்கே உட்காந்து குடிப்பான்."

சோமா சமையல் கட்டுக்கும் சாப்பாட்டறைக்கும் மத்தியில் உள்ள தாழ்வாரத்தைக் காட்டிச் சொன்னாள். ரங்கசாமி குடிக்கத் தான் வர்ரான் எங்கிறது விஜித் ஐயாவுக்கும் தெரியும்.

" அம்மாவுக்கு இது தெரிஞ்சிருக்காது இல்லையா? " சாவித்திரி கேட்டாள். பௌர்ணமி நாள்ல என்னைய வரச் சொல்லி பெரியம்மா செய்தி அனுப்பினா அப்பா போயிட்டு வரச் சொல்லுவாரு. விஜித் ஐயா எல்லாரும்

சேந்து குடிக்கிறது பத்தி அப்பாக்கு தெரியாதுன்னு தான் நான் நெனச்சேன். எனக்கு சொல்லவும் முடியாது. பெரியம்மா கிட்ட சொல்லிட்டா."

அப்பாக்குத் தெரியும் " பொரித்த பலகாரங்களை தட்டுகளில் அடுக்கியபடி சோமா சொன்னாள்.

" நான் இங்க இருக்கிறபடியாத் தான் ரங்கசாமி சாவித்திரிய பயமில்லாம இங்க அனுப்புறான். சமயல் கட்டிலேயே வெச்சுக்க சொல்லியிருக்கான். முன்னால கூடத்துக்குக் கூட அனுப்பவேண்டாமின்னிருக்கான். எனக்கு எந்த நாளும் சொல்லுவான். சாவித்திரி வராம போனா ரங்கசாமிக்கு குடி கெடைக்காம போயிடுமின்னு பயம் " சோமா சிரித்தாள்.

கூடத்துக்கு அந்தப் பக்கமாக விஜித்தினுடைய அறை இருந்தது. கண்ணாடி டம்ளர்கள் ஒன்றோடு ஒன்று மோதும் மெல்லிய ஓசை அந்த அறையிலிருந்து கேட்டது. விஜித் காலி கண்ணாடி கூஜாவை எடுத்து வந்து குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து குளிர் பானத்தை அதில் நிரப்பினான். அவனுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வக்கீல் கால்சட்டை பைகளுக்குள் கைகளை விட்டு காற்சட்டை கால்களை உயர்த்தியபடி அவசர அவசரமாகக் குளியலறைப் பக்கம் போனார். குளிர்பானப் போத்தலின் மூடி " ஷஸ்" என்ற சத்தத்தோடு தெறித்து விழுந்தது. இளைஞர்களில் ஏழெட்டுப்பேர் அமைதி இழந்தவர்கள் போல முற்றத்திலும் தாழ்வாரத்திலும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

" சோமா குளிர்பானம் அல்லது தேத்தண்ணி கொண்டுவந்து முன்னால இருக்கிற பிள்ளைங்களுக்கு கொடு" கண்ணாடி கூஜாவை நிரப்பிக் கொண்டு வந்த விஜித் சமையறைக்குள் எட்டிப் பார்த்துச் சொன்னான். " அதுக்கு முன்னாடி ஆக்கியிருக்கிறதில அறைக்கு அனுப்பிவை."

கொழுத்துகிற வெய்யிலில் நிற்கும் இளைஞர்களைக் கண்டு சோமா இரக்கப்பட்டாள். அவர்களுக்குக் கொஞ்சம் தேநீர் கொடுக்கவேண்டும் போல அவளுக்குத் தோன்றியது. சிரித்துக் கொண்டு தேநீர் கோப்பையை கையில் எடுத்த இளைஞனை சோமா சந்தேகத்தோடு பார்த்தாள்.

" இந்தப் பிள்ளைங்க விஜித் ஐயாவோட கடையில வேல செய்யிறவங்களா?" அவர்களை சல்கம கடை சிப்பந்திகள் என்று நினைத்துத் தான்அவள் அப்படிக் கேட்டாள்.

" இல்ல நாங்க இன்டவியுவுக்கு வந்திருக்கோம் " – முதலில் சிரித்த இளைஞன் சொன்னான்.

" அது எதுக்கப்பா இன்டவியு?" சோமா புத்தம் புது செய்தியைக் கேள்விக்கப்பட்டவள் போல ஆச்சரியத்தோடு கேட்டாள். இது பெரியம்மாவுக்கே ஆச்சரியப்படும்படியான செய்திதான். விஜித் ஐயா எஸ்.எஸ்.சி.கூட பாஸ்பண்ணாதவர் என்று குறைபட்டுக் குற்றஞ்சாட்டுவாள் பெரியம்மா. அவளுக்கு இது புதுமையாக இருக்காதா?

" ஐயா பாதுகாப்பு நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்போறார்."

" நிஜமாவா?" அது என்ன என்று சோமாவுக்கு புரியவில்லை. இருந்தும் அவளை அறியாமலே இப்படிக் கேட்டுவிட்டாள்.

நேர்முகப் பரீட்சையை முடித்த விஜித்தும், வக்கீலும் இன்னும் இரண்டு நண்பர்களும் எதையோ அக்கு வேறு ஆணி வேறாக பிளந்து தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய கதைக்குக் காது கொடுத்தவக்கீல் நாற்காலியோடு நாற்காலியாக அமிழ்ந்து போய் கண்களை மூடியவாறே தலையை ஆட்டிக் கொண்டிருந்தார்.

"துண்டு காணிய ஈட்டுக்கு வெச்சு வங்கியில கடன் எடுக்க வேண்டியதாச்சு. விஜித் சொன்னான். வக்கீல் இதைக் காதில் போட்டுக் கொள்ளாதவர் போல முக்காலியின் கீழிருந்த போத்தலை மேலே தூக்கி போத்தலின் லேபலை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். மூடியின் பின்புறத்தை நகத்தால் சுரண்டிக் கொண்டிருந்த வக்கீல் ஒரேயடியாக அதைத் திருப்பினார். 'ஹரஸ்" என்ற சத்தத்தோடு மூடி' திறபட்டு வெளியே விழுந்தது.

"எனக்கென்றே இருந்த கடைசி நிலம்". வக்கீல் போத்தலில் இருந்த திரவத்தில் சிறிதளவைத் தன்னுடைய கண்ணாடி டம்பளரில் வார்த்தார். பிறகு கண்களைச் சுருக்கியவாறு போத்தலை உயர்த்திப் பார்த்தார்.

"ஒரு வண்டியும் வாங்கிட வேண்டியது தான்" விஜித் சொன்னதைக் கேட்காதவர் போல வக்கீல் பேசினார். நாம கூலிக்கு வண்டி வெச்சுக்கலாம்"

"எங்களுக்கு அவ்வளவு தூரம் செய்ய முடியாது." விஜித் ரொம்பக் கண்டிப்பாகச் சொன்னான். எல்லாத்தையும் விட நல்ல காரியம் என்ன தெரியுமா? எங்களுக்குள்ள யாராச்சும் ஒருத்தர் வாகனத்த குடுத்து நியாயமான

ஒரு கணக்க எடுத்துக்க வேண்டியதுதான்."

அந்தக் கூட்டத்தில் பெரிய வியாபாரி ஒருவரின் மகன் இருந்தான். ஆளும் நல்ல வாட்டசாட்டமானவன். அவன் இந்த முயற்சிக்கு பணம் முதலீடு செய்ய ஒப்புக் கொண்டான். அவனுடைய பெயர் கமுனு, வக்கீலுக்கோ பணம் முதலீடு செய்யும் நோக்கம் கிடையாது. ஆகவே அவரை சம்பளம் கொடுத்து ஒரு ஆலோசகராக வைத்துக் கொள்வது என்று விஜித் தீர்மானித்தான். ஆனால் வக்கீலோ தன்னிடம் முதலீடு செய்வதற்கு பணம் இல்லாவிட்டாலும் கூட நிறுவனத்தில் பங்குதாரராக வந்துவிடலாம் என்று யோசித்தார். பெயருக்குத் தான் அவர் வக்கீலே ஒழிய வக்கீல் தொழிலுக்கும் அவருக்கும் வெகுதூரம். நொதாரிசாக வேலைபார்த்து வந்த அவருக்கு ஏதோ பிரச்சினையால் வக்கீல் பரீட்சை எழுத முடியாமல் போய்விட்டது. என்று பெரியம்மா சொல்வதுண்டு.

"அவரோட மூச்சுக் காத்துப்பட்டாலே ஆபத்து விஜித் உனக்கு இந்த வக்கீலோட என்ன கொடுக்கல் வாங்கல் சம்பந்தம் " என்று பெரியம்மா விஜித்துக்கு ஏசுவாள்.

"நாங்க சீக்கிரமா பதிஞ்சிகிட்டது நல்லதா போச்சு. " தான் கொடுத்த ஆலோசனை எவ்வளவு பெறுமதி வாய்ந்ததென்பதை வெளியே தெரியப்படுத்துவதற்காக வக்கீல் இப்படிச் சொன்னார். " இந்தப் பசங்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கனும். நான் அதுக்கு ஒரு ஆள பிடிச்சு தாரேன். முன்னம் ராணுவத்தில இருந்த ஒருத்தரை தினசரி ரெண்டு மூணு மணிநேரத்துக்கு வேலைக்கு வெச்சுக்கலாம். மனுஷனுக்கு பணம் ஒன்னு கொடுக்க தேவல்ல" வக்கீல் ஒற்றைக் கண்ணைச் சுருக்கியபடி சொன்னார்.

இவர் கூட ஏதோ வம்பில் மாட்டி வக்கீல் மூலம் தப்பிக் கொண்ட ஆளாகத்தான் இருக்கவேண்டும் என்று விஜித் நினைத்தாள்.

சமையல் கட்டுத் தாள்வாரத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் பெரியம்மா சாய்ந்திருந்தாள். சாய்வு நாற்காலி அருகே இருந்த வாங்கில் யஹோனிஸ் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தான். விக்கி வக்கி அழுது கொண்டிருந்த அவன் இடைக்கிடை சாரத்தின் ஓரத்தை எடுத்து கண்ணீரையும் துடைத்து மூக்கிலிருந்து வழிந்த சளியையும் துடைத்தான். அரைப்போத்தல் கசிப்பு உள்ளே இறங்கியிருந்தது. அதனால் தான் அவன் இவ்வளவு நன்றாக அழுதான். தன் எதிரில் அழுது கொண்டிருக்கும் மனிதனின் கோமாளி வேஷத்தைக் கண்டு பெரியம்மா சிரிப்பை அடக்க முயற்சி செய்தாள். இதனால் அவளுடைய

தோள்கள் குலுங்கின. சோமா அவன் கண்டு கொள்ளாதபடி மறைவாக இருந்துகொண்டு விழுந்துவிழுந்து சிரித்தாள்.

சிரித்து சிரித்து பெரியம்மாவின் கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது. அவள் அதைத் துடைத்தபடி "உன்னோட முதலைக் கண்ணீரை நிறுத்திக் கொள் யஹோனிஸ். எங்கள சும்மா சிரிக்கப்பண்ணாதே" என்றாள்.

யஹோனிஸ்வாங்கிலில் சரியாக உட்கார்ந்து கொள்ள முயற்சிசெய்தான். மீண்டும் குனிந்து மூக்கையும், கண்களையும் துடைத்துக்கொண்டு " எனக்கு வாழ வழியில்லீங்க விஜித் ஐயா என்னோட வேலய இல்லாமலாக்கிட்டாரு. துவக்கையும் பறிச்சிட்டார்" என்றான்.

யஹோனிஸ் பெரியம்மாவுக்குச் சொந்தமான தென்னந்தோட்டத்தைப் பார்த்துக்கொண்டதோடு வயலிலும் வேலை செய்தான். அவனுக்கு குழந்தைகள் கிடையாது. சாப்பிட்டு சந்தோஷமாக வாழ்க்கையை ஓட்டுவதற்கு அவனிடம் போதுமான அளவு பணம் இருந்தது. ஆனால் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி கசிப்பு வியாபாரத்தில் இறங்கிவிட்டான்.

" நான் விஜித் ஐயாகிட்ட கேட்டுப் பாக்கிறேன்" விரக்தியடைந்த மனத்தோடு பெரியம்மா சொன்னாள். விஜித் யஹோனிசை அகற்றிவிட்டு அவனுடைய வேலையையும் பாதுகாப்பு சேவையினர் வசம் ஒப்படைத்து விட்டானோ என்று அவளுக்கச் சந்தேகமாக இருந்தது. குடிகாரனாக இருந்தாலும் யஹோனிஸ் நல்ல கைராசிக்கார கமக்காரன்.

"யஹோனிஸ் நான் கேட்டுப் பாக்கிறேன். ஒன்னும் சரியா தெரியாம சொல்ல முடியாது தானே."

ஆறுமாதங்கள் கழிந்தன. விஜித்துடைய தொழில் அவன் நினைத்ததை விட அதிக லாபத்தைக் கொடுக்கத் தொடங்கியது. சொந்த நிறுவனத்தின் மூலமே பாதுகாப்புச் சேவைக்கு ஆட்களை அமர்த்துவதால் தொழிலாளர் நிருவாகம், மேலதிக நேரப்படி,சலுகைப்படி லீவு முதலிய பிரச்சினைகள் எழலாம். இதிலிருந்து தப்பிக் கொள்வதற்காக தொழில் அதிபர்கள் தனியார் பாதுகாப்புச் சேவையை நாடித் தஞ்சமடைகிறார்கள். ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்வது எல்லா வகையிலும் இலாபகரமானது என்று அவர்கள் நினைத்தார்கள்.

வக்கீல் மகா சூழ்ச்சிக்காரனாக இருந்தாலும் அவருக்கே இப்பொழுது

இலக்குத் தவறிவிட்டது. தொழில் விஜித்தின் பெயரில் தான் பதிவாகியிருந்தது. மூலதனத்தில் பங்குதாரராக இருந்த கமுனுவுக்கு தொழில் நிர்வாகத்தில் அதிகம் நாட்டம் இருக்கவில்லை. காமசுகத்தில் திளைத்திருந்த தனது மகன் தன்னுடைய செல்வம் எல்லாவற்றையும் நாசமாக்கி விடுவான் என்று நினைத்த தந்தையார் அவனை சல்கம தொழில் முயற்சியில் ஈடுபடுத்திவிட்டார். அவனுக்கும் விஜித்துக்கும் சிநேகம் உண்டாயிற்று. விஜித்தை விட கமுனு படித்தவன்.ஆனால் நடைமுறை வாழ்க்கை பற்றிய அறிவில் விஜித்தோடு நேருக்கு நேர் நிற்க லாயக் கில்லாதவன். அவன் தான் போட்ட முதலுக்குக் கிடைக்கும் இலாபத்திலேயே திருப்திப்படுபவன். எந்த ஒரு காரியத்தையும் தொடக்கி, கொண்டு நடத்தக்கூடிய திறமை விஜித்துக்கு இருந்தது. இதனால் தான் ஆறே ஆறு மாதங்களில் ஏனைய தனியார் பாதுகாப்பு சேவைகளையெல்லாம் மிஞ்சும் படியாக பெயர் எடுக்கக் கூடியதாக இருந்தது. நடைமுறை வாழ்க்கையைப் பற்றிய அறிவு இருந்ததால் பெரிய படித்த அறிவாளியாக இருந்தாலும் அவனிடத்தில் தோற்றுவிடுவார்கள். தனியார் வங்கியொன்றில் நடந்த ஒரு சிறிய திருட்டை விஜித்துடைய பாதுகாப்புச் சேவையினர் கண்டுபிடித்துக் கொடுத்ததால் அதன் புகழ் மேலும் அதிகரித்தது. இப்படியான ஒரு இலாபத்தை உத்தேசித்து திட்டம் போட்டு நடத்தப்பட்ட ஒரு திருட்டு இது என்று தனியார் பாதுகாப்புச் சேவையொன்றின் சொந்தக்காரர் பேசிக் கொண்டார்.

சாப்பாட்டு மேசைக்கு மேலே கொத்து விளக்கு தொங்கியது. அதிலிருந்து வெளிப்பட்ட முத்தொளி சாப்பாட்டு மேசை எங்கும் பரவியது. பகல் சாப்பாடு எப்படியிருந்தாலும் இரவுச் சாப்பாட்டுக்கு அவன் வீட்டுக்கு வந்தே ஆகவேண்டும் என்பது அவன் தாயாருக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவள் இரவுக்கு விசேஷமாக ஏதாவது தயார் பண்ணி வைத்திருப்பாள். உணவை ருசித்துச் சாப்பிடும் மகனை ஆசையோடு பார்ப்பாள். தனக்கு மட்டும் கனமில்லாத உணவாக ஏதாவது தயார் பண்ணி சாப்பிடுவாள். ஒரு துண்டு பாண் 'ஆவியில் வேகவைத்த அல்லது பொரித்த ஒரு மீன் துண்டு " சலட் " போட்ட ஒரு மரக்கறி அல்லது ஏதாவது ஒரு பழம் இவ்வளவு தான் அவளுடைய இரவு உணவு. ருசித்துச் சாப்பட்டாலும் விஜித் சாப்பாட்டில் குறை கண்டுபிடிப்பான். அவன் குறை சொல்லாத நாளே கிடையாது.

" இந்த சலடுக்கு புளி கொஞ்சம் அதிகம் " தன்னுடைய தட்டில் ஒரு கரண்டி சாலட்டை எடுத்துப் போட்டபடி விஜித் சொன்னான்.

சாப்பாட்டு மேசையில்பரிமாறிக் கொண்டிருந்த சோமா " விஜித் ஐயா எந்தநாளும் ஏதாச்சும் சொல்லிக்கிட்டே இருப்பீங்க. இந்த சாலெட் நான்

செஞ்சதில்ல. பெரியம்மா தான் செஞ்சாங்க".

தானே செய்ததாக இருந்தால் கூட விஜித்துடைய குற்றச்சாட்டுக்குப் பயந்துசில வேளைகளில் இப்படிச் சொல்லிவிடுவாள்.

" நல்லாச் செய்த நாளைக்கு நல்லாருக்குன்னு சொன்னாலாவது பரவாயில்ல".

"நல்லாயிருந்தா எதுக்கு சொல்லணும் அது தேவையில்ல. சாப்பாடு ருசியா இருக்கிற நாளைக்கு நான் ஒன்னுமே பேசாம சாப்பிடுறதில்லையா? "

" உன்னோட விருப்பம் போல ஆக்கிப் போடறதுக்கு யாரால ஏலுமோ அந்த ஆள கூட்டி வெச்சுக்க வேண்டியது தானே." கை துடைக்கும் துண்டினால் உதடுகளை ஒற்றிக் கொண்ட தாயார் சொன்னார். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் திருமணப் பேச்சை வியாஜமாக வைத்துத்தான் அவள் பேசுவாள்.

" ஏன் சோமா இங்கேருந்து போகப் போறாளா? " விஜித் முட்டாள் தனமாகப் பேசினான். சோமாவுக்குப் போக்கிடம் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். விஜித்துடைய கதையை கேட்டு அம்மாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

" திருணம பேச்சை எடுத்தாலே நீ ஏதாச்சும் சொல்லி தப்பிச்சிக்கிறே. உனக்கு ஒத்த ஒரு ஆள நீயே தெரிஞ்செடுத்துக்க ஒனக்கு முடியாதுன்னா சொல்லிடு நான் அண்ணாகிட்ட சொல்லி யாரையாச்சும் பேசறேன்."

" இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே அம்மா. விஜித் பிடிவாதமாகச் சொன்னான்." இப்பதானே பிஸ்னஸ் வளர ஆரம்பிச்சிருக்கு. இந்த நேரத்தில கலியாணம் பண்ணிக்கிறதெங்கிறது தன்னோட கழுத்துக்கு தானே சுருக்கு போடுற மாதிரி காரியம்".

" அவ்வளவு காலம் அந்த புள்ள காத்திருக்குமா ?"

" என்ன எந்தப் புள்ள?"

"ஏன் பத்மினியோட ஒனக்கு சம்பந்தம் இருந்திச்சு தானே?"

விஜித்துடைய போக்கில் மாற்றம் ஏற்படுவதை தாயார் கவனித்தார். அவன் சில வருடங்களாகக் கழித்து வந்த சல்லாப வாழ்க்கை மாறத் தொடங்கியிருந்தது. காதல் விவகாரத்தால் தன்னுடைய மகன் நல்லவனாக மாறத் தொடங்கிவிட்டான் என்று அவன் நினைத்தாள்.

"ஐயோ அது பழைய கதையாச்சே " விஜித் பலமாகச் சிரித்தான்.

" என்ன அவ்வளவு காலம் ஆயிடிச்சா? அண்ணாவோட மகளிட பொறந்த நாள் அன்னிக்கு இரகசியப் பேச்சு பேசிக்கிட்டு இருந்தீங்களே?"

பத்மினி மூத்த மகனுக்கு மச்சாள் முறை. அவளை விஜித் திருமணம் செய்து கொள்வான் என்று தான் அம்மா நினைத்திருந்தாள். ஒரே குடும்பத்தில் மணம் முடிப்பது நல்லதல்ல என்று எண்ணியதால் ஆரம்பத்தில் இந்த சம்பந்தத்தை அவள் விரும்பவில்லை. இருந்தாலும் தன்னுடைய மருமகளை விட அழகில் மட்டுமல்ல குணத்திலும் பத்மினி சிறந்தவள் என்பதை காலப்போக்கில் உணர்ந்து கொண்டாள். இதனால் அவள் மனம் மாறியது.

" பெரியண்ணா எங்கிட்ட இதப் பத்தி கேட்டார்" அம்மா வியப்போடு சொன்னாள். உனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லாட்டா பத்மினியின் வீட்டாருக்கு நீ ஏன் அப்படி இருப்பது போல காட்டினாய்? அவங்க பெரிய நம்பிக்கையோட இருக்காங்க."

"மனுசங்க எப்பவுமே முட்டாள்தனமாக நடந்துக்கிறதில்ல. பெரியண்ணாவும் மச்சாளை சும்மா எந்தலையில கட்டிவிடலாமான்னு பாத்திருப்பார்.

அம்மா கண்களை நெற்றிவரை உயர்த்தி " அது சரியான கதையாயிருக்கே பத்மினிய காதலிக்கச் சொன்னது பெரியண்ணாவா?"

" பொண்ணக் குடுக்கமட்டும் முந்திக்கிட்டு வந்திடுவாங்க. இந்தத் தொழிலை ஆரம்பிக்கிறதுக்கு பணம் கொஞ்சம் கேட்டபோது யாராவது அஞ்சுசதம் குடுத்தாங்களா?"

" நான் பணம் சேர்க்கிறதுக்கு நாய் மாதிரி பாடுபட்டேன். அம்மாவுக்கு இதெல்லாம் தெரியுமா? - அவன் கையை முஷ்டியாக்கி மேசையில் ஓங்கிக் குத்தினான். இதனால் வலை பின்னிக் கொண்டிருந்த சிலந்தி கூட சிலையாகிவிட்டது. "என்னை முட்டாள் ஆக்கலாமின்னு நெனச்சிக்

கிட்டிருப்பீங்க. நான் எதனால நஷ்டப்பட்டேனோ அதே வழியால மேல வரத்தான் முயற்சி பண்றேன். நான் என்னைக்காச்சும் கட்டப்போறது மெத்த வீட்டுச் சீமாட்டியத்தான். இத அண்ணாகிட்ட சொல்லுங்க. அவரு சீ.ஏ.எஸ்.காரன். நான் வெறும் ஜே.எஸ்.சிகாரன் தானே. பணம் இருந்திச்சின்னா பெரியண்ணாவும் மச்சினி சார்பில ஒரு விண்ணப்பம் போட்டு வெக்கலாம்."

" எனக்கு இதனால என்ன வந்திடப்போகுது. நான் உன்னய பத்மினி கூட சம்பந்தம் வெச்சுக்க சொல்லவும் இல்ல. வெச்சுக்காததேன்னு தடுக்கவுமில்ல." இதைச் சொல்லும்பொழுது அம்மாவுக்கு ரொம்பவும் ஆச்சரியமா இருந்தது. விஜித்துடைய போக்கைப் புரிந்துகொள்வது அவளுக்கு சிரமமாக இருந்தது.

" காசு பணம் கூடக்கூட ஒனக்கு பேராசையும் கூடிக்கொண்டே போற மாதிரி தோணுது. நீ எதுக்கு யஹோனிச வேலயில இருந்து நிறுத்தினே? உடைந்து போன உள்ளத்தோடு அவள் கேட்டாள்.

" நல்ல வேல தான் பண்ணுறான். அவன் கள்ளச்சாராயம் வித்து என்னோட பேரையும், சந்திசிரிக்க வெச்சுட்டானே."

" அவன் ரொம்ப நாளா நம்பகூட இருக்கான். அவனுக்கு போறதுக்கு வேற இடமா இருக்கு?"

" அத அவன் தெரிஞ்சுக்கனும். நமக்கு போகவர இடம் இல்லேன்னா நமக்கு கொடுக்கமட்டும் யாரோ இருக்காங்களா?"

" அந்த கதையில உண்மையில்லேன்னு யஹோனிஸ் சொல்றான். அவன் கிட்ட கள்ளச் சாராயம் கிடையாது" – தன்னுடைய மகனோடு பேசி ஜெயிக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். அதை அறிந்துதான் அவள் அப்படிச் சொன்னாள்.

" நடந்த விஷயம் அம்மாவுக்கு தெரியாது. பொலிசுக்கு யாரோ ஒற்று குடுத்திட்டாங்க. கள்ளச்சாராயம் வடிக்கிறவங்கள தேடி பொலிஸ் வந்திடுச்சு."

விஜித் இரகசியம் பேசுகிறவனைப்போல குரலைத் தாழ்த்தி கண்களை உயர்த்தி சொல்லத் தொடங்கினான்.

" பொலிஸ்காரங்க சிவில் உடுப்பில் இருந்தாங்க. ஆனா யஹோனிஸ் அவங்க பொலிஸ்காரங்க தான் எங்கிறத எப்படியோ தெரிஞ்சுகிட்டான். அவன் பெரிய பெருமை புடிச்சவன். ஆனா அவனோட பொண்டாட்டி வாடிக்கைக்காரங்க யாரோ வந்திருக்கிறதா நெனச்சிட்டா. புருஷன்காரன் வந்தவங்களோட பேசிக்கிட்டு இருக்கிறப்போ அவ உள்ளே போய் நல்லா கழுவிய கண்ணாடி டம்பளர்களில் சாராயம் ஊத்திக்கிட்டு வந்திட்டா. ஏன்னா வந்தவங்க எல்லாம் கால் சட்டை போட்டிருந்தாங்க. திருடன் கையும் களவுமாக பிடிபட்டான்.

மேசையை ஒதுக்கிக் கொண்டிருந்த சோமா விழுந்து விழுந்து சிரித்தாள். அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"இன்னும் நூறு ஆட்கள் எடுத்தாலும் எங்ககிட்ட வேல இருக்கு. நான் யஹோனிசுக்கும் ஏதாச்சும் சின்ன தொழில் கொடுக்காமலா போயிடுவேன். காவல்செய்யிற லட்சணம் சரியில்ல."

"தன்னால முடியுமிங்கிற வரையில தான் எதையும் ஒத்துக்கனும். அதுக்கு மேல எதையும் தோள்ள தாங்கிக்காதடா." யாருடைய உதவியும் இல்லாம பணம் சம்பாதிக்கத் தொடங்கிய மகனப் பார்த்து தாயார் வாஞ்சையோடு சொன்னார். விஜித்துக்கு இப்படியொரு நோக்கம் இருக்கும் என்று அவள் நினைத்துப் பார்த்ததேயில்லை.

"இடம் பத்தல்ல அதுதான் செய்ய முடியாம இருக்கு. ஆபிசை இங்கே எடுத்துக்கிட்டு சல்கமவில இருக்கிற கடய பயிற்சி மாதிரி வேலைகளுக்கு வெச்சுக்கலாம்."

"இங்கேயா ? உனக்கென்ன பைத்தியமா விஜித்?"

" அம்மாக்கும் எனக்கும் இத்தன பெரிய வீடு எதுக்கு? நாங்க ஒரு பகுதிய வெச்சுக்கிட்டு முன் பக்கத்த ஆபிஸ் ஆக்கிடலாம். ஒன்று ரெண்டு வருஷத்தில நான் தலையெடுத்திட்டேன்னா இத வேற இடத்துக்கு மாத்திக்கலாம் அம்மா."

" நீ எங்க வேண்ணாலும் எடுத்துக்கிட்டு போடா. ஆனா சாகிறவரைக்கும் இங்கே என்னய நிம்மதியா இருக்கவிடுடா விஜித்."

" அம்மாக்கு இதனால ஒரு கஷ்டமும் வராது. இங்க ரொம்பப் பேர் இருக்கமாட்டாங்க."

" எப்பவும் வாகனங்கள் வந்து கிட்டும் போய்க்கிட்டுமிருந்தா வயசானவங்க எப்படி நிம்மதியா இருக்கிறதாம்? கொஞ்சம் யோசிச்சு பாருடா. அது மட்டுமா எனக்கு இந்த வாகனங்களோட எண்ணெய் மணம் தாங்கிக்க முடியாது. தலவலி வந்திடும்."

" நாள் போக அதெல்லாம் பழகிடுவீங்க அம்மா. ஒரு வருஷம் பொறுத்துக்குவோம். " விஜித் கெஞ்சிக் கேட்டான். விஜித் நினைத்த காரியம் செய்பவன். தொழிலினால் அவனுடைய இயல்பான குணங்கள் மேலோங்கியிருந்தன. விஜித்தும் அவனுடைய தந்தையாரைப் போலவே நினைத்ததைச் செய்து முடிப்பவன். அவனுக்கு வக்கீல் தான் இந்த, யோசனையை சொல்லியிருப்பார் என்று அம்மா நினைத்தாள்.

" அப்படியானால் நான் வேறு இடம் தேடிக்க வேண்டியது தான்." இதைச் சொல்லும் பொழுது அவள் குரலில் கோபத்தைவிட சோகமே தொனித்தது. அவளுடைய பெரிய மகன் நாவலையில் இருக்கிறான். அவனோடு போய்த் தங்க அவளுக்கு விருப்பம் தான். ஆனால் அந்த சூழ்நிலை அவளுக்குப் பிடிக்காது. இந்த மாதிரி அமைதியான இடத்தில் வசிப்பது அவளுடைய மனதுக்கு எவ்வளவோ நிம்மதி.

" நீ நெனச்ச காரியம் செஞ்சு முடிக்கிறவன். நான் சொல்றது நீ கேப்பியா?" அவள் சோகத்தோடு தலையைத் தொங்கப்போட்டவாறு சொன்னாள்.

அம்மா சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு எழுந்து " நீ இப்படி செய்யாம போனாத் தான் அது ஆச்சரியம்" என்றாள் இவ்வளவு நேரமும் இருந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது. அவளுக்கு வயதாகிவிட்டது. அதனால் மூக்கில் தொடங்கி கன்னங்கள் வரை நீண்டிருந்த சுருக்கங்களினால் கன்னங்கள் பிய்ந்து தொங்குவதுபோல் ஒரு தோற்றம் .

அவள் விஜித் இருந்த திக்கைப் பார்க்காமல் நான் தர்மம் செய்து கொண்டு கடைசிக் காலத்த' சந்தோஷமாகக் கழித்துவிட்டு சாகலாமின்னா அதுக்கு நான் குடுத்து வைக்கல்ல." என்றாள்.

" சோமா நீயும் சாப்பிட்டு படுத்துக்க –" அம்மா தன்னுடைய அறைக்குக் கிளம்பினாள்.

விஜித் துக்கத்தோடு தலையைக் குனிந்து கொண்டான். அவன்

மேசையிலிருந்த சோற்றுப்பருக்கையை நகத்தினால் தட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய துக்கம் கண் இமைக்கும் நொடிக்குள் மறைந்துவிடும். தொழில் துறையில் ஏற்பட்ட திருப்தி மேலெழுந்து சோகத்தை அடக்கிவிட்டது. தான் ஆரம்பித்திருக்கும் பாதுகாப்பு சேவை அதையொத்த பேர்போன ஏனைய தொழில் முயற்சிகளுடன் தோளுடன் தோள் நிற்கக்கூடியது. என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. அது நல்ல இலாபகரமான தொழில் என்பது ஆரம்பித்து ஆறுமாதங்களின் பின்னர் தான் தெரியவந்தது. வேலையில் சேர்ந்தவர்கள் பிணையாக பணம் முதலீடு செய்திருந்தார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் மிக உக்கிரமாக இருந்ததால் குறைந்த சம்பளத்துக்கு வேலை தேடிவருபவர்களுக்கு பஞ்சமே இல்லை. வேலை கடுமையாக இருந்ததால் பலர் விரக்தியடைந்து விரைவில் வேலையிலிருந்து விலகி விடுகிறார்கள். அப்படி விலகிக் கொள்ளாதவர்கள் ஆறு மாதங்களில் வேலையை இழக்க நேரிடும்.

பணம் சேர்ப்பதற்காக தான் தோண்டிய ஊற்றிலிருந்து பணம் மட்டும் ஊறிவரவில்லை அதனுடன் சேர்ந்து பலமும் புகழும் வருகிறதென்பதை தெரிந்து கொள்ளாத தனது தாயார் பேரில் விஜித்துக்கு இரக்கம் பிறந்தது. அவன் நாற்காலியிலிருந்து எழுந்தான். ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது. முஷ்டியை ஓங்கி மேசையில் ஒரு குத்து குத்தினான்.

# 10

வர்ணமயமான மின்சார உபகரணமொன்றை மேசைமேல் வைத்து விசையைத் திருப்பி அதை இயக்கினாள் சுனேத்ரா. அவளுடைய முகம் மகிழ்சியால் பிரகாசமடைந்தது. அதில் பழச்சாறு பிழியலாம். அவ்வாறு தயாரித்த பழச்சாற்றை சுனேத்ரா எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தாள்.

" இனிமேல் நம்ம பையனுக்கு மொன்டிசூரிக்கு எடுத்துக் கிட்டுப்போக ஒரு நொடியில ஜூஸ் பண்ணிடுவேன். இல்லையாடா கண்ணா? " என்று ஒரே முச்சில் ஜூசை குடித்துவிட்டு கண்ணாடி டம்பளரை மேசைமேல் வைத்து கண்களை சிமிட்டியபடி நின்ற தன் மகனைக் கேட்டாள்.

அவள் எனக்கும் ஒரு டம்பளர் ஜூஸ் தயார் பண்ணிக் கொண்டு வந்து பெருமையுடன் பரிமாறினாள். அந்த மின்சார உபகரணத்தைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தையும் அறிந்து கொள்ள அவள் விரும்பினாள்.

அதன் விலை குறிப்பிட்டிருந்த லேபிளை நான் கையில் எடுத்தேன். உதாசீனக் குரலில் " இதுக்கெல்லாம் பணம் செலவு செய்யிறது வீண். இன்னும் எவ்வளவு வேலை இருக்கு. வீட்டு வேலயே இன்னும் முடியல்ல. "

" அவ்வளவு பணம் குடுத்து யாரு இத வாங்கினா?"

"ஒகோ அப்படின்னா இது பரிசா கெடைச்ச சாமானா?" நான் ஏளனமாகக் கேட்டேன்.

"நான் அப்படி சொன்னேனா? நான் இத தவணை முறையிலபணம் கட்டி எடுத்துக்கலாமின்னு தான் வாங்கினேன். கொஞ்சம் கொஞ்சமா கொடுத்தா தெரியாமலே போயிடும். நான் மொதல்ல நூத்தம்பது ரூபாதான் குடுத்தேன். ஒரே தரத்தில வாங்கிறதெங்கிறது நடக்கிற காரியமா என்ன? "

"சும்மா கதை அளக்காதே சுனேத்ரா. இவ்வளவு தூரம் இரக்கம்

காருண்யம் எல்லாம் உள்ள மொதலாளி யார்?"

"ஐயோ ஐயோ! உங்களுக்கு இதுகூடப் புரியலையா? இப்படி ஏழு நூறு எண்ணூறு ரூபா சாமான்கள் மட்டுந்தானா அங்கே தவணை முறையிலகெடைக்குது? அலுமினியம் சாமான்கள்ல இருந்து தொலைக்காட்சி பெட்டிவரை அந்த புதுக்கடையில தவணை முறையில குடுக்காங்க."

"மூடிக்கட்டி வெச்சிருக்காங்களே அந்தக் கடையா?"

"ஒரு கடை இல்லீங்க. ஒரு கடை வரிசையே இருக்குங்க. புடவை, தச்ச துணிமணிங்க, சாப்புச் சாமான்கள் தேவையானது எல்லாம் இருக்குங்க. இப்ப சல்கம திட்டத்தில இருக்கிற நோனாமாரும் சாமான்கள் வாங்க இங்க வர்ராங்கன்னா பாத்துக்குங்க."

"தெலபுவ நகரமே தலைகீழா மாறிட்டுதுங்க". நான் பத்திரிகை கொண்டு வந்திருக்கிறேனா என்று பார்ப்பதற்காக அங்கே வந்து கொண்டிருந்த பெமியானு சொன்னான்.

"முன்னம் எத்தன கட இருந்திச்சு? இப்ப இருக்கிற கடக்காரங்கள நமக்கு தெரியாதுங்க. அவன் சொன்னான்.

"ரத்னசிரி கடயில தேவையானத வாங்கிக்கச் சொல்லி ஐயா சொல்லிருக்காங்க. மாசக் கடசிலே அவரு வந்து கணக்க தீர்த்துடுவாரு. இப்ப அப்பிடி இல்லீங்க ரத்னசிரி கடய குத்தகைக்கு எடுத்திருக்கிறவங்கள நமக்கு தெரியாதுங்க. அவன் கிட்ட கடனுக்கு எப்படிங்க சாமான் வாங்கிறது. ஒரு பீடி கூட கடனுக்கு வாங்க முடியாதுங்க. பணத்த நீட்டினாத் தான் சாமான எடுத்து குடுப்பான்."

"இப்பெல்லாம் சந்திப்பக்கம் போக எனக்கு வாய்ப்பில்ல". நான் சொன்னேன்.

"சந்திக்கு இதுக்குன்னு போனாத்தான் உண்டு".

"இப்ப ஸ்டேஸன் பக்கத்தில வேண்டியளவு கடைகள் இருக்கே. மரக்கறி வேணுமா, மீன் வேணுமா எல்லாம் கெடைக்கும். ரயில்ல இருந்து எறங்கி அங்கேயே வாங்கிக்கிட்டு வந்திடலாமுங்க" பெமியானு சொன்னான்.

"நான் அங்கே எதுவுமே வாங்கிறதில்ல. வேற ஒண்ணும் இல்ல வெல

கொஞ்சம் ஜாஸ்தி. அதனால தான்" சுனேத்ரா சொன்னாள். " சந்தியில இருந்து சமீபத்தில்தான் இந்த கடைகள் இருக்கு ஆனாலும் வெலையில வித்தியாசம் இருக்கு. "

"ஆக மிஞ்சினா அஞ்சு சதம் கூடுதலா இருக்கும். அத மிச்சம் பிடிக்கிறதுக்காக எதுக்கு தூரப்போகனும்? அது எங்ககிட்ட இருந்தாலும் ஒண்ணுதான் இல்லாட்டாலும் ஒண்ணுதான். அவங்களே தான் சுரண்டிக்கிறாங்க." நான் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"இந்தப் பக்கமும் இப்ப டவுனாயிடிச்சு" இதைப் பற்றி சந்தோஷப்பட்டவாறே சுனேத்திரா சொன்னாள்.

" பெமியானு மாமாக்கு நெனவிருக்கா நாங்க இங்க வந்தப்போ கையால செடிகளையும் புதர்களையும் தள்ளி ஒதுக்கிக்கிட்டு காணிக்குள்ள நொளஞ்சது."

"ஆமாமா ஆனா இப்ப எப்படி? எதிர்பக்கம் இருக்கிற காணிய வாங்க இன்னிக்கு ஒரு கூட்டம் வந்திருந்திச்சு. ஒரு பேர்ச் மூணு ஆயிரம்".

" நான் முழுசா முப்பத்தஞ்சு பேர்ச் காணிய ஆறு ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு வாங்கினேன்" நான் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

" அநியாயம் எங்களுக்குக் கூட இன்னும் கொஞ்சம் வாங்கிப் போட இருந்திச்சு. நல்ல வெலைக்கு வித்திருக்கலாம். அப்படியில்லாட்டா அதவித்திட்டு வீட்டை செஞ்சிருக்கலாம்."

" அம்மா இப்ப இப்படி சொல்றீங்க ஆரம்பத்தில இந்தக் காணியப் பாக்கக்கூட வரல்ல. ரெண்டு பேரு மத்தியில ஏதாச்சும் பிரிவிருக்கு மோன்னுகூட நான் யோசிச்சேனுங்க."

" பாத்தியா பொம்மனாட்டிகளுக்கு இதெல்லாம் நெனைவிருக்காது."

" இப்படி ஆகுமின்னு யாரு கண்டா? " சுனேத்ரா பெருமூச்சு விட்டபடி சொன்னாள்." ஆஸ்பத்திரியில ரெண்டாவது டாக்டர் ஐயாவும் இங்க பக்கத்தில தான் வீடு கட்டுறாரு. அந்த முடக்குக்கு அந்தப்பக்கம், இன்னும் வீடுகள் வரத் தொடங்கினாரொம்ப அழகா லட்சணமாக இருக்கும் இல்லையா."

" நாங்க வாங்கிறப்போ எப்படி இருந்திச்சோ அப்படி இருந்தாத் தான் எனக்குப்பிடிக்கும். புது சுற்றாடல் மனசுக்கு அவ்வளவு ஏற்றதாப் படல்ல."

" காளான் பூத்தாபோல இருவது பேர்ச்சுக்கு ஒரு வீடு எங்கிற கணக்கில வீடுகள் கட்டப் போறாங்கன்னு தெரிஞ்சிருந்தா நான் நெலம் வாங்கியிருக்கவே மாட்டேன் ."

" தெலபுவவில் இன்னும் கட்டிடங்கள் வரப்போகுதுங்க" சுனேத்திராவின் குரலில் மகிழ்ச்சி தொனித்தது. அவள் இன்னும் பழைய கிராமசபை கிளார்க் அல்ல. இப்போ அவள் பட்டிண சபையில் எழுதுவினைஞராக கடமையாற்றுகிறாள். பழைய கறுப்பு நிறக் கட்டிடத்திலிருந்து அவர்கள் புதிய கட்டிடத்துக்கு மாறியிருந்தார்கள்.

" சல்கமகாரங்க ஒரு வங்கி வேணுமின்னு கேக்கிறாங்க. ஆனா வங்கிக்காரங்களுக்கு சல்கமவை விட தெலபுவ என்றால் தான் பிடிக்கும். தெலபுவ ஒரு கேந்திரஸ்தானம். இது எல்லாத் திசையில இருந்தும் பாதைகள் வந்து சேருகிற இடமும் கூட " சுனேத்திரா சொல்லிக் கொண்டே போனாள்.

"இங்க அக்கம் பக்கத்தில போற வாற ஜனங்க எங்களுக்கு அறிமுகமில்லாதவங்க. முன்னமெல்லாம் எங்க பார்த்தாலும் சிரிவர்த்தன எங்கிற பேர்தான் அடிபடும்." பெமியானும் சுநேத்ராவோடு ஒத்து ஊதினான்."

" இந்தப் பக்கத்தில சிரிவர்த்தன எங்கிற பேர்ல நெறையப்பேர் இருக்காங்க. இல்லையா பெமியானு மாமா".

" தெலபுவ ஒரு கிராமம் தானே. சிரிவர்த்தன வம்சத்தவங்க தான் ஆரம்பத்தில இங்கே இருந்தாங்க. ஸ்டேசன் போட்டதுக்கப்புறம் தான் வேற வேற ஆட்கள் வரத் தொடங்கினாங்க. ஆனா இங்க இருந்த நிலம் எல்லாம் சிரிவர்த்தனக்களுக்கு சொந்தமானது தான். மொதல்ல ஏக்கர் கணக்கில வித்தாங்க. அதுக்கப்புறம் நாப்பது பேச்சுகளா வித்தாங்க. பிறகென்ன நாப்பது முப்பதாகி முப்பது இருவது ஆச்சு. இப்ப ஆஸ்பத்திரி பக்கத்தில அஞ்சு பேர்ச் கூட விக்கிறதுக்கு இருக்காமே அதெல்லாம் கக்கூசு கட்டுறதுக்குத் தான் லாயக்கு..நெலமெல்லாம் பத்து பன்னிரெண்டாயிரம் போகுதே."

" அஞ்சு பேர்ச் எங்கிறது என்ன அல்ப சொல்பமா? தெருப்பக்கம் ஒரு பேர்ச் நாலாயிரம் தேறும்."

" அடை மழைக்குத்தெரு ஓரமாக இருந்த மரம் ரயில் பாதையின்

குறுக்கே சாய்ந்துவிட்டது. இதனால் மாலை வண்டியை வழியில் நிறுத்தியிருந்தார்கள். மரத்தை வெட்டி அப்புறப்படுத்தும்வரை பிரயாணிகள் ரயில் வண்டியிலேயே காத்திருந்தார்கள். பஸ் ஓடும் பாதை எதுவும் அக்கம் பக்கத்தில் இருக்காதது தான் இதற்குக் காரணம். மரம் அகற்றப்பட்டு ரயில் தெலபுவவுக்கு வரும்பொழுது ஒன்றரை மணித்தியாலம் தாமதமாகியிருந்தது. எங்கும் ஒரே இருட்டு. விளக்குகள் மின்னின. ஒவ்வொரு கடையிலும் வெள்ளைக்கொடி தொங்கியது. தூறல் பெருமழையாக மாறுவதற்கு முன் நான் ஓட்டமாக ஓடி வீட்டை அடைந்தேன்.

நனைந்திருந்த உடம்பை துண்டால் துவட்டினேன். கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டு கூடத்துக்கு வந்து உட்கார்ந்தேன். கூடத்தில் மின்சார விளக்குகள் ஒளி பரப்பின. சூடான தேநீரைப் பருகியபடி " சந்தியில யாரோ ஒரு பெரிய புள்ளி செத்திட்டான் " திடீரென்று நினைவுக்கு வந்த அந்த செய்தியை சுனேத்திராவுக்கு சொன்னேன். " பெரிய புள்ளியா யார்? "

" பெரிய ஆளாத்தான் இருக்கணும். எனக்கும் சரியா தெரியாது. ஆனா எல்லாக் கடையிலயும் வெள்ளக்கொடி போட்டிருந்தாங்க"

" பெரிய ஆளுன்னு யாரையும் எனக்கு தெரியாதுங்க. ஆனா ரங்கசாமிட சம்சாரம் இறந்திட்டதா சொல்லி வெத்திலையும் கையுமா அழுது பொலம்பிக்கிட்டு வந்தான்."

" என்ன ரங்கசாமியா – சம்சாரமா? " நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். " என்ன ஆச்சாம்?"

ரங்கசாமியின் சம்சாரம் அவனைவிட வயசில ஏழெட்டு வருஷம் இளசுங்க. இருந்தாலும் அவள் சமீபத்தில் இருந்து நோய்புடிச்சு இருந்திருக்கனும் . எதுவுமே கேக்க முடியலீங்க வெத்தலைய குடுத்திட்டு அழுதுட்டு போயிட்டான்.

" ஏன் வெத்தல குடுத்தான்?"

" யாருக்கு தெரியும். அவங்க ஊர் வழக்கமோ என்னமோ?

" வெத்தல குடுத்தது வழக்கத்துக்கில்ல" அப்பொழுது கூடத்துக்கு வந்த என்னுடைய தாயார் சொன்னாள். பிள்ளைகளோடு நாங்கள் படும் கஷடத்தைப் பார்த்து விட்டு அவளாகவே புறப்பட்டு வந்து எங்களுடன்

தங்கிவிட்டாள். அவள் இதழோரமாகச் சிரிப்பு மலர்ந்தது.

"வெத்தல குடுத்து சாவு சொல்றாங்கன்னா போய் பணம் குடுத்திட்டு வரணும்"

" ரங்கசாமி வெத்தல தராட்டா கூட நாம பணம்கொஞ்சம் குடுத்தே ஆகணும்" நான் தாயாரின் முகத்தைப் பார்த்து சொன்னேன். ரங்கசாமி கடை வைத்திருந்தது உண்மைதான். ஆனால் மற்றக் கடைகள் தோற்றத்தில் இவ்வளவு வறுமைக் கோலத்தை காட்டவில்லை. அதனால் எல்லோரும் அவனுக்குப் பணம் கொடுத்து உதவினார்கள். " ஐயா போறதா இருந்தா வாங்க. சொல்லத்தான் நான் வந்தேனுங்க" அரை மணி நேரம் கழித்து பெமியானு வந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து அழைத்தான். " நானும் செத்தவீட்டுக்குத் தான் போறேன். "

" இப்பவா?"

" இப்ப போகாம விட்டா பொறவு நேரம் வராதுங்க. நேத்தைக்கு ஆஸ்பத்திரிலே எறந்திட்டா போல இருக்கு. பொணத்த வெட்டியிருக்காங்க. அதுதான் எடுத்துக்கிட்டு வர இன்னைக்கு சாயந்தரமாச்சு. நாள காலையிலயே பொதைச்சுடுவாங்க. அவங்க நம்மமாதிரி நாத்தமடிக்க வைக்கமாட்டாங்க. "

நகரத்தில எல்லா இடத்திலேயும் வெள்ளைக் கொடி தூக்கியிருந்தாலும் ரங்கசாமியின் வீட்டுத் திண்ணையில அதிக ஜனத்தைக் காணவில்லை. கடை தாழ்வாரத்தில் வழக்கமாக போடப்பட்டிருக்கும் ஆசனங்களை விட மேலதிக ஆசனம் ஒன்று கூட இல்லை. மரண கிரியைகளை நடத்தி வைக்கும் நிறுவனத்தினர் ஜரிகை வேலை போட்ட ஒரு மலர் வளையத்தை அங்கே வைத்திருந்தார்கள். பிணப் பெட்டிக்கு அந்த மலர் வளையம் தான் காவல். லக்ஷ்மிக்கு சிவப்பு நிற சேலை கட்டி நெற்றியில் குங்குமப் பொட்டு இட்டிருந்தார்கள். அவளுடைய பூதவுடல் கருமை நிறமாகியிருந்தது. இரண்டொரு வியாபாரிகள் வந்து கூடத்தை எட்டிப் பார்த்து சாவித்திரிக்கு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து விட்டு உடனேயே புறப்பட்டு விட்டார்கள். கூடத்தில் தாயின் சவப்பெட்டியருகே சாவித்திரி உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தாள். அழுதழுது அவள் கண்கள் வற்றிவிட்டன. துக்கம் விசாரிக்க யாராவது வந்தால் போதும் அவளுக்கு மீண்டும் கண்களில் நீர் சுரந்துவிடும். நாடியில் கைவைத்தபடி அவள் அருகில் உட்கார்ந்திருந்தாள் மேரி. ரங்கசாமியைக் காணவில்லை. அவன் வரும்வரை சற்று தாமதிப்பதென நாங்கள் நினைத்தோம். என்னைக் கண்ட ஜுவானிஸ் ஒரு பக்கெட் சிகரட் எடுத்துக்கொண்டு வந்தான்.

" ஐயா சிகரட் ஒன்று எடுக்கிறீங்களா?" மரியாதையோடு என்னை நோக்கிக் குனிந்து கேட்டான்"

" நான் சிகரட் புகைக்கிறதில்லையே ஜுவானிஸ்"

நான் அங்கே உட்கார்ந்திருந்த பொழுது எனக்கு சில விஷயங்கள் புலப்பட்டன. ரங்கசாமியின் கடையில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. முன் தாழ்வாரத்தின் ஒரு பகுதி சாக்கினால் மறைக்கப்பட்டிருந்தது. நடுத்தர வயது மதிக்கத் தக்க,பார்த்த பார்வைக்கு தமிழர் போலத் தோற்றமளித்த ஒருவர் மிகவும் அவசரப்படுபவர் போல அங்கேயும் இங்கேயுமாக அலைந்து கொண்டிருந்தார்.

" நான் அவரை மிகவும் ஆச்சரியத்தோடு பார்த்தேன். இதை கவனித்த ஜுவானிசின் இதழோரமாகப் புன்னகை மலர்ந்தது. " இவர் ரங்கசாமியோட உறவுக்காரரா?" நான் அவனுடைய சிரிப்புக்கு அர்த்தம் காணக் கேட்டேன்.

" இல்ல – மனுஷன் சாக்கு பிஸ்னஸ் செய்யிறான். அந்த படங்கு அறை தான் அவனோட ஸ்டோரு"

" லட்சுமி எப்படி இறந்தா? சுகமில்லாம இருந்தாளா? " அடக்கமுடியாத ஆச்சரியத்தோடு கேட்டேன்.

மெல்லியதாக அரிந்த கழிப்பாக்குத்துண்டுகளை கையில் எடுத்து பிசைந்து வாயில்போட்டுக் கொண்டான் ஜுவானிஸ். அதை மெதுவாக அசை போட்டபடி அக்கம் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்வதற்காக சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டான். சற்றுத் தள்ளி ஓரமாக நின்று கொண்டிருந்த பெமியானு நாங்கள் இருந்த இடத்தை நோக்கி நெருங்கி வந்தான்.

"அவளுக்கு பெரிசா நோய் எதுவும் இருக்கல்ல.நெஞ்சு அடைக்குதுன்னு ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டு போனாங்க. அங்கே இறந்திட்டா. வார்ட்டில் சேக்கல்ல டாக்டர் ஐயா ஏற்பு வலின்னு சொல்லிட்டார். ஏற்புவலியா. ஏற்பு வலிதாங்க. ஒருவாரத்துக்கு முன்னாடி அவளோட கால்ல கம்பி குத்திடுச்சு"

"அநியாயம் தானே ஒரு படிச்ச பொண்ணு வீட்டில இருந்தும் கூட "

"அம்மா செத்ததுக்கு அப்புறம் தான் கம்பிகுத்தின விஷயமே அவளுக்குத்

தெரியும். கம்பி குத்தின அன்னைக்கு இந்த சாக்குக் காரனும் இருந்திருக்கான். ஊசி குத்திக்க சொல்லி அவன் சொல்லியிருந்தான். ரங்கசாமி என்ன பண்ணினான் தெரியுமா லாம்பெண்ணெயில துணிய ஊறவச்சு சுத்தியிருக்கான். கம்பி குத்தினத யாருங்க பெரிசா கணக்கெடுக்கப் போறாங்க?"

மழை குளிர் அதிகரித்தது. மழை பலமாகப் பெய்ததால் மின்சாரம் இடைக்கிடை தடைப்பட்டது. தாழ்வாரத்துக்கு பெரிய மின்சாரக்குமிழ் போட்டு இருந்தார்கள். அதிலிருந்து வெளிச்சம் பரவியது. இது ஒரு அவசர ஏற்பாடு. கூடத்தில் எரிந்த மின்சார விளக்கின் ஒளி பிணத்துக்கருகில் வைக்கப்பட்டிருந்த தேங்காயெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தைவிட கொஞ்சம் தான் அதிகமாக இருந்தது. வீட்டின் முன்புறத்து தகரக் கூரையின் மேலே கல்லைவிட்டு எறிவதுபோல பெரியமழைத் துளிகள் விழத் தொடங்கின. காற்றோடு சேர்ந்து வந்த மழைத் துளியினால் திண்ணையில் பாதி நனைந்து விட்டது.

" ரங்கசாமி வரத் தாமதமாகுமா? எங்கே போயிட்டான்? " நான் கைக்கடிகாரத்தை நோட்டம் விட்டவாறு கேட்டேன்.

" நேரம் இல்லாததாலே சொந்தக்காரங்களுக்கு சொல்லி அனுப்பல்ல. இந்த வெள்ளவத்தையிலயோ எங்கேயோ ஒரு கடையில யாரோ ஒரு உறவுக்கார ஆள் இருக்காராம். அவருக்கு மட்டும் சொல்லத்தான் போயிருக்காரு. இந்த மழையில் எங்க வாறது?" உதடுகளுக்குக் குறுக்கே விரல்களை வைத்து வெற்றிலைச் சாற்றை வெளியே துப்பிய ஜுவானிஸ் தெருவை எட்டிப் பார்த்தான்.

" எப்படி ஜுவானிஸ் பணம் இருந்திச்சா?"

" நோயாளிய எடுத்துக்கிட்டு போறப்போ சாக்குக்காரனும் இருந்திருக்கான். நோயாளி இறந்திட்டதா கேள்விப்பட்ட நேரத்தில இருந்து ரங்கசாமி ஒரே அழுகையா அழுதுகிட்டிருந்தான். காரியங்கள் கவனிக்க அவனுக்கு சுய நெனவே இருக்கல்ல..... "ஜுவானிஸ் மீண்டும் சுற்றாடலைக் கவனித்தான். நாசித்துவாரங்களுக்கு மேலே செவ்வரி படர்ந்த அவன் கண்கள் இரண்டும் மின்சார விளக்கொளியில் நரியின் கண்களைப்போல் ஜொலித்தன. கடைவாயோரமாக ஒரு ஏளனப் புன்னகை தெரிந்தது.

"என்ன ஜுவானிஸ்?"

" பொணத்த வெட்டினாங்க இல்லியா? அப்ப கூட ரங்கசாமி நெனவில்லாதவன் போலத் தான் சாட்சி குடுத்தானுங்க. சாக்குக்காரன், தான்அவன அனச்சு தாங்கிக்கிட்டிருந்தான். " வந்தசிரிப்பை அடக்கிக்

கொண்டவன் போல ஜுவானிஸ் பேசினான்.

நான் ஆவலோடு ஜுவானிசை பார்த்துக் கொண்டிருந்தேன்.

" ஏதோ புரியாத தமிழில ஏதேதோ சொல்லி பொலம்ப ஆரம்பிச்சுட்டான். கடைசியில சந்தில இருந்த மொதலாளிமாருங்க எல்லாரும் சேந்து பெட்டிய வாங்கி குடுத்து செத்தவீட்டுக் காரியங்கள பாக்கிறதா முடிவெடுத்த அப்புறம் தாங்க மனுஷனுக்கு சரியான நெனவு வந்திச்சு."

" அப்பிடின்னா ரங்கசாமிக்கு பணமே செலவாகியிருக்காது இல்லையா "? சிரிப்பை மறைத்துக் கொண்டு பெமியானு கேட்டான். ஜுவானிஸ் மறுபடியும் ஒரு தடவை வீட்டுக்குள்ளே கழுத்தை நீட்டிப் பார்த்து சாவித்திரிக்குத் தாங்கள் பேசுவது கேட்காது என்பதை உறுதி செய்து கொண்டு பெமியானுவை அழைத்து ஏதோ ரகசியம் பேசலானான்.

ஈமைக்கிரியைகள் மறுநாள் காலையிலேயே நடந்துவிடும் என்று பேசிக கொண்டார்கள். அதனால் எவ்வளவு தான் இரவானாலும் பரவாயில்லை ரங்கசாமி வரும்வரை காத்திருப்பதென்று தீர்மானித்தேன். ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகு ரங்கசாமி தன்னுடைய உறவினனையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். அவன் உடல் எல்லாம் நனைந்திருந்தது. எங்களைக் கண்டதும் ரங்கசாமிக்கு மடைதிறந்த வெள்ளம் போல துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அதைக் கண்ட எனக்கே சோகம் தாங்கமுடியலலை. அவன் தனது மனைவி பேரில் எவ்வளவு பிரியம் வைத்திருந்தான் என்பதை முதல் தடவையாக அப்பொழுது தான் அறிந்தேன். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு வைத்திருந்தார்கள். ஆனால் அதை அவர்கள் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. இப்படி ரகசியக் காதலில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதை ரங்கசாமியின்புலம்பலிலிருந்து யாருமே அறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.

ஜுவானிஸ் பெமியானுக்கு இரகசியமாகச் சொன்ன செய்தி பற்றி நான் அவனிடம் எதுவும் கேட்கவில்லை. இருந்தும் அந்தக்கதை முழுவதையும் போகும் வழியில் பெமியானு என்னிடம் சொன்னான். அவன் சொல்கிறபடி பார்த்தால் மனைவியினுடைய ஈமக்கிரியைகளுக்கு பணம் செலவு செய்யாமல் தப்பிக் கொள்ளத்தான் ரங்கசாமி சோகத்தினால் மூர்ச்சை அடைந்தவன் போல இருந்திருக்கவேண்டும்.

" சரியான கஞ்சப்பிரபு" – பெமியானு சிரித்துக் கொண்டே சொன்னான்.

சந்தியில் கடைக்கார மொதலாளிங்க செத்தவீட்டு காரியங்களுக்கு பணம் சேர்த்து குடுத்தப்புறம் தான் அவனுக்கு சய நெனவு வந்திருக்குங்க."

"மனுஷன்கிட்ட நெஜமாவே பணம் இருந்திருக்காது" நான் பேசிக் கொண்டே போனேன் " அதுதான் அவனுக்கு புத்தி தடுமாறியிருக்கனும். இருந்தபணம் எல்லாத்தையும் கடை வாங்கிறதுக்காக விஜித்கிட்ட குடுத்திருக்கனும். ஆளுக்கு பெரிசா பிஸ்னஸ் எதுவும் கெடையாது. பாத்தாலே தெரியுதே".

தன்னுடைய அபிப்பிராயத்தை விட்டுக்கொடுக்க விரும்பாத பெமியானு " கஞ்சத்தனம் அவன் ரத்தத்திலே ஊறிப்போச்சு" என்றான். " மரணச் சடங்குகள் செய்யிறதுக்கு பணம்கொடுக்கும் சங்கம் இருக்கே அது கூட சாயந்தரம் கொஞ்சம்பணம் குடுத்திருக்கு. சந்தியில கடை மொதலாளிங்களும் பெட்டி வாங்கிறதுக்குமா சேத்து ஆயிரம் ரூபா சேகரிச்சு குடுத்திருக்காங்க."

" மொதலாளி மாருக்கு என்ன. நிச்சயம் உதவி செய்தே ஆகனும்". நான் சிரித்துக் கொண்டு சொன்னேன். எங்ககிட்ட சுரண்டுற பணத்தில கொஞ்சம் நாதியத்தவங்களோட செத்தவீட்டுக் காரியத்துக்கு குடுத்தா என்ன கொறஞ்சா போயிடும் ?" என்னதான் நடந்தாலும் ரங்கசாமி அவங்ககிட்ட எப்பவாச்சும் பணம் கேட்டிருக்கானா?"

" இல்ல " பெமியானு சற்று வெறுப்போடு சொன்னான்.

# 11

"விஜித் சிகியுரிடி சேர்விஸ் " கறுத்த போர்டில் வெள்ளி நிற ஆங்கில எழுத்துக்கள் அணைந்தணைந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. இரவு நேரத்தில் அது மனதைக் கொள்கை கொள்ளும் காட்சியாக இருந்தது. பகலில் எழுத்துக்கள் மட்டும் மின்னி மின்னி ஒளிவிடும். அதைக் கடந்து பாதையில் போய்க் கொண்டிருக்கும் சிறுவர்கள் அங்கே கொஞ்சம் தங்கி அதன் அழகை ரசிப்பார்கள். தெருப்பக்கமாக உயர்த்திக் கட்டப்பட்டிருந்த மதிலுக்கு மேலாக் தலை நிமிர்த்தி நின்றது இந்தப் பெயர்ப் பலகை. இதைத் தவிர அங்கே வேறு ஒருவரையும் காணவில்லை. இந்தக் கட்டிடத்துக்குள் யாராவது நுழை வேண்டுமானால் பிரமாண்டமான " கேட் " டின் ஒரு பக்கமாக உள்ள ஓடைக்கு மேலே இருக்கும் கண்ணாடிக் கூட்டுக்குள் எட்டிப் பார்த்து தான் வந்தகாரணத்தை சொல்வார்கள். கால்நடையாக வந்தவர்களாயிருந்தால் ஓடையைத் திறந்து விடுவார்கள். கம்பனிக்குச் சொந்தமான வாகனங்கள் நுழைவதற்கு தோட்டத்தின் பின்புறமாக ஒரு " கேட் " உண்டு. விஜித் பாதுகாப்புச் சேவை கட்டிடத்தின் பக்க ஓரமாக பின்காட்டியபடி ரங்கசாமியின் " குட்டிக் " கடை நின்று கொண்டிருந்தது.

அப்பாவும், இருட்டு மூலையில் கிடந்த அடுப்பும் தான் சாவித்திரியின் அம்மா சாகும்பொழுது அவளுக்கென்று விட்டுச் சென்ற சொத்துக்கள். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தனக்கு நல்ல பெறுபேறுகள் கிடைக்காது என்பது சாவித்திரிக்கு தெரியும். தாயாரின் மரணத்தின் பின் பரீட்சையும் நெருங்கிக் கொண்டு வந்தது. அப்பாவும் படிக்கும்படி வற்புறுத்தினார். இருந்தும் அவள் பாடசாலைக்குப் போவதை நிறுத்திவிட்டாள். கவலை தான் இதற்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. அம்மா இறந்துபோனதால் காலையில் நடந்து வந்த வியாபாரமும் தானாகவே நின்று விட்டது.

சாவித்திரியின் தாயாருடைய ஈமக்கிரியைகளுக்கு பெரியம்மா மட்டுமல்ல சோமா கூட வரவில்லை. இது சாவித்திரிக்கு ரொம்பவும் கவலையாக இருந்தது. இதை நினைத்து அவள் துக்கப்பட்டாள். அவர்கள் இப்பொழுது நாவலையில் இருக்கிறார்கள். சாவித்திரியின் அம்மாவுடைய மரணத்தைப் பற்றி விஜித்

இன்றுவரை அவர்களுக்கு அறிவிக்கவில்லை. தெரிந்த அறிமுகமானவர்களுடைய செத்தவீடுகளுக்கெல்லாம் பெரியம்மா தவறாமல் போவாள். நகரத்தில் உள்ளவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். விஜித் இந்தக்கடமையில் தவறியதென்னவோ உண்மைதான். ஆனால் இரண்டுநாட்களுக்கு செத்தவீட்டுக்கு சாப்பாடு அனுப்பும்படி விஜித், பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் சமையல்காரருக்குகட்டளை இட்டிருந்தான். விஜித் சாப்பாடு அனுப்புகிறான் என்று கேள்விப்பட்டதும் வற்றியிருந்த ரங்கசாமியின் கண்களில்மீண்டும் கண்ணீர் வெள்ளம் மடை திறந்தது. அவன் அழத் தொடங்கினான்.

" விஜித் ஐயா, தங்கமான ஐயா, என்னோட அவர் கோவமில்ல" "அப்பாக்கு என்ன பைத்தியம்புடிச்சிருச்சா? ரங்கசாமியின் அழுகைக்கு முடிவேயில்லை என்பதை தெரிந்துகொண்ட சாவித்திரி தன்னுடைய கண்ணீரை அடக்கிக் கொண்டு அப்பாவை ஏசினாள். " விஜித் ஐயா ஒன்னோட எப்ப கோவிச்சுக்கிட்டாரு?"

"நெலத்த மறுபடி விக்கச் சொல்லி ஆளுங்க மூலம் விஜித் ஐயா கேட்டிருந்தார்"

ரங்கசாமி சாராயம் குடித்திருந்தான். இதனால் அவனுடைய சோகம் கரைபுரண்டோடியது. ஜுவானிஸ் ரங்கசாமிக்கு கசிப்பை ஊற்றிக் கொடுத்தான். அப்பா அர்த்தமில்லாமல் பிதற்றுகிறார் என்பது சாவித்திரிக்கு தெரியாமலில்லை.

" அப்பா ! உங்களுக்கு வெறி ஏறிப்போச்சு" சாவித்திரி கோபமாகச் சொன்னாள்."

ரங்கசாமி நிமிர்ந்து உட்கார்ந்தான். " எனக்கு வெறி இல்ல பெத்தா. நெஜமாத்தான் சொல்றன். விஜித் ஐயா சொல்லி அனுப்பினார்"

"யார் கிட்டசொன்னார்?"

"வக்கீல் இருக்காரே அவர் மூலம் தான்"

" அம்மாக்கு இதெல்லாம் தெரியுமா?"

"சே! சே! இதையெல்லாம் அவளுக்கு செல்வேனா?"

"சரி இதுக்கு அப்பா என்ன பதில் சொன்னீங்க" – ரங்கசாமிக்கு பணம் என்றால் போதும். பணத்தில் அவ்வளவு ஆசை. இது சாவித்திரிக்கு நன்றாகத் தெரியும். பணம் என்றாலே அவன் பெரிய கஞ்சப் பிரபு. பிள்ளை குட்டிகளுக்கு மட்டுமா அவன் கஞ்சத்தனமாக நடந்து கொண்டான். தன்னுடைய வயிற்றுக்கே துரோகம் பண்ண பின்நிற்க மாட்டான். அப்படிப்பட்ட அப்பா நிலத்துக்கு என்ன செய்திருப்பார் என்பதை சாவித்திரியால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

" நான் ஒண்ணுமே சொல்லல்ல. பெத்தா. இத குடுத்திட்டா நாம எங்க போறதாம்?"

அம்மாவின் செத்தவீட்டுக்கு ரூபசிரி வந்திருந்தான். அவன் தன்னை இரக்கத்தோடு பார்த்ததை சாவித்திரி தற்செயலாகக் கவனித்துவிட்டாள். விஜித்துடைய காவல் படையைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே கட்டழகு வாலிபர்கள். அதிலும் ரூபசிரி இருக்கிறானே அவனுக்கு அகன்ற மார்பு, படிப்படியாக ஒடுங்கிவரும் இடையும், பலம் வாய்ந்த தோள்கள், வேடருக்கு இருப்பது போன்ற முரட்டுத்தேகம், இவ்வளவுக்கும் அவனுடைய முகம் இருக்கிறதே அதுபால்வடியும் குழந்தை முகம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் விஜித்துடைய வீட்டில் ஒரு நேர்முகப் பரீட்சை நடந்ததல்லவா? அன்று சோமாவோடு சிரித்துப் பேசி உரையாடிக் கொண்டிருந்த வாலிபன் தான் இந்த ரூபசிரி. அந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு சாவித்திரியைக் கண்டால் அவன் சிரிப்பதுண்டு. விஜித்தின் பாதுகாப்பு சேவைக்கு தொடக்க காலத்தில் வாகனங்கள் இருக்கவில்லை. அந்த நாட்களில் இவர்கள் பஸ்சில் தான் வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். இடைக்கிடை ரூபசிரியும் சாவித்திரியும் பஸ்சில் சந்திப்பார்கள். அப்பொழுதெல்லாம் அவன் சாவித்திரியைப் பார்த்துச் சிரிப்பான். அவ்வளவுதான். அவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை எதுவும் இருந்ததில்லை. இரண்டு மூன்று நாட்களாக அவன் சாவித்திரிக்கும் சேர்த்தே டிக்கட் வாங்கினான்.

அவளுக்கு அவனைக் காணாமல் ஒரு நாள் பொழுது கழிப்பதே பெரும்பாடாக இருந்தது. அம்மா இறப்பதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் இருந்து தான் அவளிடம் இந்த மாற்றம். சாவித்திரி தனக்குத் தானே இந்த மாற்றத்தை உணரத் தொடங்கினாள். லட்சுமியும் இதைத் தெரிந்து கொண்டாள்.

" வெள்ளை வெளேருன்னு இருக்கானே யார் அந்தப் பையன்? இந்தப் பக்கமா எட்டி எட்டி பாக்கிறான்" ஒரு நாள் லட்சுமி நிமிர்ந்து பார்த்துக் கேட்டே விட்டாள்.

" சாவித்திரிக்கு சிரிப்பு வந்தது. ஆனால் அவள் அதை அடக்கிக் கொண்டாள். லட்சுமி கண்களை சின்னதாக்கிக் கொண்டு சாவித்திரியைப் பார்த்து அதே கேள்வியை மீண்டும் கேட்டாள்.

" எங்கிட்ட கேட்டா எனக்கு என்ன தெரியும்? அம்மா அவர் கிட்டயே கேளுங்க"

சாவித்திரி மகிழ்ச்சியோடு சிரித்தாள்.

" அவனோடபேர் என்ன?"

"அதயும் அவர் கிட்டயே கேளுங்க. எனக்கு எப்படி தெரியும்?" சாவித்திரியின் சிரிப்பைக் காணக் காண லட்சுமியின் கோபம் கூடிக்கொண்டே போனது. சாவித்திரிக்கோ சந்தோஷம் கரைபுரண்டோடியது. ரூபசிரிக்குத் தன்மேல் காதல் உண்டாகியிருக்கிறதென்பதை சாவித்திரியால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அம்மாவுக்குக்கூட இது புரிந்து விட்டது. அப்படியானால் சந்தேகமேயில்லை அவனுக்கு சாவித்திரி மேல் நிஜமாகவே காதல் தான். இதை நினைக்க நினைக்க சாவித்திரிக்கு சிரிப்பாக இருந்தது.

" உனக்கு வெக்கமில்லையா? " மகிழ்ச்சியில் திளைத்திருந்த மகளைப்பார்த்து லட்சுமி ஏசினாள்.

" வெக்கம் மானம் இல்லாத பெண்ணாயிருக்கியே. உன்னய என்னோட மகளுன்னு சொல்லிக்கவே வெக்கமா இருக்கு. நீ எங்க ஜாதிய சேர்ந்த பொண்ணே இல்ல"

"அம்மாக்கு என்னய கண்ணில காட்ட கூடாது" சாவித்திரியின் சிரிப்பு மறைத்தது. முகத்தைக் கோபமாக வைத்துக் கொண்டு பேசினாள். " அம்மா கேக்கிற கேள்விகளுக்குத் தான் எனக்கு சிரிப்பு வருது. மனுசங்க ஏன் பாக்கிறாங்க? பேர் என்ன? இப்படியெல்லாம் கேட்டா சிரிப்பு வராதா?

" அப்படின்னா அந்த வாலிபப் பையன ஒனக்கு தெரியவே தெரியாதா? " லட்சுமி தர்க்கம் பண்ணினாள்." " நீ அவன் கூட பேசிக்கிட்டிருந்தத நான் பாத்தேனே. ஒனக்கு வெக்கமே இல்ல. நீ ஏன் அவனப் பாத்து சிரிக்கனும்? ஏன் கதைக்கனும்?"

"என்னோட பேசினா நானும் பேசுவேன். நீங்க சொல்றது சரியான

கதையாயிருக்கே?"

" நீ செல்லையாவோட அப்பிடி பேசுறதில்லையே"

"அந்த மனுஷன் எங்கூட கதைக்கணுமே? ஐயோ அவனப் பாத்தா.... பஞ்சப் பூசாரி மாதிரி " சாவித்திரி மீண்டும் சிரித்தாள்.

அவள் சொன்ன உவமையைக் கேட்டு லட்சுமிக்கே சிரிப்பு வந்துவிட்டது. எப்ப பார்த்தாலும் பூசாரியின் முகம் வீங்கிப் போய் இருக்கும். முகத்தில் இரண்டு பக்கமும்பொங்கிய பப்படங்களை கட்டி கொண்டதுபோல " சங்கை ஊதி ஊதி முகம் இப்படியாச்சு" கோயிலுக்கு வரும் இளைஞர்கள் இப்படிப் பேசிக் கொண்டார்கள். லட்சுமிக்கு இந்தப்பேச்சு ஞாபகம் வந்தது. இளமைப் பூரிப்போடு பெண்குதிரை போல நின்ற மகளைப் பார்த்து லட்சுமியின் மனம் இளகியது. செல்லையாவைப் பற்றி அவள் பிரஸ்தாபித்திருக்கவே கூடாது. தான் முன்பின் யோசிக்காமல் பேசிவிட்டதாக அப்பொழுது தான் அவளுக்கு பட்டது. ரங்கசாமி செல்லையாவுக்கு வியாபாரம் பண்ண இடம்கொடுத்திருந்தான். ஆனால் மனதுக்குள் வேறு ஒரு எண்ணத்தோடு தான் இப்படிச் செய்தான் என்பது ஆரம்பத்தில் லட்சுமிக்குத் தெரியாது.

" பொட்ட புள்ளைங்க வீட்டில இருக்கிறப்போ முன்னால மனுசங்கள குடி வைக்கிறீங்களே" என்று லட்சுமி ரங்கசாமியைக் குறை சொன்னாள்."

" செல்லையா முன்னுக்கு வந்துகிட்டிருக்கிற மனுஷன். எம்புட்டு கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறான்.நெறையப் பணம் இருக்கு"

" செல்லையா அம்பட்ட சாதிக்காரன்"

" செல்லையா அம்பட்டன் இல்லியே. அம்பட்ட சாதியா இருந்தா என்ன? நெறையப் பணம் இருக்கே"

" எங்களுக்கு சரிப்பட்டு வராதுங்க. பெத்தா செல்லையாவ பாத்துசிரிக்கிறா. அவனுக்கு ரொம்ப வயசுங்க. சரிவராதுங்க"

" எனக்கு அதெல்லாம் சரியாத்தான் இருக்கு. நான் இந்தியாக்கார தமிழன்" ரங்கசாமி நெஞ்சைத் தட்டிக்கொண்டான். " என்னோட மகள் இந்திய தமிழ் பொண்ணு. செல்லையாவும் இந்தியாக்காரன். வேறயாரு நம்ப பெத்தாவ பெண் எடுப்பா? சீதனம் குடுக்க பணம் எங்கே இருக்கு?" " ஏன் இல்ல?

சாப்பிடக்கூட செலவு பண்ணாம சம்பாதிச்ச பணம் எல்லாம் யாருக்கு குடுக்கப் போறீங்க நம்ப பெத்தாக்கு இல்லாம"

" செல்லையாக்கு சல்லி தேவையில்லை"

ரங்கசாமி அப்படி சொன்னாலும் தனக்கு அதுபோல ஒரு எண்ணம் இருப்பதாக செல்லையாவுக்கு ஒரு நாளும் காட்டிக் கொண்டதில்லை. செல்லையாவும் பெத்தா தனக்குக் கிடைப்பாள் என்று எண்ணியதில்லை. அவள் படித்தவள். அழகி. இளமை பொங்கும் வயது. செல்லையா திங்கட்கிழமை சாயந்திரம் தெலபுவவுக்கு வருவான். செவ்வாய் காலையில் சந்தையில் வியாபாரம். நேரம் இருந்தால் அன்றைக்கே திரும்பிவிடுவான். அடுத்தடுத்து இரண்டு நாட்கள் அவன் தெலபுவவில் தங்குவது மிக அபூர்வம். காலையில் ரங்கசாமியிடமிருந்து பந்து சதத்துக்கு ஒரு டம்பளர் இஞ்சித் தேநீரும், வெறுந் தண்ணீர் ஒரு டம்பளரும் வாங்கிக் கொள்வான். ரங்கசாமியிடம் இருந்து அவனுக்குக் கிடைப்பதெல்லாம் இதுமட்டும் தான். தெலபுவவில் வசிக்கும் மற்ற ஜனங்களைப் போலவே செல்லையாவும் அதிகாலையிலேயே எழுந்து ரயில் நிலையத்துக்கு கீழே உள்ள பாதையில் இருக்கும் கிணற்றில் குளிப்பான். சிலாபத்துப் பக்கத் தண்ணீரில் குளித்துப் பழகியவன் செல்லையா. பணங்காசு இல்லாமல் இலவசமாகக் கிடைக்கும் இந்த குளிர்ந்த ஜலம் அவனுக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் என்று தான்சொல்ல வேண்டும். லட்சுமி இறந்த பிறகும் செல்லையாவின் இந்த நடவடிக்கைகளில் மாற்றம் இருக்கவில்லை. ரங்கசாமியின் வீட்டுக் கொல்லைப்புறத்தில் ஒரு மலசல கூடம் இருந்தது. ஆனால் யாருமே அதை உபயோகிப்பதில்லை. பட்டின சபை கட்டிக் கொடுத்த பொது மலசல கூடத்துக்குத் தான் செல்லையாவும் போவான்.

லட்சுமி இறந்து இரண்டு மாதங்களின் பின்னர் நிலத்தைப் பற்றி ரங்கசாமியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விஜித் ஒருவரை அனுப்பி வைத்தான். இந்தத் தடவை ரங்கசாமியின் ஆப்த நண்பனான ஜுவானிசை இந்தக் காரியத்துக்கு பயன்படுத்தினான்.

" ஐயா நீங்க ரங்கனுக்கு தெய்வம் மாதிரி" விஜித்தைக் காண வந்த ஜுவானிஸ் சொன்னான்.

" ஐயா நேரா போய் பேசினீங்கன்னா ரங்கன் மறுக்க மாட்டானுங்க". விஜித்துக்குச் சொந்தமான கடை அறையொன்றின் சுவர் ஒர மூலை தான் ஜுவானிசின் வாசஸ்தலம். இதனால் விஜித் எதைச் சொன்னாலும் அதை அவனால் புறக்கணிக்க முடியவில்லை. ரங்கசாமி அவனுடைய இஷ்ட தெய்வம்.

அவன் வட்டிக்குப் பணம் கொடுப்பான். நூற்றுக்குப் பத்துவீத வட்டிக்குக் குறைவாக கடன் கொடுக்கும் வழக்கம் அவனிடம் கிடையாது. அது மட்டுமல்ல ஏழைக்கமக்காரர்களுக்குத் தான் அவன் கடன் கொடுப்பது வழக்கம். நூற்றுக்கு பத்து வீதமாக இருந்தாலும் பிணை இல்லாமல் கடன் கொடுக்க வட்டிக்காரர்கள் சம்மதிக்கமாட்டார்கள். ஆனால் ரங்கசாமி நூற்றுக்கு பத்துவீத கடனுக்கெல்லாம் பிணை கேட்பதில்லை. கடன் தொகை இருநூறு ரூபாவுக்கு அதிகமானால் தான் அவன் பிணை கேட்பது வழக்கம். ஜுவானிஸ் வழக்கமாக காலையில் நூற்றுக்கு ஐந்து வீத வட்டியில் தான் ரங்கசாமியிடம் பணம் கடனாக வாங்குவான். நஷ்டமாகிவிடும் நாட்களில் முதலை மட்டும்தான் ரங்கசாமி அவனிடமிருந்து வாங்கிக் கொள்வான். சிலவேளைகளில் ஜுவானிஸ் விற்றதுபோக மிஞ்சிவிடும் கிழங்கு, பலாக்காய் கீறு இப்படி எதையாவது ரங்கசாமிக்கு இலவசமாகக் கொடுப்பான். அந்த மாதிரி கிடைத்த நாட்களில் ரங்கசாமி வட்டியை மறந்து விடுவதுண்டு. இப்படித் தனக்கு உதவி செய்யும் ரங்கசாமியிடம் நிலத்தை விற்கும்படி வற்புறுத்துவது எப்படி என்று ஜுவானிஸ் வருத்தப்பட்டான். விஜித் உட்கார்ந்திருக்கும் இடத்துக்குப் பின்னால் சுவரில் அவனுடைய பெற்றோரின் சட்டம் போட்ட இரண்டு பெரிய படங்கள் தொங்கின. பாலிஷ் போட்டு மெருகேற்றப்பட்ட தேக்கு மேசை ஒன்று இருந்தது. அந்த மேசையின் நடுப்பகுதியில் வெல்வெட் துணி பதிக்கப்பட்டிருந்தது. இதைச் சுற்றி நான்கு பேர் உட்காரலாம். அவ்வளவு பெரிய மேசை, இந்த மேசையின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்த சுழல் நாற்காலியில் விஜித் அமர்ந்திருந்தான். காவல் படையினரின் மேலங்கியில் தோள்பட்டையருகில் சிவப்பு நிறத்தில் கழுகின் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். விஜித்துடைய அறை சுவரில் இந்த சிவப்புக் கழுகுச் சின்னத்தை கறுத்த வெல்வெட் துணியில் எம்ப்ரோயிடர் பண்ணி சுவரிர் மாட்டியிருந்தார்கள். இவ்வளவு மகத்துவம் வாய்ந்த இடமாக அது இருக்கும் என்று ஜுவானிஸ் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இதனால் அவனுக்கே சற்றுத் தயக்கமாக இருந்தது. விஜித்தைப் பற்றி முன்னர் என்றுமே ஏற்பட்டிராத பயமும் மரியாதையும் அவன் உள்ளத்தில் வளரத் தொடங்கியது.

" நான் ஜுவானிசை இங்கே ஏன் அழைச்சேன் தெரியுமா? ரங்கசாமிகிட்ட நீ சொல்லனும் . நீ தானே அவனோட வலது கை."

"நான் என்ன செய்யனுமின்னு சொல்லுறீங்க?""

"நான் அந்த மனுஷனுக்கு இந்த நிலத்த வித்தது ஒனக்கு தெரியும்" விஜித் ரொம்பவும் அடக்கமான குரலில் சொன்னான். " இந்த மாதிரி பட்டினத்தில யாரு நிலம் விக்கப் போறாங்க? அதுக்கு முன்னாடி பதினைஞ்சு வருசமா ரங்கசாமி இங்க இருந்திருக்கான். இதுவும் ஒமக்கு தெரியும். அதிலயும்

கொஞ்சக்காலம் தான் வாடகை கொடுத்திருக்கான். இப்ப எனக்கு நிலம் தேவையாயிருக்கு. எங்களுக்கே அத திருப்பி விக்கச் சொல்லி ரங்கசாமிகிட்ட நீர் சொல்லனும் சரியா. நான் எடுத்தமாதிரி இரண்டு மடங்கு கொடுக்கவும் தயார்."

" இந்த விஷயம் ரங்கசாமிக்கும் தெரியும். இதப்பத்தி எங்கிட்ட கூட சொன்னான். " ஜுவானிஸ் குனிந்து பயபக்தியோடு கைகட்டி நின்று பேசினான். பிறகு விஜித் நாற்காலியை அவனுடைய பக்கமாக சரித்தபடி கேட்டான். "அது பெண்டாட்டி சாகிறதுக்கு முன்னாடி சொன்னதுங்க. நெலத்த விக்கிற நோக்கம் தனக்கு கெடையாதுன்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினானுங்க. "

" இப்பதான் பெண்டாட்டி செத்திட்டாளே. இப்ப மனுஷனோட நோக்கமெல்லாம் மாறியிருக்கனும் இல்லியா?"

வலது கை விரல்களை மடித்து முஷ்டியாக்கியபடி மேசையில் மெதுவாகத் தட்டிச் சொன்னான் விஜித்.

" நான் ரங்கசாமிகிட்ட இத சொல்லனும். அதத்தானே ஐயா சொல்றீங்க. அப்படியே செய்றேனுங்க. ஜுவானிஸ் அடக்கமான குரலில் சொன்னான்.

" சும்மா சொல்றதால வேல இல்ல. அவனோட நோக்கத்த மாத்தியாகனும். உம்மோட உயிர் நண்பன் இல்லியா? எப்படியாச்சும் இத செய்திருன்னா உம்மைய நான் கவனிச்சுகுவேன்"

" பாக்கிற மாதிரியில ரங்கசாமி, மகளுக்கு வீட்டோட மாப்பிள்ள எடுக்கப் போறான் போல இருக்கு" என்று சொல்லியபடி நாற்காலியை வேகமாகச் சுழல விட்டான் விஜித். " அதப்பத்தி இன்னும் யோசன பண்ணச் சொல்லி நீர் சொல்லனும்"

டெலிபோன் மணி அடித்தது. அதைக் கையில் எடுத்து சிறிது நேரம் காது கொடுத்துக் கேட்டான். பிறகு ரிசீவரை மேலே வைத்துவிட்டு மீண்டும் ஜுவானிஸ் பக்கம் திரும்பினான்.

" நான் ஆள் அனுப்பிற வரைக்கும் பாத்துக்கிட்டு இராதேயும். நீரே வந்து பதிலையும் எனக்கு சொல்லிடும்."

இந்த விஷயத்தைப் பற்றி முதலில் மேரி நோனாவோடு பேசுவது தான் நல்லது என்று ஜுவானிஸ் நினைத்தான். சில சமயங்களில் பெண்கள் கூட புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள்.

" பெரிய அநியாயமா இருக்குதுங்க" மேரி நோனா அதிர்ந்து போனாள்."

" ரங்கசாமி வேற எங்கே போவான்? அவனுக்கு யார் இருக்கா?"

" விஜித் ஐயா எடுத்த தொகையைப் போல ரெண்டு மடங்கு கொடுக்கவும் தயாருன்னு சொல்றாரு.

" அத மாதிரி பத்து மடங்கு கொடுக்கிறாருன்னு வெச்சுக்கோங்க. அந்தப் பணத்தில தெலபுவவில் இப்ப அஞ்சுபர்ச் காணியாவது வாங்க முடியுமா என்ன. காணிக்கு காணி தாராருன்னு சொன்னா பரவாயில்ல. அந்த மனுஷன் வித்தான் . இவன் அத வாங்கினான். எவ்வளவு காசுக்காச்சும் வித்திட்டான் இல்லியா, மறுபடி அத திருப்பி விக்கச் சொல்லி பலாத்காரம் பண்ண சட்டமா இருக்கு."

" இதெல்லாம் தெரியாதா நல்லபடியா சொல்லி பாக்கலாம். முடியாதுன்னா கெட்டவழியில தான் செய்யனும் . தமிழனா இருந்தாலும் என்னோட சகோதரன் மாதிரி. இல்லையா பின்னே? இந்த மூணு புள்ளைங்களோட எங்க வயத்துப் பாட்டப் பாக்கிறதுக்கு எம்பிட்டு ஒதவி செஞ்சான். கடனாவாச்சும் பணம் கொடுத்தானே. இந்த ஐயாமாரு இருந்தாங்களே. இவங்ககிட்ட இருந்து ஒரு தம்படி கூட கடன் கேக்க முடிஞ்சிச்சா? அந்த மாதிரி கடன் கொடுக்கிறதாயிருந்தா இடுப்பில இருக்கிற துணியையாவது பிணையா எடுக்காம கொடுக்கமாட்டாங்களே."

"அப்போ இப்ப இருக்கிற இடமும் அதோகதியாகியிருக்கும்.

"ரங்கனும் நானும் ஒரே தோணியில தான் இருக்கோம். ஜுவானிஸ் பெருமூச்சு விட்டான்.

"அவனுக்கு என்னைய விட அதிஷ்டம் கொஞ்சம் அதிகம். ஏன்னா அவனுக்கு ஒருபுள்ள தானே. மத்தது அவன் ஒரு நாளும் மூணு வேள சாப்பிட்டதே இல்ல. எங்களுக்கும் அவங்களுக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன தெரியுமா அவங்க எங்கள காட்டியும் பசி பொறுத்துக்குவாங்க. என்னய வெச்சு நீசத்தனமான வேல செய்யப் பண்ணப் பாக்கிறாரு விஜித் ஐயா"

" அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"நான் என்னத்த சொல்றது? அந்தக் காலத்தில ரங்கனுக்கு பாதை ஓரமா ஏழு எட்டு பர்ச் நிலம் வாங்கிற யோசனை இருந்திச்சு. இந்த நெலத்த வாங்கினதால அது சரிவரல்ல. முந்தி இருந்த வெலைக்கு இப்ப யாரு நெலம் கொடுப்பா? தெருவில எறங்க வேண்டியது தான்."

" நாங்க பாடுபட்டு சம்பாதிச்சு என்ன பண்ணுறோம். சாப்பிட்டுத் தீத்திடுறோம். அவங்க என்ன பண்ணுறாங்க தெரியுமா ஒடா ஒளைக்கிறாங்க. சம்பாதிக்கிறாங்க. பச்சத் தண்ணிய குடிச்சுக்கிட்டே சம்பாதிச்சத சேமிக்கிறாங்க. நாங்க கொறஞ்சது சாப்பிட்டாச்சும் சந்தோஷப்படறோம். அவங்க சாப்பிட்டதுமில்ல. சேமிச்சதால பயனும் இல்ல"

மேரி அனுதாபத்தோடு சொன்னாள். ரங்கசாமி நிலம் வாங்கிவிட்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் அவளுக்கு எவ்வளவு பொறாமையாக இருந்தது. அவள் பொறாமைத் தீயில் வெந்தாள். ஆனால் இப்பொழுது அதெல்லாம் எங்கே ஓடி மறைந்ததோ. மனைவியை இழந்த ரங்கசாமி இப்பொழுது அவளுக்கு ஒரு சகோதரனிடம் ஏற்படும் இரக்கமும் அன்பும் தான் இருந்தது. அவளுக்கு ரங்கசாமியையும் சாவித்திரியையும் நினைக்கும் பொழுது சோகம் பொங்கியது.

# 12

" யார் யாருக்கெல்லாம் சொல்லனுமோ அவங்க பேர்கள மட்டும் குறிச்சுக்கோ " பட்டியல் தயார் பண்ணிக் கொண்டிருந்த நான் சுனேத்திராவுக்குச் சொன்னேன்.

"ரொம்பப் பேர கூப்பிடுறது எனக்கு பிடிக்காது. செலவு அதிகமாயிடிச்சுன்னா சமாளிக்கிறது கஷ்டம்."

நாங்கள் புதுவீட்டுக்கு வந்த நாளிலிருந்து " பிரித் " ஓதி தானம் வழங்கவேண்டும் என்று சுனேத்திரா நச்சரித்துக் கொண்டே இருந்தாள். என்னுடைய தாயாரும் எங்களோடு இருந்ததால் இந்தயோசனைக்கு அவளும் தூபம் போட்டாள். வீடு கட்டி ஐந்து வருடங்களாகிவிட்டன. கட்டிட வேலைகள் எல்லாம் பூர்த்தியாகியிருந்ததால், அவளுடைய வேண்டுகோளை நிறைவேற்ற எண்ணினேன். உறவினர்கள், நண்பர்களில் யார் யாருக்கு அழைப்பு அனுப்ப வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரித்து முடித்துவிட்டேன். நான் எழுதிய இந்தப் பெயர்ப்பட்டியலை சுனேத்திராவுக்குக் காட்டினேன்.

" இன்னும் யார் இருக்காங்க"
"ரங்கசாமி . ரங்கசாமிக்கும் சொல்லுங்க"

அவள் நல்ல மனத்தோடு தான் இதைச் சொல்கிறாளா என்று பார்ப்பதற்காக நான் தலையை நிமிர்த்தினேன்.

" ரங்கசாமிகிட்ட சொல்லி தேவையான சாமாங்கள கூட தேடிக்கலாம் இல்லியா?"

எங்களுடைய மகனுக்கு இப்பொழுது ஆறு வயது.சாவித்திரி தான் அவனை பாடசாலைக்கு அழைத்துச் செல்கிறாள். சுனேத்ரா காலையில் வேலைக்குப் போகும்வழியில் மகனைக் கூட்டிக் கொண்டு போய் சாவித்திரியிடம் ஒப்படைப்பாள். அந்த நேரம் தொடக்கம் அவனைப் பாடசாலையில் விடுவது

மாலையில் அழைத்து வருவது எல்லாம் சாவித்திரியின் வேலை. தாயார் இறந்த சோகமும் தனிமையும் சாவித்திரியை வாட்டியது. அதனால் இந்த வேலையை முழுமனதோடு செய்தாள். சுனேத்திராவும் இதற்கு கூலி கொடுக்க தவறவில்லை. சிறியதொகை தான். இருந்தும் இதனால் நாங்கள் அடையும் திருப்தியும் ஆனந்தமும் இந்தச் சின்னஞ்சிறு தொகைக்கு எந்தவகையிலும் ஈடாகாது.

எங்களுடைய வீட்டிலிருந்து பிரதான பாதை வரை செல்லும் கிளைப்பாதையை இரண்டு பேர் வெட்டிச் சரிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் பெரிய ஒரு கத்தியால் பாதையில் வளைந்து கிடந்த கிளைகளை வெட்டினான். மற்றவன் பாதையில் இருபக்கத்திலும் மண்டிக் கிடந்த புதர்களை வெட்டி சுத்தப்படுத்தினான். இவர்கள் யாராயிருக்கும் என்று நான் திகைத்து நின்றேன். பாதையின் இரண்டு பக்கத்திலுமுள்ள நிலங்களுக்கு சொந்தக்காரர்கள் கிடையாது. " பிரித் " வைபவம் நடைபெறுவற்கு முன்னர் புதர்களை வெட்டி பாதையைச் சீராக்க வேண்டியிருந்தாலும் இந்த வேலைக்கு கூலியாள் பிடிப்பது ரொம்பவும் கஷ்டமாக இருந்தது. கடந்த சில வருடங்களாக கூலியாட்கள் வெளிநாடு செல்லத் தொடங்கியிருந்ததால் வேலைக்கு கூலியாட்கள் கிடைப்பது குதிரைக்கொம்பு தான். அத்துடன் அவர்களின் கூலியும் அதிகரித்து வரலாயிற்று. பெமியானுக்கும் வாதம். நோயின் உபத்திரம் அவனை ஆட்டிப்படைத்தது. நோய் சுகமாகினால் பாதை சுத்தம் செய்யும் வேலையை தானே வந்து செய்துகொடுப்பதென்று எண்ணியிருந்தான். இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கும் இருவரையும் சுனேத்திரா தான் நியமித்தாளோ. அவளை ஏமாற்றி இவர்கள் பெரியகூலியாக பேசி வேலையை ஏற்றுக் கொண்டார்களோ?.

" நான் முற்றத்தில் இறங்கி சுனேத்ரா அருகில் சென்றேன். அவள் வேலை செய்து கொண்டிருந்த கூலியாட்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள் " எவ்வளவு கூலி பேசியிருந்தாய்? " அவளிடம் கேட்டேன்.

" ரங்கசாமி அனுப்பினதா சொன்னாங்க. அதனால வேல செய்ய சொன்னேன். கூலி எல்லாம் நீங்க பேசியிருப்பீங்கன்னு நெனைச்சேன். " நான் கையிலிருந்த கட்டை மனைவியிடம் கொடுத்து விட்டு வீட்டுக்குள் நுழையாமல் வேலைக்காரர்கள் இருந்த பக்கமாகச் சென்றேன். கூலி எவ்வளவு என்றுபேசி தீர்த்துக் கொள்ளாவிட்டால் வேலை முடிந்ததும் அவர்கள் கேட்கும் தொகையை கொடுக்க நேரிடும். நான் இப்படியான சிக்கல்களில் எத்தனையோ தடவை மாட்டிக் கொண்டிருக்கிறேன்.

" கூலி பேசல்ல ஐயா " பாதையை செருக்கிக் கொண்டிருந்த ஆள் மண் வெட்டியை ஊன்றியபடி நிமிர்ந்தான்: நெற்றியில் வழிந்த வியர்வையை பெருவிரலால் வழித்தெறிந்தான் அந்த வேலையாள்.

" ரங்கசாமி மொதலாளி இருக்காரே அவரு தான் இந்த பாதய சரிப்பண்ணச் சொன்னாரு. சல்லி எடுக்க வேணான்னுட்டாரு"

"காலையில தேத்தண்ணி குடிச்சீங்களா?" மற்றவனும் வியர்வையைத் துடைத்தபடி நான் இருந்த பக்கமாக வந்தான். அவன் லேசாகச் சிரித்தான்.

"வாங்க"

காலை ஆகாரத்துக்குத் தயார் பண்ணிய சாப்பாட்டில் மிச்சம் இல்லாவிட்டால் தேநீரோடு பாண் வாங்கி கொடுக்கும்படி சுனேத்திராவுக்குச் சொன்னேன். ரங்கசாமியைச் சந்திக்கும்பொழுது கூலியைப்பற்றி பேசிக் கொள்ளலாம். அந்த வேலைக்காரர்கள் இரண்டு முன்று மணித்தியாலங்கள் வேலை செய்தார்கள். பகல் சாப்பாட்டு நேரமும் நெருங்கியது. பாதை சீர் செய்யும் வேலை பூர்த்தியாகியிருந்தது. இரண்டு சின்னஞ்சிறிய கண்ணாடி டம்ளர்களில் வாய்வரை சாராயத்தை நிரப்பிக் கொடுத்தேன். அவர்கள் ஒரே மூச்சில் அதைக் குடித்து முடித்து விட்டார்கள். பிறகு சுனேத்திரா அவர்களுக்கு சோறு போட்டுக் கொடுத்தாள். சாப்பிட்டு முடிந்ததும் தட்டுகளைக் கழுவி வைத்துவிட்டு புறப்படத் தயாரானார்கள். பணம் எதுவும் பெற்றுக் கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

" வேண்டாம் ஐயா" இருவரில் சற்று மா நிறத்தவனாக இருந்த ஆள் சாரத்தில் கையையும் வாயையும் துடைத்தபடி சொன்னான். அவன் கொச்சி நாட்டுக்காரனாகவோ மலையாளத்தானாகவோ தான் இருக்கவேண்டும். " இது ரங்கசாமி மொதலாளியோட – வேலைங்க மொதலாளி சொன்னதால செஞ்சோமுங்க. சல்லி எடுத்தா மொதலாளி கோவிச்சுப்பாரு." அவர்கள் போகும் வரை பேசாமல் இருந்த சுனேத்ரா " இவங்க கூலி வேலை செய்யிற ஆளுங்க இல்ல. அந்த செகப்பு ஆள் ஆஸ்பத்திரி முன்னால இருக்கிற ஆலமரத்துக்கடியில செருப்பு ரிப்பேர் செய்றான். பட்டின சபையோட குப்பை வண்டியும் இவன் தான் இழுக்கிறானுங்க. அவனோட தொழில் இதுதான். ஓய்வு நேரத்தில சப்பாத்தும் தைப்பான் போல இருக்கு.

"அம்மா குப்பை வண்டியில அந்த ஆள கட்டியா இழுக்க வைக்கிறாங்க?" எனது இரண்டு வயது மகள் கண்களை அகலத்திறந்து ஆச்சரியத்தோடு கேட்டாள். அண்ணன் அவளை கேலி செய்து சிரித்தான்.

" இல்லடா கண்ணா" சுனேத்திரா சிரிப்பை நிறுத்திவிட்டு விஷயத்தை விபரிக்கத் தொடங்கினாள். " இது பெட்டி மாதிரி இருக்கும். குப்பையை அது உள்ளே போட்டு தள்ளிக்கிட்டு போவாங்க"

" மாடு தானே வண்டிய இழுக்கும்" அண்ணாவின் சிரிப்பைப்

பொருட்படுத்தாத தங்கை கேட்டாள். அவள் குரலில் கோபம் தொனித்தது. " மாட்டை வண்டியில கட்டி இழுப்பாங்க இது தெரியாதா" மாதம் ஒரு தடவை விறகு ஏற்றிக் கொண்டு ஒரு வண்டி அங்கே வரும். அவளுக்கு இதைப் பார்த்து நல்ல பழக்கம்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பிரித் வைபவம் இருந்தது. வரவேற்பும் சாப்பாடும் வெகு தடல் புடலாக இருந்தது. சிலர் ' மஹபிரித் " முடிந்த கையோடு புறப்பட்டார்கள். முற்றத்தில் ஒரு ஓரமாக உட்கார்த்திருந்த ரங்கசாமியை நான் மஹபிரித் முடிந்த பிறகு தான் கவனித்தேன்.

நான் சுனேத்திராவைக் கூப்பிட்டு " ரங்கசாமி வந்திருக்கான். ஏதாச்சும் சாப்பிட்டானோ தெரியாது" என்றேன்." எல்லாரும் சாப்பிட்டாங்க" ரங்கசாமி எப்பங்க வந்தான். பிக்குமாரை அழைச்சுகிட்டு வந்த ஊர்வலத்தில வந்தானாக்கும்" சுனேத்திரா சொன்னாள்.

பன்சலை அண்மையில் தான் இருந்தது. இதனால் பிக்குமாரை போய் அழைத்து வருவது இலகுவாக இருந்தது. அழைக்கப் போகும் கூட்டத்தில் ரங்கசாமியும் இருந்தான். அந்தக் கூட்டத்தினர் எழுப்பிய "சாது" "சாது" என்னும் பக்திநாதத்தினூடே மெலிந்து தளர்ந்த ரங்கசாமியின் "சாது" குரல் வேறாகக் கேட்டது.

நடுநிசியாயிற்று. களைப்போடு விழித்திருந்த பலர் தூங்கி விழத் தொடங்கினார்கள். " பிரித் " மண்டபத்தின் முன்னால் உட்கார்த்திருந்த அடியார் கூட்டமும் தூங்கி விழுந்தபடி இருந்தது. பிரித் ஓதுவதை மனம் வைத்துக் கேட்டவர்கள் ஒரு சிலர்தான். முற்றத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் பாதிக்கு மேல் காலியாகக் கிடந்தன. அடுத்த காப்பிப் பரிமாறல் தொடங்கியது. விழித்திருப்பவர்கள் எல்லோருக்கும் காப்பி கிடைக்கின்றதா என்று பார்ப்பதற்காக நான் ஒரு சுற்று நடந்து வரும் பொழுது ரங்கசாமியைப் பார்த்தேன். அவன் கொட்டான் மரத்தடியில் வரிசையாகப் போட்டிருந்த கதிரைகளில் படுத்திருந்தான். அவன் விழித்திருக்கிறானா தூங்குகிறானா என்று பார்ப்பதற்காக இன்னும் சற்று நெருங்கிப் பார்த்தேன். அவன் உடனே எழுந்து உட்கார்ந்தான். அவன் பிரித் கேட்டுக் கொண்டிருந்தான் என்பது எனக்கு நன்றாகத்தெரிந்தது. உண்மையில் ரங்கசாமி எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று எனக்கே தெரியாது. அவன் பௌத்தனாக இருப்பதற்கு நிறைய சான்றுகள் உண்டு. வருஷா வருஷம் நடக்கும் சங்கமித்த ஊர்வலத்தின் அவனும் பங்குபற்றுவதுண்டு. ஆனால் அவன் ஊர்வலத்தின் கடைசியில் தான் போவான். அரையில் சிவப்புத்துணி கட்டி மேலெல்லாம் விபூதி பூசிக்கொண்டு முதுகில் அங்கங்கே பொருத்தப்பட்ட இரும்பு ஊசிகளில் கயிற்றைப் பிணைத்துக் பறவைக் காவடி எடுத்து செல்பவன் ரங்கசாமி தான் என்பது எனக்கு மிக அண்மையில் தான் தெரியவந்தது.

அவனை அந்தக் கோலத்தில் பார்த்தபொழுது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. இப்பொழுது அவன் ஒழுங்காக பிரித் கேட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட நான் அதை விட பலமடங்கு ஆச்சரியப்பட்டேன்.

" ரங்கசாமி வேல் விழா ஊர்வலத்தில போறத நான் பாத்திருக்கேன்" நான் அவன் அருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். சங்கமித்த பெறஹர என்று பெயர் தான் . ஆனால் அதன் கடைசியில் காவடியும் வேல்ரதமும் போய்க் கொண்டிருக்கும். இதைப் பார்த்தால் இந்து சமய ஊர்வலம் போலக்கூட தோன்றும்"

ரங்கசாமியோட சமயம் என்ன?

"ஏங்க ஐயா நான் இந்து சமயத்தவங்க" அவன் ஆச்சரியத்தோடு கண்களை உயர்த்திச் சொன்னான்."

"ரங்கசாமி பன்சலைக்கு போறத நான் பார்த்திருக்கேன்"

"ஆமாங்க நான் பன்சலைக்கு போவேங்க. எல்லாமே துக்கம் தான்னு ஹாமுதுருவோ சொல்லுவாருங்க. அது நெஜம் தாங்க" அவன் ஒட்டைப் பற்கள் தெரியச் சொன்னான்.

" ஐயா அவங்கட சாமியும் எங்கட சாமியும் ஒன்னயே தான் சொல்றாங்க. அது என்ன தெரியுமா யாருக்குமே கஷ்டம் கொடுக்காம வாழனும். நான் கோயிலுக்குப் போவேங்க. பன்சலை இருந்தா அதுக்கும் போவேங்க. எங்கட கடவுளும் பன்சலையில் இருக்கார்.

" ரங்கசாமிக்கு பிரித் புரியாது இல்லியா?"

" புரியாதுங்க. ஆனா கேக்கனும் போல இருக்குமுங்க" அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

பிரித் ஓதும் பிக்குமாரின் குரலில் கருணை தோய்ந்திருந்தது. பிரித் ஓதும் சத்தம் நடுநிசியில் அமைதியை ஊடுருவிச் சென்றது. அது தாலாட்டு பாட்டுப் போல கேட்பவர்களை தூங்க வைத்தது.

ரங்கசாமி நீண்ட பெருமூச்சு விட்டான். " எல்லாமே துக்கம் தான்" அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

அஷ்டமி நிலவு மறைந்து கொண்டிருந்தது. நடுநிசி தாண்டியதால் குளிர்காற்று உக்கிரமாக வீசியது. ரங்கசாமி நட்சத்திரக் கூட்டத்தை அண்ணாந்து பார்த்தான். நானும் தலையை உயர்த்திப் பார்த்தேன். எங்களுக்கு நேராக மேலே ஆகாயத்தில் சப்தரிஷி மண்டலம் தெரிந்தது. அதை எண்ணுவதற்கு நான்பல

தடவை முயற்சி எடுத்திருக்கிறேன். ஆனால் சரியாக எண்ண முடியவில்லை.

"அத எண்ணிக்க முடிஞ்சுதுன்னா சீக்கிரமா செத்திடுவாங்களாம். ஏழு நாள்ள செத்திடுவாங்க." அவன் பெருமூச்சு விட்டான். ரங்கசாமிக்கு அகாலமரணடைந்த மனைவியின் ஞாபகம் வந்ததோ.

" கஷ்டங்களுக்கு முடிவே இல்லீங்க ஐயா"

"ஏன் அப்படி சொல்றே ரங்கசாமி"

"விஜித் ஐயா நெலத்த அவருக்கு வித்திடச் சொல்லி தப்ப முடியலீங்க" ஐயாவுக்கு எந்த நாளும் கரச்சல் குடுக்க எனக்கு இஷ்டமில்லீங்க " நல்ல கதயாயிருக்கே. ரங்கசாமி அத பணத்துக்கு தானே வாங்கியிருந்தே? "

"முன்னே வித்தாலும் இப்ப வேணுமிங்கிறாரு. சிகியூரிடி ஆபிஸ் போடப்போறாராம் விக்க சொல்றாரு. முன் பக்கமா அழகா செய்யனுமாம்"

"சரியான ஆளா இருக்காரே. பிரச்சினையான நேரத்தில தள்ளிவிட்டு இப்ப பறிக்கப் பாக்கிறாரே."

"நான் அந்தநெலத்த வாங்கப் போனபோது கூட ஐயா தடுத்தீங்க" ரங்கசாமி பெருமூச்சு விட்டான்.

"ஆமா ஆனா நெலத்த வாங்க சொல்லியோ விக்க சொல்லியோ நாம யாரையும் வற்புறுத்த ஏலாது ரங்கசாமி. நீ பணம் குடுத்துத் தானே வாங்கினே?"

" சம்பாதிச்ச பணம் முழுசா கொடுத்தேனுங்க. அறுநூறு பவுண் கொடுத்துத்தான் வாங்கினேனுங்க"

"அதுதானே. நீ பேசாம இரு. அவர் எதயாச்சும் செய்துகிட்டு போகட்டும்."

"நான் தமிழன். எனக்கு கரச்சல் கொடுத்தான்னா? மகளுக்கு கரச்சல் கொடுத்தான்னா என்ன செய்யறது?"

ரங்கசாமி நாவலைக்குப் போய் விஜித்தின் அம்மாவை சந்தித்து எல்லா விபரங்களையும் சொல்லியிருக்கிறான். ரங்கசாமி நீண்ட காலமாக அந்தக் காணியில் வசித்து வந்ததால் அவனுக்கு ஒரு தொகையைக் கொடுத்து காணியை மீட்டுக் கொள்ள நேர்ந்துள்ளதாக விஜித் தாயாருக்கு சொல்லியிருந்தான். இதற்கு முன்னால் இந்தக் காணியை ரங்கசாமிக்குத் தான் விற்றுவிட்ட விஷயம் எதையும் விஜித் அவளுக்குச் சொல்லவில்லை. இது அவள் கேள்விப்படாத புதிய விஷயம்.

பாதையை விஸ்தரிப்பார்களோ என்ற பயத்தில் காணியைத் தன் பேரில் சுமத்திவிட்டதையும் இப்பொழுது அதைத்திருப்பித் தரும்படி பலாத்காரம் பண்ணுவதையும் எல்லாம் ரங்கசாமி அழுதழுது பெரியம்மாவிடம் சொன்னான். அவளுக்கு உண்மையிலேயே வியப்பாக இருந்தது.

"விஜித் ஐயா நெலத்த எனக்கு வித்ததா சொன்னதும் பெரியம்மா ரொம்ப ஏசினாங்க. அவரு அத திருப்பிக் கேட்டதப் பத்தி சொன்னதும் அதவிட அதிகமா ஏசினாங்க. பெரியம்மாக்கு சொல்லி வேலையில்லீங்க. எனக்கும் சேத்து பேசினாங்க. நீ நெலத்த வாங்கின போது எனக்கு சொன்னியா? நீ தமிழன். இப்ப ஏன் இங்க வர்றே? விஜித் ஐயா கிட்டேயே சொல்லு. அப்படீன்னு எனக்கு ஏசினாங்க. வித்திருக்காட்டா விஜித் ஐயா எனக்கு தொல்ல கொடுத்திருப்பாரு. நான் தமிழன் தானே."

" ரங்கசாமி நல்லா யோசிச்சு பாரு. சாவித்திரி என்ன சொல்றா?"

" பெத்தா கேக்கிறா நாங்க எங்க போறதாம். விஜித் ஐயா என்னடான்னா ஆயிரத்து எறநூறு ரூபா குடுக்காராம். அத வாங்கிக்கிட்டு எங்களப்போகச் சொல்றாரு. அந்த பணத்தில மூணு பேர்ச் நெலம் கூட வாங்க முடியாதுங்க. எனக்கு கஷ்டம் முடியறதாவே இல்ல. முடியாதுங்க. பொண்டாட்டியும் செத்திட்டா. இப்ப அது வேற தொல்ல" அவன் கைவிரல்களைக் கோத்தபடி பெருமூச்சு விட்டான்.

" நாங்க ரங்கசாமிய பாக்க வரனுமின்னு இருந்தோம்" நான் அவனுடைய மனசைத் திசை திருப்பும் நோக்கத்தோடு பேசினேன்.

"தோட்டம் சுத்தம் பண்ண கூலிக்காரங்கள அனுப்பினதுக்கு ரொம்ப நன்றி. எங்களுக்கு அது ரொம்ப உதவியா இருந்திச்சு. எனக்கும் ஜோலிஜாஸ்தியா இருந்ததால ரங்கசாமிய சந்திச்சு பணம் கொடுக்க நேரம் வரல்ல"

"என்னங்க இது. இதுக்கெல்லாம் போய் யாராச்சும் பணம் வாங்குவாங்களா? ராமனும் முத்துவும் நான் கொடுத்து எதுவுமே எடுத்துக்க மாட்டாங்க" ரங்கசாமி சிரித்துக் கொண்டு சொன்னான்.

அவர்கள் ரங்கசாமியிடம் கடனாகப் பணம் வாங்கிற பேர்வழிகளாக இருக்கவேண்டும் என்பது எனக்கு உடனே புரிந்துவிட்டது.

" அது எப்படி? நான் கூலி கொடுக்கனுமே"

"இல்லீங்க ஐயா. அதெல்லாம் எதுக்குங்க. அவங்க சல்லிவாங்க மாட்டாங்க. பிரித் நடத்திறதுக்கு நான் செய்த உதவியா இருக்கட்டுமே"

# 13

இரவு வேலை உள்ள நாட்களில் ரூபசிரி காவல் முடிந்த கையோடு வந்து பதினொரு மணிவரை தூங்குவான். நான்கு ஐந்து மணித்தியாலம் தூங்கிய பிறகு எழுந்து குளித்து சாப்பிட்டுவிட்டு மீண்டும் ஒன்று இரண்டு மணித்தியாலம் தூங்குவது அவனுடைய வழக்கம். அப்படி தூங்கப் போவதற்கு முன் அவள் சாவித்திரியை சந்திக்கப் போவான். லட்சுமி இறந்து மூன்று நான்கு மாதங்கள் கழிந்தன. ரூபசிரிக்கு சாவித்திரி மேல் இருந்த அன்பு துளிர்விட்டு வளர ஆரம்பித்தது. சாவித்திரி கிளார்க் ஐயா வீட்டு பிள்ளையை அழைத்து வருவதற்குப் பாடசாலைக்குப் போகும் பொழுதோ பிள்ளையை வீட்டில் ஒப்படைத்து விட்டு திரும்பி வரும்பொழுதோ ரூபசிரி அவளைச் சந்திப்பான்.

சாவித்திரியை பார்க்கும் அவனுடைய கண்கள் வேறு திசை திரும்பாது. அப்படி அவளை வைத்த கண் வாங்காமல் பார்ப்பான். அவன் மட்டுமா சாவித்திரி மேல் மோகம் கொண்டான். இல்லை குணவங்சவுக்கும் சாவித்திரி மேல் அன்பு இருந்தது. அவளுடைய பிறப்பை நினைத்து அவன் சற்றுத் தயங்கினான். ஜாதி மத பேதம் பார்க்காத ரூபசிரி சாவித்திரி மேல் கொண்ட காதலை பார்க்கப் பார்க்கப் குணவங்சவுக்குத் தாங்க முடியவில்லை. சாவித்திரி உருவத்தில் தாயைப் போல் இருந்தாள். அவளுடைய அழகு எந்தக் காதலனுடைய உள்ளத்தையும் கவரக்கூடிய அமைதியான அழகு. விஜித்தின் அலுவலகத்தில் சுவரில் மாட்டப்பட்டிருந்த மொனாலிசாவின் உருவத்துக்கும் சாவித்திரியின் உருவத்துக்கும் இடையில் உள்ள ஒற்றுமை என்னவாயிருக்கும் என்று குணவங்ச ஆகாயத்துக்கும் பூமிக்கும் முடிச்சுப் போட்டவாறு யோசித்துக்கொண்டிருந்தான். இதற்கு விடை காண்பது சிரமமாக இருந்தது.

இரண்டு பேரினது கைகளும் நிறைவாகத் தளதள என்று இருந்தன. இதைவிட வேறு ஒற்றுமை எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள அவனுக்குச் சற்று நேரம் எடுத்தது. லட்சுமியின் நிறமும் ரங்கசாமியின் நிறமும் மூன்றுக்கு ஒன்று என்ற விதத்தில் கலந்தால் எப்படி இருக்குமோ அப்படியான ஒரு நிறம் சாவித்திரிக்கு வாய்த்திருந்தது. இந்த நிற அழகு குணவங்சவின் உள்ளத்தில் ஆசையை வளர்த்தது. தான் ஒரு முட்டாள் என்று எண்ணினான். எல்லாக் காதல்

விவகாரங்களும் கலியாணத்தில் முடியவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாதே.

ரூபசிரியும் குணவங்சவும் விஜித்தின் பாதுகாப்புச் சேவையில் ஆரம்ப காலத்திலேயே சேர்ந்துவிட்டார்கள். ஊழியர்களில் பெரும்பாலானவர்களின் சேவை ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்கப்படுவதில்லை. தொடக்க காலத்தில் இருந்த ஊழியர் கூட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினரே இன்று மிஞ்சியிருந்தனர். வேலையை நிருவகிப்பவர்களான ரூபசிரியும் குணவங்சவும் ஏனைய ஊழியர்களைக் காட்டிலும் அதிக சலுகைகளை அனுபவித்தனர். ரூபசிரி உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருந்தான். இதனால் எழுத்து விவகாரங்களின் போது ரூபசிரியின் உதவியை நாடுவார்கள். எனவே ரூபசிரிக்கு இலகுவான வேலைகள் தான் கிடைப்பது வழக்கம். இவ்வாறு ரூபசிரி எல்லா வகையிலும் தன்னை விட உயர்ந்தவன் என்பதை எண்ண எண்ண குணவங்சவுக்குப் பொறாமை பொங்கியது.

விஜித் பாதுகாப்புச் சேவைகள் நிறுவனத்துக்குள் நுழையும் கதவு பாதைவளைவில் தான் இருந்தது. இதனால் பல இடர்ப்பாடுகளை எதிர் கொள்ள வேண்டியிருப்பதாக விஜித் எண்ணினான். ரங்கசாமியின் காணியை சுவீகரிப்பது சாத்தியமானால் பாதுகாப்புச் சேவைகள் நிறுவனத்தின் கதவு நகரத்தின் நடுப்பகுதிக்குப் போய்விடும். மின்னி மின்னி அணைந்து ஒளிரும் பெயர்ப்பலகை பாதை வளைவில் இருப்பதை விட அதன் எடுப்பும் அழகும் இந்த இடத்துக்கு கொண்டு வந்தால் தான் பிரமாதமாக இருக்கும். இதனால் தார்ப்பாதையில் வேகமா ஓடிவரும் வாகனங்கள் மிக இலகுவாக வளைவுக்குள் நுழைந்து விடலாம். ஒரு சமயம் மிக வேமாக வந்த ஒரு வாகனம் கேட்தூணில் இடித்துவிட்டது. இதனால் தூணுக்கு சேதம் தான். நல்லவேளை தூண் விழாமல் மயிரிழையில் தப்பிவிட்டது. தூண் உடனடியாகத் திருத்தப்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கு முகாமையாளர் விஜித்தே வந்துவிட்டார்.

" இந்தப் பயல் இந்த இடத்தவிட்டு போக மாட்டேங்கிறான். பாருங்களேன் " விஜித் ரங்கசாமியின் கடையின் பின்பக்கத்தை சுட்டிக்காட்டிச் சொன்னான்.

" காட்டில இருக்கிற புலிகள வீட்டுக்கு கொண்ணாந்தா இதுதான் நடக்கும்.

"ரூபசிரி சொன்னா எல்லாம் சரியாயிடும்" குணவங்ச தன்னையறியாமலே சொல்லிவிட்டான்.

" அது எப்படி "

" யாரோ சிரிக்கும் குரல் கேட்டது. குணவங்ச மௌனமானான். விஜித்தோ இந்தப் பேச்சைக் கணக்கெடுக்காதவன் போல தூணை ஆராய்ந்தான்.

"ரூபசிரிக்கு சீதனம் கொடுக்கனுமே. அதனால் தான் ரங்கசாமி காணிய விக்காம வச்சிருக்கான்."

நிலத்தை வெட்டிக் கொண்டிருந்த ஒரு வேலையாள் சொன்னான். விஜித் இதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. இருந்தும் இந்த விஷயத்தைச் சுற்றி அவனுடைய சிந்தனைகள் பின்னிப்படர்ந்தன. இந்தக் கேலிப் பேச்சில் உண்மை உண்டா இல்லையா என்பதைப் பற்றி பிறகு யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்வதென்று விஜித் எண்ணிக் கொண்டான். இதைப்பற்றிய மேற்கொண்டு விபரங்களை குணவங்சவிடம்கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. அவன் வாய்ச் சாலக்காரன். குணவங்சவும் ரூபசிரியும் பரஸ்பரம் ஒருவரைப் பற்றி மற்றவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். வெளியே பார்ப்பவர்களுக்கு இவர்கள் சிநேகிதர்கள் போலத் தெரிந்தாலும் மனத்தால் ஒருவரையொருவர் கருவிக் கொண்டிருந்தார்கள். ஒருவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மற்றவரிடம் கேட்டு பிரயோஜனம் இல்லை. அதற்கு அவர் ஏற்றவரும் இல்லை. ரூபசிரியின் காதல் விவகாரத்தைப் பயன்படுத்தி ரங்கசாமியை அடக்க வழிகிடைக்குமா என்று விஜித் இரகசியமாக தேடிப் பார்க்க முனைந்தான்.

தினமும் சில நிமிஷங்களாவது ஒருவரை ஒருவர் சந்திக்காவிட்டா காதலர்களுக்குப் பொழுதே போகாது. இரவு வேலை உள்ள நாட்களில் காலையில் தான் ரூபசிரியின் காவல் காரியங்கள் முடிவடையும். அதிகாலையில் வரும் ரயில் பிரயாணிகளுக்காக ரங்கசாமி சுடச்சுட இஞ்சி தேநீர் தயாரிப்பான். ரூபசிரியும் அதில் ஒரு டம்பளர் குடித்துவிட்டுத் தன் இரவுக் காவல் சுற்றை முடித்துக் கொள்வான். ரங்கசாமியின் தாமதத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு காதலர்கள் ஜாடை மாடையாகப் பேசிக் கொள்வார்கள்.

திடீரென்று ஒரு நாள் ரூபசிரியை வரும்படி சொல்லி அனுப்பினான் விஜித். தன் எதிரில் கம்பீரமாக வந்து நின்ற ரூபசிரியைப் பார்த்து. " கருனாரத்ன ஒரு வார லீவில போறான். அனுப்பிறதுக்கு நம்பிக்கையான ஆள் இல்ல. அவனுக்கு பதிலா வேலை பார்க்க நீ தான் போகனும்" ரூபசிரி பதில் சொல்வதற்கு அவகாசம் கொடுத்தான் விஜித். அவன் கண்களை உற்று நோக்கினான்.

" என்ன சப்ளைசுக்கா?" ரூபசிரிக்கு வியப்பாக இருந்தது. இது எங்கிருந்து வந்த யோசனையோ என்று நினைத்துத் தான் இப்படி கேட்டான்.

" ஆமா சப்ளைசுக்குத்தான். ஏன் உனக்கு ஏதாச்சும் ஆட்சேபனை உண்டா?"

" இல் ...... லை......."

பாதுகாப்புச் சேவைக்குரிய நிபந்தனைகள் ஒழுங்கு விதிகள் எல்லாம் ரூபசிரிக்கு மனப்பாடம். சிறந்த ஒழுக்கம் இருக்கவேண்டும். இது தான் முதலாவது வாசகம். தீர்மானங்கள் எல்லாம் பணிப்பாளர் சபையுடையது. சேவகர்கள் அதற்கு அடங்கி நடக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது இரண்டாவது வாசகம். விஜித்தின் கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது இந்த இரண்டு வாசகங்களும் தான் ரூபசிரியின் நினைவுக்கு வந்தன. சப்ளைஸ் பகுதி சல்கமவில் இருந்தது.

" எப்ப தொடக்கம் சார்?"

" இப்பவே இந்த நிமிஷத்தில இருந்து" விஜித் கடிகாரத்தைப் பார்த்தபடி சொன்னான். எட்டு மணிக்கு முன்னாடி ரூபசிரி சல்கமவுக்கு போகனும் தெஹிவளையில் நடக்கிற காணிவெல்லுக்கு இன்னும் ஒரு மணிநேரத்தில போயாகனும். அதாவது ஒம்பது மணிக்கு. ரூபசிரி வாயே திறக்கவில்லை. போசாமல் அலுவலக அறையிலிருந்து வெளியே வந்தான். தன்னுடைய சாக்குக் கட்டில் இருந்த அறைக்குச் சொன்றான். ஒரு வார காலத்துக்கு அந்த அறைக்குக் கும்பிடு போட்டுவிட்டு சில துணிமணிகளை எடுத்துக் கொண்டான். தான் சல்கமவிலேயே தங்க நேரிடலாம். இது தன்னுடைய காதல் விவகாரத்தைபற்றி நன்றாக அறிந்த யாரோ ஒருவர் வைத்த பொறியாகத்தான் இருக்கவேண்டும்.

மௌனமாகப் புறப்பட்டுச் செல்லும் ரூபசிரியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டுநின்றான் விஜித். பின்னர் அவன் பார்வை வக்கீல் மேல் விழுந்தது. வக்கீலோ இதிலெல்லாம் தனக்கு சம்பந்தமில்லை என்ற தோரணையில் ஒரு பத்திரிகையை விரித்து வைத்து சுவாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்தார்.

" ஆளுக்கு பேயறஞ்ச மாதிரி ஆயிடுச்சு"

" நானும் பாத்தேன்"

வக்கீல் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிகையை ஒரு பக்கமாக, எறிந்தார். கழுத்தைச் சுற்றிக் கட்டியிருந்த ' டையை" தளர்த்திவிட்டு கால்களை இடந்து போட்டு கோட்டை இரண்டு தோள்களிலும் தொங்கவிட்டார்.

" இப்போ அடுத்த நடவடிக்கை"

வக்கீலுக்கு விஜித் ஒரு சிகரட்டைக் கொடுத்து லைட்டரை முடுக்கி அவர் முன்னால் நீட்டினான். வக்கீல் சுத்தமாக வழித்துவிட்ட தனது நாடியைத் தடவிக் கொடுத்தார். அது நன்றாக வளர்ந்ததாடியை ஒருவர் தடவினால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது.

"இருந்திருந்து ஒரு நாளைக்கு இரண்டு நாளைக்குஇங்கேயும் ஆளைக்கூட்டிக்கனும். ஆனா பகல் நேரத்தில காண இடம் வைக்க கூடாது" விஜித் எதையும் கவனிக்காதவன் போல இருந்தாலும் வக்கீலின் பேச்சு அவன் காதில் விழுந்தது.

சிகரட் புகையை நெஞ்சு வரை இழுத்துக் கொண்ட வக்கீல் " ராத்திரிக்கு சந்திக்கிற மாதிரி வேலைகள ஒழுங்கு பண்ணித்தான் செய்யறத செய்யனும்" என்றார்.

" ஆனா நல்ல பலன் கிடைக்கனுமின்னா கொஞ்ச நாளைக்கு பொறுமையா இருந்து பாக்கனும்"

விரல்களுக்கு நடுவே இருந்த சிகரட்டில் எரிந்துமுடிந்து போன சாம்பலை வெள்ளி நிறத்தட்டில் தட்டிய விஜித் " ஆமா" என்று வக்கீல் சொன்ன கதையை ஆமோதித்தான்.

" எப்படியாச்சும் வேலய முடிக்கனும். பழக்கமானவனாச்சேன்னு தான் இத்தனை காலமும் பொறுத்திருந்தோம். இனியும் பொறுத்துக்க முடியாது. இதுவும் சரிவரல்லேன்னா" விஜித் கீழ் உதட்டைப் பிதுக்கி வக்கீலின் முகத்துக் கெதிராக ஆள்க்காட்டி விரலை நீட்டினான்.

" பாக்கலாம். வக்கீல் தலையை ஆட்டினார் " எந்த விஷயமா இருந்தாலும் கொஞ்சம் ஆற அமரத் தான் செய்யனும். இன்னும் கொஞ்சக்காலம்போகட்டுமே"

# 14

நான் ஆழ்ந்த நித்திரையிலிருந்து திடுக்கிட்டு விழித்தேன். நெஞ்சு " டிக் " டிக் " என்று அடித்துக் கொண்டது. கட்டிலில் எழுந்து உட்கார்ந்தேன். சில நிமிடங்கள் நான் சிலையாகி நின்றேன்.

" ஐயா!" ஐயா "

" ரங்கசாமி" சட்டென்று எழுந்து மின்சார விளக்கை போட்டாள். சுனேத்திரா. " ஏதோ கஷ்டம் போல இருக்கு" வேண்டா வெறுப்பாகச் சொன்னாள். கதவைத் திறப்பதற்கு முன் எனக்கு சைகை காட்டி விட்டு கதவுக் கண்ணாடி ஊடாக வந்திருப்பரைப் பார்க்க முயற்சித்தாள்.

" ரங்கசாமி. சாவித்திரியும் வந்திருக்கிறாள். "

கதவைத் திறந்தது தான் தாமதம், கூடத்துக்குள் நுழைந்த ரங்கசாமி விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டான். சாவித்திரியும் ரொம்பக் குழம்பிப்போய் இருந்தாள். அவளும் வீட்டுக்குள் வந்து சுவர் ஓரமாக நிலத்தில் உட்கார்ந்தாள். அவள் அழவில்லை. ஆனால் கழுத்து அறுபட்ட கோழி போலத் துடித்தாள். முகத்தை இரண்டு கைகளினாலும் மூடியிருந்தாள். சிறிது நேரத்தின் பின் முகத்திலிருந்த கைகள் விலகின. அப்பொழுது தான் நான் அவள் முகத்தைச் சரியாகப் பார்த்தேன். அவள் முகத்திலும் கழுத்துப் பகுதியிலும் கீறல் அடையாளங்கள் தெரிந்தன. யாருடனோ சண்டை போட்டிருக்கிறாள் போல இருக்கே. சுனேத்திரா காப்பி தயார் பண்ணப் போய்விட்டாள். அவர்கள் சற்று அமைதியடையட்டும் என்று நானும் பேசாமல் இருந்தேன்.

"ஏதோ பெரிய கஷ்டம் வந்தாப்பல இருக்கு" காப்பி தயார் பண்ணிக் கொண்டிருந்த சுனேத்திரா நான் வந்ததைக் கண்டு சொன்னாள்.

" பார்க்கலாம்"

" யாராச்சும் பலாத்காரம் செஞ்சாங்களோன்னு எனக்கு தோணுது." நான்

அவள் காப்பி தயார் பண்ணும் வரை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். சூடான காப்பியைக் குடித்ததும் ரங்கசாமிக்கு சற்று தென்பு வந்தது.

சாவித்திரியோ இன்னும் நிலத்தைப் பார்த்தபடியே தான் நின்றாள். அவளுடைய உடம்பில் நடுக்கம் இன்னும் ஓயவில்லை.

"ஜுவானிசினுடைய வீடு களிமண் போட்டு மெழுகனும் . ராத்திரிக்குத் தான் அந்த வேலை செய்யனும். அதுக்கு நாமளும் கொஞ்சம் உதவி செய்யலாமேன்னு ராத்திரி சாப்பாட்ட முடிச்சுகிட்டு பெத்தாவ கதவ மூடிக்கச் சொல்லிட்டு நான் போனேங்க. யாரோ கடைக்குள் நொளஞ்சு பெத்தாக்கு கரச்சல் கொடுக்க பாத்திருக்காங்க"

" இல்ல " நானும் சுனேத்ராவும் ஒரே நேரத்தில் சொன்னோம்.

" யார் சாவித்திரி? "

" யாரின்னு அடையாளம் கண்டுக்க முடியல்ல."

" காலையில அவன் யார் எங்கிறத நான் பாத்திடுவேன் " சாவித்திரிக்குப் பதிலாக ரங்கசாமி பதில் சொன்னான்.

" எப்படி ?

ரங்கசாமி கைகளைக் கூப்பி மேலே அண்ணாந்து பார்த்து "ஆண்டவன் இருக்கார் ஐயா அவர் பாப்பாருங்க."

"நம்ம செல்லையா இருக்கானே அவன் செவ்வாக்கெழமை சந்தை முடிஞ்சதுக் கப்புறம் எந்த நாளும் சிலாபத்துக்குப் போயிடுவான். இன்னைக்கும் போயிட்டான். எப்பவாவது ஒரு நாள் தான் செவ்வாக்கெழம இரவு தங்குவான். சந்தை முடிஞ்ச கையோட சாயந்தரம் கொழும்புக்கு போய் சாமான் வாங்கிட்டு சிலாப பஸ்சில் ஏறப்போயிருக்கான். நோட்டு புஸ்தகத்த நம்ம வீட்டில வெச்சுட்டுப் போயிட்டான். அது இல்லாம சிலாபத்துகுப் போய் வேல இல்ல. அத எடுத்துக்கிட்டு போக திரும்பினவன் அப்படியே வந்து படுத்துக்கிட்டான். பெத்தாக்கு இதெல்லாம் தெரியாது. செல்லையா எப்பவும் ஒரு பெரிய பொல்லு பக்கத்தில வெச்சுக்கிட்டுத் தான் தூங்குவான். வீட்டுக்குள்ள கலாட்டா சத்தம் கேட்டிச்சு. தெரு ஓர லைட் வெளிச்சத்தில யாரோ பெத்தாவ கடத்திக்கிட்டு போக முயற்சி பண்ணுறது மங்கலா தெரிஞ்சிச்சு. செல்லையா பதுங்கிப் பதுங்கிப்போய் தலையில ஒரு அடி போட்டானுங்க. வந்திருந்த ஆளுங்க தப்பி ஓடிட்டாங்க. செல்லையா பெத்தாவ

கூட்டிக்கிட்டு ஜுவானிசோட வீட்டுக்கு ஓடியிருக்கான்" ரங்கசாமி பயத்தினால் விழிபிதுங்க விபரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"சாவித்திரிக்கு அந்த ஆளுங்கள அடையாளம் தெரியலையா ?" சுனேத்திரா கேட்டாள்.

இவ்வளவு நேரமும் பேச்சு மூச்சில்லாமல் இருந்த சாவித்திரி ரங்கசாமி விபரங்களைச் சொல்லிக் கொண்டு போகவும் அழத் தொடங்கி விட்டாள்.

"எனக்கு அறிமுகமில்லாதவங்க. கறுப்புத் துணியில துவாரம் வெச்சு முகத்தை மூடிக் கட்டியிருந்தாங்க" அவள் முதல் முதலாகப் பேசினாள். சுனேத்ராவுக்கோ இந்தக் கதையைக் கேட்கப் பயமாக இருந்தது. அவளுடைய கண்கள் விரிந்தன. " இப்படியும் நடக்குமா?" என்றாள். " எத்தனை மணிக்கு நடந்திச்சு?"

"பெரிய பங்களாவில பத்து அடிச்சு சத்தம் கேட்டுதுங்க."

" சாவித்திரி முழிச்சிருந்தியா?"

" அப்பா வர்ற வரைக்கும் எனக்குத் தூக்கம் வராது. "

" ரங்கசாமி நீ செஞ்சது பெரிய தப்புப்பா, வயசுக்கு வந்து ஒரு பொண்ண தனியா வெச்சிட்டு ராத்திரி நேரத்தில யாராச்சும் வெளிய போவாங்களா? இந்த லோகத்தில யாருமே செய்யமாட்டாங்க."

" அந்தச் சின்னப் பையன் தனிக்கு இருந்தானே" அவனுடைய உயரத்தைக் கையால் அளந்து காட்டியவாறு சொன்னான். லட்சுமி இறந்த பிறகு கடை வேலைக்கு மட்டுமில்லாமல் சாவித்திரி தனியாக இருக்கிறாளே என்ற ஆதங்கத்தில் ரங்கசாமி ஒரு உறவுக்காரப் பையனை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

"கதவ நல்லா மூடிக்கச் சொல்லி பெத்தாகிட்ட சொல்லிட்டுத்தான் போனேனுங்க. நான் போனப்ப ஒம்பது மணி இருக்குங்க. சீக்கிரமா வந்துடலாமின்னு தான் நெனச்சேன்".

" இப்ப கடையில யாரு இருக்கா?"

" சின்னப் பையன் நல்லா தூங்கிக் கிட்டு இருப்பான். செல்லையா இங்க தெரு வரைக்கும் வந்திட்டுப் போனான். செல்லையா தான் கடையில இருப்பானுங்க."

" ஜுவானிசுக்கு தெரியுமா?"

" இல்ல இல்ல செல்லையா ஒன்னுமே செல்லலல்ல. ராத்திரி வந்திருக்கான். பெத்தா வீட்டுக்குள்ளே இருந்துகிட்டு அப்பா ஜுவானிசோட வீட்டுக்கு போனதா சொல்லியிருக்கா. அதப் பாக்க வந்ததா ஜுவானிஸ்கிட்ட சொன்னானாம். பெத்தாவ வழியில் நிப்பாட்டி வெச்சுட்டுத்தான் போயிருக்கான். " "ரங்கசாமி! சாவித்திரி இங்கே இருக்கட்டும் நீயும் நானும் போய் பாத்துட்டு வந்தா என்ன?"

" நீங்களா? இந்த ராத்திரி நேரத்தில நீங்க போய் என்ன செய்யப் போறீங்க நீங்க போக வேண்டாங்க." சுனேத்ரா கிலிபிடித்தவள் போல அலறினாள்.

" போகலாமா ரங்கசாமி? தேவையானா பெமியானுவையும் கூட்டிக்கலாம்". " ஐயா முடியாதுங்க". ரங்கசாமிக்கு நடுக்கம்பிடித்துக் கொண்டது.

"இங்கே திருடங்க இருக்கிறதாத் தான் எனக்கு தெரியும். ஆனா காமபிசாசுகளும் இருக்குது எங்கிறத நான் இன்னைக்குத்தான் தெரிஞ்சுகிட்டேன்" என்றாள் சுனேத்திரா."

"யாருன்னு கண்டுபிடிச்சிடலாமுங்க." ரங்கசாமி சொன்னான். அது எப்படி?" "செல்லையா போட்ட அடியில ஒருத்தனுக்கு மண்டையே பொளந்திடுச்சு. நெறைய ரத்தம் கொட்டிருக்கு ரெண்டு கையாலயும் தலைய புடிச்சுகிட்டு தப்பி ஓடிட்டானுங்க."

"எனக்கு அது தான் பயமா இருக்குங்க" ரங்கசாமி பெருமூச்சு விட்டான். " நான் தமிழனுங்க. என்னைக்காச்சும் பழிக்குப் பழி வாங்காம விடமாட்டானுங்க.

" கலுமல்லி இருக்கானே அவனத் தான் கொஞ்சமாவது சந்தேகப்படலாம். ஆனா அவன்கூட போக்கிரித்தனமான வேலைகள் செய்வானே தவிர இந்த மாதிரிக் காரியம் செஞ்சதா கேள்விப்பட்டதேயில்ல."

"பணம் ஏதாச்சும் எடுத்திருக்காங்களா?"

"நா அங்க போகல்லீங்க. எடுக்கிறதுக்கு பணமும் இல்லீங்க " என்ன ஒரு நாப்பது அம்பது ரூவா இருந்திருக்குமுங்க"

"அப்படின்னா இப்ப ஒன்னுமே செய்யமுடியாது." சுநேத்திரா இவங்க ரெண்டு பேருக்கும் தூக்கிறதுக்கு இடம் ஒதுக்கிக் கொடு" நான் மனைவியைப் பார்த்து சொன்னேன்.

" இப்ப கொஞ்ச நேரம் தூங்கு ரங்கசாமி. ராத்திரி பன்னிரெண்டு மணியும் ஆயிடிச்சு. காலையில என்ன பண்ணலாமெங்கிறத பாக்கலாம்."

சுனேத்திரா படுக்கை அறையின் கதவை மூடிவிட்டு இருட்டில் வந்து என்னருகில் உட்கார்ந்தாள். ரங்கசாமி வந்தபொழுது நான் நல்ல தூக்கத்திலிருந்தேன். ஆனால் இப்பொழுது தூக்கம் வர மறுத்தது.

சுனேத்ரா கட்டிலில் வசதியாக உட்கார்ந்தாள் " இதில் வேற ஏதோ விஷயம் இருக்கிற மாதிரி எனக்கு தோணுதுங்க" அவள் பேச்சைத் தொடங்கினாள். " என்ன?"

"தெரியல்லையா. அந்தப் பொண்ணு பயத்தில எப்படி நடுங்கிகிட்டு இருக்கா. சாவித்திரிக்கும் இதில சம்பந்தம் இருக்கோ என்னமோ தெரியல்ல."

" உனக்கு என்ன பைத்தியமா? வேஷம் போட்ட காமுகர்கள் கிட்ட மாட்டிக்கிட்டா ஒரு பொண்ணு பயந்திட மாட்டாளா என்ன?

"அந்த ஆளுங்க கதவு ஒடைச்சுக்கிட்டு உள்ள வரல்ல. எப்பிடி உள்ள நொளைஞ்சாங்களோ தெரியல்ல. சாவித்திரியும் அந்த நேரம் தூங்கல்ல. சாவித்திரி யாரையோ காதலிக்கிறதா மேரி எனக்கு சொல்லியிருந்தா."

" மேரியா ?"

" ஆமா ஜுவானிசோட சம்சாரம் "

" அவள விரும்புற பையனா இருந்தா கண்ண கட்டிகிட்டு வந்து இப்படியா நாடகம் ஆடுவான்?"

" அதுதான் எனக்கும் நெனச்சுப்பாக்க முடியல்ல."

"நமக்கு இருக்கிற பிரச்சினைகள் போதாதா? மத்தவங்கட பிரச்சினைகளையும் மண்டையில போட்டுகுழப்பிக்காதே சுனேத்ரா " நான் தூங்குவதற்கு ஆயத்தமானேன். இதையெல்லாம் மனசுக்கு எடுத்தா தூக்கமும் வராது.

# 15

ரங்கசாமி சூரியோதயத்துக்கு முன்னாடியே புறப்படத் தயாரானான். "நாங்க இங்கே வந்து தங்கினது யாருக்கும் தெரியாம போனா நல்லதுன்னு நெனச்சேன். ஏன்னா அது ஐயாக்கு கூடாதுங்க" என்றான்.

" நான் ஐயாவ சந்திக்கத் தான் வந்தேங்க..... விஜித்துக்கு முன்னால் கைகளைக் கூப்பியபடி நின்றான் ரங்கசாமி. இதற்கு முன்னாடியே ரங்கசாமியின் வரவை எதிர்பார்த்திருந்த விஜித் அவன் தாமதமாவதைக் கண்டு வரமாட்டான் என்று நினைத்தான். இப்பொழுது கண்முன்னால் அவனைக் கண்டதும் சற்றுத் திகைத்துப் போனான். விஜித் தன்னுடைய சாவி கோக்கப்பட்டிருந்த சங்கிலியை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

" எனக்கு பெரிய கஷ்டம் வந்திடுச்சு ஐயா "

விஜித் ரங்கசாமிக்கு உட்காரும்படி சைகை காட்டினான். ரங்கசாமியும் வளைந்து நெளிந்து ஒரு ஓரமாக நாற்காலியில் உட்கார்ந்தான். " எனக்கு யாரோட தஞ்சம் ஐயா? " அவனுடைய குரல் அழுகையோடு ஒலித்தது.

" என்ன நடந்திச்சு சொல்லும். சும்மா சுத்தி வளைச்சு பேசாதே." விஜித் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி சொன்னான். நேரம் என்பது பொன்னைக் காட்டிலும் பெறுமதி வாய்ந்தது என்று நினைத்தானோ.

" என்னோட பொண்ணுக்கு கரைச்சல் குடுக்க ஆளுங்க வந்தாங்க ஐயா "

"நிஜமாவா?" விஜித் ஆச்சரியமடைந்தவன் போலக் கேட்டான். " யார் ஆளுங்க ?"

" அடையாளம் தெரியல்ல. மொகத்த மூடியிருந்தாங்க."

"இது என்னிக்கு நடந்திச்சு?"

"செவ்வாகெழம ராத்திரி"

"இன்னிக்கு வெள்ளிக்கெழமை இவ்வளவு நாளும் என்ன செஞ்சுகிட்டிருந்தீர். பொலிசுக்கு சொன்னீரா?"

" பொலிசுக்கு சொல்லலீங்க. அதனால என்னங்க பிரயோஜனம்?"

" ஏன்?"

"நான் யாரயாச்சும் சந்தேகிக்கிறேனான்னு பொலிஸ் கேப்பாங்க அம்புட்டுத்தாங்க. பெத்தாவும் பொலிசுக்குப் போக வேண்டியதாயிடும். அதனால அவளுக்குத் தான் வெக்கம்.

" என்ன நடந்திச்சின்னு சரியா சொல்லும் ஓய் " ரங்கசாமி சொன்ன விபரங்களைக் கேட்ட விஜித் ரொம்பவும் குழம்பிப் போனான்.

" நீர் ஏன் இத மறைச்சு வெச்சீர்?"

யாராயிருக்குமின்னு பொறுத்துப் பார்க்கலாமின்னு இருந்தோம். தலை பிளந்த யாரையுமே காணோம். யாருன்னு சரியா தெரியாதபடியாத் தாங்க பயமாயிருக்கு"

"அப்ப நீர் இப்போ இங்க வந்தது இத யாரு செஞ்சிருப்பான்னு துப்பறியிறதுக்குத் தானே. என்னோட ஆளுங்க மேல உமக்கு சந்தேகமா?"

" இல்ல ஐயா நான் அதுக்கு வரலீங்க"

"பாக்கலாம் பாக்கலாம்" விஜித் பெரிய மேசை மேலிருந்த மணியை எடுத்து அடித்தான். அறைக்கு வெளியே நின்ற சேவகன் ஓடிவந்து ஒரு ஓரமாக நின்றான்.

"ரெஜிஸ்டரை எடுத்துக்கிட்டு வா"

" ஐயா நான் கனவில கூட அப்படி நெனைக்கலீங்க. ஐயா இருக்கீங்கன்னா எனக்கு பயமில்லீங்க. அது தாங்க வந்தேன்."

" நீர் சொல்லாம போனாலும் நாம கொஞ்சம் யோசிக்கனும் இல்லியா"

ரங்கசாமியின் கதையைப் பொருட்படுத்தாத விஜித் ரெஜிஸ்டரை எடுத்துப் புரட்டத் தொடங்கினான்.

" ரங்கசாமிட மகளோட கூட்டாளி யாரு? ஒரு நாள் இந்த மாதிரி ஒரு கத சொன்னீரோ இல்லியோ?" விஜித் ரெஜிஸ்டரில் விரல்களை ஓடவிட்டபடி கேட்டான்.

"யாரது ஐசே! எனக்கு நெனப்பில்லே" எதிர்பாராத விதமாக இடி விழுந்தது போல இருந்தது ரங்கசாமிக்கு. அவனுக்கு தலை சுழன்றது. மேலும் கீழும் பார்த்தான். சாவித்திரி காதல் விவகாரத்தில் மாட்டிக் கொள்வாள் என்று அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

" ஏன் ரூபசிரி இருக்கானே " பக்கத்தில் நின்ற சேவகன் ரங்கசாமியைக் கடைக் கண்ணால் பார்த்தபடி முணுமுணுத்தான்.

" யார் ரூபசிரியா?" மீண்டும் ரெஜிஸ்டரில் விரல்களை ஓடவிட்ட விஜித் அந்தப் பெயர் அகப்பட்டதும் அதன் மேல் ஒரு தட்டுத் தட்டினான். " உமக்கு இந்த ஆள தெரியும் தானே? இதோ இப்ப நீரே பாத்துக்கலாம். அவனோட மண்டை பொளந்திருக்கா இல்லியான்னு" விஜித் தலையை நிமிர்த்தாமலே சொன்னான். ரங்கசாமிக்கோ கோயில் சரிந்து தலைக்கு மேல் விழுந்த மாதிரி ஆகிப்போனது. ரங்கசாமி பயத்தோடு விஜித்தின் முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

" என்ன ஓய் ரங்கசாமி என்னையே பாத்துக்கிட்டு இருக்கீர்? வீட்டுக்கதவ தெறந்து வெக்காம போனா ஆளுங்க வீட்டுக்குள்ள எப்படி வருவாங்க. இது ரூபசிரியோட வேலையான்னு எனக்கும் சரியா சொல்ல முடியாது.

வந்ததுக்கப்புறம் நீரே பாத்துக்கலாம்" விஜித் இப்படி சொல்லிக்கொண்டே அந்த பெரிய ரெஜிஸ்டரை சத்தம் கேட்கும் படியாக மூடிவைத்தான். பெரிய கடிகாரத்தில் விநாடி முள் பாயும் சத்தம் கேட்டது. மின்விசிறி " ம் " என்ற சத்தத்தோடு சுழன்று கொண்டிருந்தது.

" ரூபசிரி ரங்கசாமியைக் கண்டதும் சிலையாகிவிட்டான். தனக்கு நன்கு அறிமுகமான பழக்கமான அந்த இளைஞனை இப்பொழுது ரங்கசாமி முதன் முதலாக அந்நியன் ஒருவனைப் பார்ப்பவன் போல பார்த்தான். விஜித் நாற்காலியில் சொகுசாகத் சாய்ந்து இருந்து கொண்டு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக ஆடினான்.

நீர் முந்தா நாள் ராவு வேல செஞ்சீரா?"

இது என்ன கேள்வி என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட ரூபசிரி "ஆமா சார் " என்று சந்தேகத்தோடு சொன்னான்.

" ரங்கசாமியோட வீட்டுக்கு ஆளுங்க நொளைஞ்சிருக்காங்க. அவங்கள கண்டுபிடிக்கத் தான் ரங்கசாமி வந்திருக்கான்." விஜித் எந்த வித பதட்டமும் இல்லாமல் சொன்னான்.

"பொறளையில் சர்க்கஸ் நடந்திச்சு இல்லியா அதுக்கு ஸ்பெஷல் டியுட்டியில நானும் இன்னும் பத்து பேரும் ராத்திரி எட்டு மணிக்கு போனோமுங்க. காலையில பத்துமணிக்குத் தான் வேல முடிஞ்சிருச்சு. என்ன நடந்திச்சு சார்?" ரூபசிரி ஆச்சரியமும் ஆவலும் போட்டி போட ரங்கசாமியைப் பார்த்துக் கேட்டான்.

"அந்த சம்பவம் எத்தன மணிக்கு நடந்திச்சு ரங்கசாமி? விஜித் ரூபசிரியின் கேள்வியை கவனமெடுக்காதவன் போலக் கேட்டான்.

" பத்து மணிக்கு இங்கே மணி அடிச்சிச்சுங்க"

அப்படின்னா ரூபசிரியா இருக்க முடியாதே ரங்கசாமி" விஜித் ரூபசிரி பக்கம் திரும்பாமலே வரவு ஏட்டை ஆராய்ந்தபடி சொன்னான்.

" உம்ம மேல சந்தேகம் பட்டுத் தான் ரங்கசாமி வந்திருக்கான்." "ஐயோ சாமி" இளைஞனின் பக்கம் பார்த்த ரங்கசாமி நாற்காலியை விட்டு எழும்பி விஜித்தின் கால்களில் விழுந்து வணங்க எத்தனித்தான். " நான் ஒங்களோட உதவிய நாடித்தாங்க வந்தேன். நான் ஐயாவோட ஆளுங்கள சந்தேகிக்கல்ல."

" உதவி கேட்டு வர்றதாயிருந்தா நீர் இதுக்கு முன்னமே வந்திருக்கனும். இவ்வளவு நாளும் நீர் என்ன செஞ்சுகிட்டிருந்தீர்?"

" இந்தச் சங்கடம் எங்க இருந்து வந்திச்சின்னு நெனச்சு பாக்க முடியலீங்க" "அந்த நேரம் நீர் ஏன் சத்தம் போடல்ல? நம்ம கேட்டில வந்து சொல்லியிருக்கலாமில்லியா? உதவி வேணுமின்னு நெனச்சிருந்தா நீர் கேட்டில வந்து சொல்லியிருக்கனும்.

" நான் அந்த சமயம் வீட்டில இல்லீங்க. ஜுவானிசோட வீட்டு தரைக்கு களிமண் மொழுக போயிருந்தேனுங்க"

"இது நடந்ததுக்கப்புறமும் நீர் வரல்லியே?"

ரங்கசாமி மௌனமானான்.

"நெஜமா என்ன நடந்திச்சுங்ககிறத சொல்லிடு ரங்கசாமி. என்னய நீ ஏமாத்த முடியாது"

வீட்டில இருக்க பயமா இருந்திச்சு சாமி, பெத்தா ஜுவானிசோட வீட்டுக்கு வந்தா. நாங்க அப்படியே எதிரிசிங்க ஐயா வீட்டுக்குப் போனோமுங்க"

" எதிரிசிங்க எங்கிறது யார்?"

"ஸ்டேஷன் ரோட்டில இருக்கிறவங்க ஹெல்த் டிபாட்மென்டில வேலை செய்யிற ஐயா.

"ஆ அந்த கிளாக் ஐயா." விஜித் ஏதோ தெரிந்து கொண்டவன் போல தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

"சரிதான் பக்கத்தில இருக்கிற என்னைவிட உமக்கு அவன் ஒசத்தியா போனான். எங்கிட்ட வந்து இந்த விஷயத்த சொல்லச் சொல்லி உமக்கு அவன் தான் யோசன சொன்னானோ?"

ரங்கசாமி மறுபடியும் மௌனமானான். தான் நினைத்ததை மாற்றும் வழக்கம் விஜித்துக்குக் கிடையாது. தாமதமாகிக்கூட தான் வந்தது தவறு என்பது ரங்கசாமிக்குத் தெரிந்தது. அவனுக்கு ஒரே கவலையாக இருந்தது.

"என்னோட ஆளுங்க அம்பதுபேர் இங்கே இருக்காங்க. அவங்க புறப்படுறது ஒம்பது மணிக்கு" விஜித் மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தான். கேட் அருகில் நின்ற சேவகன் இன்னுமொரு பெரிய புத்தகத்தைக் கொண்டுவந்தான். ரங்கசாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை . ஒரே திகைப்பாக இருந்தது. அவன் புறப்படத் தயாரானான்."

"நான் போயிட்டு வர்ரேன் ஐயா" அவன் தோளில் கிடந்த துண்டை கையில் எடுத்து குனிந்து வளைந்து மரியாதை செய்தான்.

"இல்லை இல்லை அப்படி உட்காரும்" – விஜித்தின் குரலில் கோபம் தொனித்தது. டிரக் வண்டியொன்று ரிவேர்சில் வந்து முற்றத்தில் நின்றது."

"ஐயோ சாமி" – இந்தத் தடவை ரங்கசாமி விஜித்தின் முழக்கால்களை பிடித்துக் கொண்டு.

"நான் ஐயாவ எப்பவாச்சும் சந்தேகப்படுவேனா? ஐயா எங்கள பாத்துக்குவீங்க என்னு தான் சொல்ல வந்தேனுங்க. யாராச்சும் எங்களுக்கு கரைச்சல் குடுக்க வந்தா எங்களுக்கு ஒதவ யாருங்க இருக்காங்க?" என்றான்.

தனக்கும் விஜித் ஐயாவுக்கும் மத்தியில் பெரிய பிளவு ஏற்பட்டு விட்டதையும் அதை மறுபடி பொருத்த முடியாது என்பதையும் ரங்கசாமி தெரிந்து கொண்டான்.

"மூக்கால எதுக்கு ஒய் அழறீர் இப்படி உட்காரும்" விஜித் சற்று கடுமையாகச் சொன்னான். " என்னோட ஆளுங்க இத செய்திருந்தா அவங்கள நான் ய ாருன்னு கண்டுபிடிக்கனும். அப்படிப்பட்ட மனுஷங்கள வெச்சுக்கிட்டு இந்த மாதிரி வேலை செய்ய முடியாது. அவங்க இப்ப கையொப்பம் போட வருவாங்க. அப்ப கவனமா பாரும். நீர் இத இவ்வளவு நாளும் மறச்சது தான் எனக்கு கோவம்".

இங்கே நடந்த விஷயம் ஒன்றுமே சேவகர்களுக்குத் தெரியாது. அவர்கள் ஒவ்வொருவராக வந்து கையொப்பம் போட்டுவிட்டுச் சென்றார்கள். சாவித்திரி சொன்ன அடையாளங்களுடன் எவருமே அந்தக் கூட்டத்தில் இருக்கவில்லை. அப்படி இருந்தாலும் கூட ரங்கசாமிக்கு அவர்களைத் தெரியாது. அப்படியே தெரிந்திருந்தாலும் அதைப்பற்றி சொல்ல அவனுக்கு மனமில்லை.

" இருந்தாங்களா?"

" இல்ல ஐயா"

"மொகத்தில பருக்களோடு ஒருத்தன் இருந்தானில்லையா?"

"கொஞ்சம் குட்டையாகூட இருந்தானே அவன்ல தான் எனக்கு சந்தேகம்."

" இல்ல இல்ல ஐயா நல்ல வளத்தியான உயரமான ஆள் தான் வந்தானுங்க."

"நாங்க இங்க பக்கத்தில இருந்துகிட்டே இப்படி ஒரு காரியம் நடந்திடுச்சுன்னு எனக்கு சரியான கோவம். நீர் அந்த நேரம் வந்து 'கேட்டில' சொல்லியிருந்தீரானா அவங்கள புடிச்சிருக்கலாம். இப்ப ஒன்னுமேசெய்ய முடியாது. ரங்கசாமி. நீர் போய் பொலிசுக்காச்சும் சொல்லிப்பாரும்."

" ரங்கசாமி புறப்பட்டான். அவனை மறுபடியும் நிறுத்தி " உம்மோட மகள் யாராச்சும் சிநேகித புள்ளைக்கு கதவ தொறந்தாளோ தெரியாது இல்லையா. அதயும் கொஞ்சம் விசாரிச்சு பாரும் " என்று சொல்லி அனுப்பினான் விஜித். ரங்கசாமி அலமந்துபோய் கேட்டிலிருந்து வெளியேறினான். இந்த சம்பவத்தினால் வாழ்க்கையே ஈடாடத் தொடங்கிவிட்டது. கூடிய சீக்கிரம் சாவித்திரிக்கு திருமணம் செய்து வைக்கும்படி எதிரிசிங்க யோசனை கூறினார். பழிவாங்கும் கோஷ்டியினால் ஏதாவது அநர்த்தம் ஏற்படலாம் என்ற பயத்தில் தான் செல்லையா ஒரு நாள் இரவு கூட அங்கே தங்குவதில்லை. என்று ரங்கசாமி எண்ணினான். இதனால், தான் தனியனாகி விட்டதாக அவனுக்குள் ஒரு நினைவு, சாவித்திரியின் காதல் விவகாரம் பற்றி ரங்கசாமிக்கு எதுவும் தெரியாமலிருந்த போதும் ஜுவானிசே ஒரு தடவை அது பற்றி சாடைமாடையாக சொல்லியிருக்கிறான். அதனால் இதில் உண்மை இருக்கத்தான் வேண்டும். அந்தப் பேர்வழி இஞ்சித் தேநீர் குடிக்க வரும் நாட்களில் சாவித்திரியை பார்க்கும் பார்வை ரங்கசாமிக்கு இப்போது ஞாபகம் வந்தது. சாவித்திரிக்கு சீக்கிரமாக ஒரு கலியாணத்தைப் பண்ணி வைக்கிறதுதான் நல்ல காரியம். சாவித்திரியைக் கட்டுகிறவன் அங்கேயே தங்கிவிடுவதால் பாதுகாப்பைப் பற்றி அதற்குப் பிறகு பிரச்சினையே வராது.

இந்த சம்பவம் நிகழ்ந்த பிறகு சாவித்திரியை கடையில் தனியே விட்டுவிட்டு வெளியே போவதற்கு ரங்கசாமிக்கு மனம் வருவதில்லை. வீட்டிலேயே இருப்பதால் பிழைப்பும் கெட்டுவிட்டது. இதனால் சீக்கிரமாக மகளுக்கு திருணம் செய்து வைப்பது தான் ஒரே வழி என்று நினைத்தான்.

பஞ்சப் பரதேசி என்று தான் மரியாதைக் குறைவாகத் இவ்வளவு நாளும் எண்ணியிருந்த செல்லையா மட்டும் அன்று அங்கே இல்லாமல் போயிருந்தால் தன்னுடைய கதையே முடிந்து போயிருக்கும் என்று சாவித்திரி நினைத்தாள். வந்த ஆட்கள் தன்னை பலாத்காரம் செய்யவரவில்லை தன்னைக் கடத்திக் கொண்டு போகும் எண்ணத்தில் தான் வந்தார்கள் என்பது சாவித்திரிக்கு நன்றாகத் தெரியும். ரூபசிரி ஒன்பது மணிக்கு வருவதாகச் சொல்லியிருந்தாலும் வரவில்லை. ஒருவேளை அவன் வரத் தாமதமாகலாம் என்று நினைத்த சாவித்திரி அப்பா போன பிறகு கதவுக்கு சாவி போடாமல் சும்மா தான் சாத்தியிருந்தாள். இது அவளுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. ரூபசிரி வருவதற்குத் தாமதமாகியது. சாவித்திரி தலையை மேசையில் சாய்த்திருந்தாள். அவளுக்குத் தூக்கம் கண்ணை நிறைத்தது.

அந்த சம்பவத்துக்கும் ரூபசிரிக்கும் எந்த சம்பந்தமும் இருக்க முடியாது. அவன் அப்படிப்பட்ட துரோகி அல்ல. ஆனால் இதுவரைக்கும் ரூபசிரி தன்னை வந்து பார்க்காமல் போனது ஏன் என்பது தான் சாவித்திரிக்கு புதிராக இருந்தது.

இரண்டு மூன்று தடவை இரவில் வந்து பேசிவிட்டுப் போயிருக்கிறான். இதைப் பார்த்த யாரோ ஒருவர் தான் இப்படியொரு காரியத்தைத் திட்டமிட்டுச் செய்திருக்க வேண்டும். அன்று இரவு சந்தித்த சந்திப்புக்குப் பிறகு ரூபசிரியைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இதை நினைக்க சாவித்திரிக்குக் கோபம் கோபமாக வந்தது. அவனைப் பற்றி ஏன் சந்தேகப் படவேண்டும்? ரூபசிரி அழைத்திருந்தால் எந்தக் கணத்திலும் தான் புறப்பட்டு வருவதை அவன் நிச்சயமாக அறிந்திருந்தான். நடந்த சம்பவங்கள் ரூபசிரிக்கு தெரியுமா தெரியாதா என்ற விபரம்கூட சாவித்திரிக்குத் தெரியாது. கடந்த இரவு சந்திப்புக்குப் பிறகு, தான் இப்படியொரு இக்கட்டில் மாட்டிக் கொண்டதாலும் ரூபசிரி பற்றி எந்த ஒரு தகவலும் கிடைக்காமல் போனதாலும் சாவித்திரியின் உள்ளத்தில் சந்தேகத்தைவிட விரக்தியே மேலோங்கி நின்றது. பகல் பொழுதில் சாவித்திரியை தனியா விட்டு எங்கேயும் போகக் கூடாது என்று அப்பா தீர்மானித்துவிட்டார். மாலையில் வியாபாரம் முடிந்ததும் ஜுவானிஸ் தம்பதிகளோடு இரவைக் கழிப்பதற்கு அவர்கள் வீட்டுக்குப் போய்விடுவதால் அவளுக்கு ரூபசிரியைப் பற்றி தகவல் அறிந்து கொள்ளவோ அவனைக் காணவோ முடியவில்லை.

செனவியைச் சந்திப்பதற்காக ரூபசிரி இரண்டு நாட்கள் சல்கமவுக்குப் போயிருந்த போதும் அவனைக் காண முடியவில்லை. விடுமுறை நாளைக் கூட ஓய்வாகக் கழிக்க முடியவில்லையே என்று ரூபசிரிக்கு தன்மீது கோபம் கோபமாக வந்தது. அவன் செனவியைச் சந்திக்கும் நோக்கத்தோடு மறுபடியும் சல்கமவுக்குப் போனான்.

" செனவி டியுட்டிக்கு போயிட்டார்". வழக்கமான பதில்தான் கிடைத்தது. "நல்லாயிருக்கே" ரூபசிரி தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். வேலைத் தலத்தைத் தேடிக் கொண்டு மருதானைக்கே போய்விடலாம் போல அவனுக்குத் தோன்றியது.

ரூபசிரியைக் கண்ட ஞானசேன லேசாகச் சிரித்தான். ஞானசேன செனவியின் கூட்டாளி.

" செனவி எங்கே?"

" செனவி சல்கமவில இருக்கான்."

" பொய் சொல்லாதேயும் ஓய்."

" பொய்யா? பொய் சொல்றதால உம்மகிட்ட இருந்து எனக்கென்ன பரிசா

கெடைக்கப்போகுது. மனுஷனுக்கு தடிமன் காச்சல்."

அப்படியானால் சல்கம கேட்டடியில் நின்ற சிரிசேன பொய் சொல்லியிருக்கிறான். அவன் இந்த செய்தியை சொல்வதற்கு முன்னால் ரெஜிஸ்டரைப் புரட்டிப் பார்க்கவில்லை. அவனோடும் இரண்டு வார்த்தைபேசி, எப்படியாவது செனவியைப் பிடித்து சீட்டுக்காசை வாங்கிடவேண்டுமென்று ரூபசிரி எண்ணினான். உடனே மருதானையிலிருந்து மீண்டும் சல்கம நோக்கிப் புறப்பட்டான். அங்கே பீரிஸ் பின்னேரத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தான். பீரிஸ் தேநீர் தயாரிக்கும் வேலையை நிறுத்தாமேலே " ரூபசிரி வந்து போனதை நான் பாத்தேன். ஏன் உள்ள வரல்ல? " என்று கேட்டான்.

" ஒரு காரியம் ஆக வேண்டியிருந்திச்சு" ரூபசிரி தனக்கு அருகே இருந்த நாற்காலியை இழுத்து அதன் கைப்பிடி இருந்த பக்கமாக திரும்பியிருந்து கொண்டு சொன்னான்.

பகல் சோறு ஆக்கிய அண்டாவில் கால்வாசியளவு அடியில் சோறு ஒட்டியிருந்தது. ரூபசிரி உட்கார்ந்தவாறே அருகே கிடந்த பாத்திரத்திலிருந்த குழம்பைத் துளாவினான். அது பூசனிக்காய்க் குழம்பு. துண்டுகள் கரைந்து போயிருந்தன.

" கொஞ்சம் சோறு சாப்பிடுறியா?" ரூபசிரி குழம்பைத் துளாவியதைக் கண்ட பீரிஸ் மேசையின் மேல் கடதாசியினால் முடியிருந்த சிறிய கிண்ணத்தைத் திறந்தபடி கேட்டான்.

" வேணாம்"

அவன் மீண்டும் குழம்பைத் துழாவிவிட்டு கரண்டியைப் போட்டான். "செனவி எத்தனை மணிக்கு வருவான்?" அக்கறை இல்லாதவன் போலக் கேட்டான். இரவு வேலைக்கு வருபவர்களுக்கும் இதே குழம்பை வற்றவைத்து பரிமாறுவார்கள். " எனக்கு அவனோட ஒரு சின்ன கொடுக்கல் வாங்கல் இருக்கு"

பீரிஸ் ஒன்றுமே பேசவில்லை. தேநீர் தயாரித்த பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தான். தேநீர் தயாரிப்பதோடு அன்றைய பொழுதுக்குரிய அவனுடைய கடமைகளும் முடிந்து விடும்.

" என்னோட சீட்டுக் காசு செனவிகிட்ட இருக்கு" ரூபசிரி பீரிசின் முதுகைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

"கெபல்ல வத்த இருக்கில்லியா? செனவி அங்க தான் வேல செய்றான்"

தொழில் ஆரம்பித்து ஒருவருட காலத்துள் விஜித்துக்குச் சொந்தமான கெபல்ல வத்த நிலம் குத்தகையிலிருந்து மீட்கப்பட்டது. பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் சிலர் தான் அதைக் கவனித்து வந்தார்கள்.

"மாமா பொய் சொல்ல வேண்டாம்" – ரூபசிரி கோபத்தோடுசொன்னான். அவன் அகப்படாம தப்பிச்சுக்கிட்டு இருக்கான் போல தெரியுது. கேட்டா வேலைக்கு போயிட்டதா சொல்றாங்க. வேலை செய்யிற இடத்துக்குப் போனா விடுதியில எங்கிறாங்க. இப்ப உன்னைக்கேட்டாப் புதுக்கதை சொல்றே. நிஜம் எது பொய் எதுன்னு தெரிஞ்சுக்கத் தான் நான் மாமாவ தேடி இங்கே வந்தேன்."

" அதப்பத்தி இப்பவே தெரிஞ்சுக்கலாமின்னு நெனைக்காதே" பீரிஸ், ரூபசிரிக்குப் பின்காட்டியபடி நின்று பதில் சொன்னான். தண்ணீர் சூடாகும்வரை பீரிஸ் சற்று நேரம் உட்கார்ந்தான். "செனவி இப்ப கொஞ்ச நாளா லீவு "

" பொய் சொல்ல வேண்டாம் மாமா. நான் தான் ரெஜிஸ்டரைப் பாத்தேனே. அவன் வேலைக்கு வந்ததாக குறிச்சிருக்கே. மாமா கூட எனக்கு பொய் சொன்னீங்க. " ரூபசிரி விரக்தியோடு சொன்னான்."

ரூபசிரி பீரிசுக்கு இடைக்கிடை உதவி செய்வதென்னவோ உண்மை தான். இதனால் ரூபசிரிக்கு உண்மை சொல்ல வேண்டியது பீரிசின் கடமை. " செனவி மண்டையை ஒடைச்சுக்கிட்டு வந்தான். ஏதோ கிரிமினல் குற்றத்தில மாட்டிக்கிட்டான் போல இருக்கு"

" எங்கே வெச்சு நடந்திச்சாம்?"

" பொறளையில் சர்க்கஸ் நடக்குதாமே அங்கே வச்சுத் தான்" .

ஞானசேனவும் செனவியும் சர்க்கஸ் நடக்கும் இடத்துக்குப் போகவில்லை என்பது ரூபசிரிக்கு நன்றாகவே தெரியும். ஆனால் பீரிஸ் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். சர்க்கஸ் முடிகிற வரைக்கும் தன்னோடு இன்னும் பத்துப்பேர் தான் போனார்கள் என்பது ரூபசிரிக்கு நன்றாகத் தெரியும்.

" பிறகு?"

" பிறகு என்ன. மேல எல்லாமே ரகசியம் தான்" பீரிஸ் குரலைத்

தாழ்த்தினான்.

" கதை ஆளுக்கு ஆள் மாறிகிட்டு போனா கம்பனிக்கு கெட்ட பேர் வந்திடும்".

" யாருக்கும் தெரியாதா?"

" ராவோட ராவா அனுப்பிட்டாங்க. நான் கூட தற்செயலாத் தான் பாத்தேன். ராத்திரி ரொம்ப புழுக்கமா இருந்ததால வெளியே வந்தேன். வக்கீல் சார் விஜித் ஐயாவோட காரை ஓட்டிக்கிட்டு வந்தார். ஞானசேன காரில் வந்து இறங்கி செனவியோட உடுபுடவை சாமான்களை எல்லாம் எடுத்துக்கிட்டுப் போனான். நான் வெளியே நின்னுகிட்டு இருந்ததால இத எல்லாம் பாத்தேன். இதப் பத்தி யாருக்கும் வாயே தெறக்க வேணாமின்னு வக்கீல் எனக்கு சொன்னார். நீ செனவிய தேடி அங்கேயும் இங்கேயும் அலைஞ்சுகிட்டு இருக்கிறதால ஒனக்கு மட்டும் சொன்னேன். இத்தனை நாளும் இதப்பத்தி மூச்சுவிட்டதில்ல."

"எனக்கு தெரியவே தெரியாது". ரூபசிரி ரொம்பக் கஷ்டப்பட்டுப் பேசினான். ஞானசேனவோட தான் அவனை டியூட்டிக்குப் போட்டிருந்தாங்க."

" ஆமா அவங்க ரெண்டு பேரும் தான் சண்டையில ஆப்பிட்டிருக்காங்க. " அப்படின்னா எனக்கு பணம் கெடைக்க சுணங்கும் –" ரூபசிரி பெருமூச்சு விட்டான்.

காற்சட்டைப் பைகளுக்குள் கைகளைத் திணித்தபடி நடக்கத் தொடங்கிய ரூபசிரி பின்பக்கம் திரும்பி " நான் செனவியைத் தேடிக்கிட்டு இங்கே வந்ததப் பத்தி ஞான சேனகிட்ட சொல்ல வேணாம் – " என்றான்.

பீரிஸ் தேநீர் வடிக்கும் பெரிய வடிதட்டைப் புறப்பக்கமாகக் திரும்பிக் கழுவிக் கொண்டே " இல்லை நான் சொல்ல மாட்டேன். அவனோட எனக்கு அதிகம் பேச்சுக் கிடையாது" என்று ரூபசிரியைப் பாக்காமலே சொன்னான். பொறுமையை இழந்த ரூபசிரி எரிந்து கொண்டிருந்த அடுப்பையும் பீரிசையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு காற்சட்டைப் பைகளிலிருந்து கைகளை வெளியே எடுத்து சேர்த்து முஷ்டியாக்கிக் கொண்டு புறப்பட்டான்.

# 16

" ஐயா என்னைய பாத்திருக்க மாட்டீங்க. ஆனா என்னயப் பத்தி கேள்விப்பட்டிருப்பீங்க. வாசலில் நின்ற இளைஞன் சொன்னான். தோற்றத்தில் ரொம்ப எடுப்பாக இருந்தான். " என்னோட பேர் ரூபசிரி."

" என்ன ரூபசிரியா உள்ளே வந்து உட்காரப்பா" நான் அவனை உள்ளே அழைத்தேன். அவனைப்பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருந்தேன். குரலைக் கேட்டதும் முன்னால் வந்து எட்டிப்பார்த்த எங்கள் மகன் ஓடிவந்து ரூபசிரியின் மடியில் உட்கார்ந்தான்.

" ரூபசிரி அண்ணா"

" ஏன்டா மகனே உனக்கு இந்த அண்ணாவை தெரியுமா?"

" நாங்க பள்ளிக்கூடம் போவோம் தானே. அப்ப சாவித்திரி அக்காவும் நானும் சந்திப்போம். குழந்தை இப்படி சொன்னதும் ரூபசிரியின் கன்னங்கள் சிவந்தன.

" ரூபசிரி அண்ணா எனக்கு தென்னை ஓலை ஊதுகுழல் கூடச் செய்து தருவார்"

இளைஞன் வெட்கப்பட்டு சிரித்தான். உடனே எதையோ நினைத்துக் கொண்டவன் போல குழந்தையை மடியைவிட்டு இறக்கி எழுந்து நின்று காற்சட்டைப் பையிலிருந்து ஒரு துண்டு சாக்கலேட்டை வெளியே எடுத்தான். இப்படியான பரிசுகளுக்கு குழந்தையும் பழக்கப்பட்டிருந்தான் என்பதை நானும் புரிந்து கொண்டேன்.

எனக்கோ பொறுமை போய்விட்டது. "சரி இனி அதையும் எடுத்துக்கிட்டு போய் தங்கச்சி கூட விளையாடு" என்றேன்.

எனக்கு அவனை முன்னரே தெரியும் என்பதை நான் சொல்லியிருந்ததால் விபரங்களைக் கேட்பது பலனற்ற விஷயம் என்று பேசாமல் இருந்து விட்டேன். இப்போ அவன் தான் பேச்சைத் தொடங்க வேண்டும். ஈரம் காயாத தலைமயிரை துவாயால் துடைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அந்த இளைஞனோ குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான். பெரிய கைக்குட்டையொன்றை எடுத்து முகத்தைக் துடைத்தான். பின்னர் நாற்காலியின் ஓரத்துக்கு வந்து அதன் சட்டத்தை நகத்தினால் சுரண்டத் தொடங்கினான். முதலில் எதைப் பேசலாம் என்று யோசனை பண்ணுபவன் போல் இருந்தது அவன் தோற்றம்.

" சாவித்திரி சம்பந்தப்பட்ட அந்த சம்பவம் இருக்கே அதில தெரியாத சில சமாச்சாரங்களும் இருக்கு . அத ஐயாக்கு சொல்லனும் போல தோனிச்சு" என்று சொல்லிவிட்டுத் தலையை நிமிர்த்தினான். " ஏன் ரங்கசாமிக்கு இத சொல்லல்ல? அவன உனக்கு தெரியும் தானே?" எனக்கோ பொறுக்க முடியவில்லை. ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்துக் கொண்டு சொன்னேன். அவர்களுக்காக நாங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறோமே இது தேவை தானா? இதை நினைக்க நினைக்க எனக்கு மனசெல்லாம் ஓய்ந்து விட்டது.

"இத யாருக்கு சொல்லலாமின்னு நானும் எல்லாப் பக்கத்தாலேயும் நெனச்சுப் பாத்தேன். ஒருத்தராவது உண்மய தெரிஞ்சுக்கனும். எனக்கு எப்பவும் ஐயாவோட நெனப்பு தான் – ஐயாக்கு இது தொல்லையா இருந்தா....? " அந்த இளைஞன் என்னை கழிவிரக்கத்துடன் பாாத்தான்.

" இல்ல! இல்ல! இத நான் தொல்லையா நெனச்சு அப்படி சொல்லல்லியே" நான் ஆவலோடு நாற்காலியை அவனருகில் இழுத்துப் போட்டபடி சொன்னேன்.

"அந்த சம்பவம் நடந்து இப்ப ரெண்டு மாசத்துக்கு கிட்ட ஆச்சு. ஆனா இப்ப கிட்டத்தில தான் அதாவது இரண்டு மூன்று நாளைக்கு முன்னாடி தான் இது பற்றிய பூரா விபரமும் தெரிஞ்சு கிட்டேன். சாவித்திரிக்கும் பழக்கமான ஒருத்தர் உண்மையான நிலைமைய அறிஞ்சா நல்லது என்கிறது தான் என்னோட அபிப்பிராயம்".

"என் மூலமா சாவித்திரிக்கு இத சொல்லனும் அதத்தானே ரூபசிரி எதிர்பார்க்கிறே? அப்படின்னா எனக்கு......"

"இல்ல இல்ல ஐயா" அவன் என்னைத்தடுத்து நிறுத்தினான்.

"ஐயா அவங்க ரங்கசாமி குடும்பத்த ரொம்ப இரக்கத்தோட பாக்கிறவங்க. அதனால தான் நான் இதசொல்ல நெனச்சேன். யார்கிட்டயாச்சும் இத சொல்ற வரைக்கும் எனக்கும் நிம்மதி இல்ல. அவ்வளவு தான். அதுக்கு மேல சாவித்திரி கிட்ட இத நீங்க சொல்லனுமின்னு நான் எதிர்பாக்கல்ல."

அவன் சிறிது நேரம் நிலத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பிறகு நிமிர்ந்து

" அது விஜித் ஐயாவோட வேல தாங்க"

இந்தச் செய்தி எனக்கு ஒன்றும் புதியதல்ல. நாட்கள் செல்லச் செல்ல இந்தச் சம்பவம் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அது விஜித்துடைய வேலை என்பது தான் எல்லோருடைய ஏகோபித்த முடிவும். என்ன பாடுபட்டு மறைக்க முயன்றாலும் எங்களுடையதைப் போல உள்ள ஒரு சின்னஞ்சிறிய நகரத்தில் இரகசியங்கள் இரகசியமாக இருக்க முடியாது. அவை காட்டுத் தீ போலப் பரவிவிடும். யாராலும் அதைத் தடுக்கவும் முடியாது. ஒருவரிலிருந்து இன்னொரவருக்கென்று போய்க் கொண்டிருந்த செய்தி நகரம் முழுவதும் பரவியது. விஜித் தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்பது பலருடைய அபிப்பிராயமாக இருந்தது.

" சரியா தெரிஞ்சுக்காம ஒருத்தர் மேல குற்றம் சுமத்தக்கூடாது இல்லியா" நான் விஷயம் எதையும் அறியாதவன் போலப் பேசினேன். " நான் உண்மையைத் தான் சொல்றேனுங்க" இளைஞனின் முகம் கோபத்தால் இருண்டது. கண்கள் வெளியே பிதுங்கின. கைகளை முஷ்டியாக்கிக் கொண்டான்.

" எங்ககூட வேல செய்யிற ஒருத்தன் ஒருமாச லீவு எடுத்துக்கிட்டு நிக்கிறான். அவனோட மண்டை பொளந்து கிடக்கு. இந்தமாதிரி சம்பளத்தோட லீவு குடுக்கமாட்டாங்க. அவன் லீவில நிக்கிறதே பெரிய ரகசியம். எந்தநாளும் வரவு இடாப்பில அவன் பேர் பதிவாகிகிட்டு இருக்குங்க. சம்பவம் நடந்த போக்கைப் பாத்து நாங்களும் இதுவரைக்கும் இப்படித் தான் நெனச்சோம். ஆனா சந்தேகப்படும்படியா சில விஷயங்கள் இருக்குங்க. அந்த ஆளுங்க தடங்கல் எதுவும் இல்லாம எப்படி வீட்டுக்குள்ள போனாங்க? கதவும் ஒடைக்கல்ல சாவித்திரியும் சத்தம் போட்டு ஊரக் கூட்டல்ல"

" ஐயாகிட்ட உண்மைய சொல்லிடனும் என்கிற எண்ணத்தில தான் நான் இங்க வந்தேன். எப்படி பார்த்தாலும் எனக்கு விமோசனமே இல்லீங்க". இளைஞன் பெருமூச்சு விட்டான். " சாவித்திரிய பாக்காம ஒருநாள் கூட என்னால இருக்க

முடியாதுங்க. பகல் நேரத்தில பேச முடியாததால ராத்திரில கதவு பக்கமா போய் கொஞ்சம் பேசிட்டு வர்றது பழக்கமா போயிடிச்சு. சப்ளைசுக்கு என்னய மாத்தினாங்க. ஒருவாரத்துக்கு மட்டும் தான்னு சொன்னாங்க. ஆனா ரெண்டு வாரம் அங்கே தங்க வேண்டியதாச்சு. அங்க சரியான வேலைங்க. ராத்திரி ஏழு எட்டு மணி வரை வேலை செய்வேங்க. சில நாட்கள்ல ராத்திரியும் வேலை. ராத்திரி வேல போடப்போறாங்க எங்கிற விஷயம் எனக்கு தெரியவே தெரியாது. சில சமயங்களில் பகல் வேலைக்கு போனா அடுத்த நாள் தான் வேல முடிஞ்சு வருவேனுங்க .

அவன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். அவனால் தொடர்ச்சியாகப் பேச முடியவில்லை. இங்கே நடக்கும் உரையாடல் என்னவாயிருக்கும் என்று பார்ப்பதற்கு சுனேத்திரா அங்கே வந்தாள். அவளைப் போய்விடும்படி நான் தலையை அசைத்து சைகை காட்டினேன். சுற்றிலும் இருள் கவியத் தொடங்கியிருந்தது. இதனால் சுனேத்திரா கூடத்தின் கோடியில் சுவரிலிருந்த விளக்கைப் போட்டாள். ரூபசிரிக்குப் பரிமாறப்பட்ட தேநீர் ஆறிக் குளிரத் தொடங்கியது.

" எனக்கு இப்ப என்ன தோணுது தெரியுமா சாவித்திரியையும் என்னையும் சந்திக்க வைக்கிற மாதிரி ஒரு திட்டம் போட்டிருக்காங்க. ஒரு வேளை நான் நெனைக்கிறது பிழையாயும் இருக்கலாமுங்க"

" ரூபசிரி அப்படி நெனைக்கிறதுக்கு காரணம் இருக்கனுமே"

" சப்ளைசில வேலை செய்றவங்க எல்லோரும் சல்கமவில தாங்க இருக்காங்க. ஆனா இடைக்கிடை என்னய தெலபுவவில் விட்டுப்போக ஆரம்பிச்சாங்க. நான் சாவித்திரிய பாக்கப்போற நேரத்த புடிச்சுக்கிட்டு இப்படி செஞ்சிருக்கலாமுங்க. விஜித்கிட்ட நாலு வருஷமா வேல செஞ்சிருக்கேனுங்க. அவரோட தந்திரமும் சூழ்ச்சியும் எனக்கு தெரியாத தில்லீங்க"

" அப்படி பாத்தா ரூபசிரிக்கு அங்கே எதிரிங்க இருப்பாங்களே?"

" எதிரிங்கன்னு சொல்லிக்க யாரும் இல்ல. ஆனா கோவக்காரங்க இல்லாத இடம் எங்க இருக்கு ஐயா? ஒருத்தரப் பத்தி இன்னொருத்தருக்கு சொல்லி பெருமை தேடிக்கிறவங்களுக்கா பஞ்சம்"

இவ்வளவு நேரமும் என் மனதில் ஒரு கேள்வி துருத்திக் கொண்டிருந்தது. ஆனால் அதைக் கேட்கவா வேண்டாமா என்று இரண்டும் கெட்டான் நிலையில்

நான் இருந்தேன். அதைக் கேட்காவிட்டால் சிக்கல் தீராது.

" இரவில் ரூபசிரி வீட்டுக்குள்ளே போவதுண்டா? " கடைசியாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டே விட்டேன்.

" ஒரு நாளும் போனதில்ல ஐயா. சாவித்திரி ஜன்னல் வழியா பேசுவாள். கதவ தெறக்கமாட்டா. இது கூட சப்ளைசுக்கு மாத்தலாகி போனதுக்கப்புறம் தான்.

" ஆனா அன்னைக்கு கதவு தெறந்திருந்திச்சு".

" இருக்கலாமுங்க ரங்கசாமி ஜுவானிசோட வீட்டுக்கு களிமண் மொழுக கொஞ் நாளா போய்கிட்டிருந்தான். அப்படி போன நாள்ல ராவு பத்து மணிக்குத்தான் வருவான். ராத்திரி வேலை இல்லாத நம்ம ஆளுங்க எட்டு மணிக்கெல்லாம் சாப்பாட்ட முடிச்சிட்டு படுத்து தூங்கிடுவாங்க. காலையில இருந்து நின்னுகிட்டுவேல செய்யுறவங்க தானே. நான் எட்டரை மணிபோல போய் பத்து நிமிஷம் பேசிட்டு வந்திடுவேனுங்க, அன்னைக்கு ராத்திரி எட்டு மணிபோல என்னை பொறளையில் சர்க்கஸ் நடக்கிற இடத்துகு டியூட் டி போட்டுட்டாரு. வழக்கம் போல நான் தான் வந்து கூப்பிடுறேன் எங்கிற எண்ணத்தில சாவித்திரி இருந்திருக்கா. நான் டியூட்டி போற விஷயம் அவளுக்குத் தெரியாது. நான் வரத் தாமதமானதால கதவுக்கு பூட்டு போடாம சும்மா மூடியிருந்தாளோ என்னமோ?"

" சரிதான் இப்ப புரியுது. ரூபசிரி வர்றதுக்கு தாமதமானதால சாவித்திரி கதவ சும்மா சாத்தி வச்சுட்டு பாத்துக்கிட்டு இருந்திருக்கா. அப்படித்தானே?"

" நானும் அப்படித்தான் நெனைக்கிறேன் ஐயா. என்ன நடந்திச்சுன்னு கேக்கலாமின்னா அதுக்கப்புறம் சாவித்திரிய சந்திக்க முடியல்ல. ரங்கசாமி சாவித்திரிக்கு காவல் போட்டிருக்கான்."

" சாவித்திரி செல்லையாவ கட்டப்போறாளாமே". நான் அவனுடைய முகத்தை நன்றாக நோட்டம் விட்டபடி சொன்னேன். அவன் கைக் குட்டையை எடுத்து வியர்வையை ஒற்றிக் கொண்டிருந்தான்.

" இந்த செய்தி என்னோட காதிலயும் விழுந்திச்சு ஐயா. செல்லையா கிட்ட பணம் இருக்கு. சாவித்திரிக்கும் வயசாகிட்டு போகுது."

" நீ சாவித்திரிய கட்டுற யோசனையோட தான் அவகிட்ட பழகினதா நான் நெனச்சிருந்தேன்." எனக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருந்தது.

"அந்த மாதிரி ஒரு எண்ணம் எனக்கு இருந்தது உண்மை தாங்க. ஆனா இப்ப இப்படி ஒண்ணு நடக்கிறது நல்லதுன்னு நெனைக்கிறேங்க. கட்டியிருந்தா ரெண்டு பேரும் கஷ்டப்பட்டிருப்போமுங்க. என்னோட சம்பளம் ஒருத்தருக்கு சாப்பிடவே போதாது. மாசம் ஒரு தடவை வீட்டுக்கும் போக முடியாது.

"சாவித்திரிய கட்டிக்கிட்டு அவளுக்கும் ஏதாவது ஒரு வேலய தேடியிருக்கலாம் இல்லியா. அவளும் படிச்சிருக்காளே."

சாவித்திரிய கட்டிக்கிட்டு வீட்டுக்கு போகவா? இங்கே இருக்கவும் முடியாது. வீட்டுக் கூலி கொடுக்கிறது எப்படி? இப்ப கொஞ்ச நாளா இனத் துரோகி எங்கிற பட்டம் வேற எனக்கு கொடுத்திருக்காங்க. கலியாணம் கட்டிக்கிட்டா இந்தத் தொல்லை எல்லாம் கூடிக்கிட்டு போகுமே தவிர அதுக்கு முடிவு வராது."

"அப்படின்னா ரூபசிரி சாவித்திரியோட பழகினதெல்லாம் சும்மா தமாஷுக்கு தானா?".

" இல்லீங்க ஐயா. சாவித்திரியோட மனசு மாறியிருக்காட்டா என்ன கஷ்டம் இருந்தாலும் அவள கட்டிக்க எனக்கு இஷ்டம் தாங்க. நடந்த இந்த மாத்தம் ரெண்டு பேருக்குமே நல்லது தான். என்னோட வாழ்க்கை நடத்த வந்திருந்தா சாவித்திரி கஷ்டப்படுவா. இப்ப இருக்கிற நிலம அதைவிட நல்லது. காலம் போக காயம் தன்னால மாறிடும். எதுவந்தாலும் நல்லதுக்கின்னு தாங்கிக்க வேண்டியதுதானே." அவன் பெருமூச்சு விட்டபடி நெற்றியை அழுத்தித் தேய்த்தான். "நீ கொஞ்சம் யோசிச்சு பாக்கனும். அதுக்குத்தான் அப்படி சொன்னேன். ரூபசிரி நல்ல புத்திசாலிப் பையனாச்சே."

" நான் ஊருக்கு போறேங்க ஐயா. இவ்வளவு நடந்ததுக்கப்புறமும் எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கல்ல."

" வேலையை விட்டுட்டு போறதுக்கு முடிவெடுத்திட்டியா என்ன?"

" வேலைக்கு வந்திட்டேனே எங்கிற வெக்கத்துக்காக இவ்வளவு நாளும் இருந்தாச்சு. கால் வலி எடுக்க நின்னு சம்பாதிக்கிற ரெண்டு துட்டில சரியா சாப்பிட்டு மாசம் ஒரு தடவ அம்மாவையும் போய் பாத்திட்டு வர்றதா இருந்தா முடியிற காரியமா? நாலு வருஷமா விஜித் ஐயாக்கு ஊழியம் செஞ்சது பத்தாம

என்னைய ஒரு பொறியிலயும் மாட்டி விட்டுட்டார். சாவித்திரிக்கு ஏதாச்சும் தொல்ல குடுத்தா ரங்கசாமி நிலத்த கைவிட்டு போயிடுவான் எங்கிற எண்ணம் விஜித்துக்கு இருந்திருக்கலாம். செல்லையா மட்டும் அன்னிக்கு இல்லாம போயிருந்தா சாவித்திரிக்கு பெரிய கஷ்டம் வந்திருக்கும். அப்பாவி ஜனங்க ! அதுக்கும் என்னையத் தான் பகடைக்காயாக்கினாங்க. நான் ஊருக்கு போறேங்க. வயல் செஞ்சு பொழைச்சுக்கலாம்."

ரூபசிரி புறப்பட்டான். சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. குறுக்குப் பாதையில் மின்சார வெளிச்சம் கிடையாது. இதனால் மின்னிமின்னிப் பூச்சிகள் பறப்பது நன்றாகத் தெரிந்தது. நானும் ரூபசிரியுடன் முற்றத்தில் இறங்கினேன். சுவர்க்கோழிகள் இரையும் இசை கேட்கத் தொடங்கிவிட்டது.

" ரூபசிரி எல்லாத்தையும் ஒரு கடிதத்தில் எழுதியிருக்கலாம் இல்லியா?"
"ரங்கசாமி விஜித் ஐயாவ சந்திக்கப் போனப்புறம் தான் எனக்குக் கூட கொஞ்சம் விபரம் தெரிய வந்திச்சு. அதுக்கப்புறம் சாவித்திரி எனக்கு முகம் கொடுக்கல்ல. நான் சாவித்திரிய சந்திக்க எவ்வளவோ முயற்சி பண்ணினேன். வீட்டுக்குப் போய் ரங்கசாமி இருக்கிற போதே பேசிட்டு வர நெனைச்சேன். வேலய பத்தியோசிச்சுத் தான் சும்மா இருந்திட்டேன். சாவித்திரியும் ரங்கசாமியும் என்ன நெனச்சாங்களோ தெரியாது. சாவித்திரி என்னப் பத்தி சந்தேகப்பட்டதால தான் ரங்கசாமி வந்தான் எங்கிறமாதிரி தான் விஜித் ஐயாவோட கதை இருந்திச்சு. முந்தானாத்து தற்செயலாத் தான் நடந்த சங்கதிய முழுசா தெரிஞ்சுகிட்டேன். இப்ப ரொம்ப தாமதமாயிடுச்சுங்க. இனிமேல் போய் அவங்கரெண்டு பேரோட பேசுறதால பிரயோஜனம் இல்லீங்க."

" சாவித்திரி ஒரு கடிதங்கூட அனுப்பல்லியா?"

" அப்படி கடிதம் எழுதிற பழக்கம் எல்லாம் கெடையாதுங்க. விலாசமும் இல்லத்தானுங்களே. இப்ப இப்படியே போகட்டும். இந்த விபரங்கள் சாவித்திரிக்கு யார் மூலமாச்சும் தெரியப்படுத்தனுமின்னு ஆரம்பத்தில் யோசிச்சேன். ஆனா இப்ப பாக்கிற மாதிரில சாவித்திரி எதையுமே தெரிஞ்சுக்காம இருக்கிறது தான் நல்லதுன்னு படுது. செல்லையாவப் பத்தி சொன்னா சாவித்திரி சிரிப்பா. யாரக்கட்டினாலும் செல்லையாவக் கட்டுவான்னு நான் நெனச்சுக்கூடப் பாத்ததில்லே."

" இப்ப நெனைக்கலாம் இல்லயா. இப்படித் தான் ஐசே நெனைக்கிறது நடக்கிறதில்ல" நான் அந்த இளைஞனின் முதுகில் தட்டியபடி சொன்னேன். போனதல்லாம் போகட்டும். இப்ப இதெல்லாம் தெரிஞ்சுகிட்டா சாவித்திரியோட

மனசு கூட மாறினாலும்மாறிடும். ரூபசிரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கு."

"சாவித்திரி கலியாணம் கட்டுறதுன்னு முடிவு பண்ணிட்டா. இனிமே இதையெல்லாம் சொல்றதால என்ன ஆகப் போகுதுன்னு நெனச்சேன்." மௌனமாகக் கொஞ்சம் தூரம் போய்விட்டு என்னைத் திரும்பிப்பார்த்தான் ரூபசிரி.

"மகனுக்கும், எஜமானியம்மாவுக்கும் நான் போயிட்டு வாரேன்னு சொல்லல்லையோ"

"பரவாயில்ல நான் சொல்லிக்கிறேன்."

நடந்த விபரங்களை அறிந்து கொள்வதற்காக சுனேத்திரா பொறுமையின்றி நின்று கொண்டிருந்தாள்.

" அநியாயம், நல்ல கட்டழகு வாலிபன்" அவள் குரலில் சோகம் தொனித்தது.

" ரூபசிரி சாவித்திரியை கட்டியிருந்தா நல்லதுன்னு சொல்றியா?"

சமீபகாலத்திலிருந்து சாவித்திரி பேரிலே சுனேத்திராவுக்கு இரக்கம் உண்டாகியிருந்தது. மகனை சாவித்திரி தான் பாடசாலைக்கு அழைத்துச் செல்வாள். பெரும்பாலான நாட்களில் அவனைக் கூட்டி வந்து குளிப்பாட்டி சாப்பாடும் ஊட்டிவிட்டுத்தான் போவாள். கிராமத்து பெண்ணான என்னுடைய தாயார் சாவித்திரி வந்த நேரத்தில் அவளைக் கொண்டு தனக்குத் தேவையான உதவிகளைச் செய்வித்துக் கொள்வாள்.

" சாவித்திரி செல்லையாவ கட்டப் போறா என்றதும் "ஐயோ பாவம் நல்ல பொண்ணுன்னு எப்பப் பாத்தாலும் சொல்லுவியே"

"நான் சொல்றது என்ன பொய்யா?" செல்லையா அவளுக்கு பொருத்தமான மாப்பிள்ளையா? பூதம் மாதிரி ஆம்பள. வயசு கூட சாவித்திரிய காட்டிலு பத்து பன்னிரண்ட அதிகம் போல இருக்கு"

" சாவித்திரி செல்லையாவ விரும்பாட்டா கட்டிக்க சம்மதிப்பாளா?" நான் கேட்டேன்.

" அநாதப் பொண்ணு. இதவிட்டா அவ வேற என்ன செய்யறது" என்று சொல்லி சுனேத்திரா பெருமூச்சு விட்டாள்.

# 17

ஊட்டச் சத்து குறைந்த ஒரு பெண்பிள்ளையின் உடம்பில் இளமைக்கோலம் சற்றுத் தாமதமாகக் தான் தோன்றத் தொடங்கும். அதே போலத் தான் எண்ணெய் விலை உயரத் தொடங்கிய பின்னரே தெலபுவ நகரமும் விழித்துக் கொண்டது. சல்கம வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினரில் பெரும்பாலானவர்கள் சொந்தமாக வாகனங்கள் வைத்திருந்தார்கள். இவர்கள் கூட அரசாங்கம் நடத்தும் பொது போக்குவரத்துச் சேவையை நம்பியிருக்க ஆரம்பித்தார்கள். காலி வீதியில் இரண்டு மைல் தூரத்துக்கு எவ்வளவு பணம் அறவிடுவார்களோ அதைவிடக் குறைவான கட்டணம் தான் சல்கம தெலபுவ பாதையில் அறவிடப்பட்டது. இப்படிச் செய்வதால் அரசாங்கமும் சல்கம ஜனங்களின் நிலைமையை அனுசரித்து நடந்து கொள்ளத் தொடங்கியது. என்று தான் சொல்லவேண்டும். ஒரு தனியார் நிறுவனமும் குறைந்த கட்டணத்தில் பிரயாணிகள் சேவை ஒன்றை ஆரம்பித்திருந்தது. நடுத்தர வர்க்கத்தினர் சிலர் தங்களிடம் இருந்தகார்களை விற்றுவிட்டார்கள். இவர்களுக்கு இப்பொழுது பஸ் பிரயாணம் பழகிவிட்டது.

தெலபுவவைத் தங்கள் வியாபார மத்தியஸ்தானமாகப் பயன்படுத்துவதற்கு சல்கமவாசிகள் பழகிக் கொண்டார்கள். புதிய பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியையும் புதிதாக கட்டி எழுப்பப்பட்டுவரும் ஜயவர்த்தனபுர வைத்தியசாலையையும், பலவத்த புதிய நகர நிர்மாணத்திட்டத்தையும் தொடுக்கும் வண்ணம் பொறளையிலிருந்து தெலபுவவுக்குச் செல்லும் பாதையும் விஸ்தரிக்கப்படலாயிற்று. இந்தப் பாதை தெலபுவ ஊடாக மொறடுவவரை போய் காலி வீதியை சேரப் போகிறதாக வதந்திகள் உலாவின. எத்தனையோ முக்கியமான இடங்களுக்குச் செல்லும் பாதைகள் வந்து சந்திக்கும் கேந்திரஸ்தானமாக தெலபுவ இருந்ததால் வியாபாரிகள் பலர் இந்த இடத்தில் மிகவும் நாட்டம் கொண்டனர். ஒரு பேர்ச்சோ இரண்டு பேர்சசோ காலியாக இருந்தால்போதும் அதிலெல்லாம் சின்னச் சின்னக் கடைகள் தெருவை நோக்கித் தலைநீட்டத் தொடங்கின. சல்கம வீடமைப்புத் திட்டத்துக்குள்ளே இருந்த எத்தனையோ கடைகள் மூடப்பட்டுவிட்டன. தேங்காய், அரிசி, கிழங்கு கீரை முதலிய பண்டங்கள் உட்பட மரக்கறி வகைகளை வீடுவரை எடுத்து வந்து

விற்பவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போனார்கள். இதனால் வீடமைப்புத் திட்டத்திலிருந்து கடைகள் கேட்பாரற்றுப் போயின. இவற்றைப் பண்டசாலைகளாக வாடகைக்கு விடுவதால் பெருந்தொகை பணம் சம்பாதிக்கக் கூடியதாயிருந்தது.

தெலபுவவில் எந்த ஒரு சின்னக் கடையைப் பார்த்தாலும் அங்கே உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பொருட்கள் விற்பனைக்கு இருந்தன. அதிகம் எதற்கும் மரத்தடியில் வியாபாரம்செய்யும் வியாபாரிகளிடம் கூட இவை இருந்தன. பணம் தாராளமாகப் புழக்கத்தில் இருந்தது. கடனுக்குப் பணம் வாங்குபவர்களின் தொகை கூடக்கூட வட்டியும் உயர்ந்து கொண்டே போயிற்று. இவ்வளவு காலமும் நகரவாசிகளின் வேண்டுகோள்களுக்கு செவிசாய்க்காத வங்கி இப்பொழுது தானாகவே முன்வந்து செயல்படத்தொடங்கியது. அந்தப் பட்டினத்தில் நிலம் ஏலத்தில் விடாத நாளே கிடையாது. பரம்பரை பரம்பரையாக நிலம் வைத்திருந்தவர்கள் அக்கம் பக்கத்திலிருந்த வெற்று நிலங்களை ஐந்து பேர்ச், பத்து பேர்ச் நிலங்களாகப் பிரித்து விற்றார்கள். இவர்கள் இப்படியாக நிலம் விற்ற பணத்தை வங்கியில் போட்டு வட்டியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கைநீட்டி பிச்சை எடுக்காமலே பிச்சைக் காரர் போல வாழ்ந்து கொண்டிருந்த இவர்களின் நிலைமை உயரத்தொடங்கியது. வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் வங்கிகளிலிருந்து ஆயிரம் ஆயிரமாகக் கடன் எடுத்து அவற்றை கூடிய வட்டிக்கு விட்டு அந்த வட்டிப்பணத்தில் வங்கி வட்டியையும் கொடுத்து தங்கள் இஷ்டம் போல உண்டு குடித்து காலம் போக்கினார்கள். படித்தவர்கள் இதைவிட முற்றிலும் வேறு விதமாக நடந்து கொண்டார்கள். இவர்கள் அரச வங்கிகளில் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வாங்கி, தொடர் வட்டி வழங்கும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து விடுவார்கள். அந்த நகரத்தில் பிரமாண்டமான கடைகளும், காற்றுக்குத் தூக்கி எறியப்படும் மெழுகுச் சீலையால் கூரை போட்ட கடைகளும் அருகருகே கைகோத்து நின்றன. இதனால் நகரம் நெருங்கி வர ஆரம்பித்தது. மனிதர்களோ தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஒரு பிலபலமான வியாபாரி இறந்துவிட்டார். இவர் நடத்தி வந்த போக்குவரத்துச் சேவை நாட்டில் பிரசித்தமாயிருந்தது. வெசக் காலத்தில் தனது சொந்தச் செலவிலேயே தோரணம் நட்டு அந்த வாரம் முழுவதும் குதூகலமாகக் கழிப்பவர். அவர் உயிரோடு இருக்கும் வரை யாருமே அவரோடு போட்டி போட முடியவில்லை. ஆன்ால் மற்ற வியாபாரிகள் அக்கம் பக்கத்திலிருந்த பணக்காரர்களோடுசேர்ந்து வெசக் அன்னதான மடம் ஒன்று நடத்தினார்கள். இந்த வழியிலாவது அந்த வியாபாரியுடன் சரிநிகர் சமமாகி விட அவர்கள் முயற்சி செய்தார்கள். இந்த அன்னதான மடத்தில் பருப்பு, சலட், மாசி தட்டிப்போட்ட சீனிசம்பல் இத்யாதி வகைகளுடன் மஞ்சள் சோறு பரிமாறினார்கள். சுற்றுப்புற

ஊர்களிலும், கிராமங்களிலும் இருந்து சாரி சாரியாக திரண்டு வரும் ஜனங்கள் ருசியாகச் சமைத்த இந்தச் சாப்பாட்டில் திளைத்ததோடு அலங்கார தோரணத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள். மூன்று நாட்களுக்கு அவர்கள் பாடு கொண்டாட்டம் தான். தந்தையார் இறந்து விட்டாலும் அவருடைய வேண்டுகோளை மகனால் தட்டமுடியவில்லை. ஆகவே அவன் பகவான் புத்தரின் உருவத்தைச் செய்து அதற்கு மின்சார விளக்குகள் பொருத்தி அலங்கரிப்பதோடு நிறுத்திக் கொண்டான். தோரணம் இல்லாததால் அன்னதான மடத்தின் கதையும் முடிந்துவிட்டது. இவ்வளவு நாளும் வெசக் காலத்தில் அன்னதான மடம் இருந்ததால் அந்த நாட்களில் கடைகள் மூடப்பட்டு இருந்தன. அன்னதானமடம் இல்லையென்று ஆகியதும் வெசக் பௌர்ணமி நாட்களில் கூட கடைகள் திறந்து வியாபாரம் நடந்தது. அன்னதான மடம் இருந்த இடத்தில் பையன்கள் முகமூடி போட்டு நாடகம் ஆடத் தொடங்கியதால் அங்கே எந்த நேரமும் ஜனகூட்டத்துக்கு பஞ்சமே இல்லை.

சாவித்திரியைத் திருணமஞ் செய்து கொண்ட செல்லையா தெலபுவவிலேயே தங்கிவிட்டான். முன்னர் போல ரங்கசாமியின் வீட்டுத் திண்ணையில் தங்குவது செல்லையாவுக்கும் சரி என்று படவில்லை. திருமணத்தைச் சீக்கிரமாக முடித்துவிட செல்லையா விரும்பியதற்கு இதுவும் ஒரு காரணம்.

திருமணத்துக்குப் பிறகு ஒரு வாரமாகக் கடை மூடியிருந்தது. தேன் நிலவைக் கழிப்பதற்காகத் தான் கடை மூடப்பட்டிருக்கிறதென்று யாராவது நினைத்தாலும் கூட உண்மை அதுவல்ல. அந்த மூடிய கதவுக்குப் பின்னால் புதுமணத் தம்பதிகளுக்கு மூச்சுவிட முடியாமல் வேலை குவிந்து கிடந்தது. ரங்கசாமியின் சம்மதத்தோடு செல்லையா அதை ஒரு சாக்குக் கடையாக மாற்றியிருந்தான். பல வகையான போத்தல்களும் பழைய பித்தளை விளக்குகளின் தலைகளும் நெளிந்த அலுமினியப் பாத்திரங்களும் என்று வகைவகையாகக் குவிந்து கிடந்தன. எங்கும் சிலந்தி வலை பின்னியிருந்தது. மூடியில்லாத சில போத்தல்களில் குடியிருந்த கரப்பான் பூச்சிகள் கண்டபடி பறந்து கொண்டிருந்தன. பித்தளைப் பாத்திரங்கள் அதிக விலை போனதால் உறுமீன் வரும் வரை குளக்கரையில் காத்திருக்கும் கொக்குப் போல பித்தளை துண்டுகளை பொறுக்குவதில் ஈடுபட்டுடிருந்தான் ரங்கசாமி. சாவித்திரி துருப்பிடித்த வெற்று டின்களில் இரும்பு, செம்பு, பித்தளை, துண்டுகளையும், ஆணி, திருகாணி, போன்றவற்றையும் தனித்தனியாகப் போட்டு வைத்தாள். செல்லையா ஆரம்பிக்கப்போகும் சாக்கு, பத்திரிகை வியாபாரத்தைப் பற்றி நினைக்க சாவித்திரிக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. இந்தப் பொருட்களுக்கு எப்பொழுதுமே கிராக்கி உண்டு. இந்த வியாபார பண்டங்களைத் தேடிக் கொள்வது அவ்வளவு கஷ்டமுமில்லை. ஒழுங்காக வாழ்க்கை நடத்தக்கூடியதாக இருக்கிறதே அதுவே பெரிய காரியம். வீட்டின் நடுப்பகுதியில் அப்பாவின் சாமான்கள்

நிறைந்திருந்தன. இவை ஒழுங்கில்லாமல் வைக்கப்பட்டிருந்ததோடு அவற்றின் தோற்றமும் அருவருப்பூட்டியது. இதனால் இந்த நடுப்பகுதியை சுத்தப்படுத்த முடியவே இல்லை. அதை ஒழுங்குபடுத்துவதென்பது பகீரதப் பிரயத்தனம் தான். கூரைக்கு சிங்கள நாட்டு ஒடு வேய்ந்திருந்ததால் இடைவெளிகள் வழியாக எப்பொழுதும் தூசி விழுந்த வண்ணமாகவே இருந்தது. இதனால் போத்தல்கள் நிறம் மாறி விட்டன. இந்தப் போத்தல் வியாபாரம் இருக்கும் வரை பாழாய்ப்போன கரப்பான் பூச்சிகளின் தொல்லையும் தொலையாது. அவை இருப்பதால் சாமான்கள் எல்லாம் கெட்டுப் போய்விடுகின்றன. அரிசிப் பறியில் கூட கரப்பான் பூச்சிகளின் முட்டைகள் கிடக்கும்.

இப்படியாக வியாபாரச் சாமான்களை பிரித்து தனித்தனியாக பழைய சாக்குகளில் போட்டு வெளியே வைத்தார்கள். ராக்கைகளைக் கழுவி சுத்தப்படுத்தினார்கள். இவற்றை சிங்கள மருந்துக்கடை சொந்தக்காரர் ஒருவர் எடுத்துச் செல்வதாக முன்னர் பேசி முடிவாகி இருந்தது. இப்பொழுது அவரே வந்து அவற்றை எடுத்துச் சென்றுவிட்டார். நிலத்தின் சீமெந்து வெடித்திருந்தது. நிலத்துக்கு முன்னர் பதித்திருந்த மெருகூட்டப்பட்ட செங்கற்கள் இப்பொழுது பெயர்ந்து நிலம் குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. ரங்கசாமி இரண்டு ராத்தல் லக்ஸ் பிரே டின் ஒன்றில் பணத்தைப்போட்டு புதைத்து வைத்திருந்தான். மகனோ, மருமகளோ காணதவாறு அதை வெளியே எடுத்தான். மறுகணம் எங்கோ மறைத்து விட்டான்.

கீழே உட்கார்ந்து சமையல் வேலை செய்வது தனக்குச் சிரமமாக இருப்பதாக சாவித்திரி மூணுமுணுத்தாள். ஒரு பரண் கட்டிக் கொடுத்துவிட்டால் தொல்லை ஒழிந்திடும். இது ரங்கசாமிக்கும் சம்மதம்தான். அதற்குத் தேவையான கல், மணல் எல்லாம் கூடத் தயார் பண்ணியிருந்தான். பணம் போட்டு வைத்திருக்கும் உண்டியலை பதுக்குவதற்கும் இது ஒரு நல்ல இடமாக அமையலாம். உண்டியலில் எவ்வளவு பணம் இருக்கிறது என்னும் கணக்கு ரங்கசாமிக்குத் தெரியும். இருந்தாலும் அதைத் திறந்து பார்க்கும் வரை அவனுக்கு பொறுமை இல்லை. பெரிய சங்கடமாக இருந்தது. புதுமணத் தம்பதிகள் குளிக்கப் போகட்டும் அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கவேண்டியது தான். எல்லோரும் சாப்பிட்டு ஒய்வாக இருக்கும் நேரம் பார்த்து தம்பதிகள் குளிக்க போகலாம் என்று இருந்தார்கள். கூடத்தில் கிடந்த தட்டு முட்டுச் சாமான்களுக்கு மத்தியில் ரங்கசாமி தன்னுடைய சாக்குக் கட்டிலை விரித்து அதில் சிறிது நேரம் சாய்ந்து கொண்டான். களிமண் பிசைந்த களைப்பு அவனை வாட்டியது. வாளிப்பிடி அசையும் சத்தம் கேட்டது. அடுத்த கணம் சாவித்திரி முற்றத்தில் நின்று கொண்டு " அப்பா நாங்க குளிக்கப் போறோம்" என்றாள். ரங்கசாமி சில நிமிடங்கள் கழித்து எழுந்து போய் பின் பக்கக் கதவின் தாழ்பாளைப் போட்டான். கதவின் பலகை இடுக்கு வழியாக

பார்ப்பவர்களுக்கு உள்ளே நடப்பதெல்லாம் தெரியும். ரங்கசாமி எழுந்து சாவித்திரியின் படுக்கை அறைக்குப் போனான். முன்னர் அம்மாவும் மகளும் தூங்குவார்கள் .லட்சுமி இறந்த பிறகு அது சாவித்திரியின் ஏகபோக உரிமையாகிவிட்டது. வெளித் திண்ணையில் தங்கியிருந்த செல்லையாவும் இப்பொழுது அங்கே தான் படுப்பான்.

ரங்கசாமி படுக்கைக்குப் போவதற்கு முன் சாக்குக் கட்டிலின் பையில் போட்டு வைத்திருந்த பணப் பொதியை சாரத்தின் மடிப்புக்குள் திணித்துக் கொண்டான். அதில் ஏழு நூறு ரூபாய் நோட்டுக்களும் ஆறு ஐம்பது ரூபாய் நோட்டுக்களும் இருந்தன. அந்த நோட்டுக்கள் மடிந்திருந்தன. இந்த மடிப்புக்களைத் தொடையில் வைத்து அழுத்தி நீட்டினான். ரங்கசாமி பதுக்கி வைத்திருக்கும் பத்து, இருபது ரூபாய் நோட்டுக்கள் எல்லாம் ஐம்பது ரூபாய் நூறு ரூபாய் நோட்டுக்களாக மாற்றப்பட்டுவிடும், ஆனால் இந்த சம்பவம் தெலபுவவில் நிகழ்வதில்லை. அடுத்த நகரம் தெலபுவவிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. தேவை ஏற்படும் பொழுது ரங்கசாமி அங்கே போவதுண்டு. அப்பொழுது அவற்றை பெரிய நோட்டுகளாக மாற்றிக் கொள்வான். அப்பாவின் பெறுமதியைப் பற்றி சாவித்திரிக்கு ஒன்றுமே தெரியாது.

கடைசிக் காலம் வரை லட்சுமிக்கே தனது கணவன் வைத்திருந்த சொத்துக்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. இதை நினைத்து ரங்கசாமியே பச்சாதாபப்படுவான். நெருப்பில் பிடித்து சூடாக்கிய பொலிதீன் கடதாசியில் சுற்றி கற்பூர உருண்டைகளைப் போட்டு லக்ஸ்பிரே டப்பாவில் பத்திரமாக பொதிந்து வைத்திருந்த நோட்டுக்கட்டை ரங்கசாமி மெதுவாக வெளியே எடுத்தான். அதில் ஐம்பது நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. இது வாய்ப்பாடு போல அவனுக்கு நன்றாக ஞாபகத்தில் இருந்தது. இருந்தும் நோட்டுக்களை கைகளால் தடவி பார்ப்பதில் ஒரு தனி சந்தோஷம். ரங்கசாமி பொலிதீன் தாளை விரித்தான். நடுங்கும் கைகளினால் நோட்டுக் கட்டை இறுகப் பிடித்துக் கொண்டான். எண்ணுவதற்கு சுலபமாக வலது கையினால் தாள்களை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக அசைத்தான். ஒன்றாக பிஸ்னஸ் செய்யும் ஜுவானிசுக்கு ஒரு நூறு ரூபாய்க்கே வழி இல்லை. இந்தத் தொகையை விட ரங்கசாமி கடனுக்கும் பணம் கொடுத்திருந்தான். அது சுமார் ஒரு ஆயிரம் தேறும். புதிதாகச் சேர்ந்த நோட்டுக்களையும் ஒன்றாக்கி கைகளால் தடவிக் கொடுத்த பின்னர் விரல்களை ஒவ்வொன்றாக மடித்து மனத்தால் கணக்குப் பார்த்தான். அதிலிருந்து ஆறு ஐம்பது ரூபாய் தாள்களுக்குப் பதிலாக ஆறு நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்திருந்தால் அவனுடைய சந்தோஷம் பலமடங்காவதற்குக் கேட்கவும் வேண்டுமா? நோட்டுக்களை ஒன்றாகத் திரட்டி எடுத்தபோது தனித்தாள்களிலிருந்த மென்மை போய் கடினத் தன்மை வந்துவிட்டது. இது

கைகளுக்கு இதமாக இருந்ததோ என்னவோ ஆனால் மனசுக்கு மகிழ்ச்சியூட்டியது. ரங்கசாமி அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து தொடையில் வைத்து நெருடி புதிய பொலிதீன் தாளில் சுற்றி லக்ஸ்பிரே டப்பாவில் இறக்கினான். பணத்தை இந்த மாதிரி வங்கியில் கூட பாதுகாப்பாக வைக்கமாட்டார்கள் என்பது அவனுடைய எண்ணம்.

பத்து நாட்கள் கழிந்தன. கடை திறக்கப்பட்டது. இவ்வளவு காலமும் தாழ்வாரத் திண்ணையில் தான் வியாபாரம் நடைபெற்றது. உட்பக்க அறையில் ஒன்று இரண்டு பலகைகள் மட்டுமே திறந்திருக்கும். சாமான் வாங்க வருபவர்களுக்கு உள்ளே என்ன இருக்கிறதென்பது சிதம்பர இரகசியம் தான். இப்பொழுது அங்கே மறைத்து வைப்பதற்கு எந்த ரகசியமும்கிடையாது. பலகைகள் எல்லாம் திறக்கப்பட்டு ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவசரத்துக்கு முன்னால் உட்கார விரும்புவர்களுக்கு இது இருக்கையாகவும் பயன்பட்டது. நிலத்துக்கு சீமந்து போட்டதோடு வீடுபழுதுபார்க்கும் வேலைகள் நின்று விடவில்லை. ஒரு புசல் சுண்ணாம்பைக் கரைத்துச் சுவரெங்கும் பூசியதால் அறைகள் எல்லாம் பிரகாசமாக இருந்தன. அறையில் இடம் தாராளமாக காணப்பட்டது. அங்கே பத்திரிகைகளும், சாக்குகளும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஓரமாகப் போடப்பட்டிருந்த ஒன்றரை இரண்டு அடி உயர மேசைக்குப் பின்புறத்தில் செல்லையா உட்கார்ந்திருந்தான். பத்திரிகை, சாக்கு என்பவை தவிர நிலத்தில் வைத்து சாமான் நிறுக்கும் ஒரு தராசும் அங்கே இருந்தது. இதை செல்லையா குத்தகைக்கு எடுத்திருந்தான். எது எப்படி போனாலும் கதவுக்கு குறுக்கே போடப்பட்டிருந்த திரைச்சீலை மட்டும் அப்படியே இருந்தது. இது அவர்களின் திருமண வாழ்வின் ரகசியங்களை மூடி மறைத்தது.

நகரமே வியாபாரக் கேந்திர நிலையமாக மாறிவிட்டதால் சாக்குக் கட்டை தோளில் சுமந்து கொண்டு நடக்க வேண்டிய அவசியமே இருக்கவில்லை. தெலபுவ வியாபாரிகளில் பலர் வாரத்துக்கு ஒரு தடவை லொறியில் சாமான்களை வருவித்துக் கொண்டார்கள். பொருட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தான் போக்குவரத்து நடைபெற்றது. சாமான்களை இறக்கிவிட்டுக் காலியாகப் போகும் லொறியில் செல்லையா தன்னுடைய வியாபாரப் பொருட்களை ஏற்றிவிடுவான். இதனால் ரங்கசாமிக்கும் லாபம் தான். ஏனென்றால் தன்னுடைய வியாபாரத்தையும் நடத்தக் கூடியதாயிருந்தது. வந்து சேரும் போத்தல்கள் எல்லாம் கொல்லைப் புறத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தான் இருக்கும். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு வாரம். ரங்கசாமியின் விற்பனைப் பொருட்களுக்கு விசேஷ பாதுகாப்பு தேவைப்படவில்லை. இதனால் அவற்றை வைப்பதற்கு கொல்லைப்புறத்தில் கிடந்த மரப்பெட்டியே போதுமானதாக இருந்தது.

வீட்டை ஒதுக்கி ஒழுங்குபடுத்திய கையோடு சாவித்திரி தன்னுடைய புருஷனையும் அழைத்துக்கொண்டு எதிரிசிங்க வீட்டுக்கும், ஜுவானிஸ் வீட்டுக்கும் போனாள். செல்லையாவுக்கோ இந்த வீடுகளுக்குப் போகப் பிடிக்கவில்லை. கசாப்புக்கடைக்கு இழுத்துக் கொண்டு போகும் மாடு எந்த நிலையில் இருக்குமோ அந்த நிலையில் அவன் இருந்தான்.

" இப்படி இருந்தா முடியாது செல்லையா"... ரங்கசாமி தன்னுடைய மருமகனுக்குச் சொன்னான்.

" அந்த ஐயாமாருங்க எங்களுக்கு ஒதவி செஞ்சாங்க. அவங்களோட சகவாசம் வச்சுக்கனும்"

திருமதி எதிரிசிங்க உட்காரும்படி சொல்லியும் கூட செல்லையா மரம் போல நின்று கொண்டிருந்தான். இதைப் பார்த்து சாவித்திரிக்கு சிரிப்பு வந்தது.

" இப்ப எங்களுக்குத் தான் நஷ்டம்" திருமதி எதிரிசிங்க சொன்னார். " எங்கட மகன சாவித்திரி தானே ஸ்கூலுக்கு கூட்டிக்கிட்டு போனா. இனிமே யாரையாச்சும் தேடனும்"

"ஏன் நான் இல்லையா? " சாவித்திரி கேட்டாள். இதைச் சொன்னபோது இயல்பாகவே அவளுக்கிருக்கும் வீரத்தை விடச் சற்று அதிகமாகவே காணப்பட்டது.

" இந்த முறைய மாத்திறதா எனக்கு எண்ணம் இல்லையே" சாவித்திரி இப்படி சொன்னதும் திருமதி எதிரிசிங்க ஆச்சரியப்பட்டாள். சாவித்திரி ரொம்ப காரமான ஒரு வாசனைத் தைலம் பூசியிருந்தாள். அதன் நெடி மூக்கைத் துளைத்தது. அவள் திடீரென்று வேடிக்கையும் கும்மாளமுமாக பேசத் தொடங்கி விட்டாள். செல்லையாவோ சுபாவத்தில் கருங்கற் பாறை. அவனுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு சாவித்திரி மதிப்பு. கொடுக்கவில்லை.அவனுடைய எண்ணங்கள் என்னவென்றே அவளுக்கு புரியவில்லை. சிரிப்பு என்பதே என்ன என்று தெரியாதவன் போலத் காணப்பட்டாலும் சாவித்திரி அவனைத் தன்னுடைய பக்கத்துக்கு வளைத்துவிட்டாள் என்பதை திருமதி எதிரிசிங்க ஒரு நொடியில் தெரிந்து கொண்டாள்.

சாவித்திரி வீட்டிலிருக்கும் பொழுது சட்டைக்கு மேல் துணியைக் சுற்றிக் கொள்ளப் பழகியிருந்தாள். திருமணமாகியதால் அவளிடம் காணக்கூடியதாக இருந்த மாற்றம் இது ஒன்றுதான். ரங்கசாமியின் வற்புறுத்தலினால் செல்லையா விஜித்தைக் காணப் போக வேண்டியதாயிற்று. ஆனால் செல்லையா தனியாகத் தான் போக வேண்டும் என்று சாவித்திரி சொல்லிவிட்டாள்.

விஜித்தைக் காண அழைத்துச் செல்லப்பட்ட செல்லையா அங்கே நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. அங்கே வருபவர்கள் எவருமே இவ்வளவு நேரம் காத்திருந்ததில்லை. தன்னை பலாத்காரமாக அனுப்பி வைத்த ரங்கசாமி பேரில் மட்டு மல்ல சாவித்திரி மேலும் அவனுக்கு கோபம் கோபமாக வந்தது. நீண்ட நேரம் காத்திருந்ததன் பலனோ என்னவோ ஒருவழியாக விஜித்தின் கவனம் அவன் பக்கம்திரும்பியது. இப்பொழுது செல்லையாவின் மனப்பிராந்தியும் முற்றாகவே அகன்றுவிட்டது. விஜித் வேணுமென்றே செல்லையாவைக் காக்கவைத்திருக்கிறான் என்ற விஷயம் செல்லையாவுக்குத் தெரியாது. செல்லையாவை முன்பின் தெரியாதவன் போல நெற்றியைச் சுருக்கிப் பார்த்தான். அவனுக்கு செல்லையா நன்கு பழக்கமானவன் தான்.

"ரங்கசாமி என்னோட மாமனார்" செல்லையா விரல்களை பின்னிக்கொண்டு சொன்னான். விஜித்துக்கு திடீரென்று செனவியின் ஞாபகம் வந்தது. செனவிக்கு சம்பளத்தோடு லீவும் வழங்கப்பட்டிருந்தது. இப்படியான ஒரு நஷ்டத்தை ஏற்படுத்தியதோடு தன்னுடைய அருமையான திட்டத்தில் மண்ணை வாரிப் போட்ட மனிதன் தான் எதிரில் நிற்கிறான். அடே நீ தான்டா அந்த ஆள்" விஜித் மனசுக்குள் சொல்லிக் கொண்டு தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

" ஒஹோ" நீ தானா ரங்கசாமியோட மகள கட்டிக்கிட்ட ஆளு? " சுழல் நாற்காலியில் சாய்ந்த விஜித் ஒன்றுமே தெரியாதவன் போல இந்தக்கேள்வியைக் கேட்டான். ஆனால் இதற்குப் பதில் எதையும் அவன் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. விஜித் ரங்கசாமியை " நீ" என்று ஒருமையில் அழைத்ததே கிடையாது. தன்னுடைய தாயார் அவனை அப்படிக் கூப்பிட்டால் கூட அவனுக்குப் பிடிக்காது. எதிரில் நிற்கும் மனிதனைக் காணக் காண அவனுக்கு துவேஷம் பொங்கியது. அவன் செல்லையாவை நோக்கி.

" அந்த சம்பவத்தப் பற்றி நான் விசாரிச்சுப் பாத்தேன்" என்றான்.

"நடந்ததெல்லாம் நெஜம் தான். உன்னோட பொண்டாட்டி ராத்திரியில கதவ தொறந்து வெச்சிருக்கா. ஆளு யாரு தெரியுமா ரூபசிரி" செல்லையா மௌனமாக நின்றான். விஜித்தைப் பார்த்து விட்டுத் திரும்பிப் போய்விடலாம் என்று நினைத்துத்தான் அவன் வந்திருந்தான். இப்படிஅவன் சொல்வதையெல்லாம் கேட்க வேண்டிய சாபக்கேடு தனக்கு வரும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. சாவித்திரியைத் திருமணம் செய்து கொள்ள முன்னர் வியாபாரவேலைகளுக்காக செல்லையா அங்கே வந்து போவதுண்டு . அப்பொழுது ரங்கசாமியின் கடைக்கு வரும் பாதுகாப்பு ஊழியர்கள் சிலரைக் கண்டு அவனுக்குப் பழக்கம். செல்லையா சாவித்திரிக் காதலிக்கவும் இல்லை. அவளைக் கலியாணம் செய்யும் நோக்கமும்

அவனுக்கு இருக்கவில்லை. ஆகையினால் கடைக்கு வந்து போனவர்கள் யார் என்று அறிந்து கொள்ளும் தேவையும் அவனுக்கு இருக்கவில்லை.

"எத்தனையோ பேர் அங்கே வந்துகிட்டும் போய்க்கிட்டும் இருந்தாங்க அவங்கள்ல ரூபசிரியும் ஒரு ஆள். அவன் இங்க தான் வேல செஞ்சான். அந்த சம்பவம் நடந்த அன்னிக்கு வழக்கம் போல உன்னோட பொண்டாட்டி ரூபசிரிக்கு கதவ தெறந்து வெச்சிருக்கா. ரூபசிரி வரல்ல. அந்த சமயத்தில தெறந்திருந்த கதவப் பாத்து ரெண்டு களவாணிப் பசங்க வீட்டுக்குள்ள நொளஞ்சிட்டாங்க. நான் ரூபசிரி கிட்ட இருந்து எல்லா விபரமும் தெரிஞ்சுகிட்டேன். இதெல்லாம் தெரிஞ்சதுக்கப்புறம் அவன வேலையில இருந்து தள்ளிட்டேன்.

செல்லையா ஊமையாகி நின்றான். அவன் பார்வையில் கடுகடுப்புத் தெரிந்தது. அவனைப் பொறுத்தவரை சாவித்திரி குப்பையில் கண்டெடுத்த மாணிக்கம். அவன் சாவித்திரியை திருமணம் செய்வதற்கு முன்னும் அந்த சம்பவத்தின் பின்னும் செல்லையாவைத் தெருவில் காண்பவர்கள்அவனைப் பேச்சுக்கு இழுத்தார்கள். தாம் நினைப்பதை செல்லையா மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்கள் அந்த ஜனங்கள். செல்லையா ஜனங்களோடு அதிகம் பேசிப் பழகாதவன். ஆகையினால் அவர்கள் சொல்வதையெல்லாம் வெறுமனே கேட்டுக் கொண்டு நிற்பான். ரங்கசாமி சாவித்திரியைத் தனக்குக் கட்டி வைப்பான் என்று அவன் நினைத்து பார்த்ததேயில்லை. எவருடைய அன்பும் ஆதரவும் கிடைக்காத தன்னைப்போன்ற அநாதைக்கு சாவித்திரி மாதிரி ஒரு பெண் கிடைப்பது நம்பமுடியாத ஒரு காரியம் என்று தான் செல்லையா நினைத்திருந்தான். ஆனால் செல்லையாவின் இந்த மனநிலை விஜித்துக்குத் தெரியாது.

ரங்கசாமி கலியாணப் பேச்சை எடுத்த பொழுது செல்லையா மறு பேச்சுப் பேசாமலே அதுக்குச் சம்மதித்து விட்டான். அவன் சாவித்திரி கர்ப்பிணியாக இருப்பாளோ? அப்படியிருந்தால் கூட அவளை விவாகம் செய்து கொள்வதென்பது அவளைப் போன்ற ஒரு நல்ல பெண்ணுக்கு தான் கொடுக்கும் நஷ்ட ஈடு என்று அவன் நினைத்தான். ஆனால் சாவித்திரி கர்ப்பிணி அல்ல என்பதையும், அவள் ஒரு கற்பரசி என்பதையும் செல்லையா அறிந்த பொழுது அவனுடைய மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. விஜித் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு செல்லையாவின் பக்கமாகக் குனிந்து பேசிக் கொண்டிருந்தான். விஜித்துக்கு எதிரில் நின்று கொண்டிருந்த செல்லையாவுக்கோ மனசுக்குள் சந்தோஷமாக இருந்தது. இது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

செல்லையா விஜித்திடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். மனைவி சாவித்திரியின் நினைவு அவன் நெஞ்சில் நிறைந்திருந்தது. இன்று சாவித்திரியின் நிலைமை அடை மழைக்கு குப்புறவிழுந்த குடம்போல ஆயிற்று. சாவித்திரி

இவ்வளவு காலமும் செல்லையாவிடம் மரியாதை கலந்த அன்பு தான் வைத்திருந்தாள். இப்பொழுது கருணையும் அதனுடன் சேர்ந்து கொண்டது. அவளைப் பற்றி யார் என்ன சொன்னாலும் அவன் இப்போதெல்லாம் மனம் சோர்ந்து விடுவதில்லை. அவளைப் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது. அவர்களுக்கு என்னதான் தெரியும்? இருவரும் தெருவில் இறங்கி நடந்தால் ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்ப்பார்கள். அவர்களின் கண்கள் சாவித்திரியின் வயிற்றுப் பாகத்தை நோட்டம்விடும். இதையும் செல்லையா கவனிப்பாள். சாவித்திரி கர்ப்பமாகிவிட்டதால் இந்த முட்டாளுக்குக் கட்டி வைத்துவிட்டார்கள் என்று அந்த ஜனங்கள் நினைப்பது செல்லையாவுக்கு நன்றாகவே தெரியும். அவன் முகத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை மலரும்.

நகரம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருந்தது. அதோடு சேர்ந்து ரங்கசாமி வீட்டாரிலும் மாற்றங்கள் தெரிந்தன. செல்லையா ஒரு மொத்த வியாபாரியிடம் இருந்து நிலத்தில் வைத்து நிறுக்கும் ஒரு தராசை குத்தகைக்கு வாங்கியிருந்தான். இப்பொழுது அது அவனுக்கு சொந்தமாகிவிட்டது அதை அவன் விலைக்கு வாங்கிவிட்டான். ரங்கசாமி காலைத் தேநீர் வியாபாரத்தை தானே இஷ்டப்பட்டு நிறுத்திக் கொண்டான். இப்பொழுதெல்லாம் இரவில் திறந்திருக்கும் கடைகளுக்கு பஞ்சமே இல்லை. தெலபுவவிலிருந்து சல்கமவரை ஒரே கூடைக்கூட்டம்தான். குளிரூட்டப்பட்ட மீன் இறைச்சி முதலியவற்றை பட்டிணங்களில் வாங்குவதே குதிரைக் கொம்பாக இருந்தது. இப்பொழுது சின்னச் சின்ன கடைகளில் கூட அவை விற்பனைக்கு இருந்தன. தெலபுவவிலிருந்து புகையிர நிலையத்தை தாண்டி நேர்ப்பாதையில் சிறிது தூரம் போகும் வரை பாதையின் இரண்டு பக்கங்களிலும் சாப்புகளும் கடைகளும் தோளோடு தோள் சேர்ந்து நின்றன. புகையிரத நிலையத்தின் சுற்றாடலிலேயே எத்தனையோ தேநீர்க் கடைகள் உண்டாகியிருந்தன. இதனால் சாவித்திரி தேநீர் தயாரிக்கும் வேலையை குடும்ப விவகாரமாக்கிக் கொண்டாள். ரங்கசாமி வழக்கமான நேரத்துக்கு எழும்பி விடுவான். அந்த நேரத்தில் ரயிலைப் பிடிக்க ஓடும் பிரயாணிகள் வழக்கம் போல தங்களுடைய சைக்கிள் வண்டிகளை ரங்கசாமியிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வார்கள். இப்பொழுதெல்லாம் போத்தல் பேப்பர் தேடிக் கொண்டு வீடுவீடாக போகும் அவசியமே கிடையாது. ஏனென்றால் இப்பொழுது ஜனங்கள் அவற்றை வீட்டுக்கே எடுத்து வரத் தொடங்கியிருந்தார்கள்.

காலை ஐந்தே காலுக்கு உள்ள ரயில் வண்டி, நிலையத்தை விட்டுப் புறப்பட்டதும் ரங்கசாமி குளிக்கப்போய்விடுவான். பகல் பொழுதில் அவனுக்கு வேலையே இல்லை. நகரத்துக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்கு போய் வருவான். கடையில் கிடைக்காத மருந்து வகைகள் யாருக்காவது தேவைப்பட்டால் ரங்கசாமி தான் தேடிக் கொண்டு வந்து கொடுப்பான். அவனுடைய சிரமத்தைப் பார்த்து

அவர்களும் பணம் கொடுத்து விடுவார்கள். நகரம் நாளுக்கு நாள் நவீனமயமாகிக் கொண்டு வந்தது. எனினும் அங்கே இருந்த ஆயுள் வேத வைத்தியர் மிகவும் பிரபலமானவர் என்பதால் சிங்கள மருந்துச் சாமான்களுக்கு இருந்த கிராக்கி குறையவேயில்லை. அங்கே ஒரு சிங்கள மருந்துக்கடையும் இருந்தது. அதன் சொந்தக்காரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ரங்கசாமி சுற்றுவட்டாரத்திலிருந்து இஞ்சி, புளித்தோடை, இரிவேரி, ஆதாவாரி முதலிய மருந்துச் சாமான்களைச் சேகரித்துக் கொடுத்தான். தேட முடியாத மருந்தைக்கூட ரங்கசாமியிடம் சொன்னால் போதும் கொண்டுவந்துசேர்த்து விடுவான் என்று வாடிக்கைக் காரரிடம் கடைச் சொந்தக் காரர் கூறுவதுண்டு. காலை ரயிலில் போகும் ஒரு பிரயாணிக்கு ஏதாவதுதேவை இருந்தால் அதை ரங்கசாமி மாலையில் ரயில் வரும் நேரத்தில் பூர்த்தி செய்துவிடுவான்.

ரங்கசாமி சும்மா இருக்கவில்லை. அவனும் சம்பாதித்தான். ஆனால் வீட்டுச் செலவுகள் சகலதையும் செல்லையா தான் கவனித்தான். செல்லையாவிடமும் கஞ்சத்தனம் இருந்தது. ஆனால் சாவித்திரிக்குப் பணம் கொடுக்கும் விஷயத்தில் ரங்கசாமியை விடச் சற்றுத் தாராளமாகவே இருந்தான். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் அவன் அப்பாவைப்போல செலவழித்த ஒவ்வொரு சதத்துக்கும் கணக்கு கேட்கமாட்டான். சாவித்திரிக்கு இடைக்கிடை அப்பாவிடமிருந்தும் பணம் கிடைக்கும். இதனால் சாவித்திரி தன்னுடைய சின்னஞ்சிறிய குடும்பத்தை சந்தோஷமாகக் கொண்டு நடத்தினாள். லட்சுமியின் மீன் குழம்புக்கும், புளியாணத்துக்கும், ஊறுகாய்க்கும் பழக்கப்பட்ட ரங்கசாமி சாவித்திரியின் சமையலை மட்டம் தட்டாத நாளே கிடையாது " சாப்பாடு ருசியே இல்லை. பச்சத் தண்ணிமாதிரி இருக்கு" அவன் மகளோடு சண்டைபோடுவான். " அம்மா இருக்கிறப்போ ஒரே ஒரு குழம்பு தான் வைப்பாங்க. அதோட வயிறு வெடிக்கிற வரைக்கும் சாப்பிடலாம். பெத்தா ரெண்டு முணு கறி வைக்கிறா ஒண்ணு கூட சாப்பிடும்படியா இல்லை."

செல்லையா சாக்குக் கட்டின் மேல் கால்களை மடித்து உட்கார்ந்து சோற்றை சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாவித்திரி கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள். உண்மையிலேயே சாப்பாடு ருசி இல்லையா என்பதை செல்லையாவிடமிருந்து அறிந்து கொள்ளவேண்டும் போல் இருந்தது சாவித்திரிக்கு. ஆனால் அவனோ அக்கம் பக்கம் பார்க்காமல் சாப்பாட்டிலேயே கண்ணாயிருந்தான். கடைச்சாப்பாட்டுக்குப் பழக்கப்பட்டிருந்த செல்லையாவுக்கு சாவித்திரியின் சமையல் அமிர்தமாக இருந்தது. இதெல்லாம் ரங்கசாமிக்கு எங்கே தெரியப் போகிறது.

" ஒனக்கு குழம்புக்கு உப்பு போட தெரியாது. பெரிய கணக்கா ஸ்கூலுக்கு

போனது தான் மிச்சம். சமையல் சூனியம். நீ சமையல் பண்ணுறதால பணம் தான் செலவு ஆகுது. " தன்னுடைய மனைவியின் சமையலை நடுநிலையிலிருந்து பொறுத்துக் கொள்ளும் செல்லையாவைக் கடைக் கண்ணால் பார்த்தபடி சொன்னான் ரங்கசாமி.

சாவித்திரி மத்தியானத்துக்கு சோறாக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாள். ஏதாவது போதாமல் போனால் அதை மட்டும் இரவில் சமைப்பாள். செல்லையா வருவதற்கு முன்னர் என்றால் பலாக்காய், மரவள்ளிக்கிழங்கு இப்படி எதையாவது சாப்பிட்டு பகல் பொழுதை ஓட்டிவிடுவார்கள். இது ஒன்றுமில்லையென்றால் தேயிலைச் சாயம் தான் அவர்களுக்குத்தஞ்சம். சாவித்திரி சோறு ஆக்கத் தொடங்கியது செல்லையாவுக்கு அதிகம் பிடிக்கவில்லை. ஆனால் ரங்கசாமிக்கோ இது ரொம்பவும் பிடித்திருந்தது. அவன் சமையல் கட்டுக்குப் போய் மகள் அடுப்புப் பற்றவைப்பதை ஆனந்தமாகப் பார்த்திருப்பான்.

" பெத்தா சோறு ஆக்கப் போறியாம்மா?" என்று கேட்டுவிட்டு வயிற்றைத் தடவியபடி சிரிப்பான். ஒரு கொள்ளிக் கட்டையை இழுத்து காதில் செருகி வைத்திருக்கும் சுருட்டைக் கையில் எடுப்பான். பிறகு அதைச் சுற்றிக் கொண்டே பற்றவைப்பான்.

கலியாணம் ஆகி இரண்டு வருடங்கள் உருண்டோடின. சாவித்திரிக்கு குழந்தைப் பாக்கியம் வாய்க்கவில்லை. சாவித்திரிக்குக் குழந்தை பிறந்தால் குழந்தையையும் எடுத்துக் கொண்டு கதிர்காமம் வருவதாக ரங்கசாமி நேர்ந்து வைத்தான். இதைப்பற்றி சாவித்திரிக்கு ஒன்றுமே தெரியாது. காலம் போய்க் கொண்டே இருந்தது. சாவித்திரி இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. செல்லையாவும் ரங்கசாமியும் தான் நிம்மதி இழந்து தவித்தார்கள்.

ஒரு நாள் பகல் நேரம் செல்லையா சாக்குக் கட்டுக்கு மேல் ஏறி உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாவித்திரிக்கு முன்னால் அவளுடைய சோற்றுத் தட்டு இருந்தது. அதை அவள் கையால் பிசைந்து கொண்டிருந்தாள். அவளுடைய நீண்ட மெல்லிய விரல்கள் சோற்றுப் பருக்கைகளை புரட்டிக் கொண்டிருந்தன. அவளுக்கு அகோர பசி. ஆனால் சாப்பாட்டில் பிரியம் இல்லை. பெரிய சோற்றுத் தட்டை ஒரு கை பார் தது முடித்த செல்லையா வலது கைவிரல்களை நக்கினான். சாவித்திரியின் கவலை தோய்ந்த முகத்தை அவன் கவனிக்கத் தவறவில்லை.

சாப்பிடு பெத்தா, சோத்த கையால பெசஞ்சு கிட்டு இருக்காதே" " எனக்கு சாப்பிட பிடிக்குதில்ல – "கைகளை வெளியே எடுத்து உதறினாள். காலையிலிருந்து அவளுக்கு ஒரே வாந்தி. செல்லையா அவளைப்பார்த்துக்

கொண்டே இரண்ட மூன்று மிடர் தண்ணீர் குடித்தான்.

" எனக்கு ரொம்பவும் பசிக்குதுங்க ஆனா சாப்பிட முடியல்ல" அவள் இதைச் சொல்லும் பொழுது அவளுடைய கண்கள் கண்ணீரில் மிதந்தன.

" சாப்பாட்டை பாத்தாலே அருவருப்பா இருக்கு. பசி இருந்தபடியால தான் ஆக்கினேன். ஆனா சாப்பிட முடியல்ல" அவள் சோற்றுத் தட்டை அப்பால் தள்ளிவிட்டு மேசையில் தலையைக் சாய்த்தாள்.

செல்லையா மனைவியின் சோற்றுத் தட்டைக் கொண்டு போய் அடுக்களையில் வைத்தான். கட்டைக் கைசேர்ட் ஒன்றை எடுத்துப் போட்டு அதன் பொத்தான்களைப் பூட்டிக் கொண்டு வெளியே கிளம்பினான். கடையில் ஒரு பார்சல் சோறு வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான்.

" பெத்தா இத சாப்பிடு. இத சாப்பிடுடா" மனைவிக்கு முன்னால் நின்ற செல்லையா சொன்னான். தன் எதிரில் திறந்து வைத்திருக்கும் சோற்றுப் பார்சலை மெல்ல மெல்ல சாப்பிடத் தொடங்கினாள் சாவித்திரி. ரங்கசாமியும் சாப்பிட்டு முடிந்தது. அவன் இதையெல்லாம் கண்டு கொள்ளாதவன் போல ஏப்பம் விட்டான். கொண்டு வந்த சோற்றுப் பார்சலில் இரண்டு நேரத்துக்குப் போதுமான அளவு சோறு இருந்தது. ஆனால் கறிகள் ரொம்பவும் குறைவு. அவள் பார்சலில் அரைவாசிதான் சாப்பிட்டாள். கறிகள் இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே சாப்பிட்டிருப்பான்.

சாவித்திரி சாப்பிட்ட கையை உதறிவிட்டு பாசலை ஒதுக்கி வைத்தாள். இதைப் பார்த்த செல்லையாக " சோத்த வெளியே கொட்ட கூடாதம்மா சாப்பிடு இன்னும் கொஞ்சம் சாப்பிடு" என்றான்.

" எனக்கு போதும். கொழம்பும் முடிஞ்சு போச்சு" நடந்தது எதையுமே கண்டு கொள்ளாதவன் போல இருந்த ரங்கசாமி ஒரு சுருட்டை பற்றவைத்தபடி வந்து எட்டிப் பார்த்தான்.

" சே ! சே! வெளியே வீசக்கூடாது. பெத்தா சாப்பிடும்மா. எல்லாத்தையும் சாப்பிடு."

" அதில சோறுமட்டும் தான் இருக்கு" சாவித்திரி தலையை நொடித்தாள்.

"பறவாயில்ல கொட்டிடாதே சாப்பிடம்மா. சாவித்திரிக்கு ஒன்றுமே பேச

முடியவில்லை. அவள் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. செல்லையாவைப் பார்த்தாள். உடனே செல்லையா அவள் எச்சில் படுத்திய பகுதியை அகற்றிவிட்டு மிகுதியை ஒரு தட்டில் எடுத்து வைத்தான். "பின்னாடி யாராச்சும் சாப்பிடலாந் தானே. எதுக்கு வீணா கொட்டனும்." மறுநாள் தொடக்கம் சோறு ஆக்கும் வேலையை செல்லையா எடுத்துக் கொண்டான். அவன் எந்த வேலைக்கும் பழக்கப்பட்ட ஆள். செல்லையா ஆக்கும் ஏதாவது ஒரு மரக்கறியோடு சாவித்திரி ஒரு பிடி சோறு சாப்பிடுவாள்.

"சாவித்திரி சோம்பேறியாயிடுவாளோ தெரியாது". இது ரங்கசாமியின் குற்றச்சாட்டு. இதைக் கேட்டு கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள்.

செல்லையா எவ்வளவு நல்ல மனுஷன் என்பது சாவித்திரிக்கு இப்பொழுது புரிந்தது. முரட்டுத் தேகமும் கடூரமான பார்வையும் இருந்தாலும் கூட சின்னஞ்சிறு குழந்தை போல சுபாவம் உள்ளவன். அவன் சாவித்திரியை ஒரு குழந்தையைக் கவனிப்பது போலக் கவனித்துக் கொண்டான். குளிக்கிற கிணற்றடியில் ஒருவரும் இல்லாவிட்டால் தானே தண்ணீர் இறைத்துக் கொடுப்பான். சில வேளைகளில் அவளுக்கு மிட்டாய் காரரிடம் மிட்டாய் வாங்கிக் கொடுப்பதும் உண்டு. கொழும்புக்கு வரும் நேரங்களில் மலிவான வர்ணவர்ண காப்புகள். மாலைகள் என்று வகைவகையாக ஏதாவது வாங்கிக் கொண்டு போவான். செல்லையா கொழும்புக்குப் போகும் பொழுது வெள்ளை சாரத்துக்கு மேல் வெள்ளை நிற கட்டைக் கை சட்டை அணிந்து போவது வழக்கம். சாவித்திரிக்கு வாங்கிவரும் காப்பு மாலை எல்லாவற்றையும் சட்டையின் உள் பக்கத்தில் தைக்கப்பட்டிருக்கும் ரகசியப் பையில் பொதிந்து வைத்திருப்பான். சாவித்திரியும் செல்லையா இவற்றைக் கொண்டு வரும் வரை காத்திருப்பாள். ஆனால் செல்லையா தான் இந்த பொருள்களை வாங்கி வந்திருப்பதாக முதலில் காட்டிக் கொள்ளமாட்டான். அவள் பொறுமை இல்லாமல் தவிப்பதைக் கண்டும் காணாதவன் போல இருப்பான். ஒரு மணி நேரம் அரை மணி நேரம் கழிந்த பிறகு தான் புன்சிரிப்போடு அவற்றை அவளிடம் கொடுப்பான். பண்டிகை நாட்களில் கடையை மூடிவிட்டு இருவரும் வெளியே புறப்பட்டு விடுவார்கள். இந்த நேரங்களில் தான் அவன் வாங்கிக் கொடுத்த மாலை காப்பு எல்லாம் சாவித்திரியின் மேனியை அலங்கரிக்கும். இதைக் காணக்காண செல்லையாவுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடும்.

ஆனால் இந்த காப்புமாலை வகையறாக்களை அணியும்படி அவன் சாவித்திரிக்கு சொன்னது கிடையாது. இருந்தும் சந்தர்ப்பம் வாய்க்கும் வரை காத்திருந்து அவற்றை அணிந்து கொண்டு தெருவில் இறங்கி விடுவாள் சாவித்திரி. செல்லையா இரண்ட மூன்று அடி பின்னால் வந்து கொண்டிருப்பான். முன்னால் செல்லும் தன் மனைவியின் அழகை ரசிப்பதில் செல்லையாவுக்கு கொள்ளை ஆசை.

சாவித்திரி கர்ப்பமாகிய காலம் முதல் கொழும்பிலிருந்து காப்பு மாலை

வாங்கிவரும் வழக்கத்தை கைவிட்டுவிட்டான் செல்லையா. பதிலாக ஏதாவது தின்பண்டங்கள் கொண்டு வர ஆரம்பித்திருந்தான். ஒரு தடவை பணம் சற்று அதிகமாகவே செலவு செய்து மனைவிக்கு ஒரு புரியாணி பார்சல் வாங்கி வந்தான். ரங்கசாமியின் கடையைக் கடந்து போகிறவர்கள் யாராயிருந்தாலும் ரங்கசாமி அவர்களோடு இரண்டு வார்த்தை பேசாமல் விட மாட்டான். அவன் சந்திக்கும் ஆண்களோடு அவனுக்கு பேசுவதற்கு ஏதாவது சமாச்சாரம் இருக்கும்.

" என்ன ஐயா பஸ்சுக்கு போறீங்களா?"

" மொதலாளி குளிக்கப் போறீங்களா?"

" இன்னிக்கு வெய்யில் மோசமா இருக்கு" என்பான் ரங்கசாமி. தெருவில் போகிற போது கூட பழக்கமானவர்களைக் கண்டால் தங்கிப் பேசுவான். ஆனால் செல்லையா அப்படி இல்லை. அறிமுகமானவர்களோடு கூட பேசமாட்டான். பேசுவதாயிருந்தால் ஜுவானிசோடு மட்டும் ஒன்று இரண்டு வார்த்தையோடு நிறுத்திக் கொள்வான்.

பயணம் போகிற பொழுது வழியில் யாரையாவது சந்தித்தால் போதும் ரங்கசாமி தன் பேச்சை ஆரம்பித்துவிடுவான். சாவித்திரிக்கோ பொறுமை போய்விடும். அவள் அவனை முறைத்துப் பார்ப்பாள். " ஆளுங்களோட பேசினா கொறஞ்சா போயிடும். எங்களுக்கு ஒதவி செய்யிறவங்க இல்லியா." என்று ரங்கசாமி சொல்வான்.

" தெருவில நின்னு பேசிகிட்டு இருக்க ஜனங்களுக்கு நேரம் இல்ல. சில பேர் பஸ்சை பிடிக்க ஓடுவாங்க. மத்தவங்க கோச்சிக்குப் போவாங்க. அவங்கள அப்பா பேச்சுக்கு இழுக்கிறீங்களே. சில பேர் ஓடிக்கிட்டே தான் அப்பா பதில் சொல்றாங்க. தெரியுமா?"

" அதுக்கு என்ன இப்போ. சும்மா தானே பேசறேன்" ரங்கசாமி கண்களை சுருக்கியபடி சொல்வான். அளவுக்கு அதிகமாக ஜனங்களோடு பேச்சுவார்த்தை வைத்துக் கொள்வதாக சாவித்திரி ரங்கசாமியைக் குற்றஞ் சாட்டுவாள். ஆனால் அதே நேரம் முகத்தை " உம் " என்று வைத்துக் கொண்டிருப்பதாக செல்லையாவை ஏசுவாள். சாவித்திரியின் பள்ளிக்கூட சிநேகிதிகள் யாரையாவது சந்தித்தால் கூட செல்லையா பேசமாட்டான். அவர்கள் போகும் வரை அவனைக் காணக் கிடையாது. தூரத்தில் போய் பார்த்துக் கொண்டிருப்பான்.

"என்னோட சிநேகிதி யாராச்சும் சந்திச்சா கூட பேசமாட்டேங்கிறீங்க. அவங்கள போகவிட்டு மூஞ்சிய " உர்" ருன்னு வெச்சுக்கிறீங்க. இதைச் சொல்லும் போது சாவித்திரியின் நெற்றி சுருங்கும். கண்கள் செல்லையாவை பார்த்து முறைக்கும்.

"நல்லா இருக்கே நான் என்னத்த பேசறது"

"மனுஷங்களோட சம்பிரதாயத்துக்கு கூட சும்மா சிரிச்சு பேசி பழக்கமே இல்ல போலிருக்கு"

" அது என்ன சும்மா சிரிக்கிறது. எனக்கு இதெல்லாம் பழக்கமில்ல"

" அது சரி" சாவித்திரிக்கு கோபம் வந்துவிட்டது. முகத்தை நொடித்துக் கொண்டாள்.

" ஆமா சிரிச்சு பழக்கமில்ல தான்" சாவித்திரிக்கு இடைக்கிடை தன்னுடைய பழைய காதல் விவகாரம் ஞாபகத்துக்கு வரும். " பாதுகாப்பு சேவை " என்னும் பெயர்ப்பலகையைக் கடந்து செல்லும் பொழுது அவள் ரூபசிரியை நினைத்துக் கொள்வாள். அடுத்தகணம் வெட்கமும், கோபமும் தோன்றி அந்த நினைவை மாற்றிவிடும். அவள் தன்னைத் தானே நொந்து கொள்வாள். அதுமட்டுமா அவளுக்கு ருபசிரி மேலேயும் கோபம் வரும். நிஜமாக என்ன நடந்தது என்பதைக் தெரிந்து கொள்ளாமலே அவன் தலைமறைவாகிவிட்டான். ஒருவேளை விஜித் அவனை அச்சுறுத்தியிருக்கலாமோ? குறைந்த பட்சம் ஒரு கடிதமாவது அனுப்பியிருக்கலாம். அப்படி செய்யாமல் பூமி பிளந்து விழுங்கிக் கொண்டது போல மறைந்து விட்டானே. அவனுக்குத் தன்மீது உண்மையான காதல் இல்லாதபடியால் தான் இப்படி செய்தான் என்று மனம் நொந்து போனாள். இவ்வளவு இலகுவாக ரூபசிரி தன்னை மறந்து விட்டான் என்று நினைக்கும் பொழுது கோபத்தோடு வெட்கமும் அவள் இதயத்தை வாட்டியது. அவள் நினைத்திருந்தால் அவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கலாம். அதற்கு தேவையான அளவு அவகாசம் கூட இருந்தது.

"எனக்கு கடிதம் எழுத வழியில்ல. என்ன நடந்திச்சுன்னு தெரிஞ்சுக்கக் கூட அட்ரஸ் இல்லியே" என்று அவள் மனதில் நினைவுகள் ஓடின. ரூபசிரி தன்னை விதியின் கையில் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டான். ரூபசிரியின் தாமதத்தால் தான் அந்த சம்பவத்துக்குச் சாவித்திரி முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. அது மட்டுமா இவ்வளவு சீக்கிரம் அவள் கலியாணம் கூட நடந்திருக்காது. செல்லையாவை கணவனாக ஏற்றுக் கொண்டதற்கு காரணமே ரூபசிரியின் தாமதம் தான். காதலித்ததன் பலன் இவ்வளவு தான். அப்பா சம்பவம் நடந்த நாட்களில் ரொம்பவும் விழிப்பாக இருந்தார். நாள் செல்லச் செல்ல இது விஷயமாக அவருடைய கவனம் தளரத் தொடங்கியது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ரூபசிரியைச் சந்திப்பதற்கு சாவித்திரி எண்ணியிருந்தாள். ஆனால் ஒரு தடயமும் வைக்காமல் ரூபசிரி மறைத்துவிட்டானே. பகல் பொழுதில் சாவித்திரிக்கு அப்பா காவல் இருந்தார். இரவில் ஜுவானிஸ் தம்பதிகள் வசம் அவளை ஒப்படைத்து விடுவார்.

பழைய நினைவுகளால் சாவித்திரியின் உள்ளம் சஞ்சலப்படும்.

செல்லையாவைக் கண்டதும் அமைதியடைந்துவிடும். அதேவேளை செல்லையா பேரில் அனுதாபமும் இரக்கமும் பொங்கிவழியும். இந்த மாதிரி நேரங்களில் தன்னுடைய கணவரை கருணை ததும்ப பார்ப்பாள். இப்பொழுதெல்லாம் அவனுடைய தோற்றத்தைப் பார்த்து அவள் கேலி செய்வதில்லை. அதற்கு மாறாக அவனைக் கண்டு அவள் இரக்கப்பட்டாள். அவனுடைய உயர்ந்தகுணம் தான் அவளுக்கு இப்பொழுது பெரிதாகத் தெரிந்தது.

செல்லையாவைத் திருமணம் செய்து கொள்ளும்படி அப்பா யோசனை சொன்ன பொழுது தான் அடைந்த அதிர்ச்சியைப் பற்றி சாவித்திரி இப்பொழுது எண்ணிப் பார்த்தாள்.

" நான் செல்லையாவை கட்டிக்க மாட்டேன்" அவள் பயந்த மனத்தோடு சொன்னாள். ஒரு ராஜகுமாரி பூதத்தைத் திருமணஞ் செய்த கதை அவள் ஞாபகத்துக்கு வந்தது. அவள் கட்டி எழுப்பிய மனக் கோட்டைகள் சவர்க்காரக் குமிழ்கள் போல ஒரு நொடியில் வெடித்து சிதறின.

" வேற யாரு உன்னய கட்டிக்குவா?" ரங்கசாமி கோபமாகக் கேட்டான்.

" சிங்களவன் வந்து கட்டிக்கிட்டுப் போவான்னு நெனச்சியே. இப்ப பாத்தியா? சும்மா வரல்ல. அந்த மனுஷனாலதான் நமக்கு இம்புட்டு கஷ்டம். செல்லையா மட்டும் அன்னிக்கு இல்லாம போயிருந்தா என்ன நடந்திருக்கும் தெரியுமா?"

ரூபசிரி மட்டும் ஓடிப் போகாமல் ஒருமனமாக இருந்திருந்தால் அப்பா தங்களுடைய காதலுக்கு குறுக்கே நின்றிருக்க மாட்டார். என்று சாவித்திரி நினைத்தாள். ரங்கசாமியின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு சொல்வதற்கு அம்மாவும் இல்லாதபடியால் அப்பாவை எப்படியாவது தன்னுடைய பக்கத்துக்கு வளைத்துப் போடலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

" அம்மா இருந்திருந்தா இப்படி நடக்காது இல்லியா?" அவள் அழுதழுது சொன்னாள்.

" அம்மாவுக்கு செல்லையாவ கண்டாலே புடிக்காது."

"அம்மா இருந்தா நீ அந்தப் பையன்கூட பேசியிருப்பியாடி? அம்மா இருந்தா நீ இந்த ஆட்டம் ஆடியிருக்க முடியுமா?"

அப்பாவின் மனசை மாற்ற முடியாது என்று கண்ட சாவித்திரி மேரியின் உதவியை நாடினாள். அவள் அப்பாவுக்கு நிலைமையை புரியவைப்பாள் என்று எண்ணினாள்.

" செல்லையா எம்புட்டு நல்ல மனுஷன். சாவித்திரி நல்லா உடுத்து சாப்பிட்டு சந்தோஷமா இருக்கலாமே" என்று மேரி சொன்னாள். சாவித்திரி செல்லையாவை விரும்பாதது மேரிக்கே ஆச்சரியமாக இருந்தது.

" வயசும் ரொம்ப. அழகு கெடையாது சாவித்திரி சொன்னாள். " அழகா? " ஆச்சரியத்தோடு கண்களை அகலத் திறந்தாள் மேரி. கொடுப்புக்குள் இருந்த வெற்றிலைச் சக்கையை கையிலெடுத்து வெளியே வீசிவிட்டு " ஹஹ் ஹஹ்" என்று சிரித்தாள்.

" அழகுன்னு சொல்றியே அத கரைச்சு குடிக்கவா? என்னயப்பாரு அழகப்பாத்து ஏமாந்து போய் இப்ப கஷ்டப் படறேன். கட்டின நாள்ள இருந்து நுகத்தடியில பூட்டிய மாடுமாதிரி ரெண்டு வருஷமே தான். அழகு எல்லாம்மாயமா மறஞ்சிடுச்சு. வயது முப்பத்தஞ்சு ஆச்சோ இல்லியோ மனுஷனோட பல்லும் விழுந்திடுச்சு. ஒழச்சு சாப்பாடு போட முடியுமான்னு பாரு. அதுக்கு மேல மனுஷனோட அழகப் பத்தி எதுக்கு பாக்கனும்.

" எனக்கு செல்லையாவ பிடிக்கல்ல." சாவித்திரி சொன்னாள்.

"உனக்கு பயித்தியம். நீ நெறையப் படிச்சது தான் தப்பாயிடுச்சு. இந்த பத்திரிகையிலும், புஸ்தகத்திலயும் வர்ற கதையெல்லாம் படிச்சிட்டுத்தான் இப்படி பேசறே. செல்லையா மட்டும் சிங்கள ஆளா இருந்தா கண்ண மூடிக்கிட்டு என்னோட மகள்ல ஒருத்திய அவனுக்கு கொடுத்திடுவேன். இந்த மாதிரி ஆளுங்க பொண்ணுங்கள உயிரப்போல வெச்சிருப்பாங்கடி" மேரி சாவித்திரியைப் பார்த்து சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"பயித்தியக்காரத் தனம் பண்ணாம இந்த சம்பந்தத்துக்கு சரின்னு சொல்லிடு. சாவித்திரி " மேரி மீண்டும் ஆதரவாகச் சொன்னாள். " ஒங்கட ஜாதியில ஒருத்தன இங்கே தேடுறதும் கஷ்டம் . எந்தநாளும் அந்நிய வீட்டில ராத்திரி தங்க முடியாது இல்லியா. சாவித்திரிக்கும் இப்ப வயசாயிடுச்சு. செல்லையா உள்ளத வெச்சுக் குடும்பம் நடத்தக்கூடியவன் எங்கிறது ஒனக்கு புரியல்லியா? ஒன்னோட உயிரக் காப்பாத்தியிருக்கான். நீ அவனுக்கு கடன்பட்டவ இல்லியா. லட்சுமி இருந்தாக் கூட அப்படி ஒரு காரியம் நடந்ததுக்கப்புறம் இந்த சம்பந்தத்தக்கு இல்லேன்னு சொல்லியிருக்கமாட்டா"

வேறு எதுவுமே செய்ய முடியாத கட்டத்தில் செல்லையாவைத் திருமணம் செய்வதற்கு சாவித்திரி இணங்கினாள். இருந்தும் திருமணத்தின் பின்னர் படிப்படியாகச் செல்லையா பேரில் சாவித்திரிக்கு அன்பு உண்டாகியது. கண்டதும் கொண்ட காதலை விட இந்த அன்பு உறுதியானது என்பதை அவள் இப்பொழுது புரிந்து கொண்டாள். அவளுடைய தேவைகளை மனங்கோணாமல் நிறைவேற்றி வைப்பான் செல்லையா. தாய் தந்தை வேறு எந்த நாதியும் இல்லாத செல்லையா

சாவித்திரியிடம் எவ்வளவு அன்போடு பழகினானோ அதே அளவு அப்பா பேரிலும் அன்பு வைத்திருந்தான். அறையின் நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக்கிடந்த தனக்கு வெளி உலகத்தைக் காண உதவியவன் செல்லையா என்பதால் அவனிடத்தில் சாவித்திரிக்கு நிறைய நன்றி உணர்வு ஏற்பட்டது. அப்பா கஞ்சத் தனத்தில் ஊறிப்போனவர். தன்னுடைய மனைவியையோ மகளையோ பணம் செலவழித்து பயணம் கூட்டிப்போக விரும்பாதவர். ஆனால் செல்லையா அப்படி இல்லை. மனைவியை அழைத்துப்போய் புதுப்புது விஷயங்களைக் காட்டி அவள் சந்தோஷப்படுவதைத் கண்டு தான் மகிழ்ச்சியடையும் ஒரு கணவன் என்பதை சாவித்திரி இப்பொழுது அறிந்து கொண்டாள்.

மனைவிக்கும் போதுமா என்று பார்த்த பிறகுதான் செல்லையா தன்னுடைய சாப்பாட்டுத் தட்டைக் கையில் எடுப்பான். ஆரம்பத்தில் செல்லையாவின் இந்த குணத்தைக் கண்டு சாவித்திரிக்கு வியப்பாக இருந்தது. அதே சமயம் அவனுக்காக இரக்கப்பட்டாள். இந்த மாதிரி ஒரு பழக்கத்தை அம்மாவிடமோ அப்பாவிடமோ அவள் கண்டதில்லை. இருப்பதில் நல்ல பகுதியையும் பெரிய பங்கையும் அப்பாவுக்குக் கொடுத்து விட்டு அம்மா பாதி நாள் பட்டினி கிடப்பாள். ஆனால் செல்லையாவோ தனக்குக் கிடைக்கும் சாப்பாட்டில் ஒரு பகுதியை சாவித்திரியின் கையில் பொதிந்து விடுவான். செல்லையாவிடமும் கஞ்சத்தனம் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் இடைக்கிடை ஒரு நல்ல சாப்பாட்டுக்காக பணம் செலவு செய்ய பின் நிற்கமாட்டான். அவன் பெரிய சாப்பாட்டுப் பிரியன்தான். ஆனால் ஒரு நாள் பசியோடு இருப்பது அவனுக்கு ஒன்றும் பெரிய காரியம் இல்லை. சாவித்திரிக்கு இது நன்றாகத் தெரியும். வீட்டைவிட்டுக் கிளம்பினால் திரும்பி வீட்டுக்கு வரும் வரை அவன் பணம் செலவழிக்கிறான் என்றால் அது ஒரு கிளாஸ் தேநீருக்கு மட்டுமாகத் தான் இருக்கும்.

ரங்கசாமிக்கு கோபம் வரும்படியாக குற்றம் எதையாவது சாவித்திரி செய்து விட்டால் செல்லையா அவளுடைய உதவிக்கு வந்து விடுவான். ரங்கசாமி வாதநோய்காரன். இதற்காக ஏதோ ஒரு எண்ணெய் வாங்கி வைத்திருந்தான். ஒரு சமயம் சாவித்திரியின் கையால் அந்த எண்ணெய் போத்தல் உடைந்துவிட்டது. செல்லையா அந்தக் குற்றத்தை தன்மீது போட்டுக் கொண்டான். இன்று வரை ரங்கசாமிக்கு இந்த விஷயம் தெரியாது. இந்த சம்பவம் நடந்த நாளிலிருந்த எந்தப் பிரச்சினை வந்தாலும் செல்லையாவிடம் போய் சரணடைய சாவித்திரி பழகிக் கொண்டாள். பெரிய மழைக்கு ஒதுங்க இடம்தரும் விசாலமான மரம் போல செல்லையாவை அவள் நினைத்திருந்தாள்.

# 18

நாடு,நகரம்,கடைவீதி, வேலைத்தலம், ஒரு இடம் பாக்கி இல்லை. செய்தி காட்டுத் தீ போல பரவியது. ஒருத்தருக்கு ஒருத்தர் அறிமுகமில்லாதவர்கள் கூட நீண்ட நாள் பழகியவர்கள் போல இதைப் பற்றி பேசினார்கள். செய்தியைப் பரப்பவும் அவர்கள் பின் நிற்கவில்லை. ஒரே சம்பவத்தைப் பற்றிப் பல்வேறு கோணங்களிலிருந்து அபிப்பிராயங்கள் வரத் தொடங்கின.

"ஒரு குடும்பத்து ஆளுங்க படம் பாக்க போயிருக்காங்க" கந்தோரில் விஷயம் அறிந்த ஒருவர் சொல்லத் தொடங்கினார். "யாரோ ஒரு போக்கிரி, பெண் பிள்ளையோட கைய புடிச்சு இழுத்திருக்கான். இதப் பாத்துக்கிட்டிருந்த அவளோட சகோதரனுக்கு கோவம் வந்திடிச்சு. அவன் அந்த ஆள வெளியே இழுத்துப்போட்டு செம்மையா உதச்சிட்டான். தப்பிச்சு ஓடிப்போன அந்த ஆளு பழி வாங்க எண்ணிட்டான். அவன் போய் ஒரு கூட்டத்தையே கூட்டிக்கிட்டு வந்திட்டான். அவங்க இவங்கள சுத்தி வளச்சிட்டாங்க. துரதிஷ்டவசமா சண்டபோட்ட ரெண்டு பேரும்ரெண்டு வித்தியாசமான ஜாதிக்காரங்க" "பொண்ணு சிங்களமா? தமிழா"

" அது எனக்கு தெரியாது. ஆனா அவங்க ரெண்டு ஜாதிக்காரங்க. தங்கள சிங்கள ஆளுங்க அடிச்சிட்டாங்கன்னு தமிழ்க்காரங்க கோவப்பட்டாங்க. அவங்க மேலே தமிழ் ஆளு கை வெச்சுட்டான்னு சிங்கள ஜனங்கள் ஆத்திரப்பட்டாங்க"

" இதுக்கெல்லாம் நிச்சயமா ஒரு பொண்ணுதான் காரணமாக இருக்கும்" வயது போன ஒரு கிளார்க், பெண் உத்தியோகத்தர்கள் பக்கம் கடைக்கண்ணால் பார்த்தபடி சொன்னார்.

"அந்தப் பக்கம் சாஞ்சாலும் குத்தம் இந்தப் பக்கம் சாஞ்சாலும் ஆகாது. நடு நிலையில் நின்னு பேசனும். இவரு அப்படி இல்ல. வீரசேன ஜனங்களோட ஊணர்ச்சிகளுக்கு மதிப்பு குடுக்காத ஆள். அவருக்கு அதப்பாத்து சிரிக்கத்தான்

தெரியும். அந்த ஆளுங்க நாட்ட பிரிச்சு கொடுங்கிறாங்க. இதெல்லாத்தையும் அறியாம பேசறது சரியில்ல". என்னருகில் இருந்த ஒரு கிளார் க சொன்னான்.

" இப்படி நடந்தா நாட்ட பிரிச்சுக் கேக்காம என்ன செய்வாங்க? எல்லாமே கடைசில பெரிய அடிதடி சண்டையில தான் முடியும். சில வருஷங்களுக்கு ஒரு தடவை இந்த மாதிரி அடிதடி சண்டை வந்துகிட்டே தான் இருக்கு. இதனால எம்பிட்டு அழிவு தெரியுமா?" வீரசேனவின் கருத்தை ஏற்றுக் கொண்ட மற்றுமொரு கிளார்க் சொன்னார்.

" அது தானே நானும் சொல்றேன் " வீரசேன தலையை ஆட்டினான். அவங்க தங்களுக்கு வேறயா ஒரு ராஜ்யம் கேக்கிறது நெஜம். ஆனா இந்த மாதிரி சின்ன சின்ன விஷயங்கள்ள இருந்து தான் சண்டையே ஆரம்பிச்சிடுது. ஒன்னா சாப்பிடலாம். ஒன்னா இருக்கலாம். தமிழனோட சாப்பாடு சாப்பிடலாம். அவனோட வருஷப்பொறப்பு கொண்டாடலாம் இல்லியா?" வீரசேன தலையை இரண்டு பக்கமும் ஆட்டியபடி கேட்டான். இதனால் அந்த வாலிப கிளர்க் பையனுக்கு அவமானமாக இருந்தது. " அவங்க கடைகளுக்கு போறீங்க. சாமான் வாங்குறீங்க, ஒரே சிவனொளிபாதம், கதிர்காமம் எல்லாம் ஒன்னாப் போய் வணங்குறீங்க. தமிழ் ஆளுங்களோட தெய்வங்கள கொண்ணாந்து உங்க பன்சலையில வெச்சு நேத்திக்கடன் பண்ணுறீங்க. அவங்கட ஒதவியை வேண்டுறீங்க. ஆனா உங்ககிட்ட பொறுமை எங்கிறது மருந்துக்குக் கூட கெடையாது. சின்ன விஷயத்துக்கு அடிச்சுக்கிறீங்க. சண்ட போடுறீங்க. இதுக்கெல்லாம் பொறாமை தான் காரணம்"

புகையூட்டப்பட்ட தேன்கூடு போல நகரம் குழம்பியது. உண்மை எது என்று கண்டு கொள்ள முடியாதபடி வதந்திகள் நாலாபக்கமும் பரவத் தொடங்கின. உண்மைச் செய்திகள் உருமாறித் திரிந்து சிறகடித்துப் பறக்கும் பறவைகள் போல எங்கும் பரவின. ரயிலில் எந்தப் பக்கம் திரும்பினாலும் இதே கதைதான்காதில் விழுந்தது.

நான் ஜனங்களை விலக்கிக் கொண்டு ரயிலிருந்து இறங்கி லொறி இருந்த பக்கமாகச் சென்றேன். ரயில்நிலையத்துக்கு அருகே ஒரு மீன் லொறி வந்து நிற்பது வழக்கம். சின்ன மீன் வகைகள் கிடைக்கும் காலம் என்றால் போதும் பிரயாணிகள் இந்த லொறியை மொய்த்து நிற்பார்கள்.

ஜனங்கள் கலைந்து போகத் தொடங்கி ரயில் நிலையம் வெறிச்சோடிக்

கிடந்தது. ரயில் நிலைய விளக்குகளின் விசையை தடியினால் தட்டி விட்டார்கள். ரயில் நிலையத்தைத் தங்குமிடமாக்கிக் கொண்ட வயோதிபப் பிச்சைக்காரன் நேரகாலத்தோடு வந்துவிட்டான். பின்னால் யாரோ வேகமாக வந்து கொண்டிருக்கும் காலடி ஓசை எனக்குக் கேட்டது. நான் எட்டி அடி வைத்து வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். பின்னால் வரும் அந்த இரண்டாம் ஆள் என்னுடைய நடைக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடந்து வந்து கொண்டிருந்தான். இதைத் தெரிந்ததும் நான் சற்று திரும்பிப் பார்த்தேன். ரங்கசாமி. அவனுடைய வேகமான நடை ஓட்டமாக மாறியது.

"ஐயா மீன் வாங்கிற வரைக்கும் நான் நின்னேனுங்க. ஒரு சுருட்டு எடுத்துக்கிட்டு வர்றதுக்குள்ள ஐயா வந்திட்டீங்க" ரங்கசாமி என்னைக் காணத்தான் வந்திருக்கிறான் என்று தெரிந்ததும்,நான் பதில் எதுவும் கூறாமல் நடையின் வேகத்தைச் சற்றுக் குறைத்தேன். ரயிலிருந்து இறங்கிய பிரயாணிகள் எங்களுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தார்கள். மீன் தலைக்கு சண்டைபோட்ட காகங்கள் இப்படித்தான் ஆரவாரக் கூச்சலிட்டபடி கலைந்து போகும். சுற்றுமுற்றும் பார்த்த ரங்கசாமி குரலைத் தாழ்த்தி

" ஐயா தமிழ் சண்டை மறுபடி வருமா? "

வதந்திக் கும்பலுக்குள் சிறைப்பட்டிருந்த எனக்கு ரங்கசாமியின் நினைவே வரவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் தன்னுடைய மக்ளுக்கு நடந்த சம்பவத்தால் ரங்கசாமியின் பழக்கவழக்கங்கள் கூட சற்று மாறிவட்டது. முன்னரென்றால் எங்கே போகலாம் எங்கே போகக்கூடாது எப்பொழுது போகலாம் என்ற வரையறை எதுவுமே ரங்கசாமிக்கு இருந்ததில்லை. நினைத்த நேரம்நினைத்த இடத்துக்குப் போய்வருவான். ஆனால் இப்பொழுது அவனுடைய இந்த பிரயாணங்கள் எல்லாம் குறைந்துவிட்டது. பழக்கமில்லாதவர்கள் யாராவது தன்னுடைய கடைக்கு வந்தால் அல்லது வழியில் தன்னை அடிக்கடி எவராவது பார்த்தால் அவர்களை சந்தேகத்தோடு கவனிப்பான் ரங்கசாமி. அந்த சம்பவம் விஜித்தின் திட்டப்படி நடந்ததென்பது பகிரங்கமான இரகசியம். நகரவாசிகள் தங்கள் அறிவுக்கு எட்டியவரை அலசி ஆராய்ந்து விஜித்தே குற்றவாளி என்று ஏகோபித்த முடிவுக்கு வந்தார்கள். இது மிகவும் அந்தரங்கமாகவும் நுட்பமாகவும் திட்டமிடப்பட்ட ஒரு காரியம் என்று விஜித் எண்ணியிருந்தாலும் அது பரகசியமாகிவிட்டது.

விஜித்துக்கே இது தெரியும். இதனால் விஜித் ரங்கசாமியை முற்றாகவே மறந்துவிட்டதோடு இன்னும் சிறிது காலத்துக்கு அவனை எதிர்த்துக் காரியங்கள் செய்வதில்லை என்றும் சங்கல்பம் கொண்டான். வேறு ஒருவன் ரங்கசாமியை எதிர்த்தாலும் தன்னை அதில் சம்பந்தப்படுத்தி விடுவார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். தான் ஒரு அரசியல் வாதியாக வேண்டும் என்று அவனுக்கு எவ்வளவோ எதிர்பார்ப்புகள் இருந்தன. இந்த மாதிரியான நடத்தைகள் அதற்கு தடங்கலாக அமைந்துவிடும். அவன் தேர்தலில் போட்டியிடப் போகிறான் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ரங்கசாமியைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதோடு சரி, அதற்கு மேல் பலாத்காரம் செய்வதற்கெல்லாம் விஜித்துக்கு இனிமேல் துணிச்சல் வராது

"மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு ஐயா" ரங்கசாமி அலுத்துக் கொண்டான்." இதெல்லாம் ஜனங்களோட கட்டுக்கதை.சின்ன விஷயத்தையும் பெரிசாக்கிறாங்க. என்ன நடந்திச்சின்னு யாருக்குமே தெரியாது. ரங்கசாமி எதுக்கு பயப்படனும்?" நான் அவனை கால் முதல் தலைவரை நோட்டம் விட்டபடி சொன்னேன்.

உண்மையில் ரங்கசாமி யார் ? இவ்வளவு காலமும் இதைப்பற்றி நான் சிந்தித்ததில்லை. தமிழ் வார்த்தையே பேசாத தன்னுடைய இனத்தவர்களின் சமாச்சாரங்களை மறந்துபோன ரங்கசாமி தமிழனா. சிங்கள மொழியைப் பேசும் சிங்கள முறையில் தயாரித்த சாப்பாட்டைச் சாப்பிடும், சிங்கள ஜனங்கள் மத்தியில் வசிக்கும் ரங்கசாமி சிங்களவனா?

முதன் முறையாக ரங்கசாமி எனக்கு ஒரு அந்நியமாகத் தென்படத் தொடங்கினான். நாங்கள் வழி நெடுகப் பேசிக்கொண்டே போனோம். வீட்டு முற்றத்துக்கு வந்துவிட்டோம். எங்கும் ஒரே இருட்டு. ஆனால் எங்கள் கதை முடிந்த பாடாயில்லை. நாங்கள் இப்படியே பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு சுனேத்திரா எங்களை வீட்டுக்குள் அழைத்தாள்.

" உள்ளே வந்து பேசறதப் பேசலாமே"

அம்மாவின் பேச்சுக் குரலைக் கேட்டு நான் வீட்டுக்கு வந்துவிட்டதை என்னுடைய எட்டு வயது மகன் அறிந்து கொண்டான். ஓடோடி வந்து என் கையிலிருந்த பையைப் பறித்துக் கொண்டான். மகளும் முற்றத்தில் இறங்கி

எங்களை நோக்கி ஓடிவர அடிஎடுத்து வைத்தது தான் தாமதம் அண்ணன் தங்கையின் முதுகில் கைவைத்து " இப்போ இரவாச்சோ இல்லியோ வெளியே போகக்கூடாது." என்று வீட்டுக்குள் தள்ளிக் கொண்டு போனான்.

"என்ன செய்யலாமெங்கிறது தாங்க என்னோட யோசனை ரங்கசாமி குழந்தைகளைப் பார்த்தபடி சொன்னான்.

"ராத்திரில படுக்க முடியாதுங்க. தூக்கம் வராது" ரங்கசாமி வார்த்தைகளை உச்சரிக்கும் முறையிலிருந்து அவன் எவ்வளவு தூரம் கலங்கிப் போய் இருக்கிறான் என்பதை என்னால்உணர முடிந்தது. தளர்வடைந்த நேரத்தில் தான் அவனுடைய பேச்சில் தமிழ் உச்சரிப்புத் தலை காட்டும். அப்படியான நேரத்தில் அவனுக்குத் தன்னுடைய தாய்மொழி நினைவுக்கு வந்து விடுகிறதோ என்னவோ.

" ரங்கசாமிக்கு யாரு என்ன கஷ்டம் குடுக்கப் போறாங்க. ரங்கசாமி என்ன தெரியாத ஆளா? எவ்வளவு காலமா இங்கே இருக்கிற மனுஷன்"

"அது சரி ஐயா. ஜனங்க அப்படி நெனைப்பாங்களான்னு தெரியாதுங்க. சாவித்திரிக்கு கொழந்த பொறக்க இருக்குதுங்க.மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க ஐயா"

நொந்து நலிவடைந்து போன ஆத்மசக்திக்கு புத்துயிர் ஊட்டுவதற்காகவே ரங்கசாமி அங்கே வந்திருக்கிறான் என்பது எனக்குப் புரிந்தது. ஆனால் நான் அவனுக்கு எப்படி உதவி செய்யலாம். என்னுடைய ஜாதிக்காரர்களைப் பற்றி நான் எப்படி நிச்சயமாகச் சொல்வது? " ரங்கசாமி இங்கே வந்து தங்கிடு" என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் அப்படி சொல்லலாமா என்று ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன். அது மூன்று பேரைக் கொண்ட ஒரு குடும்பம். எங்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சுனேத்திரா " கடய கொஞ்ச நாளைக்கு மூடிட்டா நல்லது" என்றாள். " கடய அடச்சுட்டேனுங்க அம்மா. இப்ப ரெண்டு நாளா கடய மூடிட்டு நாங்க உள்ளே தான் இருக்கோம் "

" ரங்கசாமிக்கு யார் தொல்ல கொடுக்கிறாங்க " நான் ஓய்ந்து போய் மீண்டும் கேட்டேன். " எப்ப தொடக்கம் இருக்கிற ஆளு தெலபுவவுக்கு மத்தவங்க வர்றதுக்கு முன்னாடியே ரங்கசாமி வந்திருக்கனும் இல்லியா" நான் தளர்ந்து போய்க் கேட்டேன்.

"அம்பத்து ஒம்பதாம் ஆண்டு தமிழ் கொழப்பம் வந்திச்சே அப்பவே நான் இங்கதான் இருக்கேன். பெத்தா சின்னக் கொழந்த" சின்னக் குழந்தையைத் தாலாட்டுவது போல கைகளை வைத்துக் கொண்டு சொன்னான்.

"கொழும்பில ரொம்பக் கொழப்பம். எங்களுக்கு சரியான பயமா இருந்திச்சு. பெரியய்யா அதுதாங்க விஜித் ஐயாவோட அப்பா அவர் வந்து "ரங்கா பொண்டாட்டியும் புள்ளயயும் கூட்டிக்கிட்டு வந்திடுன்னு கூப்பிட்டாருங்க. குழப்பம் ஓயிற வரைக்கும் நாங்க பாதுகாப்பு முகாமில இருந்தோமுங்க. எங்களுக்கு ஒரு கஷ்டமும் இருக்கல்ல. வீட்டுக்கும் ஒன்னும் ஆகல்ல. அப்படியே இருந்திச்சு. எழுவத்தேழுலயும் நாங்க இங்க தான் இருந்தோம்."

விஜித்துடைய தந்தையாரைப் போல எனக்கும் நடந்து கொள்ள முடியுமானால் அவரைப்போல பட்டப் பகல் வெய்யிலில் நகரத்துக்கூடா நடந்து போய் ரங்கசாமிக்கு உதவி செய்ய முடியா விட்டாலும் இரவு நேரத்தில் இரகசியமாக அவனை அழைத்து வருவதற்குக்கூட எனக்கு வாழ்க்கையில் செல்வாக்கோ, மனோபலமோ இருக்கவில்லை.

" சரி ரங்கசாமி இப்ப ஏன் இவ்வளவு பயப்படனும்? "

" இப்ப முன்ன மாதிரி இல்ல அம்மா" ரங்கசாமி தலைநிறையப் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு சொன்னான். மனுஷங்க மாறிட்டாங்க. அவங்களுக்கு வெறி புடிச்சிடிச்சு. எங்களப் பத்தி யோசிக்க நேரமில்ல, நாங்க இருக்கிறோமிங்கிறதே அவங்களுக்குத் தெரியாது. எங்களுக்கும் யார் யார் இங்க இருக்கிறாங்க எங்கிறது தெரியாது. புதுசு புதுசா யார் யாரோ எல்லாம் வர்ராங்க. போறாங்க யாரு கண்டா?

கொஞ்ச நாளைக்கு சாவித்திரியை மட்டுமாவது இங்கே கொண்டு வந்து தங்கவைக்க எனக்கு விருப்பம்தான். ஆனால், சுனேத்திரா என்ன நினைப்பாளோ என்று நான் பேசாமல் இருந்துவிட்டேன். ரங்கசாமி மௌனமாகத் தேநீரைக் குடித்தான். என்னுடைய எண்ணத்தைத் தெரிந்து கொண்டவள்போல சுனேத்திரா பேசினாள்.

"ரங்கசாமி அப்பிடின்னா கொஞ்ச நாளைக்கு சாவித்திரி இங்கே வந்து

தங்கட்டுமே. அவகிட்ட சொல்லிடு அவட நெலமயில பயந்துகிட்டு இருக்கிறதும் சரியில்ல. எங்கவீட்டிலயும் நெறைய இடமிருக்குன்னு சொல்லவரல்ல. ஆனா நேரத்த பொறுத்து ஒதவி செய்யனும் தானே. கொழந்த பொறக்கிறதுக்கு கிட்டவா?"

"இன்னும் நாள் இருக்குங்க"

"ஆமா ரங்கசாமி நீ அப்படி செய்யிறது தான் நல்லது. பாரதூரமான பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைத்துவிட்டதாக எண்ணிய நான் இப்படி சொல்லிக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்தேன். "ரங்கசாமிக்கு எந்தக் கஷ்டமும் வராதுன்னு தான் நான் நெனைக்கிறேன். இருந்தாலும் சாவித்திரியோட நெலமய பாக்கனுமே"

நான் இப்படி சொன்னாலும் ரங்கசாமி இந்த இனக்கலவரப் பிரவாகத்தில் அடிபட்டுப் போகமாட்டான் என்பது என்ன நிச்சயம். ஜனங்கள் கோபத்தால் வெறிபிடித்து அலைந்தார்கள். குழப்பம் உண்டாகினால் ரங்கசாமி எங்கே போவான். அவனிடமே இதைக் கேட்டுவிடவேண்டுமென என் மனம் என்னை வற்புறுத்தியது. அவனிடம் இருந்து இதற்கு உறுதியான பதில் எதுவும் கிடைக்கப் போவதில்லை. ஆகையால் இதைக் கேட்பதால் பிரச்சினை இன்னும் சிக்கலாகி விடும் என்று என்னையே நான் சமாதானப் படுத்திக் கொண்டேன். " சாவித்திரி விரும்பினா இன்னிக்கே வந்திடலாம்" ரங்கசாமி போவதற்கும் புறப்பட்டான். அப்படி இல்லாட்டா குழப்பம் ஏதாச்சும் வர்றதா தெரிஞ்சா இங்க வரச்சொல்லிடுறேங்க."

என் காதில் என்னென்ன எல்லாம் விழுந்ததோ அந்த செய்திகளை ரங்கசாமி வரும்வரை விருப்பு வெறுப்பில்லாமல் பொறுத்துக் கொண்டிருந்தேன். எத்தனையோ வாத விவாதங்கள் நடந்தன. நான் மௌனமாக இருந்தேன். எனக்கு மட்டும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால், அல்லது அவசியம் ஏற்பட்டிருந்தால் இதெல்லாம் அர்த்தமற்ற வீண் காரியங்கள் என்று தான் சொல்லியிருப்பேன். இருந்தும் நான் வாயே திறக்கவில்லை. ஏனென்றால் அந்நியரின் கோபத்துக்கு ஆளாகிவிடுவேன் என்ற பயம் தான். ரங்கசாமியின் வருகையினால் என்னுடைய மனநிலை ரொம்பவும் தளர்வடைந்துவிட்டது. ரங்கசாமி கானலை நீர் என்று நம்பிப் போனவன். சிங்களவன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டதால் அவளுடைய ஜாதிக்காரரான தமிழர் அவனுக்குத் தொல்லை கொடுத்தார்கள். அவன் பிறப்பால் தமிழனாக இருந்ததால் சிங்கள ஜனம் அவனுக்குப்பிரச்சினை கொடுத்தார்கள். அவனுடைய மகளுக்குத் தமிழில்

ஒருவார்த்தை கூட பேசவராது. ரங்கசாமி சாவித்திரியை ஏன் இப்படி வளர்த்தான். என்ன பயனை எதிர்பார்த்து இப்படிச் செய்தான். சாவித்திரி சிங்களம் பேசினால் அவளுடைய உச்சரிப்பில் வித்தியாசமே தெரிவதில்லை. அவளைப் பார்ப்பவர்கள் அவள் ஒரு தமிழ் யுவதி என்றே சொல்லமாட்டார்கள். ஆனால் இப்பொழுதுதான் முதன் முதலாக அவர்களின் அந்நியத் தன்மை தெரியத் தொடங்கியது. அவர்கள் இருவரும் எங்களுடைய ஜாதிக்காரர்களுக்கும் அவர்களுடைய ஜாதிக்காரர்களுக்கும் அந்நியர்களாகிவிட்டார்கள். ரங்கசாமி எப்பாடுபட்டு போனாலும் சாவித்திரிக்கு உதவி செய்வது கடமை என்று சுனேத்திரா நினைத்தாலும் அவள் முழுமனதோடு அதற்கு இணங்கவில்லை. "கொழந்தை பொறக்க இருக்கிற பொண்ணுக்கு ஒதவி செய்யிறதுங்கிறது சும்மா விளையாட்டில்லீங்க. ஆனா இந்த நேரத்தில அவங்கள கைவிடவும் முடியாது. சாவித்திரி நம்ம பையன மூணு வருஷமா ஸ்கூலுக்கு கூட்டிக்கிட்டு போனா இல்லியா. இது இப்ப நாலாவது வருஷம்" சுனேத்திரா சாவித்திரிக்காகப் பரிந்து பேசினாள்.

கொஞ்சம் இருட்டியபிறகு சாவித்திரி வருவாள் என்று நாங்கள் பார்த்திருந்தோம். ஆனால் அவள் வரவில்லை. அடுத்த நாள் ரயில் ஒரு பத்திரிகை கந்தோராக மாறிவிட்டது. செய்திகள் பறந்தன.

"அங்கே சாவடிச்சவங்களோட பிரேதங்கள இன்னைக்கு கொழும்புக்கு கொண்டு வர்ராங்க. அங்க இருந்து அவங்க அவங்க கிராமங்களுக்கு அனுப்புவாங்க போல இருக்கு" யாரைப் பார்த்தாலும் இதே கதைதான்.

வார இறுதி முடிந்து வேலைக்குப் போகும் நாளும் வந்துவிட்டது. வேலை செய்யவேண்டும் என்ற ஆர்வமோ ஊக்குமோ யாரிடமும் காணப்பட வில்லை. கீழ் மட்டத்திலுள்ள ஊழியர்கள் கோபத்தில் கொதித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் மதம் கொண்ட யானைக் குட்டிகள் போல அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார்கள்.

"நம்மட ஆளுங்கள அங்கே கொல்றாங்க நாங்க இங்கே பாத்துக் கிட்டிருக்கோம்." ஒரு இளம் கிளார்க் மேசையில் ஓங்கி அறைந்தான். மேலே இருந்து ஜன்னல் கண்ணாடி வழியாகக் கீழே பார்த்தபொழுது எறும்புப் புற்றுகளிலிருந்து கும்பல் கும்பலாக எறும்புகள் வெளியே வருவது போல ஜனங்கள் நெருங்கி வருவது தெரிந்தது. கீழே ஜனங்களை நோக்கி வந்த ஒரு வாகனத்தின் ஹார்ன் சத்தமிட்டது. எரிமலைவெடிப்பதற்கு முன்னர் புகை கக்கும். ரயில்

நிலையத்துக்குப் போக எண்ணிய கிளார்க்மார் கையொப்பம் போடாமலே தங்கள் நண்பர்களை அழைத்தார்கள். பிரதான எழுது விளைஞர் நடக்கும் காரியங்களை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அசையும் கண்ணாடிக் கதவுகளின் பக்கமாகப் போய் தமிழ் உத்தியோகத்தர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று சிலர் தேடிப் பார்க்கலானார்கள்.

இப்படி எட்டிப் பார்த்த ஒரு பியன் "நல்ல வேளை ஒருத்தரும் வரல்ல" என்று சொல்லிக் கொண்டு போனான். அவன் யாருக்குமே அடங்காத ஒரு பேர்வழி. தாடை எலும்புகள் வெளியே நீட்டிக் கொண்டிருக்க வெள்ளையில் கறும்பு வட்டங்கள் சுழலும் இரண்டு கண்களோடு காணப்படும் அவனைப் பார்க்கும் எவருமே அவனை வாட்டசாட்டமான ஆண்பிள்ளை என்று தான் சொல்வார்கள். அவனுடைய வருகைக்காக படிக்கட்டருகில் ஒரு கூட்டமே காத்து நின்றது.

"காற்சட்டைப் பைகளுக்குள் கையைவிட்டு தளர்வாக இருந்த காற்சட்டைக் கால்களை தூக் கியபடி ஜன்னலை விட்டு அகன்ற வீரசேன "பிணம் திங்கிறதுக்கு நாய்களும் நரிகளும் கூடுதுக" என்றான். அவனுடைய கருத்துக்களை எதிர்ப்பவர்கள் அந்தக் காரியாலயத்தில் எவருமே இல்லை.

" பிணம் கொண்டு வரமாட்டாங்கன்னு கேள்விப்பட்டா போதும் நரிகளுக்கு பைத்தியமே புடிச்சிடும். இதெல்லாம் சரிப்பண்ணக்கூடிய பிழைகளா" "கொண்டுவர மாட்டங்களாக ?" ஆச்சரியத்தை என்னால் மறைக்க முடியவில்லை. "அதப் பத்தி தெரிஞ்சும் வீரசேன சொல்லல்லியே" நான் வீரசேனவைக் குற்றஞ்சாட்டினேன்.

" நான் என்னத்த சொல்றது ? சொன்னாக் கூட நான் பொய் சொல்றதா சிரிப்பாங்க. சொல்லாமப் போனா அவங்க இப்ப கண்டு பிடிச்சிடுவாங்க. பெரிய ஈக்கள் இருக்கே அதுக ரத்தத்தோட மணத்த மோப்பம் பிடிச்சுடும். கொண்ணாந்தாலும் இல்லாட்டாலும் ஒன்னுதான். முழுசா அழிச்சிடப் போறாங்க. மிச்சம் மீதி இருக்காது."

" நாலா பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். உயரமான கட்டிடங்களால் தெருக்கள் வீதிகள் எல்லாம் மறைக்கப்பட்டிருந்ததால் இந்த ஜனக் கூட்டம் எங்கே போகிறது என்று கண்டுகொள்ள முடியலலை.

" பெரிய அநியாயம் தான் நடக்கப் போகுது" நடுத்தர வயதுக் கிளார்க் நெற்றியில் கைவைத்தபடி சொன்னார்"

இந்த கிளார்க்கின் தலைக்கு மேலாக ஜன்னல் வழியாக வெளியே பார்த்த வீரசேன " நாங்க பொதுஜனங்கட பக்கமின்னு சொன்னவங்க அவங்களோட சேந்துக்கலாமே. ஜனங்கள கலைச்சுடலாம். முட்டாள் பிசாசுகளோட வேலய பாத்தீங்களா?"

" முட்டாள் பிசாசுகள்" என்று வீரசேன யாரைக் குறிப்பிட்டான் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் நான் அவனுடைய முகத்தை பார்த்தேன்., ஆனால் அவனுடைய முகபாவத்திலிருந்து எதையும் கண்டு கொள்ள முடியவில்லை. அந்தப் பெரிய ஜனக்கூட்டத்தைக் கலைப்பது ரொம்பவும் சிரமமான காரியம் என்பது நிதர்சனமாயிற்று வீரசேனவுக்கு நாடி தளர் நதுவிட்டது. கீழே குள்ளர்கள் போலத் தோற்றமளித்த ஜனங்களை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

புகை கக்கிக் கொண்டிருந்த எரிமலை மத்தியானம் நெருங்க வெடித்துவிட்டது. வேறு இனத்தவர்களின் கடைகள், சாப்புகள் எல்லாவற்றையும் நேரத்தோடு இழுத்து மூடிவிட்டார்கள். தெருவில் எங்கே பார்த்தாலும் கலகக் காரர்கள் மயமாக இருந்தது. அவர்களின் வெறிபிடித்த குரலினால் சுற்றாடலே அதிர்ந்தது. அணைபோட்டுத் தடுக்க முடியாத வெள்ளம் போல நாலா பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் திரண்டு வரத் தொடங்கினர். பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்களால் இந்த கூட்டத்தை அடக்க முடியவில்லை. இப்படிப்பட்ட மக்கள் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு ஆள் பலம் போதவில்லை. இதனால் பாதுகாப்புப் படையினர் சிதறி ஓட வேண்டியதாயிற்று. எறும்பு புற்றில் சுடு சாம்பல் விழுந்தால் எப்படி இருக்குமோ அப்படி ஜனங்கள் நடந்து கொண்டார்கள். மாடிக் கட்டிடங்களின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தவர்களின் கண்களுக்கு இந்தக் காட்சிகள் எல்லாம் நன்றாக தெரிந்தன. தூரத்தில் ஒரு வாகனம் வருவது தெரிந்தது. அடுத்தகணம் வெறிபிடித்தலையும் ஜனங்களைக் கண்டுவிட்டு உடனேயே வந்தவழியாக திரும்பிப் போய்விட்டது. வீரப்பிரதாப வாார்த்தைகள் கேட்கத் தொடங்கின. அடுத்து சடார் மடார் என்று கண்ணாடிகள் உடைந்தன. கொள்ளை ஆரம்பமாகியது.

ஒரு வியாபார நிறுவனத்தின் கதவுகளை உடைத்துக் கொண்டு ஒரே நேரத்தில் இருபது முப்பது பேர் உள்ளே நுழைய முயன்றார்கள். எதை எடுப்பது

என்று தெரியாமல் பித்துப் பிடித்தவர்கள் போல அங்கேயும் இங்கேயுமாகப் பாய்ந் கொண்டிருந்தார்கள். ஒரே பொருள் பலபேர் கைளில் அகப்பட்டு அல்லாடியது. ஒரு பெட்டியை மற்றவர்களின் கைகளிலிருந்து பறித்தெடுத்து தனதாக்கிக் கொண்ட ஒருவர் அதை நிலத்தில் வைத்து அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார். கட்டுக்கட்டாகத் துணிகளை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு ஒருவன் ஓடத் தொடங்கினான். ஒரு துணிக் கட்டு அவிழ்ந்து பல பேருடைய கால்களுக்கடியில் மிதிபட்டு சேற்றிலும் சகதியிலும் புரண்டது. அவிழ்ந்த துணியைப் பிடித்து இழுத்து அந்தத் கட்டையே பறித்துக் கொள்ள எத்தனித்தான் ஒருவன். அவன் பலமாக இழுத்ததால் துணிக்கட்டை வைத்திருந்த மனிதனின் தலை திருகுப்பட்டது. தகரத்தில் அடைத்த உணவுப் பொருள்களை விற்கும் ஒரு கடையை உடைத்து உள்ளே புகுந்த ஆட்கள் எவ்வளவு எடுக்க முடியுமோ அவ்வளவு பொருள்களை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். ஜனங்கள் ஓடும் சத்தம் ஒருபக்கம். அலறல்கள் மறுபக்கம். சாபமிடும் குரல் , தூஷணவார்த்தைகள் என்று இத்தியாதி சத்தங்கள் எல்லாம் உடைந்து நொருங்கும் ஓசையில் அடங்கிவிட்டன. வகை வகையான பொருள்கள் தெருவில் நிரம்பி வழிந்தன. சாப்புச் சாமான்கள், மின்சார உபகரணங்கள், துணிமணிகள் உணவு வகைகள், டின் , போத்தல்கள் எல்லாம் தெருவெங்கும் வாரி இறைக்கப்பட்டுக் கிடந்தன. வெண்ணெய் கட்டிகள் குவிந்து கிடந்தன., இந்தக் குவியலில் கால் வைத்த ஒரு மனிதன் வழுக்கி விழுந்துவிட்டான். ஒருவன் எடுத்த பொருளை பறிப்பதற்கு நூறு கைகள் போட்டியிட்டன. ஒரு பொருளை எடுத்துக் கொண்டு ஜனங்களுக்கு அகப்படாமல் தப்பியோடிய கொள்ளைக்காரன் ஒருவன் கிளைப் பாதையோரமாகவோ தெருக்கோடியிலோ உட்கார்ந்து அவற்றை விற்கத் தொடங்கிவிட்டான். கொள்ளையில் பங்குபற்றாதவர்களும் நடுத்தர வகுப்பினரும் முண்டியடித்துக் கொண்டு இவற்றை விலைகொடுத்து வாங்கினார்கள். விலை கொடுத்தா? ஒன்று ஐம்பது ரூபாய் விற்ற ஒவல் டின் இப்பொழுது இரண்டு போத்தல்கள் பத்து ரூபாய்க்கு விலை போய்க் கொண்டிருந்தன. தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றின் விலை நூறு ரூபாய். சாமான்கள் கைமாறத் தொடங்கின. ஒருவர் கையிலிருந்த பொருள் ஒரு நொடிக்குள் மற்றவர் கைக்கு மாறிவிடும். கொள்ளைக்காரர்கள் கடைகளை மட்டுமா கொள்ளையடித்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளேயே கொள்ளையடிக்கவும் தொடங்கிவிட்டார்கள் இன்னுமொரு கடை உடைக்கப்பட்டது. அது பழம், குளிர்பானம் விற்கும் கடை, அங்கே புகுந்த கொள்ளைக்காரர்கள், பால் கட்டிகளை ( சீஸ்) தாராளமாக எடுத்துச் சாப்பிட்டார்கள்.குளிர்பானத்தையும் ஒரு கை பார்த்தார்கள். ஒரு கூடையை எடுப்பதற்கு நூற்றுக்கணக்கான கைகள் போட்டிபோட்டன. கடைசியில் அந்தக் கூடை பிளந்து சிதறி அதிலிருந்த அப்பிள்,

பழங்கள் எல்லாம் தெருவெங்கும் உருண்டு ஓடின. குளிர்பானம் தயாரிப்பதற்கென்று வைக்கப்பட்டிருந்த நன்றாகப் பழுத்து பதமான பழங்கள் எல்லாம் கால்களுக்கடியில் மிதிபட்டு நசுங்கிப் போய்விட்டது.

கொள்ளையடித்த பலசரக்குக் கடையிலிருந்து சாக்குகளைத் தோளில் சுமந்தவண்ணம் ஜனங்கள் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். சாக்கைச் சுமந்து போய்க் கொண்டிருந்த ஒருவனுடைய தோழுக்கு மேலாக பலபேருடைய கைகள் மொய்த்தன. அந்தச் சாக்கு கிழிந்து அதிலிருந்து கொத்தமல்லி வெளியே சிதறியது. அது கொத்தமல்லி சாக்கு என்று தெரிந்ததும் கூட்டத்தில் இருந்த ஒருவர் காறித்துப்பிவிட்டு ஏதேதோ தூஷணவார்த்தைகளை அள்ளிக் கொட்டினார். அந்த வார்த்தைகள் ஜனங்களின் பேச்சுக் குரலில் கலந்து மறைந்துவிட்டது. பருப்பு மூட்டையை சொந்தமாக்கிக் கொண்ட ஒருவன் தெருக்கோடியில் உட்கார்ந்து அதை செவ்விளநீர்க் கோம்பை ஒன்றினால் அளந்து விற்றுக்கொண்டிருந்தான்.

"ஜப்னா ஸ்டோர்ஸ்" என்ற பெயருடன் ஒரு பெரிய கடை அங்கே இருந்தது. அதையும் பகுதி பகுதியாகத் தகர்த்துக் கொண்டிருந்தார்கள். நன்றாக இறுக மடித்து மூடியிருந்த உருக்குக் கதவுகளை இரும்புத் தடிகளினால் அடித்து உடைத்தார்கள். டீ சேர்ட்டும், கட்டை காக்கி காற்சட்டையும் அணிந்த இளைஞர் கூட்டம் ஒன்று இந்தக் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருந்தது. இவர்களில் சிலர் கொள்ளைக்காரர்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்து நின்றார்கள். அடுத்தகணம் அந்தக் கடைக்கு எதிரில் நெருப்பு மூட்டப்பட்டது. கடையை உடைத்துக் கொண்டு நின்றவர்களும், மற்றவர்களும் நெருப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக விலகிச் சென்றுவிட்டார்கள். கடையை உடைத்து உள்ளே நுழைந்தவர்கள் சாமான்களை எடுத்து வெளியே வீசத் தொடங்கினார்கள். எதிர்ப்புறமாக சற்றுத் தூரத்தில் இளைஞர்கள் நிரையில் நின்று கொண்டிருந்தார்கள். இவர்கள் வெளியே எறியப்படும் சாமான்களை தலைக்கு மேலே உயர ஏந்தி நெருப்பில் போட்டார்கள். அந்தப் பொருள்களில் எதுவுமே எவருக்கும் கிடைக்கவில்லை. யானையின் இறைச்சியைப் பங்கு போடும் இடத்தில் தங்களுக்கு ஒரு துண்டு கிடைக்கவில்லையே என்று ஏங்கும் நரிக்கூட்டத்தின் கண்களைப் போல கொள்ளைக்காரர்களின் கண்கள் நெருப்பின் உக்கிரத்தால் ஜொலித்தன. உடலுக்கு ஊட்டம் தரும் உணவு வகைகள் எல்லாம் நெருப்பில் விழுந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தன. வெண்ணெய்க் கட்டிகள் நெருப்பில் விழவே தீ நாக்குகள் மேலும் பிரகாசமாக ஜுவலைவிட்டு எரிந்தன. சிலர் கட்டளை போட்டார்கள். தெருவில் நின்று கொண்டிருந்தவர்களுக்கு கடைக்குள்ளே என்ன

நடக்கிறது என்பது தெரியவில்லை. இளைஞர்கள் கால்களை பரப்பி மிகவும் சாவகாசமாக நின்றார்கள். இவர்கள் மிகவும் திடகாத்திரமானவர்களாகத் தென்பட்டார்கள். தலைக்கு மேலே கைகளை உயர்த்தி வரவர சாமான்களைத் தாங்கிக் கொண்டிருந்தனர். பிறகு அதையெல்லாம் நெருப்பில் போட்டார்கள். பேயோட்டும் சமயத்தில் இருப்பது போல வியர்வைத் துளிகள்அவர்கள் உடம்பில் உருண்டன. இரும்பை ஒத்த திரண்ட தசைகள் டீ சேர்ட்டின் கட்டைக் கைகள் வழியாகப் பிதுங்கி மடிந்தன.

வீதியின் நடுவே மூண்டு எழுந்த நெருப்புப் குவியலைப் பார் ககப் பார்க்க ஜனங்களுக்கு வெறிபிடித்தது. கடைகள் எங்கே உள்ளன என்று தேடித் தேடி நெருப்பு வைத்தார்கள். சீற்றம் பொங்கியது. இதைக் கண்டு அஞ்சிய போரா முஸ்லிம் , பறங்கி இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் கடைகளை மூடிவிட்டார்கள். இவர்களுக்குச் சொந்தமான சில கடைகளும் அக்கினிக்கு இரையாகின. ஜனங்களின் சீற்றம் இலக்கு மாறி எங்கெங்கோ போகத் தொடங்கிவிட்டது போலத் தெரிந்தது.

அரசாங்கப் பால் ஸ்டோசுக்கு சொந்தமான பெரியவாகனம் ஒன்று தெருவின் நடுவே மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. மந்த கதியில் வந்து கொண்டிருந்த வாகனத்தின் பின்புறத்தில் ஏறித் தொற்றிக் கொள்ளலாமா என்று ஜனங்கள் குறிபார்த்தார்கள். இதன் குளிரூட்டல் அறை ஒரு பெரிய பால்போத்தலின் உருவத்தில் அமைந்திருந்தது. அதுவும் வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்தது. பால் பண்டசாலையின் இலச்சினையும், அரசாங்க பால் பண்டசாலை என்ற எழுத்துக்களும் சிங்களம், தமிழ், ஆகிய மொழிகளில் விசாலமாக சிவப்பு நிறத்தில் எழுதப்பட்டிருந்தது. இலங்கை மக்களுக்கு சுவிட்சர்லாந்து நாட்டின் அன்பளிப்பு என்ற வாசகம் அதைவிடச் சற்று சிறிய ஆனால் தூரத்திலிருந்தும் வாசிக்கக் கூடியதான எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது.

கையில் நெருப்புக் கொள்ளியுடன் ஒருவன் தெருவில் நின்று கூச்சலிட்டான். வாகனத்தில் இருந்து இறங்கும்படி அவன் சாரதிக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். வாகனத்தில் ஏறி நின்ற ஜனங்கள் பால் போத்தர்லகளை நொருக்க ஆரம்பித்தார்கள். வாகனத்திலிருந்து எட்டிப்பார்த்து சாரதி வேகத்தை அதிகரிக்க எண்ணினான். ஜனங்கள் விலகி வழி விடுவார்கள் என்று அவன் நினைத்தான். ஆனால் ஜனங்கள் மேலும் மேலும் வந்து சேரத் தொடங்கினார்கள். சாரதி செய்வதறியாது திகைத்து நின்றான். கூட இருந்த உதவி ஆள் மாயமாக

மறைந்துவிட்டான்.

" நான் சிங்கள ஆள் தெரியல்லியா? " சாரதி கோபத்தில் பல்லை நெரித்துக் கொண்டு சொன்னான். தெருவில் நின்ற ஜனங்களுக்கு அவனுடைய வாய் அசைவு தெரிந்ததேயொழிய பேச்சுக்குரல்கேட்கவில்லை.

" இது அரசாங்கத்தின் வண்டி எனக்கு போக வழி விடுங்கடா." சாரதி அடித்தொண்டையில் கத்தினான். " நீ தொல்ல பண்ணப்போறியா? " கட்டிடங்கள் உடைந்து நொருங்கும் சத்தத்தையும் மீறி ஜனங்களின் அலறல் கேட்டது.

" உமக்கு தொல்ல கொடுக்கமாட்டோம் கூட்டோட கைலாசம் போகாம எறங்கும் ஓய்." போத்தலுக்கு மேலே கால்களை இரண்டு பக்கமும் பரப்பி உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன் சொன்னான்.

"வருஷக்கணக்கா நான் இதில வாழ்ந்துகிட்டு வர்ரேன். இந்த ஐஸ்பெட்டியில நூத்துக்கணக்கான கலன் பால் விடலாம். இதனோட பெறுமதிய சொல்லுறதுக்கு வார்த்தையே இல்ல. அண்ணன் தம்பிகளே கொஞ்சம் யோசன பண்ணி பாருங்க. இது எங்கட சொத்து .நாசமாக்கிடாதிங்கடா...." சாரதி கெஞ்சிக் கைகூப்பி மன்றாடினான்.

"எங்களுக்கு உபதேசமா பண்ணுறாய். இறங்கடா வேசி மவனே" ஒருவன் கத்தினான்.

" நிலை குலைந்துபோய் உட்கார்த்திருந்த சாரதி என்னையும் சேத்து எரிச்சிடுங்க. நான் எறங்கமாட்டேன்டா." என்றான். ஒருவன் வாகனத்தின் மறு பக்கத்தால் ஏறி சாரதிக்கு ஒரு உதைவிட்டான். அடுத்த கணம் சாரதி வெளியே தூக்கி எறியப்பட்டான்.

மல்லாந்து விழுந்து கிடந்த சாரதி " சகோதரர்களே இப்படி செய்யாதேங்கடா" என்று மார்பில் அடித்தபடி புலம்பினான். ஒருவன் வந்து அவனை அந்தப்பக்கமாக இழுத்துப்போட்டான். பால் போத்தலின் குழாய் திறக்கப்பட்டது. தண்ணீர்போல பால் பெருகி ஓடத் தொடங்கியது. ஜனங்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு இரண்டு கைகளாலும் பாலை ஏந்தி ஏந்தி குடிக்கத் தொடங்கினார்கள். ஒருவன் எங்கிருந்தோ ஒரு வாளியை எடுத்து வந்து குழாய் அடியில் பிடித்தான். பலருடைய பசியையும் தாகத்தையும் தீர்த்தபடி பால் வெள்ளம்

பாய்ந்து கொண்டிருந்தது. போத்தலில் இன்னும் பால் மிஞ்சியிருந்தது. பொறுமை இழந்த ஜனங்கள் இதையெல்லாம் எங்கே கவனித்தார்கள். கீழே நெருப்பு மூட்டிவிட்டார்கள். எண்ணெய் கிட்டங்கியிலிருந்து ஒருவன் எண்ணெய் எடுத்துவந்து போத்தலின் பின்புறத்தைக் குளிப்பாட்டிவிட்டான். வாகனம் மெல்ல மெல்லத் தீப்பிடிக்கத் தொடங்கியது. சாரதி விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

" இலங்கையில் நான் போகாதா இடமே கெடையாது. இருபத்தஞ்சு வருஷமா தமிழ் ஜனங்கள் வாழுற இடத்துக் கெல்லாம் போய் பால் சேத்துக்கிட்டு வந்திருக்கேன் " சாரதி பிரலாபித்தான்.

யாரோ அவனை ஏளனம் செய்தார்கள். வாகனம் நெருப்புப் பிடிக்கத் தொடங்கியதும் ஜனங்கள் மெல்ல மெல்ல அகன்று சென்றார்கள். சாரதி மட்டும் வாகனத்துக்கருகில் புலம்பிக் கொண்டிருந்தான். நேரம் வேகமாக உருண்டது போத்தல் மாபெரும் சத்தத்துடன் வெடித்தது.

ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பதாக செய்தி பரவியது. ஆனால் நகரமோ இன்னும் தீப்பிழம்புகளுக்கு இரையாகிக் கொண்டிருந்தது. தெருவெங்கும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததால் போக்குவரத்து சீர் குலைந்தது. தெருவில் நெருக்கடி அதிகரித்தது, பலரக வாகனங்கள் வீதியில் நிரம்பியிருந்தன. அவற்றின் "ஹார்ன்" சத்தம் காதைப் பிளந்தது. ஒரு மணித்தியாலத்துக்கு ஐந்து கிலோ மீட்டர் தூரம் போவதே பிரம்ம பிரயத்தனமாயிற்று. தெலபுவவைத் தாண்டிப் போகும் ரயில்வண்டியில் எள் போட்டால் விழாது அவ்வளவு ஜனக்கூட்டம்.

இந்த மாதிரி நேரங்களில் பஸ் பிரயாணம் ரொம்பவும் சிரமம். அதனால் தான் ஜனங்கள் புகையிரத்தில் தொற்றிக் கொண்டார்கள். ரயில் வண்டியின் கூரையிலும், படிகளிலும் "கார்ட்டின்" பெட்டியிலும் எங்கே பார்த்தாலும் மனித மயமாகக் காட்சியளித்தது. டிக்கட் வாங்கும்படி யாருமே எவரையும் வற்புறுத்தவில்லை. எவரும் டிக்கட் வாங்கியதாகவும் தெரியவில்லை. பிரயாணிகளின் மனதில் இனப்பற்று பொங்கி வழிந்தது. இனப்பற்றினால் உந்தப்பட்டு அவர்கள் பேசிய தூஷண வார்த்தைகளைக் கேட்கக்கேட்க பொறுமை எல்லை தாண்டி போய்விட்டது. அவர்களின் வியர்வை நாற்றம் அதைவிட ஒரு படி மேலே போய் பொறுமையைச் சோதித்தது.

நெருப்புக்கிரையாகிய வீடுகளையும், கடைகளையும் தாண்டி ரயில் முன்னால் ஓடிக் கொண்டிருந்தது. சல்கம வீடமைப்புத் திட்டமும் நாட்டு பற்றினால்

உந்தப்பட்ட ஆட்களுக்கு பலியாகிக் கொண்டிருந்ததாக ரயிலில் பேசிக் கொண்டார்கள்.

" சல்கமவில் தமிழ் ஆட்கள் எங்கே?"

"சிங்களவங்கள தவிர மத்த எல்லாரையும் அடிச்சாங்க யார் யார் என்னென்ன சாதிக்கிறத கண்டுபிடிக்க முடியல்ல. அவங்க எல்லோரும் ஒரே மாதிரிதான் எல்லாம் கலப்பு ஆட்கள். வெள்ளக்காரங்க போல இருக்காங்க."

" அப்படின்னா சிங்கள ஆளுங்களையும் அடிச்சிருப்பாங்களோ?. அங்கே சிங்களவங்க தான் ரொம்ப பேர்."

"இங்கே இருந்துகிட்டு ஐயோ பாவமின்னு இரக்கப்படுகிறவங்களுக்கு அங்கே சிங்கள ஆளுங்க அடிபடுறது நெனவில்ல" ஒருவன் முறைத்துப் பார்த்தபடி சொன்னான்.

ரங்கசாமிக்கு என்ன நடத்திருக்குமோ என்று எனக்கு ஒரே யோசனையாக இருந்தது. நான் அவனைப் பார்க்க ஓடினேன். ஆனால் வீடு பூட்டிக் கிடந்தது. வீதி விளக்குகள் எல்லாம் தகர்க்கப்பட்டிருந்தால் நகரம் இருளில் மூழ்கிக் கிடந்தது. மின்கடத்தல் இயந்திரத்தையும் உடைத்து நாசம்பண்ணி விட்டார்கள். ரங்கசாமி எங்கே போயிருப்பான். சாவித்திரி எங்களுடைய வீட்டுக்குப் போயிருப்பாள். இன்னும் சொற்ப நேரத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலாகிவிடும்.

எங்களுடைய வீட்டுக்கு ஒருவருமே வரவில்லை. எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

" பயப்படறதுக்கு ஒன்னுமே இல்லை" சுனேத்திரா சொன்னாள்.

" தெலபுவவில் ஒருத்தருக்கும் கஷ்டமில்ல. பொது உடைமைகளைத் தான் சேதம் பண்ணியிருக்காங்க. சல்கமவில வீடுகள எரிச்சிருக்காங்க. ஜனங்க போய்ப் பார்த்தாங்களாம்"

" ரொம்பச் சிரமப்பட்டு ஒரு தபால் கந்தோர இங்க எடுத்தோம். அதுவும் நாசமாப் போச்சு. முத்திரை ஏதாச்சும் வாங்க வேணுமின்னாத் தான் அவங்களுக்கு

தபால் கந்தோரோட அருமை தெரியுமுங்க. குளத்தோட கோவிச்சுகிட்டு குளிக்காம போன கதயாயிடுச்சு "கேள்விப்பட்ட சமாச்சாரங்களை விமர்சித்துக் கொண்டிருந்தான் பெமியானு.

சுனேத்திரா நேர காலத்தோடு ஒரு கலன் மண்ணெண்ணெய் வாங்கி வைத்திருந்தாள். நாங்கள் மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். கொல்லைப் புறக்கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சுனேத்திரா போய் எட்டிப் பார்த்தாள். அங்கே மேரி நின்று கொண்டிருந்தாள். " மேரி இந்த நேரத்தில எங்கே வந்தே?" மேரி ஒன்றும் பேசவில்லை. பக்கத்திலிருந்த வாழைப்புதர் பக்கமாகச் சைகை காட்டினாள். சுனேத்திரா கையிலிருந்த டார்ச் விளக்கை அணைத்துவிட்டு சாவித்திரியை வீட்டுக்குள் எடுத்தாள். "மேரி ரங்கசாமி எங்கே?" இருட்டில் போய்க் கொண்டிருந்த மேரியைத் தொடர்ந்து ஓடினேன்.

" ரங்கசாமி பிண அறையில " அவள் குரலைத் தாழ்த்தி சொன்னாள். " "என்ன ஆச்சு?"

" பிண அறையில ஒழிஞ்சிருக்கான். ஐயாவுக்கும் எங்கரெண்டு பேருக்கும் மட்டும் தான் இது தெரியுமுங்க" அவள் நடையைத் துரிதமாக்கினாள். ஒரு கணம் கூட தாமதிக்க அவள் விரும்பவில்லை.

"செல்லையா எங்கே?"

" செல்லையா கொழும்புக்கு போனவன் இன்னும் வரல்ல. சாவித்திரிகிட்ட கேட்டுகுங்க நான் போறேன் "

சாவித்திரி நிறைமாதக் கர்ப்பிணி , அவளுக்கு சீக்கிரமாகக் குழந்தை கிடைத்துவிடும். அவளால் ஒரு விபரமும் சொல்ல முடியவில்லை. பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

"சாவித்திரி எதுக்கு பயப்பிடனும். யாருக்கும் எந்தக் கஷ்டமும் இருக்காது" சுனேத்திரா சொன்னாள்.

"நான் கடைப்பக்கம் போனேன். கடை மூடினபடியே இருக்கு. பயப்படறதுக்கு

ஒண்ணுமே இல்ல எல்லாம் சரியாயிடும்" நான் அவளுக்க ஆறுதல் சொன்னேன்.

" செல்லையா எங்கேயோ தெரியாது ஐயா, சாவித்திரி துயரத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள். காலையில கொழும்புக்கு போனாரு. சாயந்தரம் வந்து ஏதாச்சும் செய்யலாமின்னாரு. அவர் வர்றதுக்கு மொதலே கொழப்பம் தொடங்கிடுச்சு"

" பஸ்சிலயா போனார்?"

"இல்லிங்க சாமான் கொண்டு வர்ற லொறியில ஏறி போனாருங்க" நான் நிம்மதியாக மூச்சுவிட்டேன்.

"அப்படின்னா எதுக்கு பயப்படனும்? யாராச்சும் தெரிஞ்சவங்க வீட்டில தங்கிடுவான். இல்லாட்டா லொறிக்காரங்க அவன பாத்துக்குவாங்க."
கொழும்பா இருந்தாலும் சாமான்களுக்குத் தான் சேதம். மனுசங்களுக்கு சேதம் இல்லியே."

தெலபுவவுக்கு சாமான் ஏற்றிவரும் லொறியில் போயிருந்தால் செல்லையாவுக்கு ஆபத்தில்லை என்பது உண்மை. ஆனால் உயிர்ச்சேதம் இல்லை என்று நான் சொன்னது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல ஒரு பொய். வெட்டுக்காயங்களுடன் தெருக்கோடியில் ஒரு பிணம் கிடந்தது. இதை நாங்கள் பார்த்தோம். அந்தப் பிரேதத்தை மேலும் இழிவு படுத்தும் எண்ணத்தோடு கொலையாளிகள் இரத்தம் தோய்ந்த சாரத்தை அகற்றினார்கள். அவனுடைய பிறப்புறுப்பிலிருந்து அந்த ஆள் ஒரு முஸ்லிம் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அடுத்த கணம் கொலைகாரக் கும்பல் மாயமாய் மறைந்து விட்டது. கல்லெறிக்கு இலக்காகிக் கலைந்து ,போன காகக் கூட்டத்தைப்போல அவர்கள் ஓடி மறைந்தார்கள்.

அவன் தமிழ் பேசும் ஒரு முஸ்லிம் ஆளாக இருக்கவேண்டும். ஜனங்களைக் கண்டு பயந்து ஓடியிருக்கிறான். கொலைகாரர்களின் கையில் அகப்பட்டு இறந்து போனான். இந்தச் சமாச்சாரம் எல்லாம் அவனுடைய உறவினர்களுக்குத் தெரியுமா? அவனுக்கும் ஒரு மனைவி உண்டு. அவள் கணவன் வரவை எதிர்பார்த்திருப்பாள். குழந்தைகள் தந்தையின் வரவுக்காக ஆவலுடன் காத்திருப்பார்கள். இப்பொழுது சாவித்திரியும் செல்லையாவுக்காக இப்படித்தான் வழிமேல் விழிவைத்துப்

பார்த்திருந்தாள்.

"செல்லையா வந்து விடுவாரான்னு பயமா இருக்கு. எங்களுக்கு என்ன ஆச்சின்னு பாக்க செல்லையா கட்டாயம் வருவார். அவர் மட்டும் தனியா ஒழிஞ்சுக்கமாட்டார்."

" இன்னிக்கு வந்தா போன லொறியில தான் வருவார். பிரேமசிரி மொதலாளி என்ன அந்நியரா? வர்ற வழியில ஏதாச்சும் தடங்கலோ என்னமோ. வந்தா மொதலாளி செல்லையாவ நேர கூட்டிக்கிட்டே தான் போவாரு. எதுக்கும் நான் காலையில போய் ஒரு வாட்டி பாத்திட்டு வந்திடறேன். சாவித்திரி கவலப்படாம இருக்கணும்."

சாவித்திரி பெருமூச்சு விட்டாள்.

" அப்பாவ பத்தி எனக்கு கவலை இல்ல. செல்லையாவ நெனச்சாத்தான் பயமா இருக்கு. செல்லையாக்கு ஒருத்தரையும் தெரியாதுங்க "

சாவித்திரியைத் தேற்றுவதற்காக நான் சொன்ன வார்த்தைகளாக இருந்தாலும் கூட அதில் நிறைய உண்மை இருந்தது.. பிரேமசிறி முதலாளி எப்படிப்பட்ட மனுஷன் என்பது ஊர் அறிந்தவிஷயம். அவர் தன்னுடைய உயிரைப் பணயம் வைத்தாவது தன்னோடு இருப்பவர்களை காப்பாற்றி விடுவார். செல்லையா பிரேமசிரி முதலாளியுடன் சென்றதாகக் கேள்விப்பட்ட பிறகு அவன் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறான் என்பது நிச்சயமாயிற்று.

# 19

காலையில் கடைகள் திறக்கும் நேரத்தில் சாமான்கள் ஏற்றத் தொடங்கிவிட்டார்கள். பிரேமசிரி முதலாளி உட்பட அனைவரும்அப்பொழுதுதான் குழப்ப நிலையை உணரத் தொடங்கினார்கள். லொறியில் செல்லையா படுத்துக் கொள்வதற்கு இடம் விட்டு சாமான்களை ஏற்றினார்கள். தெருவில் எங்கே பார்த்தாலும் ஒரே நெருக்கடி. இதனால் நினைத்த அளவு சீக்கிரமாக கொழும்பிலிருந்து புறப்பட முடியவில்லை.

வாகன நெருக்கடியால் போக்குவரத்து கஷ்டமாக இருந்தது. இதைவிட வேறு தடைகள் எதுவும் இல்லை. ஆனால் வழி நெடுக கலகக்காரர்கள் வாகனங்களை நிறுத்தி கேள்விமேல் கேள்வி கேட்டார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டும், வீதியில் எரியும் நெருப்பைத் தவிர்த்துக் கொண்டும் வண்டியை ஓட்டவேண்டியிருந்தது. இதனால் தெலபுவவுக்கு வந்து சேரும் பொழுது சாயந்தரமாகிவிட்டது. ரங்கசாமிக்கும் சாவித்திரிக்கும் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காதென்றும், செல்லையாவைத் தன்னுடன் வரும்படியும் பிரேமசிரி முதலாளி அழைத்தார். தெலபுவவில் நிலைமை எப்படி இருக்குமோ என்று தெரியாததால் செல்லையா பிரேமசிரி முதலாளியின் அழைப்புக்கு இணங்கினான். தெலபுவவுக்கு அருகாமையிலிருந்த சந்திக் கடைக்கு பொருட்களை விநியோகிப்பதற்கென லொறியை அங்கேநிறுத்தியபொழுது இருட்டத் தொடங்கியது.

தெலபுவவில் ஒருத்தருக்கும் பிரச்சினை இல்லை" வட்டக்கடை முதலாளி சொன்னார். இதைக்கேட்டதும் செல்லையாவின் மனச்சங்கடம் சற்றுத் தணிந்தது. ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால் வீதிகள் ஜனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. சாமான்களைநிறுத்து எடுத்துக்கொண்ட ஒருவர் பிரதான வீதி வழியாகப் போகாமல் ஒற்றையடிப் பாதையொன்றில் திரும்பி நடந்தார்.

முதலாளியின் வீடு கடைக்குப் பின்புறமாகத் தான் இருந்தது. இதனால் லொறியை நேரடியாக அங்கே கொண்டுபோய் நிறுத்தினார்கள். பிரேமசிரி முதலாளிக்குத் தேநீர் குடிக்கவேண்டும்போல இருந்தது. அவர் தேநீர் கேட்கப்போய் செல்லையா உட்பட எல்லோருக்கும் தேநீர் பரிமாறப்பட்டது.

தேநீர் கோப்பையைக் கையிலெடுத்த பிரேமசிரி முதலாளி " இன்னைக்குப் பொழுதுக்கே ஒன்னும் கெடையாது காலையில் வீட்டில் சாப்பிட்டதோட சரி. இதில புதுமை என்ன தெரியுமா? இந்தத் தேத்தண்ணிக் கோப்பையை கையில எடுக்கிற வரைக்கும் சாப்பாடுஇல்லாம இருக்கிறோமேங்கிற நினைப்பே இல்ல. கொழும்பில கலகக்காரங்க எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டாங்க. இங்கேயும் அப்படி இருக்குமோன்னு நாங்க நெனச்சோம்." என்றார். முதலாளி மேலங்கியைக் கழற்றி கையில் ஏந்தியபடி சேர்ட்டின் ஒன்று இரண்டு பொத்தான்களையும் அவிழ்த்து விட்டார். வட்டக்கடை முதலாளி கதவுப் பலகைகளைக் காட்டிச் சேவகனுக்கு எதோ சொன்னார். ராணுவத்தினரின் வாகனம் வந்தால் ஏச்சுபேச்சு பயமுறுத்தல்கள் இருக்கும் என்ற பயத்தில் அந்த ஊழியன் அவசர அவசரமாக வேலைகளை முடித்தான்.

"தெலபுவவில் அதிகம் குழப்பம் இல்லை போல தெரியுதே" பிரேமசிரி முதலாளி வட்டக்கடை முதலாளியைப் பார்த்துக் கேட்டார். " அப்படி சொல்ல முடியாது. வழி நெடுக வீதி நடுவில டயர்கள் போட்டு எரிக்கிறாங்க. மூச்சுவிட ரொம்ப கஷ்டமா இருந்திச்சு. அவ்வளவு புகை. நெருப்பு கொஞ்சம் தணிந்துகிட்டு போற நேரமா பாத்து சில போக்கிரிபசங்க ஒரு பஸ்சில ஏறி வந்து டிரான்ஸ்போமருக்கு நெருப்பு வச்சாங்க. அதுக்கப்புறம் தபால் கந்தோருக்கும் தீ மூட்டிட்டாங்க.

" பெரிய அநியாயம் "

" அதுதானே. காவாலிப் பசங்க. கண்ட கண்ட இடத்தில நெருப்பு வச்சுக்கிட்டே போற போக்கிரிங்க "

இந்த விபரங்களையெல்லாம் முதலாளி லொறிக்கு அருகில் வந்து சொல்லிக் கொண்டிருந்ததால் செல்லையாவுக்கு நல்ல தெளிவாகக் கேட்டது. இதனால் அவனுடையமனம் ஆறுதல் அடைந்தது. வேறு எவருக்கும் எந்தக் கஷ்டமும் நேரவில்லை என்று கேள்விப்பட்டதும் அவன் எண்ணம் திசைதிரும்பியது.

தன்னுடைய கடையை விட்டு ஓடிவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த செல்லையாவுக்கு இப்பொழுது கடையை ஒரு தடவை பார்த்துவிடவேண்டும் என்ற ஆசை மனதில் துளிர்விடத் தொடங்கியது. இதுவரை ஒன்றும் நடக்கவில்லை என்றால் இனியும் எதுவும் நடக்காது. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் கலகக்காரர்கள் ஒருவரையும் வீதியில் காணவில்லை. இராணுவ வாகனங்களின் சஞ்சாரம் தொடங்கிவிட்டது. தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. லொறி மீண்டும் புறப்படுவதற்கு முன் செல்லையா சாளரத்தின் வழியாக எட்டிப் பார்த்து முதலாளியிடம்

"முதலாளி நான் வீட்டுக்குப் போகனுங்க"

"ஒனக்கென்ன பயித்தியமா பிடிச்சிருக்கு. இந்த கொழப்பத்துக்கு மத்தியில எங்க போறது. காலையில வந்து பாத்துக்கலாம் என்னோட வந்திடு.

"கலவரம் ஒன்னும் இல்லேன்னு சொன்னாங்க தானே முதலாளி. என்னோட பொண்டாட்டிக்கு கொழந்த கெடைக்க இருக்குங்க. எனக்கு ஏதாச்சும் ஆயிடிச்சோன்னு பயந்துகிட்டு இருப்பா. பகலைக்கு எங்கேயாச்சும் போயிட்டு ராத்திரிக்கு வீட்டுக்கு வரலாம். ஊரடங்கு சட்டம் போட்டுட்டாங்க இல்லியா இப்ப வருவாங்கன்னு பாத்திகிட்டிருப்பா."

" நான் உன்னை பத்திரமா பாத்துக்கிறேன்னு ரங்கசாமி நெனச்சுக்கிட்டு இருப்பான். அந்த மனுஷங்களுக்கு உம்மயப் பத்தி பயமே இருக்காது. செல்லையா மத்தது ஒங்கட கடை பூட்டிக் கெடக்கு. அவங்க எங்கேயாச்சும் போய் பத்திரமா இருப்பாங்க."

" எனக்கு வீட்டுக்குப் போகனும் போல இருக்குங்க."

" தன்னுடைய அன்புக்குப் பாத்திரமானவர்களின் உயிருக்குச் சேதம் ஏற்பட்டிருக்குமோ என்று இவ்வளவு நேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த செல்லையா தெலபுவவில் கஷ்டம் எதுவும் இல்லை என்று கேள்விப்பட்ட பின்னர் தன்னுடைய வீட்டுக்கும் உடைமைகளுக்கும் என்ன ஆகியிருக்குமோ என்று சிந்திக்க தொடங்கினான். உயிர் மேல் ஆசைப்பட்ட அவன் மனம் இப்பொழுது பொருள் மேல் ஆசை வைக்கத் தொடங்கியது. ரங்கசாமியும் சாவித்திரியும் வீட்டில் இல்லை என்பதும் அவர்கள் பாதுகாப்புத்தேடி வேறு இடம் சென்றுவிட்டார்கள்

என்பதும், இரவு வரமாட்டார்கள் என்பதும் செல்லையா நன்கு அறிந்த விஷயம். தெருவில் ஜனநடமாட்டமே இல்லை. இதனால் யாருக்குமே தெரியாமல் வீட்டுக்குள் நுழைந்துவிடலாம். ஊரடங்குச்சட்டம் அமுலாகியதும் இராணுவ வாகனங்கள் சஞ்சரிக்கத் தொடங்கிவிடும். இரவு வேளை பாதுகாப்பாக படை வீரர்கள் ரோந்து சுற்றிக் கொண்டிருப்பார்கள். தான் சந்தடியின்றி இரவை வீட்டில் கழித்துவிடலாம். காலையில் ஜுவானிசின் வீட்டுக்குப் போய் அவர்களுடன் பேசி சொந்தக்காரர்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம். அதற்குப் பிறகு எது உசிதமோ அதைச் செய்யலாம்.

"கடைகள் எல்லாம்மூடியிருக்கிறதால நாங்க சந்தியில நிப்பாட்ட மாட்டோம். நேர போகலாமின்னு இருக்கோம்" ஊரடங்குச் சட்டத்த தளர்த்திட்டாங்கன்னா காலையில சாமான்கள இறக்கலாம்" செல்லையா எண்ணத்தை மாற்றிக் கொண்டு தங்களோடு போவதற்குப் புறப்படுவான் என்று எதிர்பார்த்தே பிரேமசிரி முதலாளி இப்படிச் சொன்னார்.

"முதலாளி எனக்கு வீட்டுக்குப் போகனும் போல இருக்குங்க" செல்லையா தலைமையச் சொறிந்தபடி கெஞ்சிக்கேட்டான்.

" நீர் சந்தியில எறங்கினாலும் நடந்து போகனும் இல்லியா. அப்போ ஆளுங்க பாப்பாங்களே. நீர் என்னோட வர்றதுதான் நல்லது. இப்ப ஏதோ கொஞ்சம் அமைதியாயிருக்கு.ஆனா ஜனங்களோட கோவம் நெருப்பு மாதிரி எரிஞ்சுகிட்டு இருக்கு. இன்னும் அது சரியா அணையல்ல. உம்மைக் கண்டா அவங்க ஆவேசமாயிடுவாங்க. நீர் செய்யப் போறது நல்லதுக்கில்ல."

" நான் சந்தி வர்றதுக்கு முன்னாடியே எறங்கி வயல் ஓரமா நடந்து போயிடுறேன். அந்தப் பாதையில ஜனங்க இருக்க மாட்டாங்க. குளிக்கிற கிணறு இருக்கே அதத் தாண்டி பின் பக்கமாக கம்பி வேலிய கடந்து போயிடலாம். யாருமே பாக்கமாட்டாங்க. தூரத்தில பாத்து என்னய அடையாளம் கண்டுக்க முடியாது. அதோட இப்ப இருட்டாகிப் போச்சு"

இனி உம்மோட இஷ்டம். எது வேணாலும் செய்துக்கலாம் செல்லையா. ஏதோ எனக்குப் பட்டத சொல்லிட்டேன். நீர் கேட்கமாட்டீர்" முதலாளி பொறுமையை இழந்து இப்படிச் சொன்னார்.

"நீர் எங்களோட வர்றதுதான் எனக்கு நல்லதா தெரியுது"

"மொதலாளி ஐயா நான் வீட்டுக்கு போறேனுங்க."

" சரி சுவாரிஸ் வண்டிய அந்த ஓரமா கொஞ்சம் நிறுத்து " பிரேமசிரி முதலாளி சாரதியின் பக்கமாகக் கையை நீட்டிச் சொன்னார்.

" நான் மறுபடியும் சொல்றேன் செல்லையா. நீர் உம்மட இஷ்டம் போலத் தானே செய்யப் போறீர். நீர் எங்களோட வர்றது தான் எனக்கு விருப்பம்"

கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒருவரையும் காணவில்லை. செல்லையா வயல் வெளியில் இறங்கி நடந்தான். சாதாரண நாட்களிலேயே இந்தப் பாதையில் அதிக ஜனநடமாட்டம் இருப்பதில்லை. இது செல்லையாவுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் தான் தனக்கு தேவைக்கு அதிகமாகவே பாதுகாப்பு உண்டு என்று நினைத்தான். சாவித்திரியும் ரங்கசாமியும் உதவி நாடி எங்கேயாவது போயிருப்பார்கள். ராத்திரிப் பொழுதைக் கடையில் கழித்துவிட்டு காலையில் ஜுவானிசை சந்தித்து மேற்கொண்டு செய்யவேண்டியதைப் பற்றி பேசிக் கொள்ளலாம் என்று நினைத்தான். வயலுக்கு அருகாமையில் கடைவீதியை நோக்கிக் குறுக்காக ஒரு ஒற்றையடிப்பாதை. *இது யாரோ ஒரு சிறிய நிலச்* சொந்தக்காரருக்கு சொந்தமான காணிக்குள் சென்றது. இந்தப் பாதை முடியும் இடத்தில் விஜித்தின் காணி இருந்தது. இது முள்ளுக்கம்பியால் வேலி இட்டு நன்றாக அடைக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் சாவித்திரியையும் அழைத்துக்கொண்டு லட்சுமி இந்த ஒற்றையடிப் பாதைவழியாகத்தான் குளிக்கப்போவாள். செல்லையாவுக்கும் இது நன்றாகத் தெரியும். ரங்கசாமி நிலத்தை விற்கமறுத்த ஆரம்பகாலத்திலேயே விஜித் கம்பிவேலி போட்டு இதை அடைத்துவிட்டான். செல்லையா ரொம்ப சிரமத்தோடு அந்த முள்ளுக்கம்பி வேலிகள் இரண்டையும் கடந்துவிட்டான். நல்ல கூரான ஒரு முள்ளுக்கம்பி செல்லையாவின் சட்டையையும் பெனியனையும் பதம்பார்த்ததோடு நிற்காமல் அவனுடைய முதுகுத் தோலையும் குத்திக் கிழித்தது.

மின்சாரம் இல்லாததால் எங்கும் பயங்கர இருள் சூழ்ந்திருந்தது. செல்லையா வீட்டின் கொல்லைப் புறக்கதவில் கைவைத்தான். கதவு கெட்டியாகப் பூட்டப்பட்டிருக்கவில்லை என்பது தெரிந்தது. மேலாகச் சாத்தியிருந்தார்கள். கதவில் கைபட்டதுதான் தாமதம் சத்தம் போடாமல் திறந்து கொண்டது. செல்லையா உள்ளே நுழைந்த மறுகணம் அது மீண்டும் பழையபடி மூடிக்கொண்டது. செல்லையா இருளில் தட்டுத்தடுமாறியபடி வீட்டுக்குள் நடந்தான். எடுத்து

வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு சாமான் தட்டுப்பட்டது. வீடு தாறுமாறாகக் கிடக்கிறதென்பதை அறிந்து கொள்ள செல்லையாவுக்கு அதிக நேரம் ஆகவில்லை. தட்டுத்தடுமாறி ஒருவாறு அறைக்குள் நுழைந்துவிட்டான். ஆற அமர கட்டிலில் உட்கார்ந்த செல்லையாவுக்கு வழக்கமாக அதில் உட்காரும் பொழுது இருக்கும் சுகம் தெரியவில்லை. அதற்குக் காரணம் மெத்தை இரண்டாக மடிக்கப்பட்டிருந்தது தான். அவன் கைகளால் கட்டிலைத் தடவினான். கட்டிலின் சட்டத்தோடு மெத்தையின் ஓரமாக இருந்த டார்ச் விளக்கு அவன் கைகளுக்கு அகப்பட்டது. அதன் பட்டரிகள் மாற்றப்படவேண்டியிருந்தது. மின்மினிப் பூச்சிகளிலிருந்து வெளியாகும் ஒளியைவிட பெரிதாக வெளிச்சம் எதுவும் அதிலிருந்து வராது என்பது அவனுக்குத் தெரியும், இருந்தும் அதன் விசையைத் தட்டி விட்டுப் பார்ப்பதற்கு அவனுக்கு தைரியம் வரவில்லை. வீட்டைக் கொள்ளையடித்து விட்டார்களோ என்று நினைத்தான். இப்பொழுதுகூட கொள்ளைக்காரர்கள் வீட்டுக்குள் பதுங்கியிருக்கிறார்களோ தெரியாது. பிரேமசிரி முதலாளியுடன் போகாமல் விட்டது தான் செய்தபெரிய முட்டாள்த்தனம் என்பதை செல்லையா முதன் முதலாக அப்பொழுது தான் உணர்ந்தான்.

கையில் எடுத்த டார்ச் விளக்கை அழுத்திப் பார்க்கலாமா என்று நீண்ட நேரம் யோசித்த பின்னர் ஒரு முடிவுக்கு வந்தான். தங்களிருவருடைய படுக்கை அறையை முதலில் சோதனைபோட்டான். அறை முழுவதும் சாமான்கள் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன. தப்பி ஓடிப்போக எத்தனித்த ரங்கசாமியோ சாவித்திரியோ இப்படி சாமான்களை வாரி இறைத்துப் போட்டிருக்கமாட்டார்கள். என்பது இப்பொழுது நிச்சயமாகிவிட்டது. சட்டையைக் கழற்றி அதிலிருந்த ரகசிய பாக்கெட்டைக் கைகளால் துளாவினான். அதனுள் இருந்த பொட்டலம் கைக்கு அகப்பட்டது. அதைத் தடவிப் பார்த்த பிறகு அவன் மனம் சற்று ஆறுதலடைந்தது. இருட்டை நோக்கி மர்மமாகச் சிரித்தான் செல்லையா.

அறை முழுவதையும் சல்லடை போட்டுத் தேடிய பின்னர் சந்தேகம் தீர்ந்துவிட்டது. வீடு முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக நடக்கலானான். டோர்ச் விளக்கின் மங்கிய ஒளியில் ஒன்றுமே தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் மறைத்து வைக்கப்பட்ட பொருளைத் தேடி யாரோ பைத்தியமாக அங்கே அலைந்திருக்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது. பழைய பத்திரிகைகளையும் சாக்குக் கட்டுகளையும் கூட பிரித்து உதறிப் பார்த்திருக்கிறார்கள். பகல் வேளையில் திருடர்கள் புகுந்து இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்று செல்லையா நினைத்திருந்தான். சுற்றுப் புறம் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது.

செல்லையா டார்ச் வெளிச்சத்தில் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். இன்னும் ஒன்பது மணி கூட ஆகவில்லை. இரவில் பாதையைத் தங்குமிடமாக்கிக் கொள்ளும் நாய்கள் அன்று ஜனசந்தடி இல்லாமல் போகவே, நேரத்தோடு வந்துவிட்டன. நாய்களின் சண்டைச் சத்தம் தெருவின் அமைதியைக் குலைத்தது.. இடைகிடை ஒரு ராணுவ வாகனம் அந்த வழியாகப் போகும். அந்தச் சத்தத்தைக் கேட்டு செல்லையாவின் மனம் சற்று ஆறுதலடையும்.

அதிகாலையில் குடித்த தேநீரையும் வட்டக்கடை முதலாளி கொடுத்த தேநீரையும் தவிர பொழுதுக்கே சாப்பிடாத செல்லையாவைப் பசி வாட்டியது. நாள் முழுவதும் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தானே தவிர பசி தாகம் எதுவுமே தெரியவில்லை. வட்டக்கடை முதலாளியின் தேநீர் வயிற்றில் இறங்கியதும் பெட்றோல் விட்டதும் நெருப்பு எப்படி ஜீவாலை விட்டு எரியுமோ அப்படி அகோரப்பசி கிளம்பியது. இடிபாடுகளுக்கு மத்தியில் செல்லையா ஒருவாறு தட்டுத் தடுமாறி சமையல் கட்டுக்குள் நுழைந்தான். அங்கே சட்டிபானைகளைத் தடவிப் பார்த்தான். சோறு ஆக்கிய பானையில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டிருந்தது. வேறு இரண்டு வெற்றுச் சட்டிகளும் இருந்தன. சாவித்திரியும் ரங்கசாமியும் அதிகாலையிலே புறப்பட்டுப் போயிருக்க வேண்டும். அந்தச் சட்டி பானைகள் எல்லாம் இரவு சமையல் செய்தவை.

கர்ப்பமாயிருந்த சாவித்திரி இரவு வேளையில் பசி எடுத்தால் சாப்பிடுவதற்கென்று ஒரு சின்ன விஸ்கோத்துப் பெட்டி வாங்கி வைத்திருந்தாள். அதில் மிஞ்சியிருந்ததை செல்லையா சாப்பிட்டுத் தீர்த்தான். அரைவயிறு நிரம்பியது. மீதி அரைவயிற்றை குளிர்ந்த ஜலம் விட்டு நிரப்பிக் கொண்டான். மடித்து வைத்திருந்த மெத்தையை விரிக்காமலே அதற்கு மேல் ஏறி உட்கார்ந்து சுவரில் சாய்ந்தான். நாளை எப்படி இருக்குமோ என்று அவனால் எண்ணிப்பார்க்க முடியவில்ல. கழிந்து போன இன்றைய பொழுதைப் பற்றி சிந்திக்கலானான். எங்கிருந்தோ ஒரு நாய் குரைக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து நாய்க் கூட்டமே அதற்குப் பக்கப் பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டன. நாய்களின் கூச்சல் தெருவின் அமைதியைக் குலைத்தது. இந்த நாய்த்தொல்லை செல்லையாவுக்கு ஒரு வழியில் அமைதியைக் கொடுத்தது என்று தான் சொல்ல வேண்டும்.

யாரோ ஒருவர் வீட்டுக்குள் நுழைந்தார். டார்ச் விளக்கு ஒருகணம் எரிந்தது. உடனே அணைந்தும் விட்டது. செல்லையா மெத்தையிலிருந்து வழுக்கி கட்டில் சட்டத்துக்கும் கட்டிலுக்கும் நடுவில் நிலத்தில் ஒருக்களித்து உட்கார்ந்து விட்டான்.

பாரமான ஏதோ ஒரு பொருள் நிலத்தில் கிடந்தது. அது ஒரு ஆயுதம்! வந்தது ஒருவன் அல்ல இரண்டுபேர் என்பது செல்லையாவுக்குத் தெரிந்தது.

"ரங்கா வீட்டுள்ளே நொளஞ்சிட்டானோ தெரியாது" ஒருவன் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டே டார்ச்சின் விசையை அழுத்தினான். இதையெல்லாம் அறையில் இருந்த செல்லையா பார்த்தான். வந்தவர்கள் இருவரும் வீட்டுக்குள் நுழைந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அடுக்களையில் என்ன செய்கிறார்கள். செல்லையாவுக்கு பயமாக இருந்தது. அதே நேரம் அவன் மனம் ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டது. இரும்பு ஆயுதத்தால் நிலத்தைத் தோண்டும் சத்தம் கேட்டது. எலி எதையாவது வெட்டும் பொழுது அல்லது தோண்டும் பொழுது எப்படி சத்தம் கேட்குமோ அப்படியான ஒரு சத்தம்தான் அது. செல்லையா கட்டில் சட்டத்துக்கு நேரேயிருந்த கதவு இடுக்கின் வழியாக எட்டிப் பாத்தான். ஆனால் ஒன்றுமே தெரியவில்லை.

"சத்தம் வருது. தண்ணி கொஞ்சம் ஊத்து" ஒருவன் முணு முணுத்தான். டார்ச் விளக்கு மீண்டும் எரிந்தது. உடனேயே அணைந்தும் விட்டது. ஒருவன் குடத்தைத் தூக்கி மெதுவாகச் சரித்தான். "மெல்ல சத்தம் போடாதே அந்தப் பக்கம் பாதுகாப்பு படை ஆளுங்க இருக்காங்க"

அப்பொழுது தான் விஜித்தின் பாதுகாப்புச் சேவைபற்றி செல்லையாவுக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பிரதேசமே வெறிச்சோடிக் கிடந்தது. அவர்களுக்கு என்ன ஆகியிருக்கும்?

"இன்னிக்கு யாரும் வரமாட்டாங்க. அவங்களுக்கும் இன்னிக்கு தேடிக் கொண்டாத்தான் உண்டு. கொள்ளையடிக்க போன எடத்தில் ஊரடங்கில் மாட்டிக்கிட்டாங்க போல இருக்கு"

அந்தப் பேச்சுக் குரல்கள் செல்லையாவுக்கு நன்கு பழக்கமானவை. அவர்கள் யாராயிருக்கலாம் என்று செல்லையா கண்டுபிடிக்க எத்தனித்தான். அவர்கள் யார் என்று அடையாளம் கண்டதும் செல்லையாவின் கண்கள் இருட்டில் தீப்பிழம்பாக ஜொலித்தன.

"இந்த எடத்தில ஒன்னும் இல்ல" தோண்டிக் கொண்டிருந்தவன் களைத்துப்போய் அலுப்போடு சொன்னான்.

"எங்கே இப்படி கொடு பாக்கலாம்" இது மற்றவனுடைய குரல்.

"முழு வீட்டிலேயும் இதில் மட்டும் தான் மண் தரை. இங்க இல்லாம போகாது. பகல்ல வந்து வீட்டையே புரட்டிப் பாத்தாச்சு. ஒண்ணுமே அகப்படல்ல."

நாய் ஒன்று ஊளையிட்டது. தூரத்தில் ஒரு வாகனம் வரும் சத்தம் கேட்டது. வாகன சத்தத்தின் மத்தியில் தோண்டும் காரியம் இன்னும் வேகமாக நடந்து கொண்டிருந்ததை செல்லையா கவனித்தான். வாகனம் சந்தியை நெருங்கியதும் தோண்டல் நின்றது. முதலில் ஊளையிடத் தொடங்கிய நாயுடன் மற்ற நாய்களும் சேர்ந்து கோஷ்டியாக ஊளையிட்டன. நாய்கள் குரைத்தபடி பாதையின் இரண்டு பக்கத்துக்கும் பிரிந்து சென்றன. பல்லி ஒன்று "சுக்: "சுக்:" என்று சத்தம் போட்டது. இந்தச் சத்தத்தைக் கேட்டு செல்லையாவின் மனம் பதறியது. இன்னும் ஒரு கணத்தில் வாகனம் சந்தியைக் கடந்து விடும். வாகனத்தில் இருப்பவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்களானால் திருடர்கள் அகப்பட்டுவிடுவார்கள்.

தான் கூச்சலிட்டு திருடர்களைப் பிடித்துக் கொடுத்து விடலாம். ஆனால் தன்னுடைய குரல் வாகனத்தில் இருப்பவர்களுக்குக் கேட்கும் என்பது என்ன நிச்சயம் என்று செல்லையா நினைத்தான். அவனுக்குத் தொண்டை வரண்டுவிட்டது. அவன் கூச்சல் இடுவதாவது. அவனால் வாயே திறக்க முடியவில்லை. வாகனம் மெல்ல மெல்ல சந்தியைக் கடந்து சல்கமவுக்குப் போகும் பாதையில் திரும்பியது. கடைவீதி தாண்டியதும் அந்த வாகனம் சல்கம நோக்கி வாயு வேகத்தில் ஓடத் தொடங்கியது. மறுபடி கொல்லைப் புறத்தில் தோண்டும் வேலை ஆரம்பமாகியது.

"அவங்க இன்னும் இருக்காங்க" செல்லையா மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

"ஜீப்பை திருப்பினாங்க இல்லியா. என்னோட ஒடம்பில இரத்தமெல்லாம் ஒறஞ்சு போச்சுடா" ஒருவன் முன்னயதை விடக் குரலைத் தாழ்த்தி சொன்னான்.

"இங்க ஒன்னுமே இல்ல. வாடா போயிடுவோம். அவங்க மறுபடி வர்றதுக்கு முன்னாடி."

"இங்க இல்லாட்டா வேற எங்கேயும் இருக்க வழியில்ல. எங்கே அதை இந்தப்

பக்கம் கொடு, ரங்கனுக்கு வங்கியில் பணம் போடுற பழக்கமே இல்ல. இன்னும் கொஞ்சம் தண்ணி ஊத்துடா. நான் தோண்டுறேன்.

"அப்படின்னா குறுக்கால தோண்டி பாக்கலாமா?" மீண்டும்தோண்டல் ஆரம்பமாயிற்று. சிறிது நேரத்தில் அந்த இரும்பு ஆயுதம் டின்னில் பட்டு சத்தம் கேட்டது.

"அப்பாடா நான் சொன்னனா இல்லியா?" ஒருகணம் தோண்டல் நின்றது. "இன்னும் இருக்கும். இன்னும் கொஞ்சம் பாக்கலாமா?

சற்று முன் எல்லாவற்றையும் கைவிட்டுப் போய்விடலாம் என்று சொன்ன அதே குரல் தான் இப்பொழுது கேட்டது.

"அவ்வளவு தாண்டா. ரெண்டர றாத்தல் லக்ஸ்பிறே டின் உள்ளே ஒழிச்சு வெச்சிருக்கான். எந்தத் தமிழன்டா அதே எடத்தில இன்னும் எதயாச்சும் ஒழிக்கப் போறான்?" மற்றவனின் அட்டகாசச் சிரிப்பு செல்லையாவுக்குக் கேட்டது.

மீண்டும் டார்ச்சை வீட்டுக்குள்ளே குறிபார்த்துப் பிடித்தார்கள். இதைக் கவனித்த செல்லையா இன்னும் கூனி குறுகிக் கொண்டான்.

"கையோட மத்த வேலையையும் செய்திடுவமா?"

"அதுக்கு இன்னும் கொஞ்சம் ராவாகட்டுமே. அக்கம் பக்கத்தில இருந்து ஜனங்க வந்தாங்களோ நம்ம காரியம் அதோ கதிதான். சரி வாடா போகலாம். நான் ரங்கனோட வங்கிய எடுத்துக்கிறேன். நீ முன்னால நட" தோண்டும் முயற்சியைக் கைவிடாதே என்று சொன்ன திருடனின் குரல் தான் இது.

"அந்த மத்த வேலை எப்ப?"

"ரயில் பாதையில் இறங்கி ஒரு போத்தல் அடிச்சிட்டு அப்புறமா பாக்கலாம். நேரமும் சரியாயிடும்"

அவர்கள் இரவில் சஞ்சரிக்கும் பேய் போன்றவர்கள் என்பது செல்லையாவுக்குப் புரிந்தது. அவர்கள் பேசிக் கொண்ட அந்த "மற்ற வேலையும்" நிச்சயமாகக் களவாகத்தான் இருக்குமென செல்லையா நினைத்தான். ஆனால்

கடிகாரத்தைப் பார்த்ததும் அவனுக்கே வியப்பாக இருந்தது. சுமார் இருபது நிமிஷம் கழிந்தது. செல்லையா எழுந்து சமையல் கட்டை எட்டிப் பார்த்தான். ரங்கசாமி சாவித்திரிக்காக் கட்டிக் கொடுத்த அடுப்பும் திண்ணையும் உடைந்து போய் கிடந்தன. இதற்கு முன் என்றுமே ஏற்பட்டிராத கருணையும் இரக்கமும் தன்னுடைய மாமனார் மேல் செல்லையாவுக்கு உண்டாகியது.

குடத்தில் மிஞ்சியிருந்த தண்ணீரைக் குடித்துவிட்டு சாக்குக்கு மேலே படுத்துக் கொண்டான் செல்லையா. தான் அநாதையாகிவிட்டதாக ஓர் எண்ணம் அவனுள். ரங்கசாமியிடம் வந்து சிரித்துப் பேசும் இந்த ஜனங்கள் இப்படி ஒரு காரியத்தைச் செய்வார்கள் என்று நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. தான் இதையெல்லாம் கவனித்தது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது. குழப்பம் எல்லாம் முடிந்தபிறகு அவர்கள் ரங்கசாமியிடம் வந்து நடந்துபோன அநர்த்தங்களுக்காக தலையில் கையை வைத்து துக்கம் விசாரிக்கப் போகிறார்கள். தாங்கள் இதைக் கண்டு ஆச்சரியப்படுவதாகவும் காட்டிக் கொள்ளப் போகிறார்கள். கடந்த சில நாட்களாக செல்லையாவின் மனம் பயத்தாலும், சந்தேகத்தாலும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது தான் இதற்கெல்லாம் பழக்கப்பட்டு விட்டதாக செல்லையா நினைத்தான். அவனுடைய கவலையெல்லாம் சாவித்திரியைப் பற்றித்தான். அவள் தன்னை எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பாள். கர்ப்பிணி தாயான சாவித்திரி பயந்து கொண்டிருக்கிறாள் என்று நினைக்கவே செல்லையாவின் மனம் வெடித்துச் சுக்கு நூறாகியது. திடீரென்று அவனுக்கு தெய்வங்களின் ஞாபகம் வந்தது. சாக்குக் கட்டுகளுக்கு மேலே சுவரில் தெய்வங்களின் படங்கள் தொங்கின. செல்லையாவும் குடும்பத்தவர்களும் அந்த தெய்வ உருவங்களுக்கு மலர் சூட்டி விளக்கேற்றி சந்தனப் பொட்டிட்டு வணங்கிய காலமும் ஒன்று இருந்தது. முருகப் பெருமான், விநாயகர், லஷ்மி, சரஸ்வதி இந்தத் தெய்வங்களை எல்லாம் ஒருநாளும் இப்படி இருட்டில் வைத்ததில்லையே. என்று செல்லையா நினைத்தான். அவர்கள் இருட்டில் இருந்தாலும் தன்னைக் காப்பாற்றி விட்டார்கள். திருடர்கள் கையில் அகப்பட்டிருந்தால் பெரிய அநர்த்தம் விளைந்திருக்கும். செல்லையாவின் சிந்தனை கொடிவிட்டுப் படர்ந்தது.

"கடவுளே எங்களை காப்பாத்துங்க" அவன் தனக்குத் தாமே சொல்லிக் கொண்டான். குழப்பம் எல்லாம் தீர்ந்து சாவித்திரிக்கும் சுகப் பிரசவம் ஆகிவிட்டால் குழந்தையையும் எடுத்துக்கொண்டு கதிர்காமம் வந்து தெய்வங்களைத் தரிசிப்பதாக இரகசியமாக வேண்டிக் கொண்டான். "என்னோட பெண்டாட்டியையும் குழந்தையையும் கடவுளே காப்பாத்திடு" என்று பெருமூச்சு விட்டான்.

திருடர்கள் பேசிக் கொண்ட "அந்த வேலை" யைப் பற்றி அவன் சும்மா கூட நினைத்துப் பார்க்கவில்லை. இன்னுமொரு வீடு உடைக்கப் போகிறார்கள். என்று தான் அவன் எண்ணினான் "அந்த வேலை" என்ன என்று செல்லையா கொஞ்சம் சிந்தித்துப் பார்த்திருந்தால் வீடே நெருப்புப் பிடித்தது போல எழுந்து ஓடியிருப்பான். சந்தேகமே இல்லை.

சூரியோதயமாகியதும் சாவித்திரிக்கும், ரங்கசாமிக்கும் உலகத்து ஜனங்களுக்கும், நடந்தவற்றை கண்ணால் கண்ட சாட்சிகாரனாக, தான் இருக்கப் போவதை செல்லையா நினைத்துப் பார்த்தான். அவனுக்குக் கோபம் வந்தது. அதே நேரம் சற்று ஆறுதலாகவும் இருந்தது. முகமூடிகள் எல்லாம் கழன்று விழப்போகின்றன உருவங்கள் தெரியப் போகின்றன.

இப்படியே செல்லையா பலதையும் பத்தையும் சிந்தித்தான். களைப்பு ஒருபக்கம் சிந்தனைத் தொடர் மறுபக்கமாக அவனை தள்ளாட வைத்தது. மயக்க நிலையில் உள்ளவனைப் போல அவன் தலை ஆடியது. நேரம் நடுநிசியை நெருங்கிக் கொண்டிருந்தது. பயங்கர நினைவுகள் அவனை ஆட்டிப்படைத்தன. விசித்திரக்கனவுகள் தோன்ற அவன் கண்களை மூடி பெருந் துயிலில் ஆழ்ந்தான்.

# 20

ஊரடங்குச் சட்டம் நாள் முழுவதும் அமுல் செய்யப்படுவதாக வானொலியில் அறிவித்தார்கள். போக்குவரத்து சீர் குலைந்து விட்டது. ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கையும் ஸ்தம்பித்துவிட்டது. நாங்கள் காலையில் எழுந்த பொழுது வழக்கமாகக் கேட்கும் சத்தம் சந்தடி எதுவுமே இல்லை. பாழடைந்த உலகம் ஒன்று எங்கள் கண் எதிரில் தெரிந்தது.

"காலை ஒன்பது மணி இருக்கும் "ஐயா ஐயா" என்று அலறிக் கொண்டு பெமியானு வந்தான். "ரங்கசாமியோட கடைக்கு நெருப்பு வைச்சுட்டாங்க.

"அடே முட்டாளே சத்தம் போடாதே" முற்றத்தின் ஒரு கோடியில் இருந்த நான் வீட்டுப் பக்கமாக திரும்பிக் கத்தினேன். "ரங்கசாமியோட மக சாவித்திரி இங்கே தான் இருக்கா".

"நெஜமாவா? பெரிய அநியாயமுங்க. இன்னும் எரிஞ்சு கிட்டு இருக்குங்க.

எனக்கு இதை நம்ப முடியவில்லை "எப்ப நெருப்பு வைச்சாங்க."

"ராத்திரி பன்னிரெண்டு மணி கழிஞ்சுன்னு ஜனங்க பேசிக்கிட்டாங்க. தெருவின் அடுத்த பக்கத்து கடையோட சுவரில நெருப்பு வெளிச்சம் தெரிஞ்சிருக்கு. அதப்பாத்துப்புட்டு சந்தரே முதலாளி எந்திரிச்சிருக்காரு. அவர் எந்திரிச்சு பாத்தப்போ பாதி எரிஞ்சு போச்சுங்க. அந்த நிரையில இருந்த கடைகளில அவரைத் தவிர யாருமே இல்லீங்க." "வா போகலாம்" நான் சாரத்தை தூக்கி மடித்துக் கட்டியபடி முன்னால் சென்றேன்.

"இனிப் போய் என்னத்த பாக்கப் போறீங்க? "பின்னால் வந்து

கொண்டிருந்த பெமியானு சொன்னான்.

"சாக்குகள் எல்லாம் நெருப்பு புடிச்சிருக்கும் இல்லியா? சந்தரே முதலாளி விழிச்சு பாத்த நேரம் நெறைய எரிஞ்சு போச்சாம். ரங்கசாமி குடும்பம் வேற இடத்துக்கு போனதும் நல்லதாப்போச்சு."

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் எவருமே வெளியே போய் வர முடியவில்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே எட்டிப்பார்ப்பதோடு சரி. வாகனம் வரும் சத்தம் தூரத்தில் கேட்டதும் பாதுகாப்புப் படையினர் வருகிறார்களோ என்று எண்ணி ஒரு கும்பல் பதுங்கிக் கொள்ளும். இப்பொழுது ரங்கசாமியின் வீட்டின் கடைசிப் பகுதி எரிந்து கொண்டிருந்தது. விழாமல் நின்ற சுவர்களில் கரிகறைபடிந்திருந்தது. இந்தச் சுவர்களும் கூரையில் ஒரு பகுதியும் தான் அவனுடைய வீட்டில் இப்பொழுது மிஞ்சியிருந்தன.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதும் ஜனக் கூட்டம் தெருவில் திரண்டு வரத் தொடங்கியது. ஊரடங்குச் சட்டத்தை மீறும் நடவடிக்கை ஒன்று ஆரம்பமாகியிருந்தது. தெலபுவவைத் தாண்டிப்போகும் பாதைகளில் ஜனங்களை ஏற்றிய வாகனங்கள் அடுக்கடுக்காக எள் போட்டால் விழாத அளவுக்கு நெருங்கிப் போய்க் கொண்டிருந்தன. தெருக்களில் வாகனங்கள் பிரளயம் போல அலை மோதின. ஒருவர் டயர் ஒன்றை உருட்டிக் கொண்டேவந்து சந்தியை நெருங்கியதும் அதற்குத் தீ மூட்டிவிட்டார். அதன் மேல் இன்னுமொரு டயர் வந்து விழுந்தது அதுவும் தீப்பிடித்துக் கொண்டது. ஜனங்களோ வெறி பிடித்தவர்கள் போல நடந்து கொண்டார்கள். நகரத்தில் நான்கு எண்ணெய் நிரப்பும் நிலையங்கள் இருந்தன. மூடியிருந்த இந்த என்ணெய் நிலையங்களில் இருந்துவாகனங்களுக்கு எண்ணெய் அடித்தார்கள். அவர்கள் இடும் கட்டளைகளுக்கு சீற்றமடைந்த அந்த ஜனகும்பல் விசையை முடுக்கிவிட்ட பொம்மைகள்போல ஆடிக் கொண்டிருந்தது.

தொடக்கத்தில் இனக்கலவரமாக இருந்தாலும் அது அரசாங்கத்துக்கு எதிரான புரட்சியாக மாறுவதற்கு அதிக நேரம் ஆகவில்லை. முதல் நாள் கலவரம் ஆரம்பமாகி சிறிது நேரம் கழிந்ததும் அது அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்பியது. இதனால் ஜனங்களை அடக்குவது கஷ்டமாக இருந்தது. அங்கொருவர் இங்கொருவராகத் தொண்டர்களும் தலைவர்களும் தோன்றிய வண்ணமாக

இருந்தார்கள். கைப்பற்றிக் கொண்ட வாகனங்களுக்கு எண்ணெய் நிரப்பினார்கள். இலவசமாக எண்ணெய் கொடுப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்த எண்ணெய் நிலைய சொந்தக்காரர்களை துரத்திவிட்டு தாமாகவே எண்ணெய் நிரப்பிக் கொண்டார்கள். அதுமட்டுமா மேடையையும் தகர்த்து எறிந்தார்கள். கலகக்காரர்களில் சிலருக்கு எண்ணெய் எப்படி நிரப்புவது என்று தெரியாது. இதனால் இவர்கள் அடிக்கும் பொழுது எண்ணெய் விரயமாகி வெளியே பெருகி ஓடத் தொடங்கியது.

இப்பொழுது ஜனங்கள் மத்தியில் பயமும் சந்தேகமும் சற்றுத் தணிந்திருந்தது. ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்து கண்காட்சி பார்ப்பவர்களைப் போல பாதையின் இரண்டு பக்கமும் இடிபட்டுக் கொண்டு நின்றார்கள். திடீரென்று எங்கிருந்தோ இரண்டு பொலிஸ் வாகனங்கள் குழல் ஊதிய படி எதிரும் புதிருமாக வந்து நகரத்தின் மத்தியில் நின்றன. அந்த வாகனங்களிலிருந்து பொலிஸ் வீரர்கள் சிலர் கீழே இறங்கினார்கள். அவர்கள் ஆயுதங்களைக் காட்டி ஜனங்களைப் பயமுறுத்தினார்கள். இதனால் ஜனங்களுக்குச் சற்றுத் திகைப்பாக இருந்தது. ஆனால் அவர்கள் பயந்ததாகத் தெரியவில்லை.

பயத்துக்குப் பதிலாக கோபம் தான் வந்தது. கோபமூட்டும் பேச்சுகளும் குத்தல் வார்த்தைகளும் நாலாபக்கத்திலுமிருந்து கேட்டன. எங்கும் வேட்டுச் சத்தம் , ஜனங்கள் மத்தியிலிருந்து எறிகுண்டு ஒன்று வந்து பொலிஸ் வீரர்களுக்கு அருகே விழுந்து வெடித்தது. தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதும் தங்களைச் சூழ ஜனங்கள் நிற்கிறார்கள் என்பதும் பொலிஸ் வீரர்களுக்கு அப்பொழுது தான் புரிந்தது. ஜனக்கூட்டம் தோளோடு தோள் சேர்த்து நின்றது. அதற்கிடையில் கலகக்காரர்களை வழிய வழிய நிரப்பிக் கொண்டு சில வாகனங்கள் அங்கும் இங்கும் பறந்தன. இதைப் பார்த்த ஜனங்களுக்கு தைரியம் பிறந்தது. பார்வையாளர்கள் மத்தியிலும் ஆயுதம் தாங்கியவர்கள் இருந்தார்கள். இவர்கள் கையில் இருந்து ஆயுதங்கள் எல்லாம் வீடுவாசல்களில் பயன்படுத்தப்படுபவை என்பது என்னவோ உண்மைதான். இருந்தும் பொலிஸ் வீரர்களும் பழைய துவக்குகளைத் தான் வைத்திருந்தார்கள். உருப்படியான வேறு ஆயுதம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. நகரத்துக்குச் சற்றுத் தள்ளி இருந்த கிராமமொன்றின் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீரர்கள் அனைவரும் இங்கே

வந்திருக்கிறார்கள் என்பது ஜனங்களுக்குத் தெரியும்.

துணிச்சல் மிக்க ஒரு இளம் வீரன் ஜனங்களோடு தொடர்பு கொள்ள எண்ணி மற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிரிந்து கூட்டத்தை நோக்கி வந்தான். மற்ற வீரர்கள் கூட்டத்து ஜனங்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை எட்ட இருந்து கவனிப்பவர்கள் போலக் காணப்பட்டார்கள். அந்த ஒற்றை வீரனின் முகத்தில் சந்தேகம் கலந்த ஒரு நட்பின் சாயல் படர்ந்திருந்தது. வெற்று மேல் உடம்போடு சாரத்தை மடித்துக் கட்டிய ஒரு சாதாரண வியாபாரி கைகளை மார்பில் சேர்த்துக் கட்டியபடி மற்றவர்கள் முன்னால் வந்து நின்றான். பொலிஸ் வீரன் அவனை நெருங்கி வந்தான்.

" தேத்தண்ணி குடிக்க இந்தப்பக்கத்தில எங்கயாச்சும் ஒரு எடம் இருக்குமா? "" வீரன் சிரிப்பை மலர விட்டபடி கேட்டான்.

"கடை பூட்டியிருக்கு". பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனநிலையை நன்றாகப் புரிந்து கொண்ட அந்த வியாபாரி நின்ற இடத்திலிருந்து ஒரு அடிகூட அசையாமல் சொன்னான். கூடிநின்ற ஜனங்கள் ஏளனமாகச் சிரித்தார்கள். ஒருவன் விசிலடித்தான். எல்லாக்கடைகளிலும் முன் பக்க வாசல் மூடியிருந்தது. ஆனால் சில கடைகளில் ஆட்கள் இருந்தார்கள்.

மூன்று நாட்களாக மின்சாரம் இல்லை. வியாபாரிகள் பாடு திண்டாட்டமாகப் போய் விட்டது. அவர்கள் திகைத்து நின்றார்கள். மீன் இறைச்சி முதலிய உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த குளிர்சாதனப் பெட்டிகள் மின்சாரம் நின்று விட்டதால் நாற்றமடிக்கத் தொடங்கிவிட்டன. ஐஸ்கிரீம் உருகி ஓட ஆரம்பித்தது. ஜனங்கள் ஊரடங்குச் சட்டத்தை மீற முயன்றார்கள். வியாபாரிகள் கடைகளின் கொல்லைப்புறக் கதவுகளைத் திறந்து வைத்து மீன் இறைச்சி முதலியவற்றைக் கொள்ளை மலிவுக்கு விற்றார்கள். நடுத்தர வர்க்கத்தினரும் ஏழைகளும் இந்தப் படாடோபப் பொருட்களை வாங்குவதற்கு வரிசையில் நின்றார்கள். ஊரடங்குச் சட்டம் திடீரென்று அமுலாக்கப்பட்டதால் பாவனையாளர்கள் பெரும் இக்கட்டில் மாட்டிக் கொண்டார்கள். வியாபார நிலையம் ஒன்று கொல்லைப் புறம்வழியாக சாமான்களை விற்கிறது என்று கேள்விப்பட்டது தான் தாமதம் ஜனங்கள்

தங்களுக்கு தேவையான சாப்பாட்டுச் சாமான்களை வாங்குவதற்கு அங்கே குழுமினார்கள். கெட்டுப் போகக் கூடிய பதார்த்தங்களான மீன் இறைச்சி என்பவற்றை கொள்ளை மலிவுக்கு விற்றுக் கொண்டிருந்த ஒரு வியாபாரி உலர் உணவுப் பதார்த்தங்களை ஒன்றுக்கு ஒன்று கூட்டி விற்று தனது நஷ்டத்தை ஈடுசெய்து கொண்டான். ஹோட்டலில் ஜனக் கூட்டம் அலை மோதியது. பொலிஸ் வீரன் இதைக் கவனித்தான்.

"ஐயாக்கு வேணுமானா ஒருபோத்தல் சோடா எங்காச்சும் தேடி பாத்துத் தரலாமுங்க" பொலிஸ் உத்தியோகத்தருக்கு மரியாதை காட்ட வேண்டும் என்று எண்ணி அந்த சில்லறை வியாபாரி இப்படிச் சொன்னான்.

"இல்லை பரவால்ல", அந்த பொலிஸ் உத்தியோகத்தர் இரண்டு எட்டில் வாகனத்தை நெருங்கிவிட்டான். தாங்கள் நினைத்ததைச் செய்ய முடியவில்லையே என்ற வருத்தத்தோடு அந்தப் பொலிஸ் வீரர் கூட்டம் தோல்வியுடன் திரும்பும் தங்கள் சகபாடியைப் பார்த்தார்கள். தாங்கள் அந்த இடத்துக்கு வந்தது பிழை. இது சரியாக குளவிக் கூட்டுக்குக் கல்வெறிந்த கதையைபோல ஆகிப் போச்சு என்பது அவர்களுக்குப் புரிந்தது. இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையோ ரொம்பவும் குறைவு. இவர்கள் ஜனங்களின் கேலிக்கு ஆளாவது தான் மிச்சமே தவிர வேறு என்ன நடக்கப் போகிறது என்று அங்கே வந்த பொலிஸ் மேலதிகாரி எண்ணினார். தெரு ஓரத்தில் நின்ற ஒரு பொலிஸ் வாகனம் மாயமாய் மறைந்துவிட்டது. தீப்பந்தமும் கையுமாக அலைந்த கொலைகாரர்கள் சந்திக்கு சற்று அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனத்துக்குத் தீமூட்டி விட்டார்கள். ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றப் பொலிஸ் வாகனம் அந்த இடத்துக்குப் போக எத்தனித்தது. இதைக் கண்ட ஜனங்கள் அதைத் தடுக்கும் நோக்கத்துடன் நடுத்தெருவுக்கு வரலானார்கள். இந்தத் தடவை பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்காக வேண்டியவர்கள் அவர்களையே திருப்பி தாக்கத் தயாரானார்கள். ஜனங்களின் கோபத்தின் உக்கிரம் நாலா பக்கமும் ஜீவாலை விட்டுப் பரவியது. கட்டெறும்புக் கும்பலின் மேல் சுடுசாம்பல் விழுந்த கதையாயிற்று. ஜனங்கள் ஏளனக் கூச்சலிட்டனர். இந்த ஆரவாரத்துக்கு மத்தியில் பொலிஸ் வாகனம் மெதுவாக நழுவி விட்டது. ஆனால் இது ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டும் தான். என்பதும் இன்னும் சில விநாடிகளில் அதிக ஆரவாரம் இல்லாமல் ஆட்களைத் திரட்டிக் கொண்டு அவர்கள் மீண்டும்

வந்துவிடுவார்கள் என்பதும் ஜனங்கள் அறியாததல்ல. டயர்களைக் கொண்டு வந்து குவித்து தீமூட்டி விட்டதால் சுற்று வட்டாரம் கரும் புகைமயமாகக் காட்சியளித்தது. இந்தப் புகை கலந்த காற்றைச் சுவாசிப்பதும் கஷ்டமாக இருந்தது. இதனால் ஜனங்கள் அந்த இடத்தை விட்டு அகலத் தொடங்கினார்கள்.

"சாவித்திரிக்கு பிரசவவலி வந்திகுச்சுங்க" சுனேத்திரா பதறினாள். நான் எப்போ வருவேன் என்று வழிபார்த்திருந்த அவளுடைய கண்கள் பயத்தினால் வெளியே வந்து விடும் போல் பிதுங்கின. கீழுதட்டைப் பல்லினால் கடித்தபடி இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு "சரியான பிரச்சினையா போச்சுதே நாங்க இப்ப என்ன செய்யிறதுங்க?" நான் தலையில் கைவைத்தேன்.

"கொழந்தை கெடைக்க இன்னும் நாள் இருக்குன்னு தானே ரங்கசாமி சொன்னான்"

"நாங்க பெரிய கஷ்டத்தில மாட்டிக்கிட்டோமுங்க. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டு போகலாமான்னு பாத்தா நல்லதுங்க."

"உனக்கென்ன பைத்தியமா?" என்னை அறியாமலே இந்த வார்த்தைகள் வெளியாயின.

பட்டிண பக்கத்திலிருந்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது. திரும்பி அங்கே வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஜனங்களைக் கலைப்பதற்கு வைத்த வேட்டாகத் தான் இருக்க வேண்டும். வெடிச்சத்தத்தைக் கேட்டுப் பயந்து போன காகங்கள் அங்கும் இங்கும் பறக்கத் தொடங்கின. இதனால் வானம் எங்கும் கருமை படர்ந்தது. டயர்கள் எரிந்துவரும் புகை இருக்கிறதே அது சீக்கிரமாக ஒட்டிக் கொள்ளும். அதன் நிறமும் தார் போல அவ்வளவு கறுப்பு. நகரத்துக்கு இந்தப்பக்கத்தில் வசிக்கு எங்களுக்கே இந்தப் புகையின் தாக்கத்திலிருந்து விடுபடமுடியவில்லை. ஆகாயமே கரு நிறமாக மாறிவிட்டது. ஆடைகள் மறைத்திருக்கும் பகுதி போக கைகால்களும் நாசித் துவாரங்களும் இந்தக் காபன் கலந்த புகையினால் ரொம்பப் பாதிக்கப்பட்டன.

"இப்ப என்னங்க செய்கிறது?" இரைக்க இரைக்க ஓடிவந்த பெமியானு கேட்டான்.

"நான் ஐயாவ தேடித்தேடி களைச்சே போனேனுங்க. எந்த சீமையில இருந்தீங்களோ ஒரு திக்கிலயும் அகப்படல்ல. ஜுவானிஸ் வீட்டில மேரிகிட்ட சொல்ல போனேனுங்க. அந்தப் பொண்ணும் அங்கே இல்ல. இப்ப என்னங்க செய்யிறது?"

"ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டு போறது கஷ்டம். ஜனக் கும்பல்ல அகப்பட்டா அதோ கதிதான். சாவித்திரிய மட்டுமில்ல நம்ம எல்லாரையும் வெட்டிப்புடுவாங்க" ஜுவானிஸ் பேசிக்கொண்டே போனான்.

"கொழும்புக்கு எடுத்துக்கிட்டு போக சொல்லல்ல. பிரைவேட் இடம் ஏதாவது இருந்தா அங்க கொண்டு போகலாம் இல்லியா?"

"ஐயா பைத்தியாக்காரத்தனமா ஒளறாதீங்க. பாதையில எறங்கி நடக்க முடியுமா? ஆஸ்பத்திரில ரெண்டாவது டாக்டரோட வீட்டுக்கும் தீ வெச்சுட்டாங்க.

"இப்பவா?"

"ஆமா இப்பதான். ஜுவானிசோட வீட்டுக்கு போயிட்டு வர்ற வழியில பாத்தேன். அவருட அம்மா சிங்கள மனுஷி. அதயாச்சும் நெனச்சாங்களா?"

"நாங்க பெரிய சங்கடத்தில மாட்டிக் கிட்டோம். இப்ப என்ன செய்யிறது கடவுளே?" சுனேரத்திரா தலையில் அடித்துக் கொண்டாள். அம்மா தோளின் மேல் சரிந்து விழுந்த வெள்ளி மயிர்க்கற்றையை ஒன்றாகத் திரட்டிச் செருகிக் கொண்டே அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் இவ்வளவு நேரமும் சாவித்திரியோடு தான் இருந்தாள். "பதட்டப்படாதீங்க பிள்ளைங்களே. நாளை விடியிறதுக்கு முன்னாடி கொழந்த பொறக்காது. தலைச்சன் பிள்ளையோ இல்லியோ அதுதான் கொஞ்சம் கஷ்டம். நேரம் எவ்வளவோ இருக்கு. வேண்டியத செய்துக்கலாம்.

"கொழந்த பொறக்க இன்னும் நாளிருக்குன்னு ரங்கசாமி சொன்னானே. இப்பிடின்னு தெரிஞ்சிருந்தா." சுனேத்திரா குற்றஞ் சாட்டினாள்.

"ரங்கசாமி சொன்னதும் நெஜந்தான். பொண்ணும் அதயே தான் சொல்றா.

நடந்த சம்பவங்களால பொண்ணு பயந்திட்டா அதுதான் கொஞ்சம் முந்திடிச்சு போல இருக்கு. இப்ப என்ன செய்யிறது? ஆறுதலா நெனச்சுப் பாத்து செய்யிறத செய்ய நேரம் இருக்கு. பாவம் அநாத பொண்ணு."

"எல்லாம் சரிதான். ஆனா ஆஸ்பத்திரிக்கு எப்படி கொண்டுகிட்டு போறது. தெருவெல்லாம் மிருகங்கள் அலையுதுக. தெலபுவவில் கண்டு கொள்ளாம போனாலும் வழியில அகப்படுறது நிச்சயம். மத்தது இந்த நேரத்திலே தமிழ் பொண்ண கூட்டிக்கிட்டு யாராச்சும் போவாங்களா? தன்னோட உயிரிலயும் போற வாகனத்திலயும் ஆசையில்லாதவன் தான் அப்படி போவான்.

"ஒரு மருத்துவிச்சிய கூட்டிக்கிட்டுவர முடியுமா பாருங்க, அப்பிடின்னா சாதாரண முறையில நடக்கிற பிரசவம் தானே"

"சுனேத்திரா கண்களை உருட்டி விழித்து

"சாவித்திரிக்கு இந்த வீட்டில கொழந்த பொறாக்க எடம் கொடுக்கணுமின்னு அம்மா சொல்றீங்க அப்படித்தானே. ஐயோ வேற வினையே வேணாம். மனுஷங்களுக்கு உதவி செய்யப் போனா நடக்கிறதப் பாத்தீங்களா" என்று நெற்றியில் கைவைத்தாள்.

"வேற என்னதான் செய்யறது" அம்மா செய்வதறியாது சுனேத்திராவைப் பார்த்துக் கேட்டாள். கீழுதட்டைப் பற்களால் கடித்தபடி தலை குனிந்து நெற்றியைத் தடவிக் கொண்டிருந்தாள் சுநேத்திரா. அவளுக்கோ அம்மாவுக்கோ எனக்கோ எங்கள் மூவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த பெமியானுக்கோ இதைவிட வேறு பரிகாரம் காண முடியவில்லை.

அம்மா சுனேரத்திரா அருகில் போய் அவளுடைய தோளில் கைவைத்தாள். "இதுக்கு இம்புட்டுத் தூரம் எதுக்குப் பயப்படனும் வேற என்ன தான் செய்யலாம். அந்த நாதியத்த பொண்ண தெருவில இழுத்து போடவா, மத்தது ஒரு வீட்டில கொழந்த பொறக்கிறது அந்த வீட்டுக்கே லஷ்மீகரமாயிருக்கும். இத மட்டும் தான் நாங்க செய்யலாம்" அம்மாவின் பேச்சைக் கேட்டுச் சுனேத்திரா அடங்கிப் போனாள்.

அம்மாவுக்கு பிரசவம் பார்த்து நல்ல பழக்கம். இந்த விஷயம் எனக்கே

அப்பொழுது தான் நினைவுக்கு வந்தது. நாங்கள் சின்னஞ் சிறுசுகளாக இருந்த காலத்தில் ஆஸ்பத்திரிக்குப் போவதானால் இருபத்தைந்து முப்பது மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. குழந்தையை பிரசவிக்க இருக்கும் ஒரு பெண்ணுடைய கணவன் மருத்துவிச்சியைத் தேடிப் போகிற பொழுது வழியில் அம்மாவிடமும் ஒரு வார்த்தை சொல்லத் தவறமாட்டான். இருந்தும் அம்மா இதையெல்லாம் சுனேத்திராவுக்கு சொன்னதில்லை.

ஊருக்கு ஏழெட்டு மைல் தொலைவில் ஒரு வைத்தியசாலை வந்து விட்டதால் அம்மா கடந்த பத்து வருடங்களாக பிரசவம் பார்க்க எங்குமே போனது கிடையாது. இதனால் பழக்கம் கூட விட்டுப் போயிருக்கலாம். இந்தக் கலையில் அவளுக்கிருந்த அறிவைப் பற்றி எனக்கே எதுவும் தெரியாது. அப்படியிருக்க சுனேத்திராவுக்கு இதைப் பற்றிச் சொல்ல நான் சற்றுத் தயங்கினேன். இருந்தும் எனக்கு சற்று ஆறுதலாக இருந்தது. அந்த நாட்களில் பிரசவத்தின்போது தாய் அல்லது சேய் இறந்து போனதாக கேள்விப்பட்ட ஞாபகம் எனக்கு இல்லை. கிராமத்தில் பிரசவித்த ஒருபெண் தன் குழந்தைக்கு மூன்று மாதங்கள் நிரம்பியதும் முதல் முதலாக பன்சலைக்கு எடுத்துச் செல்வாள். அதற்கு பிறகு அம்மாவைக் காண வருவார்கள்.

"அம்மா அவங்க புண்ணியத்தால தான் இந்தத் தடவ தப்பியிருக்கா "" இளந் தாயையும் குழந்தயையும் அழைத்து வந்த மூதாட்டியின் புகழ் உரை இது, எனக்கு அப்பொழுது ஏழு வயதிருக்கும். நான் அந்த சிசுவைப் பார்க்க ஓடோடி வருவேன்.
குழந்தையின் தாயார் அம்மாவுக்கு வெற்றிலை கொடுத்து ஆசி பெறுவாள். அம்மாவும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வாள்.

"சொபனா பிடிச்சுக்கிட்டிருந்த மாதிரியைப் பாத்தா கொழந்தைக்கு வெளியே வரமுடியாம போயிடும் போல தெரிஞ்சுச்சு. வயித்தில நரம்புகள் கூட நீல நிறமா மாறி வயத்த தூக்கி தூக்கி போட ஆரம்பிச்சிடுச்சு." அம்மா சுற்றும்முற்றும் பார்த்து விட்டு மெதுவாகச் சொன்னாள்.

"பார்த்துக்கிட்டிருக்க முடியாமத் தான் நான் வெளிய போனேன். கைய எடுக்கச் சொல்லி அம்மா சோபனா கிட்ட சொன்னீங்க இல்லியா. அது அவளுக்கு

கோபமா போச்சு."

"அவ, தான் என்ன ஜாதிக்காரி எங்கிறதக் கூட மறந்து போயிட்டா அப்படி என்னோட பேசினா பாத்தீங்களா."

சொபனா அப்படித்தாங்க பிரசவம் பார்க்கிறதால அந்த இடத்தில தலைவியா இருந்தாக்கூட சொபனா அவளுக்கு மதிப்பு கொடுக்கமாட்டா. பொண்ணு நெனவில்லாம கெடந்தா. ஒங்ககூட கோவிச்சுக்கிட்டு சொபனா வெளிய கெளம்பியதும் எனக்கு காலும் ஓடல்ல கையும் ஓடல்ல. உள்ள தெய்வங்கள எல்லாம் நெனச்சுக்கிட்டேன். இந்தாங்க இனிமே என்னோட வேலை இல்லை. ஏறுமாறா எதாச்சு நடந்தா என்மேல் பழியப்போட்டிடாதீங்க. அது என் தவறு இல்ல, என்று சொல்றமாதிரி அந்தப் பொண்ணு கைய கழுவிகிட்டு போயிட்டா"".

"என்னத்த சொன்னாலும் சொபனாவும் நல்லா பயந்துட்டா" "அம்மா சொன்னாள். "என்ன பண்ணிறதுன்னு அவளுக்கும் நிச்சயமா சொல்ல முடியல்ல. தன்னப்பத்தி பெரிசா நெனச்சதால தான் அவளுக்கு கோவம் வந்திடுச்சி.""

"அம்மணி இந்த விஷயத்தப் பத்தி இம்புட்டு தெரிஞ்சி வைச்சிருக்கீங்கன்னு எங்களுக்குத் தெரியாது"" வந்திருந்த பெண் அம்மாவை அடக்கத்தோடு பார்த்துச் சொன்னாள். அம்மா மௌனமாக இருந்தாள், அவளுடைய இதழோரத்தில் புன்னகை மலர்ந்தது." சொபனா என்னோட ரொம்பக் கோவமா இருக்கா போலத் தெரியுது. எனக்கு யாரோ சொன்னாங்க." "ஆமாங்க உங்க கையால தவறு ஏதும் நடக்காததால அவளுக்கு ஒரே பொறாமை. தவறு நடந்திருந்திருச்சின்னா அம்மணி பெரிய சங்கடத்தில மாட்டியிருப்பீங்க, சொபனா என்மருமகனுக்கு குறை செல்லியிருக்கா இதனால பியதாசவுக்கு ஒரே கோவம்."

"கொழந்தை புரளாம இறுக்கிறதா நெனச்சுத்தான் சொபனா வயத்த அந்த மாதிரி அமுக்கி பிடிச்சிருக்கா. ஆனா நேரம் நெருங்கிடுச்சுங்கிறது எனக்கு தெரிஞ்சு போச்சு. ஆனால் வயிறு வெட்டி போட்ட மாதிரி துடிச்சிக்கிட்டு இருந்திச்சு. இன்னும் கொஞ்ச நேரம் அந்த மாதிரி புடிச்சிக்கிட்டு இருந்திருந்தா கொழந்தையோட உசிரே போயிருக்கும். அதனால தான் கைய எடுத்திடச்

சொன்னேன். "

"அம்மணி மகராசியா இருக்கனும்" அந்த மூதாட்டி குழந்தையை "அம்மாவின் கைகளில் கொடுத்தபடி சொன்னாள்."

"வயித்த அவ அமுக்கி புடிச்ச நேரம் கொழந்தையோட நெத்தி தான் அகப்பட்டிருக்கு. ஒரு மாசம் கழியிற வரைக்கும் அந்த எடம் நீல நெறமா இருந்திச்சு. பியதாச சொபனாவோட சண்டைக்குப் போயிட்டான்" மூதாட்டி தன்னுடைய மகளைப் பார்த்து சிரித்தபடி சொன்னாள்.

அந்த சிசுவைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில் நெருங்கி வந்த எனக்கு அன்று அவர்களின் பேச்சில் விசேஷ அர்த்தம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இன்று அந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. இந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டதாலோ என்னமோ சாவித்திரியைப் பற்றிய பயம் சற்று நீங்கி மனதில் ஒரு அமைதி ஏற்பட்டது. ஆனால் அதைப் பூரண அமைதி என்று சொல்ல முடியாது. அம்மாவுக்கு இப்பொழுது வயதாகி விட்டது. அவசர சந்தர்ப்பம் ஒன்றில் அவளால் விரைவாக செயல் பட முடியுமா? அதோடு அவளுக்கு இந்தக் கலையில் எவ்வளவு ஞானம் உண்டு என்பதும் எங்களுக்குத் தெரியாது. மேலும் பத்து பதினைந்து வருடங்களாக அவள் பிரசவம் பார்க்கப் போனதே கிடையாது. அந்தப் பழக்கமும் அதோடு விட்டுப் போயிருக்கலாம். அவளுக்கு இந்த விஷயத்தில் கொஞ்சம் அறிவும் அனுபவமும் உண்டு என்று நினைக்கும் பொழுது சற்று ஆறுதலாக இருந்தது. "இன்னிக்கு பன்னிரண்டு மணிக்கு மேலதான் கொழந்த பொறக்கும்"" அம்மா உறுதியாகச் சொல்லி விட்டாள், நேர்ஸ் அல்லது ஒரு மருத்துவச்சியை இந்தப் பக்கத்தில எங்கயாச்சும் தேடிக்க முடியாதா என்ன? சுனேத்ராவோட ஊருக்கு போய் பாத்தா .... ?"" அம்மா சுனேத்ராவின் முகத்தைப் பார்த்தாள்.

"சரி எனக்கு ஞாபகம் வந்திடுச்சு" சுனேத்திரா நெற்றிப் பொட்டில் தட்டியபடி சொன்னாள். "மெராயா அக்காவ மறந்திட்டோமே. அவதான் இருக்கவே இருக்காளே. அவள அழச்சுக்கிட்டு வரமுடியுமானா?"

"மெரயா யாராயிருக்கும்" என்று நான் ஆவலோடு பார்த்திருந்தேன்.

"மெராய முன்னம் நோனாவாட்டில் லேபர் ரூமில வேல  செஞ்சுகிட்டு இருந்தா. இப்ப பென்சன் எடுத்துட்டு ஒரு பிரைவேட் நேர்சிங்ஹோமில வேலை செய்யிறா. அவள கூட்டிக்கிட்டு வர்றது சிரமமா இருக்காது.இன்னிக்கு வேலைக்கு போயிருக்க மாட்டா. வேற எங்கே போகப்போறா? "

"அப்படி சொல்லு"  அம்மாவின் மனம் அமைதியடைந்தது.  நான் சட்டையை எடுத்து மாட்டியபடி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிறதுக்கு ஏதாச்சும் வழி இருக்கான்னு பாக்கிறேன்." அல்லது ஆஸ்பத்திரியிலிருந்து யாரயாச்சும் இங்கே கூப்பிடலாமான்னு பாத்திடலாம்" என்றேன்.

"ஒரு செய்தி தெரிஞ்சுக்கக்கூட வழியில்ல.  மின்சாரம் இல்லாம போனதால எல்லாமே நின்று போச்சு.  சரியான பிரச்சனையாயிருக்கே சுநேரத்திராவுக்கு பயமாகவும் இருந்தது.  அதே நேரம் துக்கமாயும் இருந்தது. ரேடியோ ஐஸ் பெட்டி எதுவுமே பாவிக்க முடியல்ல.  எல்லாத்துக்கும் மேலால லைட் இல்லாம போனது தான் பெரிய பிரச்சினை."

பட்டரியில் இயங்கும் ரேடியோவைக் கொண்டு வந்த பெமியானு "ஐயா ராணுவச் சட்டம் போட்டுட்டாங்களாம்.  இதோ இப்பதான் ரேடியோவில சொன்னாங்க,"என்றான்.

"இப்பவா?"

"சாயந்தாம் அஞ்சு பசியில இருந்து."

சுநேத்திரா வீட்டுக்கு ஓடிப்போய் நேரத்தைப் பார்த்தாள். "அஞ்சு மணி ஆகிக்கிட்டு இருக்கு போயிட்டு வர நேரம் போதுமா?  அட கடவுளே இப்ப என்ன செய்யிறது" அவள் தேகம் பயத்தால் நடுங்கியது. எதுக்குமே கலங்காத அம்மா" என்னடா மருத்துவச்சியை கூட்டிக்கிட்டுத் தானே வருவாய்.  எதுக்கு பயப்படனும்.  பாத்த ஒடனே சுட்டுடு வாங்களா என்ன என்றாள்.

நான் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தேன்.  சுநேத்ரா என்னை நோக்கி

ஓடிவந்தாள்.

"அப்பிடின்னா சீக்கிரமா போங்க " என்றாள்.

"இன்னுமொரு விஷயம் இந்த மாதிரி நேரத்தில என்னென்ன எல்லாம் தேவைப்படுமோ அதையெல்லாம் பாத்து தயார்பண்ணி எடுத்திட்டு வரச்சொல்லி சுமனாவதிக்கு சொல்லிட்டு மெராயவுக்கு செய்தி அனுப்புங்க. அப்போ மெராயா ஒருபக்கத்தில தயாராகிக்கிட்டு இருப்பா அதற்குள்ள சுமனாவதி இந்தச் சாமான்களை தயார்பண்ணிடுவா இல்லியா" என்று அம்மா சொன்னாள். நான் புறப்பட்டேன். ஆளடையாள அட்டையை என்னிடம் நீட்டிய சுனேத்திரா "ஆமாங்க சுமனாவதிக்கு எல்லாம் தெரியும். சீக்கிரமா வாங்க" என்றாள்.

அம்மா சுனேத்திராவின் தோளில் கைவைத்து "மகளே இதுக்கெல்லாம் பயந்தா எப்படி?" என்றாள்.

"நாங்க என்ன ஆகாத காரியத்துக்கா போறோம். நான் இங்கே எண்ணென்ன தேவையின்னு பார்க்கிறேன். நீ அந்த பொண்ணோட மனசக் கொஞ்சம் தேற்றப்பாரு. வேற என்ன செய்கிறது. வர்றத ஏத்துக்க வேண்டியது தான்."

நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சைக்கிளை மிதித்தேன். இராணுபச் சட்டம் அமுலாக்கப்பட்டிருந்ததால் ஜனங்கள் கலைந்து போய்விட்டார்கள். ரங்கசாமியின் வீடு மேடாகக் காட்சியளித்தது. தீக்கு இரையாகாமல் தப்பியிருந்த சுவர்களுக்கு அருகில் ஜனங்கள் கூடி நின்றார்கள்.

"உள்ளே யாரோ ஒருத்தர் தீப்பிடிச்சு இறந்துட்டார்"

நான் சைக்கிளிலிருந்து விழாமல் தப்பியது கடவுள் செயல். அது யார் என்று தெரிந்து கொள்ளாமல் என்னால் பயணத்தைத் தொடர முடியவில்லை. நீறு பூத்த நெருப்புத் தணல் செக்கச்செவேல் என்று இடிபாடுகளுக்கடியில் தெரிந்தது. அதற்கடியில் கிடந்த பிரேதத்தை என்னால் அடையாளம் கண்டு கொள்ள

முடியவில்லை.

"அதோ அங்கபாருங்க இதோ இங்க இருக்கு." என்று கையில் தடியை வைத்துக் கொண்டு ஒருவன் சொன்னான்.

எரிந்து போனதாகச் சொல்லப்படும் ஆளுடைய கால்கள் கருகிப் போய்க் கிடந்தன. அவனுடைய தேகம் கட்டைக்கரியாக எரிந்து போனது மட்டுமல்ல சின்னஞ்சிறு குழந்தையின் உடம்பு போல குறுகியும் விட்டது. நாடிப் பக்கத்தில் மட்டும் முகம் சற்றுத் தெரியக் கூடியதாக இருந்தது. சாக்கு எரிந்த சாம்பல், பாளம் பாளமாக விழுந்து முகத்தில் எஞ்சிய பகுதியை மூடிவிட்டது. ஒருவன் தடியினால் இந்தச் சாம்பலை கிளறி ஒதுக்கப் பார்த்தான். வாய் திறந்தபடி பற்கள் வெளியே தெரிய கருகிப் போய் பயங்சரமாகத் தோற்றமளித்த அந்தச் சின்னஞ் சிறிய முகம் வேறு யாருடையதும் அல்ல. அது செல்லையாவுடையதே தான். ஜனங்கள் கூக்குரல் இட்டபடி பின்னால் தள்ளிப் போனார்கள்.

"ராத்திரி மனுஷன் எந்திரிச்சு பாக்கிறப்போ வீடு தீப்புடிச்சிருக்கனும்" சந்தரே முதலாளி தலையில் கைவைத்தபடி சொன்னார்.

"வெளிய வர்றதுக்கு முடியாம போயிருக்கனும். ரொம்ப பயந்திட்டான் போல இருக்கு. பாருங்களேன். பல்லு எல்லாம் வெளியே தெரியிற மாதிரி வாய் தொறந்து கெடக்கு. கண்கள் பிதுங்கி இருக்கு. இந்தப் பயமவன் எப்ப வீட்டுள்ளுக்க நொளஞ்சானோ தெரியாது. எந்திரிக்சு வெளிய ஓடப் போயிருக்கான். அந்த சமயத்தில சாக்குக் கட்டு இவன் மேல விழுந்திருக்கு."

"டயர் எரியற மணத்தால எங்களுக்கு இந்த மணத்த கண்டுக்க முடியல்ல" அப்பொழுது அந்த இடத்தில் காற்றில் கலந்திருந்த முடை மணத்தைத் தாங்க முடியாமல் மூக்கைச் சுளித்தான் ஒருவன்.

நான் உடனேயே அந்த இடத்தை விட்டு அகன்றேன். எனக்குத் தலை சுற்றியது. வாந்தி வரும் போலவும் இருந்தது. முதலில் ஏற்பட்ட அந்த உணர்வினால் மனம் சஞ்சலமடைந்தது. எனக்கு மயக்கமே வந்துவிட்டது. களைப்போடு

சைக்கிளில் ஏறி உட்கார்ந்தேன். இந்த மாதிரி ஒரு காட்சியை நான் கண்டது இது தான் முதல் தடவை. இதைப் பார்த்த ஒருவருடைய மனதில் எழும் உணர்வுகளை வார்த்தைகளில் வர்ணிக்கவே முடியாது.

அருவருப்பு, கருணை, குரோதம், வியப்பு, பயம், வெறுப்பு என்னும் உணர்ச்சிகள் ஒன்றாகச் சேர்ந்து என்னை வாட்டி வதைத்தன. வழியில் இரண்டு இடத்தில் தங்கி வாந்தி எடுக்கவேண்டிய தாயிற்று. இந்த மாதிரி ஒரு அனுபவம் வாழ்க்கையிலேயே எனக்கு ஏற்பட்டதில்லை. பலதரப்பட்ட உணர்வுகளின் பிடியில் சிக்கி குழம்பிப் போன நான் பயணத்தைத் தொடர்ந்தேன்.

# 21

மெராயா சேலையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்தாள். "வாங்க ஐயா போகலாம்" என்றாள். அவளைக் கூட்டிக் கொண்டு வருவதற்கு முன் நிலைமையைச் சுருக்கமாக விளக்கினேன். செல்லையாவைப் பற்றிய செய்தியை கூடியவரை எங்கள் வீட்டாருக்கு ரசசியமாக வைத்திருப்பதென நான் எண்ணியிருந்தேன். மனசை எப்படியாவது தேற்றிக் கொள்ள வேண்டும். அந்த அனுபவத்தை ஒற்றை ஆளாக என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவ்வளவு தூரம் மனசுக்குப் பாராமாக இருந்தது. கணவன் அங்கே வீட்டில் எரிந்து சாம்பலாகிக் கிடக்க இங்கே மனைவி சாவித்திரி பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் மெரயா வேகமாகச் செயல்படத் தொடங்கினாள்.

அவள் சைக்கிளின் பின்பக்க ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள். "வாங்க ஐயா போகலாம் இந்த மாதிரி ஒரு ஆளுக்கு உதவ முடியாட்டா நான் தெரிஞ்சு வெச்சிருக்கிற இந்த சாத்திரத்தால என்னங்க பிரயோஜனம்" என்றாள்.

அவளைப் பின் ஆசனத்தில் ஏற்றிக் கொண்டு வியர்வை ஆறாகப் பெருக வேகமாகச் சைக்கிளை ஓட்டினேன். நாங்கள் ஒரு கிளைப் பாதை வழியாக வந்து கொண்டிருந்தோம். இருந்தும் எந்த நேரத்திலும் ராணுவ வாகனம் வரலாம் என்ற பயம் இருந்தது. ஆனால் வாகனத்தின் பின் ஆசனத்தில் ஒரு பெண் இருந்ததால் அந்தப் பயம் சற்று குறைந்து போயிற்று. மெராயாவைத் தேடிப் போக வேண்டியிருந்ததால் நாங்கள் நினைத்ததை விட இரவாகிவிட்டது. வேறு ஒரு நாளாயிருந்தால் தெலபுவவிலிருந்து சுநேத்திராவின் வீட்டுக்கு செய்தி சொல்லிவிட்டு அங்கே சற்றுத் தங்கி பேசி விட்டு வருவதாய் இருந்தால் கூட இரண்டு மணிநேரம் தாராளமாகப் போதும். என்னுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. ரொம்பவும் குழம்பிப் போய் இருந்ததால் வரும் வழியில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை இப்பொழுது பின்புறத்தில் ஒரு ஆள்ப் பாரம் வேறு சேர்ந்து கொண்டதால் திரும்பி வரும் பயணமும் அவ்வளவு இலகுவாகத்

தெரியவில்லை. அமாவாசை முடிந்திருந்தது. மின்சாரமும் கிடையாது. எங்கும் ஒரே மை இருட்டு. பிரதான வீதியை அடைந்ததும் சைக்கிளின் விளக்கை அணைத்து விட்டேன். விளக்கை ஏற்றிக் கொண்டு போகவும் மனதில் தென்பில்லை. அணைத்துவிட்டு செல்லவும் பயமாக இருந்தது. எது நடந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி நான் விளக்கை மீண்டும் தட்டி விட்டேன். ஏனென்றால் இருட்டில் போகும் எங்களைக் கலகக்காரர் என்று எண்ணிவிடக் கூடும் அல்லவா. அந்தப் பயம் தான். நகரில் மயான அமைதி குடி கொண்டிருந்தது. நாலாபக்கமும் இருள் சூழ்ந்திருந்தது. வீதியின் நடுவில் டயர்களைக் குவித்து எரியவிட்டிருந்தார்கள். இவற்றின் எச்சங்கள் இன்னும் அப்படியே கிடந்தன. இவையெல்லாம் சேர்ந்து அந்த இடத்தை ஒரு மயானமாக்கி விட்டது. நகரில் சந்தியின் நடுவில் மந்தமான வெளிச்சத்தோடு ஒரு சிவப்பு லண்டன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதைக் கண்டதும் மெராயா சைக்கிளை விட்டு இறங்கினாள். நானும் இறக்கி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தேன். அங்கே ஒருவரையும் காணவில்லை. ஆனால் "ஹோல்ட்" என்ற சத்தம் இருளைப் பிளந்து கொண்டு கேட்டது. நாங்கள் ஊமைகளாகிவிட்டோம். பச்சை தூஷணத்தால் ஏசிக் கொண்டு துவக்கைக் குறி வைத்தபடி ஒரு இராணுவ வீரன் இருளைக் கிழித்துக் கொண்டு எங்கள் முன்னால் தோன்றினான். நான் சைக்கிளை உடம்போடு சாய்த்து வைத்துக் கொண்டேன். பின்னர் கைகள் இரண்டையும் உயரத் தூக்கிக்கொண்டு பேசுவதற்கு வாய் எடுத்தேன். அதற்கு முன் மெராயா பேசத் தொடங்கினாள்.

"பிரசவம் பாக்கப் போறேனுங்க ஐயா" அவள் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி சொன்னாள். அந்தக் காரியம் எல்லாம் இப்பதான முடிஞ்சிச்சு. மிலிட்டரி சட்டம் போட்டிட்டாங்க. வர்றதுக்கு வழியில்லாம நடந்து கிட்டிருந்தேன். தம்பி வந்தாருங்க வழியில கூட்டிப் போறதுக்கு"

அந்த இராணுவ வீரன் மெராயாவின் பையைத் திறந்தான். அதற்குள் பிரசவம் பார்ப்பதற்குத் தேவையான உபகரணங்கள் இருந்தன. டார்ச்சை அடித்துப் பார்த்தான். அவனுக்கு திருப்தியாயிற்று. ஏதோ அவனுடைய வாயிலிருந்து இன்னும் கொஞ்சம் தூஷண வார்த்தைகள் வெளியாகின. அதோடு சரி. நாங்கள் தப்பிவிட்டோம். அந்த இடத்திலிருந்து ரயில் நிலையம் கடக்கும்வரை எத்தனையோ ஸ்தானங்களில் எங்களை சோதனை போட்டார்கள். இதனால் சிறிது சிறிதாக எங்களுக்கு தைரியம் வரத் தொடங்கியது.

மௌனமாக என் பின்னால் வந்து கொண்டிருந்த மெராயா வீட்டுக்குள் நுழைந்ததும் கைகளைக் சவர்க்காரம் போட்டு கழுவினாள். இந்தச் சின்னத் தாமதம் மட்டும் தான். அடுத்த கணம் பிரசவ அறைக்குள் நுழைந்துவிட்டாள். வீடு நிசப்பதமாக இருந்தது. ஆனால் அங்கே இருந்தவர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகளுக்கு நேரத்தோடு சாப்பாடு ஊட்டி தூங்க வைத்து விட்டார்கள். அடுக்களையில் தேங்காய் மட்டை சிரட்டை போட்டு அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்தில் ஜுவானிசின் மனைவி மேரி ஒரு சட்டியில் தணல்போட்டு கொண்டிருந்தாள்.

என்னுடைய தாயார் திடீரென்று அறையை விட்டு வெளியே வந்து அடுப்பில் கொதித்துப் பொங்கிக் கொண்டிருந்த கேத்தல் நீரை ஒரு பேசினில் ஊற்றினாள். பிறகு என்னைக் கண்டும் காணாதவள் போல சமையலறையை விட்டு வெளியேறினாள்.

"தண்ணிக் கேத்தல் அடுப்பிலேயே இருக்கட்டும் எந்த நேரமும் அடுப்பில நெருப்பு இருக்கணும். அணச்சிட வேணாம். தணல்சட்டியில் கரியும் இருக்கணும் என்று மேரிக்கு எச்சரிக்கை பண்ணுவது போல சொல்லிக் கொண்டே அம்மா சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

சாவித்திரியின் முனங்கல் சத்தம் காதைப் பிளந்தது. இந்தச் சத்தம் வரவர அதிகரித்தது. சுனேத்திரா அவசர அவசரமாகக் கூடத்துக்கு வந்தாள். பெமியானிடம் வாங்கிய பட்டரி ரேடியோவின் சத்ததைக் கூட்டிவிட்டு மீண்டும் பிரசவ அறைக்குள் நுழைந்துவிட்டாள். பிரசவ அறையிலிருந்து வந்த டெட்டோல் நெடி மூக்கைத் துளைத்தது.

ஒரு நேரம் சாவித்திரியின், முனங்கல் சத்தம் ரேடியோவின் சத்தத்தை மீறிக் கேட்கும். மறு சமயம் ரேடியோனின் ஒலியில் அது அடங்கி விடும், ஒரு சத்தமுமே கேட்காத நேரமும் இருந்தது. இடைக்கிடை அலறல் சத்தம் பெரிதாகக் கேட்கும். விட்டுவிட்டுக் கேட்ட முனங்கல் இப்பொழுது இடைவிடாமல் கேட்கத் தொடங்கியது. பிரசவ வேதனை அதிகரிக்க அதிகரிக்க அவளுக்கு களைப்பும் அதிகரித்தது. இந்த முனங்கல் சத்தம் தாங்க முடியாத வேதனையை உண்டாக்கியது. பிரசவ மருத்துவ மனையில் சுனேத்திரா மகனை பிரசவித்த போது பவுடரிலும், ஒடிக்கொலோனிலும் அவனை நீராட்டி முதன் முதலாக என் கைகளில் கொடுத்த சம்பவம் ஞாபகத்திற்கு

வந்தது. மூத்தவனின் முகத்தைக் காண சுநேத்திராவும் இதே மாதிரி கஷ்டத்தை அனுபவித்திருப்பாள் என்று எனக்கு தோன்றியது. ஏற்கனவே தயாராக இருந்த சாமான்களையும் எடுத்துக் கொண்டு, முன் ஏற்பாடாக சொல்லி வைத்திருந்த வாடகை காரில் சுனேத்திராவை ஏற்றி மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைத்ததோடு என்னுடைய கடமை முடிந்து விட்டது. எங்கள் குழந்தைகள் இருவரையும் சுனேத்திரா பிரசவித்த பொழுது கூட இவ்வளவு மனவேதனையை நான் அனுபவித்ததில்லை.

குழந்தையைப் பிரசவிக்கும் போது சாவித்திரிக்கு மரணம் சம்பவித்து விட்டால், இதை எண்ணி என் மனம் புலம்பியது. நவீன மருத்துவ மனைகள் ரொம்பவும் சுகாதாரமானவை அங்கே உபகரணங்க்ள் எல்லாம் கிருமி நீக்கப் பட்டு சுகாதார முறையில் பேணப் பட்டு வந்தன. அப்படிப்பட்ட ஒரு மருத்துவ மனைக்கு சாவித்திரியை எடுத்துச் செல்ல நாம் தவறி விட்டோம். அங்கே சுகாதார முறையில் சிறந்த கண்காணிப்போடு நடக்கும் அதே வேலையை நாமே செய்கிறோம். இதனால் என்ன விளைவு ஏற்பட்டாலும் அதற்கு வகை சொல்ல வேண்டியவர்கள் நாங்கள் தான்.

சாவித்திரி மிகவும் கஷ்டமான ஒரு கட்டத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறாள் என்பது அங்கே இருந்த பெண்களின் அவசர நடிவடிக்கைகளிலிருந்தும், சாவித்திரியின் முனங்களிலிருந்தும் தெரிந்தது. சுனேத்திராவும் அம்மாவும் அறைக்குப் போவதுப் வருவதுமாக இருந்தார்கள். அவர்களின் நடவடிக்கைகளில் பதட்டம் காணப்பட்டது. மேரியும் ஒரு தடவை அறைக்குள் போய் மீண்டும் சமையலறைக்குள் அடைக்கலம் புகுந்துவிட்டாள். தொடக்கத்தில் எனக்கு நல்ல மனத்தைரியம் இருந்தது. ஆனால் செல்லையாவுக்கு நடந்த கதியைப் பார்த்த பிறகு அதெல்லாம் எங்கோ மறைந்து விட்டது. சுனேத்திரா காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கு முறையைப் பார்த்தால் முன்னர் இல்லாத மனோதிடம் அவளுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்தது. அம்மாவோ வாத உடம்புக்காரி இந்த நேரத்தில் அதைக் கூட மறந்து போய் அவள் சுனேத்திராவை தைரியப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தாள். எங்கும் ஒரே இருட்டு. இது வேறு என் மனத்தில் பயத்தைக் கூட்டியது. சுற்றிலும் நிசப்தமும் தனிமையும் குடிகொண்டிருந்தன. ஒரு பொட்டு வெளிச்சத்தைக் கூடக் காணமுடியவில்லை. பெமியானு தன்னுடைய நாயையும் கூட்டிக் கொண்டு வந்து எங்கள் வீட்டு போர்டிகோவில் குட்டைச்சுவரில் ஏறி உட்கார்ந்திருந்தான். அவன் அங்கே இருப்பது

என் மனதுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

பெமியானுக்கு காப்பி எடுத்துக் கொண்டு போன அம்மா சற்று நின்று என்னைப் பார்த்து "நீ போய்த் தூங்கடா. பயப்படுப்படியாக ஒன்னும் இல்லியாம். மெராயா நோனா சொல்றா . தலைச்சன் பிள்ளைங்க பொறக்கிறதுக்கு இப்படித்தான் கொஞ்சம் தாமதமாகும் ""என்றாள். இவ்வளவு நேரமும் அதைப்பற்றி எதுவுமே பேசாத என் தாயாருக்கு என்னுடைய மனக் குழப்பம் தெரிந்திருக்க வேணும்.

நான் நடப்பதை நிறுத்திவிட்டு சற்று உட்கார்ந்தேன். "ஏதாச்சும் எசக்கும் பிசகா நடந்திருச்சின்னா நாங்க தான் வகை சொல்லனு" என்றேன்.

"கஷ்டம் ஒன்னும் இல்ல" அம்மா புன்னகை புரிந்தாள்.

"இப்ப நேரமும் கழிஞ்சிருச்சு. அதனால இனி அமாவாசை முடிஞ்சதுக் கப்புறம் தான் கொழந்தை பொறக்கும், மெராயாவுக்கு ஒரு மருத்துவருக்கு இருக்கிற அனுபவம் எல்லாம் இருக்கு. ஆஸ்பத்திரியில கூட இந்தக் காரியங்களை வைத்தியர் செய்யிறதில்ல. நீ போய்த் தூங்கடா" என்று சொல்லிவிட்டு அம்மா டார்ச் விளக்கு வெளிச்சத்தில் நேரத்தைப் பார்த்தாள். விடியறஜாமத்தில் கொழந்த பொறந்திடும். ஏதாச்சும் தேவை இருந்தா உன்னைக் கூப்பிடுவோம். நீ இப்ப போய் படுத்துக்க. பெமியானுவும் இருக்கான் தானே."

அம்மா ஒரே பல்லவியைத் தான் பாடிக்கொண்டிருந்தாள். ஆனால் எனக்கோ தூக்கம் வர மறுத்தது. மனக் குழப்பம் தான் இதற்குக் காரணம். உடலும் உள்ளமும் தளர்ந்து போய்விட்டன. சோர்வு என்னை ஒட்டிக் கொண்டது. சேனைக் காணியில் எரிந்தது போக மிஞ்சிநிற்கும் மரம்போல கருகிப்போன செல்லையாவின் உடம்பும், நெருப்பில் வாடிவதங்கிய சின்னஞ்சிறு முகமும் என் நினைவை விட்டு நீங்க மறுத்தன. அதற்கிடையில் அவனுடைய வாரிசை இந்த உலகுக்குக் கொண்டு வர அவனுடைய மனைவி இங்கே பிரசவ வேதனையால் துடிக்கிறாள்.ஒரு மனித ஜீவனுடைய வாழ் நாள் முழுவதிலும் அனுபவிக்கும் கஷ்டங்களும் சரி இந்த ஒரு சந்தர்ப்பத்தில் முகங் கொடுக்க நேரும் இன்னல்களும் சரி. இரண்டுமே சமம் தான் சாவித்திரி பெருமூச்சு விட்டாள். அவளுக்கு ரொம்ப களைப்பாக இருந்தது. மூச்சு இரைக்க முணங்கினாள். அவளுடைய கஷ்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் எவருக்குமே மனம் தாங்காது.

ஒரு மிருகம் குட்டி ஈனுவதைக் கூடப் பார்த்திராத எனக்கு இந்த அனுபவம் தாங்க முடியாத ஒன்றாக இருந்தது.

நான் பயத்தால் நடுங்கினேன். சாவித்திரி ஜீவமரணப் போராட்டத்தில் இருக்கிறாள். ஒருவாரம் முழுதும் தூங்கி எழும்ப வேண்டும் போல அத்தனை களைப்பாக இருந்தது எனக்கு. ஆனால் தூக்கம் வருவதற்கு ரொம்ப நேரமாயிற்று. நீண்ட நேரம் கழிந்த பிறகு மனச் சஞ்சலம் மெல்ல மெல்ல அடங்கியது. நான் இருந்த இடத்திலே என்னை அறியாமல் தூங்கி விட்டேன்.

ஆழ்ந்த நித்திரையில் இருந்த என்னை இரத்த மணமும் அதையும் மீறி வந்து வேப்பெண்ணெய் மணமுமாகச் சேர்ந்து எழுப்பி விட்டது. நான் எங்கே இருக்கிறேன் என்பது ஒருகணம் எனக்கே தெரியவில்லை. நான் உட்கார்த்திருந்த சாய்மான நாற்காலியில் தூங்கிவிட்டேன் என்பதும் அம்மா அல்லது சுனேத்திரா தலைக்கு ஒரு தலையணை வைத்திருக்கிறார்கள் என்பதும் அப்பொழுது தான் புரிந்தது. நான் கண்களைத் துடைத்துக் கொண்டு டார்ச்சை அடித்து சுவர்க் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தேன். காலை மூன்று மணியாகியிருந்தது. வீடு இருளில் மூழ்கியிருந்தது. ஆனால் வீட்டுப் பெண்கள் எல்லோரும் விழித்திருப்பது தெரிந்தது.

டார்ச் விளக்கின் வெளிச்சத்தை கண்டுவிட்டு அங்கே வந்த அம்மா "நீ சாய்மனையிலேயே தூங்கிட்டாய் " என்றாள்.

" நல்ல தூக்கத்தில இருந்ததால நாங்களும் எழுப்பல்ல தூங்கட்டுமேன்னு விட்டுவிட்டோம்.

அம்மா ரொம்பவும் அமைதியாகப் பேசினாள். முணங்கல் சத்தமும் அடங்கியிருந்தது." சாவித்திரிக்குக் குழந்தை பிறந்திடுச்சா? "பொண்ணு பாரத்த எறக்கிட்டா " என்னுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டு அம்மா சொன்னாள். பிறகு என்னருகில் வந்து உட்கார்ந்து நேரத்தைப் பார்த்துவிட்டு " ஆண் கொழந்தை . ரெண்டு மணி எத்தனையோ நிமிஷக் கணக்கில தான் பொறந்திச்சு. அம்மாவும் புள்ளையும் தூங்கிறாங்க" என்றாள்.

"மெராயா கட்டிலுக்குப் பக்கத்திலேயே இருக்கா. மகள் சுனேத்திரா

இவ்வளவு நேரமும் இருந்திட்டு இப்பதான் தூங்கப் போனா. செய்திய கேட்ட அப்புறந்தான் பெமியானும் போனான்.

"அம்மாக்கும் புள்ளைக்கும் கஷ்டம் இல்ல. அம்மன் அருளால் எல்லாம் நல்ல படியாக நடந்திருச்சு. ரெண்டு பேரும் ஜோரா இருக்காங்க. ஏதாச்சும் தப்பா போயிருந்தா யாருக்கு சொல்றது எல்லாம் அந்த கடவுள் செயல்தான். அம்மா பக்தியோடு மேலே பார்த்துச் சொன்னாள். எனக்கோ ஆவலை அடக்க முடியவில்லை. " கொழந்தை எப்படி ?" என்று கேட்டேன்.

" ஒனக்கு வேணுமின்னா போய்ப்பாரு. பொறந்த ஒடனே வீடே ஆடுறமாதிரி சத்தம் போட்டடான்." அம்மாவுக்கு இதைச் சொல்லும் போது சிரிப்பே வந்துவிட்டது. " ஆனா இப்ப ரெண்டு பேரும் நல்லா தூங்கிறாங்க " என்றாள்.

" இப்படியே இருக்கிறது நல்லதா? அவங்கட சடங்கு ஏதாச்சும் இருக்குமே" மேரி அம்மா சொன்னதைக் கேட்டு எனக்கே வியப்பாக இருந்தது.

" இதில எல்லாம் என்ன சடங்கு?" அம்மா புன்சிரிப்போடு சொன்னாள்.

" இப்ப நான் என்ன சொன்னேன்னா மொத மொதல்ல பால் கொடுக்கிறது மாதிரி ஏதாவது சடங்கு அவங்களுக்கும் இருக்கும் இல்லியா" நாங்க எங்களோட வழக்கப்படி எல்லாம் செஞ்சோம். கொழந்தைய தொடச்சு கையில எடுத்து உடனே மொராயா தலை மயிரில கொஞ்சும் கத்தரிச்சு எடுத்தா. இப்ப நம்ம காலத்தபோல கொழந்தை பொறந்ததும் குளிப்பாட்ட மாட்டாங்க. பிள்ளை எந்திரிச்சதும் பால் ஊட்டும் சடங்க செய்யலாம். அதுக்குத் தான் நான் பாத்துக்கிட்டிருக்கேன்."

" சாவித்திரிக்கு இது விருப்பமா?"

"அவளுக்கு சிங்கள ஆசாரங்களும் தெரியாது. தமிழ் வழக்கங்களும் தெரியாது. தலைச்சன் புள்ளைதானே. தாய்ப்பால் குடுக்க முதல்ல கொஞ்சம் பால் எடுத்து நாக்கில தடவிடுவோம்" சாவித்திரியின் பிரசவத்தைக் கண்ட தால் அம்மா பத்து வயது இளையவள் ஆகிவிட்டாள். அவளுடைய குரல் கூட விளையாட்டுத்தனமாக இருந்தது. " யார் வேணாலும் அவனுக்கு நாக்கில பால்தடவலாம். அவனுக்கு ஒன்னுமே ஆகாது. நல்ல எதிர்காலமிருக்கு. ஏன் நான் இப்படி சொல்றேன் தெரியுமா அவனோட தொப்புள் கொடிய வெட்டுற போது ஒரு

சேவல் கூவிச்சு."

நான் கொட்டாவி விட்டதைப் பார்த்து அம்மா" இப்ப நீ எழும்பினதால ஒரேயடியாப் போய் கட்டில்ல படுத்துக்க. இன்னும் கொஞ்சம் தூங்கலாம். வேலைக்குப் போறதில்ல தானே. நேரம் கழிச்சு எந்திரிக்கலாம்" என்றாள்.

நீண்டநாள் களைப்பை தாங்கிக் கொண்டிருந்த சாவித்திரி அதை ஈடுசெய்வது போல வட்டியும் முதலுமாக தூங்கினாள். மறுநாள் மாலை தான் அவள் எழும்பினாள். அதற்கும் அடுத்த நாள் மெராயா புறப்படத் தயாரானாள். முந்தாநாள் கெளம்பின பயணமுங்க. இன்னிக்கு எப்படியாச்சும் போயே ஆகனும்" என்றாள்.

" இராணுவச் சட்டம் போட்டிருக்கு இல்லியா எப்படி போவீங்க" அவளை எப்படியாவது தங்க வைத்து விடவேண்டும் என்ற ஆசையில் அம்மா சொன்னாள்.

"ராணுவச் சட்டம் அமுல்ல இருக்கிறப்போ தானே நான் வந்தேன்" மெராயா அமைதியாகச் சொன்னாள். " இராணுவச் சட்டம் இருந்தா என்னங்க இராணுவத்தில உள்ளவங்களும் நாமளும் சும்மா பாத்துக்கிட்டு இருக்கமுடியுமா? இது ராணுவக்காரங்களுக்கு நல்லாவே தெரியும்" தான் எதிர்நோக்கிய கஷ்டமான காரியம் வெற்றியாக முடிந்துவிட்டதால் அவளுடைய குரல் கூட ஒரு குழந்தையின் கொஞ்சல் குரலாக மாறிவிட்டது.

"என்னேட பையைப் பாத்தாங்கன்னா போதும் உடனேயே அனுமதி குடுத்திடுவாங்க" அவள் அம்மா இருந்த பக்கத்தைப் பார்த்து கண்டிப்பான குரலில் சொன்னாள். பிறகு சுனேத்திரா ஒரு கடித உறையை நீட்டினாள். அதற்குள் அவள் பணம் வைத்திருந்தாள். மெராயா அதை எடுக்க மறுத்துவிட்டாள். " சாவித்திரி உங்களுக்கு உறவுக்காரியா என்ன? ஆனா நீங்க அந்தப் பொண்ணுக்கு ஒதவி பண்ணியிருக்கிறீங்க. அப்படி இருக்க நீங்க குடுக்கிற இந்தப் பணத்தில நான் ஒரு வேளை சாப்பிட நெனச்சேன்னா என்னோட மனுசத்தன்மை என்ன ஆகிறது?"

அவளை வற்புறுத்த வேண்டாம் என்று நான் சுனேத்திராவுக்கு ஜாடை காட்டினேன். தயாராக நின்ற மெராயவையும் அழைத்துக் கொண்டு தோட்டங்களைக் கடந்து ஒரு வழியாகச் சந்தியை அடைந்தேன்.

செல்லையாவுக்குச் சுடுகாடாகிப்போன அந்தக் கடையின் சுவர்களை நான்

மொராயவுக்குக் காட்டியதும் "நம்மட ஆளுங்க செய்த வேல அநியாயமுங்க" என்று கன்னத்தில் கைவைத்தாள். அவளுடைய குரலில் சோகம் தொனித்தது. " நானே இத செய்தது மாதிரி தெரியுதுங்க. ஆனா அதே நேரத்தில இந்த வேலயில நானும் சம்பந்தப்பட்டதால அந்தக் கடன்ல கொஞ்சம் தீர்த்துக்கிட்ட மாதிரியும் இருக்கு ஒரு புது உயிர் இந்த பிரபஞ்சத்தக் காண வெச்சுட்டோமுங்க. அதுக்கு நாங்க ஒதவி பண்ணியிருக்கோம். இல்லியா ஐயா" அவள் என்பக்கம் திரும்பி சிரித்தாள்.

சில நாட்கள் கழிந்ததும் ராணுவச் சட்டம் மீண்டும் ஊரடங்குச் சட்டமாக மாறியது. இரண்டு குழந்தைகளும் வயதாகிய தாயும் உட்பட குழந்தை பிரசவித்த அநாதைத் தாயுமாக இவ்வளவு பேரையும் கவனிப்பது எங்களுடைய சக்திக்கு மீறிய செயலாக பட்டது. சுனேத்திராவின் வீட்டிலிருந்து உதவி பெறலாமென்றால் அங்கே போகக்கூடிய நிலை இல்லை. மின்சாரம் இல்லாததால் மிஞ்சிப் போன பழைய உணவுகளை வைக்க வழியில்லை. சிறிது நேரத்துக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும். அந்தக் குறுகிய காலத்துக்குள் கடைகளின் முன்னால் கியு வரிசையில் ஜனங்கள் நிற்பார்கள். ஆனால் கடைகளில் சாமான்கள் இருந்தால் தானே. இதற்குக் காரணம் உள்ளவர்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்று பதுக்கிக் கொண்டார்கள். தெலபுவவில் உள்ள ஏதாவது ஒரு கடையில் வாடி வதங்கிய காய்கறி கண்ணுக்குப் படும்படியாக இருந்தால் போதும். அடுத்த கணமே அது மாயமாய் மறைந்துவிடும். சல்கம வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த பெண்களும் ஆண்களும் தண்ணீர் தேடி அலையும் பித்துப்பிடித்த நாய்கள் போல உணவு தேடி வந்து கொண்டிருந்தார்கள். கொஹில கிழங்கு, பலாக்கொட்டை, பலாப்பிஞ்சு இவற்றுக்கெல்லாம் எக்கச்சக்கமான கிராக்கி ஏறிவிட்டது. விலையும் அதிகரித்துவிட்டது. வியாபாரிகள் பொருட்களின் விலையை உயர்த்துவது என்று தீர்மானித்து விட்டார்கள். இதனால் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும் கடைகளை மூடியே வைத்திருந்தார்கள். ஆனால் கடைகளின் கொல்லைப்புறத்தில் எப்படியும் கியுவரிசை உண்டாகி விட்டது. இதில் நின்றவர்களுக்கு அதிக விலைக்குச் சாமான்கள் விநியோகிக்கப்பட்டன. காலம் காலமாக புழுப்பிடித்து விற்கமுடியாமல் கிடந்த அரிசி கூட நொடியில் விற்பனையாகிவிட்டது. இரண்டு பிள்ளைகளையும் வயதான ஒரு தாயாரையும் கொண்ட ஒரு சின்னஞ்சிறு குடும்பத்தை நடத்துவதே எனக்கு பகீரதப் பிரயர்த்தனமாக இருந்தது. அப்படியிருக்க சாவித்திரி எங்களுக்கு ஒரு மேலதிக சுமை என்று தான் சொல்லவேண்டும்.

வீடிழந்து பொருள் இழந்த அகதிகளுக்கு அரசாங்கம் அகதி முகாம்களை ஏற்படுத்தியது. அகதிகளை வந்து சரணடையும் படியும் கேட்டுக் கொண்டது. சாவித்திரிக்கும் குழந்தை பிறந்து ஐந்தாறு நாட்கள் கழிந்துவிட்டன. ஆனால் ரங்கசாமியைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. தன்னுடைய தந்தையும் கணவரும் வராமல் இருப்பதைக் காணச் சாவித்திரியின் துக்கம் பன்மடங்காகியது. செல்லையாவைப் பற்றிய செய்தியை நான் சிறிது சிறிதாக சுனேத்திராவுக்கு வெளிப்படுத்தினேன். ஆனால் சுனேத்திராவோ அவர்கள் இருவரும் விரைவாக வந்து விடுவார்கள் என்று சாவித்திரியை தேற்றிக் கொண்டிருந்தாள். ஆனால் ரங்கசாமியின் வருகை தாமதமாக ஆக என்னைக் காட்டிலும் சுனேத்திரா தான் சங்கடப்பட்டாள். பொறுமையை இழக்கலானாள். பணக் கஷ்டத்தை அவளால் தாங்க முடியவில்லை.

" இப்ப சாவித்திரி கொழந்தயோட வேலையெல்லாம் தனியா செஞ்சுக்கப் பழகனும். ரங்கசாமி எந்த நிமிஷமும் வரலாம்" என்றாள் சுனேத்திரா. அவள் இப்படி சொல்வதற்குக் காரணம் ஜுவானிசின் மனைவி மேரி ஒருவரும் கேட்டுக் கொள்ளாமல் தானாகவே வந்து சாவித்திரிக்கு உதவி செய்யலானாள். இது சுனேத்திராவுக்குப் பிடிக்கவில்லை. எனக்கு இது நன்றாகப் புரிந்தது. சாவித்திரி இன்னும் ரொம்ப நாள் எங்களோடு தங்கநேர்ந்தால் நிச்சயமாக மனஸ்தாபங்கள் ஏற்படவே செய்யும். இந்தச் சிக்கல் எப்பொழுது எப்படித் தீரப்போகிறதோ என்று நான் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பாவும் வருவதாக இல்லை. கணவரும் வரத் தாமதமாகிறது. சாவித்திரி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அவளுடைய பொறுமை எல்லை கடந்துவிட்டது. அவள் புலம்புவதைக் கண்டு சுனேத்திராவுக்கும் மனசு இளகியது. " என்னால அம்மா அவங்களுக்கு எம்புட்டு கரைச்சல்? இந்த நன்றி கடன நான் எப்படித் தான் தீர்க்கப்போறேனோ? ஏழு பொறப்புக்கும் கடமபட்டிருக்கேன்." அந்த நேரத்தில் சுனேத்திரா அவளுக்கு ஆறுதல் சொல்வாள். ரங்கசாமியைப் பற்றி ஒரு துப்பும் கிடைக்கவில்லை. போகப் போக எனக்கும் பொறுமை குறைந்துவரத் தொடங்கியது.

நாங்கள் இப்படிச் பொறுமை இன்றித் தவித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு நாள் இரவு ஒரு இராணுவ வாகனம் வந்து குறுக்குப் பாதையின் ஓரமாக நின்றது.

" கதவ தெற" இது ஒரு இராணுவ வீரனின் அட்டகாச அதட்டல் குரல்

என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம். எங்களுக்கோ பயமாக இருந்தது. உடலெல்லாம் நடுங்கியது. ஆயுதம் தாங்கிய அந்த இராணுவ வீரனின் கட்டளைக்குப் பணிந்து கதவைத் திறந்தோம்.

"ரங்கசாமியோட மக இங்க இருக்காளா?"

நானோ இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் சுனேத்திராவைப் பார்த்தேன்.

"ரங்கசாமியோட மக இங்க இருக்காளான்னு தான் கேட்டேன்" அந்த இராணுவ வீரனின் கேள்வியில் கடுமை தொனித்தது. அவன் இருட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை நோக்கி சைகை காட்டினான். யாரோ ஒரு ஆள் இருட்டில் நடந்து வந்து வீட்டு வாசல் படியருகே நின்றான்.

" ரங்சாமி"

ரங்கசாமி ஓடிவந்து என் காலடியில் விழுந்தான். நான் அவனை அணைத்துக் தூக்கி தோட்டத்தின் கோடிக்கு அழைத்துச் சென்றேன். "செல்லையாவ கொழுத்திட்டாங்க ஐயா" ரங்கசாமி என் கைகளை பிடித்துக் கொண்டு அழுதான்.

" என்னோட எல்லாத்தயும் எரிச்சிட்டாங்க நான் கஷ்டப்பட்டு தேடிய எல்லாம் போயிடிச்சுங்க. வீடு வாசல் இல்ல. செல்லையா இல்ல ஒன்னுமே இல்ல ஒடம்பில இருந்த துணி மட்டுந்தான் மிஞ்சியிருக்குங்க."

நான் அவனுடைய பிரலாபத்தை மௌனமாகக் தாங்கிக் கொண்டேன்.

"நிப்பாட்டி வெச்ச சைக்கிள்ளையும் எடுத்துட்டாங்க" அவனுடைய அழுகை ஓயவேயில்லை.

" என்ன ?"

"காலையில ரயில்ல போக வந்த ஐயாமாரோட சைக்கிள் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போயிட்டாங்க. குழப்பமாக இருந்ததால சாவித்திரிய ஜுவானிஸ்

வீட்டுக்கு அனுப்பிவிட்டு நான் ஒழிஞ்சுகிட்டேன். பாருங்க ஐயா சைக்கிள் எல்லாத்தயும் எடுத்திட்டாங்க."

இது நான் கேள்விப்படாத புதுச் செய்தி. இருட்டில் நின்று கொண்டிருந்த இராணுவ வீரன் கண்ணுக்குப் புலப்படவில்லை. அவன் புகைபிடித்துக் கொண்டிருந்ததால்– அந்த நெருப்புத் தணல் மட்டும் நன்றாகத் தெரிந்தது. ரங்கசாமியின் புலம்பலை தடுத்து நிறுத்தப் பார்த்தேன். பயனில்லாமல் போய்விட்டது. ஆகவே அவன் அழுகிற வரை அழட்டும் என்று நான் பேசாமல் இருந்தேன். செல்லையாவைப் பற்றிய விஷயத்தை சாவித்திரிக்குத் தெரியப்படுத்துவதை கூடியவரை பின்போடும்படி நான் ரங்கசாமிக்கு மீண்டும் மீண்டும் சொன்னேன். சாவித்திரிக்கு இந்த விஷயம் தெரியாது என்பதை அறிந்ததும் ரங்கசாமி மிகவும் கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டான். நான் ரங்கசாமியின் முதுகில் தட்டி" ரங்கசாமிக்கு எல்லாமே போயிடிச்சு. ஆனா ஒரு பேரன் இருக்கான்தானே" பேரன் பிறந்ததை எண்ணி சந்தோஷப்பட இது நேரமில்லை. உண்மையில் அக் குழந்தை ரங்கசாமி குடும்பத்துக்கு ஒரு பெரிய சுமை. இது எனக்குப் புரியாததல்ல. இந்த விஷயத்தில் நான் ரொம்ப தாமதமாகி விட்டேன். " புள்ளைக்கு அப்பன் இல்லீங்க. சாவித்திரிக்கு புருஷன் இல்லீங்க" ரங்கசாமி மீண்டும் அழுது புரண்டான். நாங்கள் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தது தான் தாமதம் சாவித்திரி ஓடோடி வந்து அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

" அப்பா ஐயோ அப்பா" இதற்கு மேல் அவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

தந்தையும் மகளும் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளட்டும் என்று நான் சற்று விலகி அந்த ராணுவ வீரனிடம் பேச்சுக் கொடுத்தேன். " ரங்கசாமி நல்லா இருட்டினதுக்கபுறம் தான் வருவேன்னான். தான் பகல் நேரத்தில வெளிய வர்ரதால தனக்கு உதவி செஞ்சவங்க ஆபத்தில மாட்டிக்குவாங்கன்னு அந்த ஆளு நெனைக்குதுங்க."

சுனேத்திரா சாவித்திரிக்கும் கொடுப்பதற்குச் ஏதேதோ சாமான்கள் சேகரித்துக் கொண்டிருந்தாள். எங்களுடைய மகள் பிறந்த பொழுது அவளைச் சுற்றிவைத்த கோடித் துணிகள் இன்னும் சுனேத்திராவிடம் இருந்தன. அதை சாவித்திரிக்குக் கொடுக்கலாமே என்று நான் சுனேத்திராவுக்கு முன்னர்

சொன்னபோது அவள் என்னை முறைத்துப் பார்த்தாள். ஆனால் இப்பொழுது அவற்றைத்தானாவே சாவித்திரிக்குக் கொடுப்பதற்காக அடுக்கிக் கொண்டிருந்தாள். ரங்கசாமிக்கும் ஏதாவது கொடுக்கவேண்டும் போல அவளுக்குத் தோன்றியதோ என்னவோ என்னுடைய உடைகளையும் கிளற ஆரம்பித்துவிட்டாள். " இப்போதைக்கு இது போதும். திரும்ப எப்பவாச்சும் வருவாங்க தானே அப்ப குடுக்கலாம் இல்லியா" அம்மாவின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறினாள் சாவித்திரி. அம்மா அவளை அணைத்துத் தூக்கி ஆறுதல் சொன்னாள். நீ அழக்கூடாது அம்மா. வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். உன்னோட வீடுவாசல் போயிடிச்சு. நெஜந்தான். ஆனா அருமையான ஒரு ஆண் கொழந்த கெடைச்சிருக்கானே. இப்ப அப்பாவ கண்டாச்சு. இனிமே என்ன ஒன்னோட புருஷனையும் சந்திச்சிட்டா மனசில உள்ள கஷ்டமெல்லாம் கொறஞ்சிடும். இதக்காட்டிலும் பெரிய கஷ்டம் மனுசங்களுக்கு வந்திருக்கம்மா "

"செல்லையா வரமாட்டாரு" சாவித்திரி ஒவென்னு அழுதாள். நான் சந்தேகத்தோடு சுனேத்திராவைப் பார்த்தேன். சுனேத்திரா அல்லது மேரி மூலம் இந்த ரகசியம் வெளிப்பட்டு விட்டதோ? செல்லையா இனி வரமாட்டார். சாவித்திரி தலையை ஆட்டியபடி காலை நிலத்தில் உதைத்துக் கதறினாள்.

" செல்லையாவுக்கு ஏதோ நடந்து போச்சு. அவர் உயிரோட இருந்தா இம்புட்டு நேரத்துக்கு நம்மள பாக்க வந்திருப்பார். ராத்திரிலயாவது வருவார். அவர் உயிரோட இருந்தா அப்பா வர்றதுக்க முன்னாடியே எங்கள பாக்க வந்திருப்பார்."

சாவித்திரியின் புலம்பல் என் மனசை சுட்டுப் பொசுக்கியது. திடீரென்று என்பார்வை அங்கே நின்ற இராணுவ வீரன் பக்கம் திரும்பியது. அவன் கண் இமைக்க மறந்து சிலையாகி நின்றான். அவனுடைய விரல்கள் மட்டும் துவக்கில் தாளம் போ டடுக்கொண்டு இருந்தன. ரங்கசாமி தன்னுடைய பேரனை கைகளில் ஏந்தி அந்தச் சின்னஞ்சிறு முகத்தைக் கண்ணீரில் நீராட்டினான்.

ஊரடங்குச் சட்டம் இப்போ இரவு வேளையில் மட்டும் அமுலாகியது. இந்த மாற்றம் நிகழ்ந்த மறுநாள் அகதிமுகாமுக்குச் சென்று சாவித்திரியைப் பார்த்து வரும்படி அம்மா என்னை வற்புறுத்தினாள். அவளுடைய வேண்டுகோளை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. குழந்தையையும் எடுத்துக் கொண்டு

சாவித்திரி அகதி முகாமுக்கு சென்ற பிறகு ஜுவானிசின் மனைவி மேரி செல்லையாவுக்கு நடந்த சம்பவம் அனைத்தையும் அம்மாவிடம் சொல்விட்டாள். இதனால் சாவித்திரியையும் குழந்தையையும் நினைத்து அம்மா ரொம்பவும் வருத்தப்பட்டாள். பிரசவித்திருக்கும் ஒரு பெண்ணுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் தயார் பண்ணி அவற்றோடு சோற்றுப் பார்சல்களையும் வைத்து என்னிடம் கொடுத்தாள்.

" இவ்வளவு எதுக்கு " நான் ஆச்சரியத்தோடு கேட்டேன்.

"அகதி முகாமில எவ்வளவு ஜனங்க இருக்காங்க யாருக்காச்சும் கொடுக்கலாம். பசிக்கு சோறு போடறதப் போல புண்ணியம் வேற எங்க இருக்கு"

ரங்கசாமியைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டருகில் சொன்னதும் அங்கே நின்ற ஒரு படை வீரன் ஒலிபெருக்கியில் அதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒரு பாடசாலைக் கட்டிடத்தில் தான் அந்த அகதி முகாம் இருந்தது. கட்டிடத்தின் நடுவில் தற்காலிக மலசல கூடங்கள் சில இருந்தன. அவைகளிலிருந்து வெளியாகிய துர்நாற்றத்தை சகிக்க முடியவில்லை. என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்த ஒருவர் என்னை வேண்டாவெறுப்பாகப் பார்த்தார். கதவுக்ளுக்குச் சற்று அப்பால் ஒருவர் தன்னைச் சந்திப்பதற்கு யாரும் வரமாட்டார்களா என்று என்னை உதாசீனமாகப் பார்த்தார். என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே நான் ஒரு சிங்கள ஆள் என்பது அவர்களுக்கப் புரிந்திருக்கவேண்டும். நான் சிங்களவனாகப் பிறந்து விட்டேனே என்று வெட்கப்பட்டேன். நான் நனைந்த கோழிபோல ஒதுங்கி ரங்கசாமி வரும்வரை ச–சங்கடத்தோடு காத்திருந்தேன்.

" எதிரிசிங்க " யாரோ என்னை அழைத்தார்கள். " எதிரிசிங்க" மீண்டும் அதே குரல்.

நான் திரும்பிப் பார்த்தேன். முழங்கால்வரை வேட்டித் துண்டைச் சுற்றிக் கொண்ட சிவந்த மேனியுடன் கனமான உடம்போடு ஒருவர் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் யார் நான் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டேன்

அவர் சற்று நின்று " எதிரிசிங்க" என்று மீண்டும் அழைத்தார். அவர் வேறுயாரும் இல்லை. எங்கள் காரியாலயத்தில் வேலை பார்க்கும் கணக்காளர் சதாசிவம் தான். அருகில் வந்த பிறகு தான் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

அவருடைய கோலத்தைப் பார்த்து நான் ஒரு கணம் கல்லாகச் சமைந்துவிட்டேன். நீளமான கைகளைக் கொண்ட மேலங்கி காற்சட்டை, கழுத்தில் டை, கண்களில் கண்ணாடி இத்தியாதி கோலத்துடன் திகழும் சதாசிவத்தின் உத்தியோகபூர்வமான தோற்றம் என் மனக் கண்களில் தெரிந்தது. அந்தப் பக்கத்தால் போய்க்கொண்டிருந்த ஒருவரிடம் தமிழில் ஏதோ பேசிவிட்டு கைகளைப் பிடித்து என்னை தாழ்வாரத்தின் கோடிக்குஅழைத்துச் சென்றார்.

நான் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தேன். " என்னுடைய எல்லாமே போச்சு எதிரிசிங்க. இதோ நான் இடுப்பில் கட்டியிருக்கிற துணி மட்டும் தான் மிச்சம்" என்று தன்னுடைய இடுப்புத் துண்டைக் காட்டிச் சொன்னார்.

" வெள்ளவத்தையில என்ட வீட்டையும் எரிச்சிட்டான்கள்."

" ஐயோ பெரிய அநியாயமாயிருக்கே" நான் நெற்றியில் அடித்துக் கொண்டேன்.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்னர் சதாசிவத்தின் மனைவி இறந்த பொழுது அலுவலகத்தில் வேலை செய்யும் சக ஊழியர்களோடு நானும் போயிருந்தேன். ஒரு நகரத்தில் என்னென்ன வசதிகள் கிடைக்குமோ அதெல்லாம் அந்த வீட்டில் இருந்தது. அதே நேரத்தில் ரொம்பவும் அடக்கமாகவும் காணப்பட்டது. அங்கே அன்று நடந்த மரணச் சடங்குகள் என் ஞாபகத்துக்கு வந்தன. தண்ணீருக்கடியில் இருந்து பாடினால் எப்படி இருக்குமோ அது போன்றதொரு மிருதுவான இசை அங்கு நிலவிய சோகத்தை மேலும் அதிகரித்தது. அது அவர்களுடைய சமய சம்பந்தமான சங்கீதமாக இருக்கவேண்டும். சதாசிவத்தின் சொந்த வாழ்க்கையைப் பற்றி அதுவரை அலுவலகத்தில் இருந்த எவருக்குமே தெரியாது. அவருக்கு நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதும் அவர்களில் மூவர் திருமணமாகி வெளிநாட்டில் என்பதும், விவாகமாகாத கடைசிப் பிள்ளை பெற்றோருடன் வசிக்கிறாள் என்பதும் செத்த வீட்டுக்குப் போனபொழுது தான் தெரியவந்தது. அவர் உயர் பதவி வகிக்கும் ஒரு உத்தியோகத்தர். அவருக்கும் எங்களுக்கும் இடையில் நெருங்கிய சம்பந்தம் எதுவும் இருக்கவில்லை. இருந்தும் ஒரு ஆப்த

நண்பனிடம் சொல்வது பேல அவர் தனக்கு நேர்ந்த துர்க்கதியை என்னிடம் சொன்னார்.

செய்தி கிடைத்ததும் ரங்கசாமி ஒடோடி வந்தான். அவனோடு சமாச்சாரம் எல்லாம் பேசிவிட்டு நான் எடுத்துவந்த உலர் உணவுப் பதார்த்தங்களையும் சோற்றுப் பார்சல்களையும் அவனிடம் கொடுத்தேன்.

" சாவித்திரி இங்கே இல்லீங்க கொழந்தைக்கு சொகமில்லாம வர்றதால வேற இடத்துக்கு எடுத்துக்கிட்டு போயிட்டா"

நான் ஒரு பழைய சட்டைகொண்டு வந்திருந்தேன். ஆனால் அதை ரங்கசாமிக்குக் கொடுக்க எனக்க மனம் வரவில்லை. உயர் பதவி வசிக்கும் ஒரு உத்தியோகத்தர் மேலங்கி இல்லாமல் அங்கே நிற்கிறார். ரங்கசாமியோ சட்டை அணிந்திருந்தான். சதாசிவம் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார். இதைக் கவனித்த ரங்கசாமி அடக்க ஒடுக்கமாக ஒதுங்கி நின்றான்.

" எல்லாரையும் கப்பல்ல ஏத்தி யாழ்ப்பாணம் அனுப்பப் போறாங்கள். எனக்கு யாழ்ப்பாணத்தில போய்த்தங்க இடம் இல்லை. யாழ்ப்பண காணியைவித்துத் தான் வெள்ளவத்தையில வீடு கட்டினனான். தாங்கள் எப்ப யாழ்ப்பாணம் வருவம் என்று பொடியள் பாத்துக் கொண்டிருக்கினம். நான் ஒஸ்ரேலியாவுக்கு போகலாம் என்று யோசிக்கிறேன். எதிரிசிங்க" என்றார் சதாசிவம்.

அவர் என்னிடம் எதையோ எதிர்பார்க்கிறார் என்பது எனக்குப் புரிந்தது. எனக்கு மேலே பதவி வகிக்கும் இந்த உத்தியோகத்தருக்கு நான் என்ன விதத்தில் உதவலாம் என்று எனக்கே தெரியவில்லை. அவர் கண்ணாடிக் கதவுக்கு அந்தப் பக்கத்தில் இருப்பவர் . நானோ இந்தப் பக்கத்தில் இருப்பவன்.

"நான் உதவி செய்யலாம் சார். உங்களுக்கு என்னால் ஏதாவது ஆகவேண்டும் என்றால் கேளுங்க சார்"

அவர் என்னுடைய தோளில் கைவைத்து எதிரிசிங்கஉங்களுக்கு முடியுமானால் வெள்ளவத்தை வீட்டைப் பார்க்க என்னை கூட்டிக்கொண்டு போங்கள்" என்றார்.

" நான் இருக்கிற நிலமயில டாக்சிக்குக் குடுக்க என்னட்ட பணம் இல்லை" என்று சொல்லிவிட்டு ரங்கசாமியைக் கடைக்கண்ணால் பார்த்தார். ரங்கசாமியோ சற்று தூரத்தில் வந்து போய்க் கொண்டிருந்த ஜனங்களை நோட்டம் விட்டான்.

" வங்கிக்குப் போய் கொஞ்சம் பணம் எடுக்கலாம் என்றால் எப்படி போறது போக வழியில்லை. இண்டைக்கு வங்கி திறந்தவங்கள். எனக்கு போட்டுக் கொண்டு போக சட்டை இல்லை. வீட்டில இருந்தாப்போல தானே இங்க வந்தனான். கட்டியிருந்த வேட்டி மட்டும் தான். அதையும் ரெண்டாக கிழிச்சாச்சு.

"நான் ரங்கசாமிக்குச் குடுக்கிறதுக்குன்னு ஒரு சேர்ட் கொண்ணாந்தேனுங்க. அது கொஞ்சம் பழசு அத சாருக்கு குடுக்கிறதுக்கு எனக்குமனசு இல்ல" நான் அவருடைய முகத்தைப் பார்க்காமலே சொன்னேன்.

" பரவாயில எதிரிசிங்க. அதுக்கென்ன அதை எனக்குத் தாருங்கோ" "அது ரொம்பப் பழசு " நான்யோசனையோடு சொன்னேன். திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது . நான் தலையைத் திருப்பி போட்டிருந்த சட்டையின் கமக்கட்டுப் பகுதியை மணந்து பார்த்தேன். சட்டையில் அழுக்கு இல்லை. சலவைக்குப் போட்ட சட்டைதான். இதை அவருக்குக் கொடுத்துவிட்டு பழையசட்டையை நான் போட்டுக்கொண்டு போகலாம் என்று எண்ணினேன்.

" சார் இங்கே இருக்கிற விஷயம் கந்தோரில ஒருத்தருக்கும் தெரியாதுபோல இருக்கு. தெரிஞ்சா பாக்க வந்திடுவாங்க" நான் அவருக்காகப் பச்சாதாபப் பட்டேன்.

சதாசிவம் பெருமூச்ச விட்டார். என்னைப் பாக்க அவை வருவினமா ? எனக்கு யாரையும் அதிகம் தெரியாதே" என்றார். " அப்படி சொல்லாதீங்க சார்.தெரிஞ்சா நிச்சயம்வருவாங்க. டாக்சியில் அவரை வெள்ளவத்தைக்கு அழைத்துச் செல்வதற்கு நான் உடன்பட்டேன். பாதை ஓரமாக இருந்த எத்தனையோ வீடுகள் தீக்கிரையாகிக் கிடந்தன.சதாசிவத்தின் வீடும் இவற்றில் ஒன்று. இதைப் பார்க்க பார் கக எனக்கு ஒருபுறம் வெட்கமாக இருந்தது. மறுபுறம் துக்கம் தொண்டையை அடைத்தது. எனக்கு சதாசிவத்தின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

எரிக்க முந்தி சாமான்களை எல்லாம் உடைத்திருக்கினம். அவர் குனிந்து பார்த்தபடி சொன்னார். என் மனதில் ஒரு எண்ணம் ஓடியது. அதாவது வந்த கலகக்காரர்கள் எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக் கொண்டு மிகுதியை உடைத்துக் கொட்டி நெருப்பு வைத்திருக்கிறார்கள். எரியாமல் கிடந்த ஏதோ ஒரு பொருளைக் கையில் எடுத்த சதாசிவம் மேலும் கீழுமாகத் திருப்பிப் பார்த்தார்.

" இது டி.வி. பெட்டியின் ஒரு துண்டு"

"சீலிங் சட்டென்று தீப்பிடிச்சிருக்கு. அது கனடாவில இருந்து அனுப்பினது. பொருத்தக்கூடியது. பிளாஸ்ட்டிதானே அதுதான் உடன எரிஞ்சுட்டுது.

சதாசிவம் அங்குலம் அங்குலமாக வீட்டை வலம் வந்தார். எனக்கு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நாங்கள் வந்த வாடகைக் காரின் சாரதி அவசரப்பட்டவன் போல வாகனத்தை விட்டுஇறங்கி வந்தான். சாரத்தை திரட்டி முழங்கால்களுக்கிடையில் செருகிறபடி கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு நின்றான். சதாசிவம் குனிந்து எதையோ எடுப்பதை பார்த்துவிட்டுநான் இருந்த பக்கம் திருப்பினான். கணத்துக்கு கணம் கடிகாரத்தைப் பார்த்தபடி இருந்த அந்தச் சாரதியின் தவிப்பு சற்ற அடங்கிவிட்டது. அவனுள்ளே ஒரு ஆவல் ஏற்பட்டுவிட்டது. பேராசிரியரின் விளக்கத்தைக் கேட்டுக் கொண்டு அவருக்குப் பின்னால் செல்லும் மாணவன் போல சதாசிவத்தைப் பின்தொடர்ந்தான். புகை படிந்திருந்த சுவரை எட்டும் தூரம் வரை கைகளால் தடவினார் சதாசிவம் " வோல் பேப்பர் சட்டென்று தீப்பிடிச்சிருக்கு" என்றார்.

என்னுடைய தவிப்பு அதிகரித்தது. விரக்தியோடு அவர் நடந்து கொண்ட முறையைப் பார்த்து என்னையே நான் நொந்துகொண்டேன். அவருடன் இந்த பயணம் வந்தது என்னுடைய முட்டாள் தனம் தான். அரைமணிநேரம் போனது ஒரு நாள் கழிந்தது போல அவ்வளவு நீண்ட நேரமாகத் தெரிந்தது. நாங்கள் திரும்பி வரும் பொழுதும் ரங்கசாமி கேட் அருகில் பார்த்துக் கொண்டு நின்றான். திரும்பி வரும் பொழுது நாங்கள்ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. டாக்சிக்கும், பஸ்சுக்கும் போக என்னிடமிருந்த மிகுதிபணத்தை சதாசிவத்திடம் கொடுத்தேன். அதைப் பெற்றுக் கொண்ட அவர் என்னைகட்டித் தழுவினார். இந்தப் பணத்தைக் கொடுப்பதே எனக்குப் பெரிய வெட்கமாக இருந்தது. வெள்ளவத்தையில் இடிந்து

நொருங்கிப் போயிருந்த தன்னுடைய வீட்டைப் பார்த்தபொழுது ஏற்படாத சோகம் அவருக்கு நான் பணம் கொடுத்த பொழுது உண்டாயிற்று. பணத்தை வாங்கும் பொழுது அவருடைய மூக்கு நுனி சிவந்து துடித்தது.

நான் வாகனத்தில் இருந்தபடியே " ரங்கசாமி எப்பவேனாலும் தெலபுவ பக்கம் வா " என்றேன். அவன் இனிமேல் தெலபுவவுக்கு அந்நியன் என்பதை சொல்லாமல் சொல்லி விட்டேனோ.

நான் இந்த வார்த்தைகளைச் சொன்ன பிறகு தான் ஏன் அப்படிச் சொன்னோம் என்று தோன்றியது. ரங்கசாமியை நான் அந்தக் கோலத்தில் பார்த்ததேயில்லை. ரங்கசாமி அநாதையாக நின்றான். ரங்கசாமி தானாகவே உருவாகிய ஒரு மனிதன். இதனால் வெற்றியின் செருக்கும் திருப்தியும் எப்பொழுதும் அவனிடத்தில் குடிகொண்டிருந்தது. நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து அவனுடைய வெற்றியைக் கொண்டாடினோம். அவனுக்கு அந்த வெற்றியின் சின்னமாக கிரீடம் சூட்டி அந்த வாழ்க்கையியிருந்து தள்ளிவைத்து விட்டோமா?

சதாசிவம் ஆஸ்திரேலியாவுக்குப் போகிறார். ஆஸ்திரேலியா கிடைக்காவிட்டால் கனடாவிலிருக்கும் அவருடைய பிள்ளைகளிடம் போய்விடுவார். அகதிகள் முகாமிலிருந்து வெளியேறும் ரங்கசாமி எங்கே போவான்? சொந்தக் காரர்களின் வீட்டுக்குப் போவானா? அது நடக்காத விஷயம் என்பது எனக்குத் தெரியும். இந்தியாவுக்குப் போவானா? எனக்கு இந்தியா எப்படியோஅப்படித்தான் அவனுக்கும், அவனுடைய பாட்டன் முப்பாட்டன்மார் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் இந்தியாவை விட்டு இங்கே வந்து குடியேறியவர்கள். இதை ரங்கசாமியே என்னிடம் சொல்லியிருக்கிறான். எல்லா உடைமைகளையும் பறித்துக் கொண்டு இன்று வெளியேற்றியிருக்கிறோமே இந்த ரங்கசாமி. அவன் வேறு யாருமல்ல எங்களுடைய ஒரு சகோதரன். அநாதரவாகிவிட்ட மகளையும் பேரனையும் அழைத்துக் கொண்டு அவன் எங்கே போக எண்ணினானோ? என்ன செய்ய நினைத்தானோ?

நான் மீண்டும் ரங்கசாமியைப் பார்த்தேன். சாரதி சந்தேகத்தோடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு இருந்தான். சரி போகலாம் என்றேன். கம்பி வேலியைக் கைகளால் பிடித்துக் கொண்டு ஆயுள் கைதிபோல எங்களைப் பார்த்தான் ரங்கசாமி.

பஸ் தரிப்பிடம் வரை வாடகைக் காரிலேயே வந்து விட்டேன். கட்டணம் எவ்வளவு என்று மீட்டரைக் கடைக் கண்ணால் பார்த்தேன். வெள்ளவத்தையில் மீட்டர் முப்பது ரூபாயைத் தாண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது மீட்டர் அணைக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்ததும் எனக்குச் சற்று பயமாகக் கூட இருந்தது. சாரதி இதுதான் சமயம் என்று என்னைக் கொள்ளையடிக்க நினைக்கிறானோ. நான் மனதுக்குள் கணக்குப் போட்டபடி அவனிடமிருந்து தப்பும் வழி என்ன என்று யோசித்தேன்.

"காவாலிக் கழுதைங்க " சாரதி வேகத்தை கூட்டி வாகனத்தை ஒரு குலுக்குக் குலுக்கி பாதைக்கு திருப்பினான்.

எனக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது. அதே நேரம் ஆச்சரியமாயுமிருந்தது. செய்வதறியாது திகைத்துப்போய் " யார்? நாங்களா?" என்று கேட்டேன்.

" இல்லை சார் "

" அப்படின்னா தமிழ் ஆளுங்களா?" என் குரலில் சந்தேகம் தொனித்தது.

" இல்ல சார் இல்லவே இல்லை. நாங்கதான் " அவன் பற்களை நறநற என்று கடித்தான். சட்டைக் கழுத்தை உயர்த்திக் காட்டினான். அவன் என்னைக் குத்திக் காட்டுகிறானோ என்று மீண்டும் எனக்குச் சந்தேகமாக இருந்தது.

""நானும் இந்த தீப்பந்த வேட்டையில போனேனுங்க" அவன் என் முகத்தை அணுஅணுவாக நோட்டம் விட்டான். எங்களப் பத்தி எங்களுக்கே வெறுப்பாயிருக்குங்க."

பஸ் தரிப்பிடத்தை அடையும் வரை நாங்கள் எதுவும் பேசவில்லை. பஸ் தரிப்பிடத்தில் இறங்கியதும் வாடகை கொடுக்கலாமென்று பார்த்தேன்.

" எனக்கு கூலி வேணாங்க சார்" என்னைப் பார்க்காமலே வாகனத்தை ரிவர்ஸ் பண்ணி ஒரு திருப்பு திருப்பினான். பிறகு தீப்பிடித்த வீட்டுக்குள் இருந்து பாய்ந்து ஓடுவது போல அந்த வாகனம் கண் இமைக்கும் நேரத்தில் ஓடி மறைந்தது.

என்னிடம் ஐம்பது ரூபாய்க்கு மேல் மிஞ்சியிருந்தது. இது பெரிய ஆச்சரியம். வாடகைக்கார் என் கண்களிலிருந்து மறையும்வரை வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தேன்.

நான் சிந்தனையில் மூழ்கிவிட்டேன். ஒரு பஸ் நான் நின்ற இடத்தை தாண்டிப் போய்விட்டது. அது கூட எனக்குத் தெரியவில்லை. அந்த பஸ் ஓலமிட்டபடி ஓடி மறைந்தது. போக்குவரத்து சீர்குலைந்திருந்ததால் இடைக்கிடை தான் ஒரு பஸ் அந்தப் பக்கத்தால்வந்தது. ஆனால் அப்படி வரும் பஸ்சிலும் ஜனக் கூட்டம் அலைமோதியது. இன்னும் நீண்ட நேரத்துக்கு தெலபுவவுக்கு பஸ் கிடைப்பது என்பது குதிரைக் கொம்பு தான். வேறுவழியில்லாமல் என்னையே நொந்து கொண்டு அங்கே காந்திருந்தேன்.

அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்த இடம்தான் இது என்று பார்த்தமாத்திரத்தில் எவருக்குமே தோன்றாது. கரியும் புகையும் படிந்த சிதைந்து போன சுவர்களோடு அந்தக் குடிசை மட்டும் தான் இன்று மிஞ்சியிருந்தது. இந்த நிலைமை ஒரு ஆறு மாதம் தான் நீடித்தது. செல்லையா இறந்துவிட்டான். விஜித்தும் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுவிட்டான். இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்திராவிட்டால் அந்தக் குறுகிய காலத்தில் நகரத்தின் அழகினை மாசுபடுத்தும் வாய்ப்பு அந்தக் குடிசைக்குக் கிட்டியிருக்காது. ரங்கசாமியின் கையிலோ மிச்சம் சொச்சம் என்று சொல்லக்கூடியதாக எதுவுமே இல்லை. ஆகையால் அவனாகவே விஜித்திடம் வந்து நிலத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு பணம் தரும்படி வற்புறுத்தினான். அகதி முகாமில் இருந்த ரங்கசாமி இந்த விஷயமாக எத்தனையோ தடவை விஜித்தைச் சந்திக்க வந்திருந்தான். இதனால் தானோ என்னவோ விஜித்தும் சற்று மனம் இரங்கி இதற்கு சம்மதித்தான். காணிக்கு உறுதி எதுவும் இருக்கவில்லை. அத்துடன் நிலத்தின் பெறுமதியும் குறைந்திருந்தது. இந்தக் காரணங்களினால் காணியை வாங்குபவரே விலையை நிர்ணயிக்க வேண்டியதாயிற்று.

கொடுக்கல், வாங்கல் எல்லாம் முடிந்த கையோடு விஜித் புல்டோசர் ஒன்று வாங்கியிருந்தான். இரண்டு தசாப்தங்களாக ரங்கசாமியின் சீவிய சரித்திரத்தை மௌனமாகத் தாங்கிக் கொண்ட அக்கினி மூட்டப்பட்டாலும் அதற்கு இரையாகாமல் நிமிர்ந்து நின்ற சுவர்களும் அத்திவாரமும் ஒரு நொடியில் தரைமட்டமாக்கப்பட்டன. அதன்பிறகு சுற்றிலும் தென்னோலையால் வேலி அடைத்தார்கள். அந்த

தென்னோலை அடைப்புக்குள் வாயுவே மனோவேகத்தில் ஒரு அழகான கட்டிடம் தலையெடுத்துக் கொண்டிருந்தது. வெகு சீக்கிரத்தில் விஜித் பாதுகாப்பு சேவையின் சுற்று மதிள் அதைச் சூழ எழுந்தது. அந்த வளவின்ஒரு மூலையில் ஒரு வளைவு . மின்னி மின்னி மறையும் பெயர்ப் பலகை ஒன்று இந்த வளைவுக்கு ஒளியேற்றிக் கொண்டிருந்தது. இதை விட அளவில் சற்றுப் பெரிய பெயர்ப்பலகையொன்று சுவருக்கு மேலாக கம்பீரமாக தோற்றத்தோடு நின்றது. விட்டுவிட்டு ஒளிவிடும் அந்தப் பெயர்ப்பலகையிலிருந்து ஒரு வித சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அருகில் சென்று காது கொடுத்தால் அது ஒரு ஜனக் கும்பலின் இருதயத் துடிப்போ என்று எண்ணத் தோன்றும். மதிற் சுவரை ஒட்டினாற்போல ஒரு சின்னஞ்சிறிய கடை. அதன் பக்கத்தில் ஒரு சிறிய முகடு. அதை ஒட்டினாற் போல உயரமான சிகரம். இந்த சிகரத்தின் சமீபமாக விஜித் பாதுகாப்பு சேவையின் காரியாலயம் இருந்தது. இதற்குள் நுழைபவர்கள் தாம் செல்லையாவின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தை கடந்து செல்வதை அறிவார்களா?.

❝அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்த இடம்தான் இது என்று பார்த்த மாத்திரத்தில் எவருக்குமே தோன்றாது. கரியும் புகையும் படிந்த சிதைந்துபோன சுவர்களோடு அந்தக் குடிசை மட்டும் தான் இன்று மிஞ்சியிருந்தது. இந்த நிலைமை ஒரு ஆறுமாதம் தான் நீடித்தது. செல்லையா இறந்துவிட்டான். விஜித்தும் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுவிட்டான். இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்திராவிட்டால் அந்தக் குறுகிய காலத்தில் நகரத்தின் அழகை மாசுபடுத்தும் வாய்ப்பு அந்தக் குடிசைக்குக் கிட்டியிருக்காது.

ரங்கசாமியின் கையிலோ மிச்சம் சொச்சம் என்று சொல்லக்கூடியதாக எதுவுமே இல்லை. ஆகையினால் அவனாகவே விஜித்திடம் வந்து நிலத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு பணம் தரும்படி வற்புறுத்தினான். அகதி முகாமில் இருந்த ரங்கசாமி இந்த விஷயமாக எத்தனையோ தடவை விஜித்தைச் சந்திக்க வந்திருந்தான். இதனால் தானோ என்னவோ விஜித்தும் சற்றுமனம் இரங்கி இதற்கு சம்மதித்தான். காணிக்கு உறுதி எதுவும் இருக்கவில்லை. அத்துடன் நிலத்தின் பெறுமதியும் குறைந்திருந்தது. இந்தக் காரணங்களினால் காணியை வாங்குபவரே விலையை நிர்ணயிக்க வேண்டியதாயிற்று.

கொடுக்கல்,வாங்கல் எல்லாம் முடிந்த கையோடு விஜித் புல்டோசர் ஒன்று வாங்கியிருந்தான். இரண்டு தசாப்தங்களாக ரங்கசாமியின் சீவிய சரித்திரத்தை மௌனமாகத் தாங்கிக் கொண்டு அக்கினி மூட்டப்பட்டாலும் அதற்கு இரையாகாமல் நிமிர்ந்து நின்ற சுவர்களும் அத்திவாரமும் ஒரு நொடியில் தரை மட்டமாக்கப்பட்டன. அதன் பிறகு சுற்றிலும் தென்னோலையால் வேலி அடைந்தார்கள். அந்த தென்னோலை அடைப்புக்குள் வாயுவேக

மனோவேகத்தில் ஒரு அழகான கட்டிடம் தலையெடுத்துக் கொண்டிருந்து. வெகு சீக்கிரத்தில் "விஜித் பாதுகாப்பு சேவை" யின் சுற்று மதில் அதைச் சூழ எழுந்தது. அந்த வளவின் ஒரு மூலையில் ஒரு வளைவு. மின்னிமின்னி மறையும் பெயர்பலகை இந்த வளைவுக்கு ஒளியேற்றிக் கொண்டிருந்தது. இதை விட அளவில் சற்றுப் பெரிய பெயர்ப்பலகையொன்று சுவருக்கு மேலாக கம்பீரமான தோற்றத்தோடு நின்றது. விட்டுவிட்டு ஒளிவிடும் அந்தப் பெயர்ப்பலகையிலிருந்து ஒருவித ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. அருகில் செல்பவர்களுக்கு அது ஜனக் கூட்டமொன்றின் இருதயத் துடிப்புப் போல கேட்கும். மதிற் சுவரை ஒட்டினாற்போல ஒரு சின்னஞ் சிறிய கடை.. அதன் பக்கத்தில் ஒரு சிறிய கதவு அதை ஒட்டினாற்போல நீண்டு நெடுத்ததோர் வாயில். இந்த வாயிலின் சமீபமாக விஜித் பாதுகாப்பு சேவையின் காரியாலயம் இருந்தது. இதற்குள் நுழைபவர்கள் செல்லையாவின் பூதவுடல் தகனம் ஆகிய இடத்தை கடந்து தாம் செல்வதை அறிவார்களா?

அனுலா விஜேரத்ன மெனிகேயின்

# வடவாமுகாக்கினி

சரோஜினி தேவி அருணாசலம்

யாராவது ஒருவர் தான் பிறந்து வளர்ந்த பண்பாட்டைத் துறந்து புதியதொரு கலாச்சாரத்துடன் ஒன்றிவிட விரும்புகிறார் என்றால் அவர் அந்தப் புதிய கலாச்சாரத்தை மனமார விரும்புபவராக இருக்க வேண்டும். இந்தப் புதிய கலாச்சாரப் பண்புகள் அவரை முழுதாக ஆட்கொள்ளும் வரை அவர் அந்தக் கலாச்சாரத்துக்கு ஒரு அந்நியர் தான். அதன் புற ஓட்டில் ஒட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவர். அந்தப் புற ஓட்டைக் குத்திக் கிழிக்க முயலும் ரங்கசாமி போன்றவர்கள் செயற்கைத் தோற்றம் பூண்ட ஒரு சமுதாய அலையில் அகப்பட்டு அதனால் முற்றாக அந்நியராக்கப்படுவதைத் தான் நாவலாசிரியை இந்நாவலில் சித்திரித்திருக்கிறார். நம்பிக்கைக்குப் பாத்திரமான அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்க வேண்டிய சகோதரர் கூட்டம் துரோகிகளாக மாறிவிடும் சம்பவம் இருக்கிறதே அதற்குத் தான் நாம் வர்க்கப் போராட்டம் என்று நாமகரணம் சூட்டியிருக்கிறோமா அது மரத்தை மட்டும் தான் விழுத்துமா? அதன் ஆணி வேரையே அறுத்துவிடாதா. ஆழ்கடலின் அடியில் மறைந்திருக்கும் ஊழித் தீ போல அது வெளிப்பட்டு எங்கள் அபிலாஷைகள் அனைத்தையும் பொசுக்கி விடுகிறது.

இந்நூலை திருமதி சரோஜினி தேவி அருணாசலம் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பதற்கான செயல் திட்டத்தின்" இலட்சியங் களில் ஒன்றுதான் இந்த மொழிபெயர்ப்பு. திருமதி அருணாசலம் மொழிபெயர்ப்புத்துறையில் நிறைந்த அனுபவ முடையவர். சிங்கள மொழி, கலாச்சாரம் பற்றி நன்கறிந்தவர். பௌத்த தத்துவவியலில் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் அறிஞர் குமாரதுங்க முனிதாசவின் சிறுவர் இலக்கியங்கள் உட்பட பல சிங்கள நூல்களைத் தமிழில் தந்துள்ளார். மனிதர்கள் இனங்களாகப் பிரியாது மானிடமாக இணையட்டும்.

218.60

ISBN 955-584-259-0

Rs. 160/= ரூ. 160/=

அச்சிட்டு வெளியிட்டவர்கள் - சார பிரசுரத்தார்
1/94 அதுறுகிரிய வீதி, கொட்டாவ, இலங்கை.